# மின்நிலா

## பொங்கல் மலர் 2021




பொங்கல் திருநாள் கொண்டாட்டத்தை, இங்கே 'மின்நிலா' இதழுக்காக ஓவியமாக வடித்திருப்பவர் திரு அருண் ஜவர்லால். அருண் எங்கள் குடும்பத்து பன்முகர். பொறியியல் பட்டதாரி, மென்பொருள் பொறியாளர், பாடகர், ஓவியர். (@arunjawar)

சில கதை ஓவியங்கள், உள் அட்டை , பின் அட்டை எல்லாமே அவர் கற்பனை + கைவண்ணம் !

# மின்நிலா ஆசிரியர்கள் குழு

**B SRIRAM**
**K G GOUTHAMAN**
**KAYJEE**
**K G Y RAMAN**
**K S**

**Email for communications : engalblog@gmail.com**

**Our blog sites address :**

1. **எங்கள் Blog : https://engalblog.blogspot.com**
2. **மின்நிலா : https://engal6.blogspot.com**

# பொருளடக்கம்

## Contents

எங்கள் ப்ளாக் ....4
**பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம் A J Suryaprakash** ....5
**ஆன்மீகப் பொங்கல் ! கீதா சாம்பசிவம்** ....7
SRIPADMAM GOSALAI (Advt) ....10
**அந்த நாள் பொங்கல் மீண்டும் வாராதா? தேவராஜன் சண்முகம்.** ....12
**திரவியம்.. சிறுகதை :: துரை செல்வராஜூ** ....16
**ஒரு அக்ரஹாரத்தின் பொங்கல் நினைவுகள் : காமாட்சி மஹாலிங்கம்** ....23
**அய்யா பொங்கல்! - சிறுகதை :: தேவராஜன் சண்முகம்.** ....29
**படப் புதிர் :: பானுமதி வெங்கடேஸ்வரன்.** ....34
**பழைய நினைப்புதான் பேராண்டி :: நெல்லைத்தமிழன்** ....40
**அழகி :: சிறுகதை :: சியாமளா வெங்கட்ராமன்** ....46
**டெல்லிப் பொங்கல் :: ஆதி வெங்கட்** ....50
**அன்புள்ள அண்ணா - சிறுகதை :: மாலா மாதவன்** ....52
**பொங்கல் பண்டிகை வரலாறும் - கொண்டாடும் விதமும் கீதா சாம்பசிவம்.** ....56
பொங்கல் கொண்டாட்டங்களில் சுற்றுச் சூழல் காப்போம் எம் தில்லைநாயகம் ....61
மருதாணிச் சித்திரம். - சிறுகதை :: துரை செல்வராஜூ ....64
**பீட்ரூட் தொக்கு :: சுபஸ்ரீ ஸ்ரீராம்** ....70
**சிரோட்டி :: கீதா ரெங்கன்** ....73
**அம்மா செய்த மோர்க்குழம்பு திருமங்கலம் 1958 :: ரேவதி நரசிம்ஹன்** ....78
**அக்கா மகள் - சிறுகதை :: 'பரிவை' சே.குமார்** ....81
உலகளாவிய ஊறுகாய் வகைகள் :: எம் தில்லைநாயகம் ....87
**ஒப்புக்குச் சப்பாணி :: நெல்லைத்தமிழன்** ....89
**அம்மாவின் நினைவு ஊறும் ஊறுகாய் தேவராஜன் சண்முகம்** ....92
**“ ஊறுகாய் என்றால் . . .” :: பானுமதி வெங்கடேஸ்வரன்** ....94
**ஊறுகாய் நன்மைகளும், பிரச்சனைகளும் எம் தில்லைநாயகம்** ....95
**ஊறுகாய் ! K G Y Raman** ....99
வெந்தய ஊறுகாய் காமாட்சி மஹாலிங்கம் ....100
**விட்டில் பூச்சி :: சிறுகதை - மாலா மாதவன்** ....104
**என்னை பேசச் சொன்னால் ! :: பானுமதி வெங்கடேஸ்வரன்** ....109
**அயல்நாட்டுச் சிறுகதை :: ஏகாந்தன்** ....112
அன்பு மகள் (சிறப்புச் சிறுகதை) :: அப்பாதுரை ....116
**அப்பாதுரை பதில்கள்** ....125
**பொங்கல் பண்டிகை கண்களுக்கும் + வயிற்றுக்கும் : கமலா ஹரிஹரன்.** ....137
**நான் ரேணு - சிறுகதை :: கீதா ரெங்கன்** ....146
**பன்னீரும் பத்மப்ரியாவும்... துரை செல்வராஜூ** ....153
**கோபு வெச்ச ஆப்பு! - சிறுகதை :: K G கௌதமன்** ....163
**சூரியன் கோவில் :: பானுமதி வெங்கடேஸ்வரன்** ....168
**பைரவியும் பைரவர்களும் :: ஆரண்யநிவாஸ் ஆர் ராமமூர்த்தி** ....170
**பக்தியா? ஆன்மிகமா? இரண்டும் ஒன்றா? கீதா சாம்பசிவம்** ....172

**லேடிஸ் கிளப் பொங்கல் - சியாமளா வெங்கட்ராமன்** ......176
**சிங்கை பயணத்தை எளிதாக்கும் "சிங்கப்பூர் மெமரீஸ்" இரா. அரவிந்த்** ......180
**தை பிறந்தால் வழி பிறக்குமாமே?:) - அதிரா** ......182
**சோமாலியாவில் ஒரு இந்திய இரவு :: ஏகாந்தன்** ......188
**மாலை மயங்குகின்ற நேரம் :: ரஞ்சனி நாராயணன்.** ......195
**வந்து விட்டார் வ.வ.ஸ்ரீ ! புதிய கட்சி 'மூ.பொ.போ.மு.க.' உதயம்! - நெடுங்கதை :: VAI. GOPALAKRISHNAN** ......198
**மன்னிப்பு (சிறப்புச் சிறுகதை) :: ரிஷபன்** ......229
**காதலும் காமமும் - சிறுகதை :: ரேவதி நரசிம்ஹன்** ......235
**வீரம்மை ஆச்சி - சிறுகதை :: கீதா ரெங்கன்** ......238
**கண்ணாரப் பூப்பூத்து... - கவிதை :: துரை செல்வராஜூ** ......246
**நீர்க் கோலங்கள் - கவிதை - - ராமலக்ஷ்மி** ......248
**"என் இதயப் பெண்ணே" A J Suryaprakash** ......250
**ஊர்மிளையின் உறக்கம் - சிறுகதை :: ஐயப்பன் கிருஷ்ணன்** ......251
**வாழ்க்கை உன் கையில்:: A J Suryaprakash** ......261
**நாற்காலி - சிறுகதை :: சுபஸ்ரீ ஸ்ரீராம்** ......262
சென்னை - திருப்பதி பாதயாத்திரை - தில்லைநாயகம் அவர்களுடன் பேட்டி ......265
வாசகர்கள் அனுப்பிய படங்கள் ......270
**திருமதி ரேவதி நரசிம்ஹன் அனுப்பிய படங்கள்** ......271
**அர்ஜூன் வரைந்தது** ......278
**ரோஷினி வரைந்தவை** ......279
**நந்தீஸ்வரர் தரிசனம் :: ராமலக்ஷ்மி ராஜன்** ......281
**பூமித்தாய்க்கு வணக்கம். A J Suryaprakash** ......294
**ஊர் பெயர்கள் - புதிருக்கான விடைகள்** ......295
**பொங்கல் மலர் வாசகர் விமரிசனப் போட்டி** ......295


(இந்த மலரில் பல ஊறுகாய் விஷயம் உள்ளதற்குக் காரணம், நாங்க வாசகர்களிடம் எழுத்துவதற்குக் கொடுத்த தலைப்பு ஊறுகாய்.
ஆனால் ஊறுகாய் பிடிக்காதவர்களும் சுவைத்துப் படித்து மகிழலாம்)

# எங்கள் ப்ளாக்

**எங்கள் blog பற்றி சில குறிப்புகள் :**

**வலைப்பூ ஆரம்பிக்கப்பட்ட நாள் : ஜூன் 25, 2009**

**31.12.2020 வரை வெளியிடப்பட்ட பதிவுகள் : 3777 blog posts in 4207 days!**
**தமிழ் வலை உலகில், கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் இதுதான் அதிக எண்ணிக்கை பதிவுகளை வெளியிட்ட ஒரே தளம்.**

**Page Views till 31.12.2020 : 21,73,556**

**அதிகம் பேர் படித்த பதிவு : எங்கள் Blog: "திங்க"கிழமை 180402 : திரிசங்குபாகம் - கீதா ரெங்கன் ரெஸிப்பி (engalblog.blogspot.com)**

**எங்கள் Blog - இதுவரை பின்னூட்டங்கள் : 1,42,000 +**
**Followers : 572**

**மின்நிலா பற்றி சில குறிப்புகள் :**
**மின்நிலா வார இதழ் ஒவ்வொரு வாரமும் தீங்கட்கிழமையில் வெளியிடப்படுகிறது.**
**ஒரு வாரத்தில் வெளியாகும் எங்கள் blog பதிவுகளைத் தொகுத்து அடுத்த வார ஆரம்பத்தில் புத்தகமாக வெளியிடுகிறோம். ஒவ்வொரு நாளும் இணையத்தில் அன்றைய பதிவுகளை படிக்க சிரமம் உள்ளவர்கள் ஒரு வார பதிவுகளை, ஒரே புத்தகமாக download செய்து படிக்கலாம். நண்பர்களுக்கும் பகிரலாம்.**
**முதல் மின்நிலா இதழ் வெளியிடப்பட்ட தேதி : மே 24, 2020 LINK**

**மின்நிலா தீபாவளி மலர் சுட்டி**

**மின்நிலா facebook group : மின்நிலா | Facebook ( In this facebook group, you can read all the issues of MIN_NILA published so far)**

## எங்கள் அடுத்த தயாரிப்பு : மின்நிலா சித்திரை சிறப்பிதழ் (ஏப்ரல் 14, 2021)

**Back to index ^**

## பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம் A J SURYAPRAKASH



நம்பிக்கை என்ற ஒரு கரத்தை நமக்கு உணர்த்திய,
தும்பிக்கை கொண்ட ஐந்து கரத்தானை நினைத்து,
இரு கரங்களும் தளராமல்,
இரு கால்களும் அயராமல்,
எண் சாண் உடம்பும் சோர்வுறாமல்,
கொண்ட முயற்சியில் உறுதி குலையாமல்,
என்றும் இன்புற்று இயற்கையுடன் வாழும் வாழ்வு வேண்டி,
இந்த இனிய நன்னாளில் விக்னேஷ்வரனின் பாதம் பணிந்து,
நம் சிரம் தாழ்த்தி, கரம் குவித்து அவனருளை நாடுவோம்.

## அ. ஜ. சூரியபிரகாஷ், (A. J. Suriyaprakash)



நான் ஒரு தமிழ் ஆர்வலர். தமிழ் சங்கம் கொண்டிருந்த பாண்டியர் தேசத்து மதுரையில் பிறந்து, பால பருவ கல்வியைத் துவக்கி, சோழர் தேசமாகிய திருச்சிராப்பள்ளியில் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து, இளநிலை இயல்பியல் கலையில் தேர்ந்து, பல்லவ தேசத்து மாநகரமாம் சென்னையில் இயந்திரவியலில், இளநிலை, முதுநிலை கல்விகளில் தேர்ந்து, **தானியங்கி ஊர்திகள் உற்பத்தி நிறுவனங்களில் பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

தமிழின் மீதுள்ள ஆர்வத்தால் மனதில் தோன்றும் எண்ணங்களையும், வாழ்க்கை நடைமுறையில் எழும் வினாக்களுக்கும் எனது நண்பர்களுடன் உரைநடை பாணியில் பகிர்ந்து கொள்வதில் விருப்பம் கொண்டுள்ளேன்.

மின்னஞ்சல் முகவரி : ajsprakash@yahoo.com

இதுதான் எனது முகவுரை.

** திரு AJSP என்னுடன் (கௌதமன்) அசோக் லேலண்டில் சில வருடங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் பணிபுரிந்தார். வண்டியில் இன்றும் பொருத்தப்படும் பல மின் சாதனங்கள், இணைப்புகள் எல்லாவற்றையும் வடிவமைத்தவர் AJSP.

Back to index ^

# ஆன்மீகப் பொங்கல் ! கீதா சாம்பசிவம்

தைப்பொங்கலுக்கும் கிருஷ்ணருக்கும் சம்பந்தம் உண்டா என்றால் உண்டு. கிருஷ்ணரின் மகன் ஆன சாம்பன் என்பவன் துர்வாச மஹரிஷி வந்தபோது அவரைக் கேலி பேசியதால் அவன் உடல் நலம் கெட்டுப் போய் தோல் நோயால் பீடிக்கப் பட சாபம் கிடைத்தது. அந்த சாபத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் கிருஷ்ணரும், துர்வாசரும், அவனை சூரியனைப் பூஜிக்கச் சொல்கின்றனர். சந்திரபாகா நதிக்கரையில் சூரியனைப் பூஜிக்கின்றான் சாம்பன் அந்த நாள் தான் மகர சங்கராந்தி எனச் சொல்லப் படுகின்றது. முனிவர்களின் பத்தினிகள் அங்கே நதிக்கரையில் ஒன்று கூடி சூரிய பகவானை வேண்டி விரதம் இருந்து பொங்கல் வைத்து வழிபட்டு வந்தார்கள். சாபம் நீங்க நதிக்கரைக்குச் சென்ற சாம்பன் தானும் அதுபோல் விரதம் இருந்து சூரிய வழிபாடு செய்கின்றான். அதுவே மகர சங்கராந்தி எனச் சொல்லப் படுகின்றது.



இந்தப் பண்டிகை இந்தியா பூராவும் வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப் படுகின்றது. அஸ்ஸாம், மணிப்பூர் போன்ற இடங்களில் ″போகாலி பிகு″ என்ற பெயரில் இந்த விழா அறுவடைத் திருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றது. பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் ″லோகிரி″ என்று அழைக்கப் படுகின்றது. குஜராத், மஹாராஷ்ட்ரா போன்ற மாநிலங்களில் ″மகர சங்கராந்தி″ என்ற பெயரில் அழைக்கப் படுவதுடன் அன்று எள்ளுடன் சேர்த்த இனிப்புகளையும் பரிமாறிக் கொள்வார்கள். பஞ்சாப், ஹரியானாவில் சோளப்பொரி, அரிசி போன்றவற்றில் இனிப்புச் சேர்த்து நெருப்பில் இட்டு ஆடிப் பாடுவார்கள். காஷ்மீரத்தில் இந்நாளில் பருப்பு, அரிசி, நெய் கலந்த கிச்சடி செய்து அனைவருக்கும் விநியோகித்துக் கொண்டாடுகின்றனர். இலங்கையில் மார்கழிமாதம் முழுதும் வீட்டில் கோலம் போடும்போது சாணப் பிள்ளையார் பிடித்து வைத்து, அவை மொத்தத்தையும் சேர்த்து பொங்கலுக்கு மறுநாள் பிள்ளையாரை வழிபட்டுப் பிள்ளையார் பொங்கல் எனக் கொண்டாடுவார்கள் எனத் தெரிய வருகின்றது.

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் சங்கராந்தி அன்று புண்ணிய கால ஸ்நானம் என்னும் வழிபாடு முக்கியமாய்க் கருதப் படுகின்றது. அன்று

**கங்கை, யமுனை, நர்மதை போன்ற புண்ணிய நதிகளில் நீராடுவதைச் சிறப்பாய்க் கருதுகின்றனர். நம் மாட்டுப் பொங்கல் போன்று அங்கேயும் கோபூஜை செய்வதுண்டு. அவ்வளவு ஏன்?? அமெரிக்கா என்ற பொதுவான பெயரில் அழைக்கப் படும் யு. எஸ். ஸிலும் நவம்பர் மாதம் அறுவடை முடியும் நேரம், அந்த வருஷத்து விளையும் காய், கனிகளை வைத்து "Thanks Giving Day" என்று கொண்டாடுகின்றனர்.**




**கிருஷ்ணாவதாரத்தில் சூரிய வழிபாடு நதிக்கரையில் செய்யப் பட்டதாய்ச் சொல்லப் பட்டாலும், அதற்கும் முன்னரே ராமாயண காலத்தில் ஸ்ரீராமர், ராவணனை வெல்வதற்காக அகத்தியரின் அறிவுரைப்படி ஆதித்ய ஹ்ருதயம் படித்து சூரியனுக்காக விரதம் இருந்து, பின்னர் போருக்குப் புறப்பட்டதாய் வால்மீகி சொல்கின்றார். சூரியனை வழிபடுவது என்பது தொன்று தொட்டு இருந்து வந்திருக்கும் ஒரு வழிபாடு ஆகும். நம் கண்ணுக்கு அன்றாடம் தெரியும் நிதரிசனக் கடவுள் சூரியனே ஆகும். தென் திசையில் பயணித்துக் கொண்டிருந்த சூரியன் தன் பயணத்தை வடதிசைக்கு மாற்றும் நாளே உத்தராயன புண்ணியகாலம் என்றழைக்கப் படுகின்றது. இந்த வடதிசைக்கு சூரியன் மாறும் நாளே தை மாதம் முதல் தேதியன்று நம் தமிழ்நாட்டில் பொங்கலாகக் கொண்டாடப் படுகின்றது. சூரியன் இல்லையேல் மழையும் இல்லை, மண் வளமும் இல்லை, தட்பமும், வெப்பமும் இணைந்த சூழலில் தான், பயிர், பச்சைகள் செழிப்பாய் வளரவும் முடியும். ஆகவே விஞ்ஞான ரீதியாகவும் சூரிய ஒளி இன்றி எதுவும் செய்ய முடியாதல்லவா? அதற்கான நன்றி நவிலலே பொங்கல் என்றும் கூறலாம்.**

**மார்கழிக் கடைசி நாளான போகி அன்று பழையன கழித்து, புதியன வாங்குவதையும், வீட்டில் உள்ள பழைய பொருட்களை எரித்தும் கொண்டாடுகின்றோம். இந்தப் பொருட்களை எரிக்கும்போது சிறு குழந்தைகள் "போகி மேளம்" என்றதொரு சிறு கருவியால் கொட்டி ஆடிப் பாடிக் குதிப்பார்கள். இதற்கான காரணம் என்ன என்று சொல்லுவதென்றால் அதற்கும் கண்ணனே வந்துடறான் முந்திக் கொண்டு. இந்திரனுக்கு மற்றொரு பெயர் போகி என்பதாகும். மழையைப் பொழிய வைக்க இந்திரனை வணங்குவதுண்டு. மழை பொழிய வைக்கும் இந்திரனுக்கு நன்றியாகவே தை முதல்நாள் அறுவடை ஆகும் பயிர்களை படையலாக வைத்து வணங்கும் வழக்கம் இருந்து வந்ததாய்த் தெரிய வருகின்றது. ஸ்ரீ கிருஷ்ணர் கோகுலத்தில் வளர்ந்து வந்தபோது இம்மாதிரி தை மாதம் இந்திரனுக்கு விழா எடுக்கும் நாள் வந்தபோது கிருஷ்ணர் கோகுலத்து மக்களை இந்த வழிபாட்டை நியாயமாய் கோவர்த்தனகிரிக்கும், அவற்றை எல்லாம் படைத்துக் காத்து ரட்சிக்கும் வாசுதேவன் ஆகிய ஸ்ரீமந்நாராயணனுக்கே செய்யவேண்டும் என்றும், ஆகையால் அவனின் அம்சம் ஆன**

சூரியநாராயணனுக்கு இந்த வழிபாட்டைச் செய்யும்படிக்கும் மாற்றத்தைக் கொண்டு வந்தார்.

ஆத்திரம் அடைந்த இந்திரன் கோகுலத்திலும், சுற்று வட்டாரத்தில் இதுவரை காணாத அளவுக்குப் பேய் மழையாகப் பொழிய, கோகுலமே நிலை குலைந்தது. கண்ணனோ சற்றும் கலங்காமல் கோவர்த்தனகிரியைக் குடையாய்ப் பிடித்து மக்களைக் காப்பாற்றினார். கோகுலத்தின் ஒரு ஈ, எறும்புக்குக் கூட துன்பம் நேராமல் பாதுகாத்தார். (இது பற்றி பின்னர் விரிவாய்ப் பார்ப்போம்). இந்திரன் வெட்கம் கொண்டு ஸ்ரீமந்நாராயணனைச் சரணடைய அவர் சங்கராந்திக்கு முதல்நாளை இந்திரன் பெயரால் போகிப் பண்டிகை எனக் கொண்டாடுவார்கள் என அவனை சமாதானம் செய்தாராம். காளிங்க மடுவில் குதித்துக் கண்ணன் காளிங்கனை வதம் செய்தபோதும் இந்த மாதிரி ஒரு போகி நாள் என்றும், அன்று கண்ணனுக்குக் காளிங்கனின் விஷம் ஏறாதபடிக்கு ஆயர்பாடிச் சிறுவர்கள் தீ மூட்டி, பறை கொட்டி இரவு முழுதும் தாங்களும் விழித்திருந்து, கண்ணனும் தூங்காமல் விழித்திருக்கும்படிச் செய்தனர் என்றும் அதன் காரணமாகவே போகியன்று பறை கொட்டும் வழக்கம் ஏற்பட்டதாயும் தெரிய வருகின்றது. இனி பொங்கல் பற்றிய விபரங்களை அடுத்துப் பார்ப்போம்!

= = = =





Blog links : 1 எண்ணங்கள் <<<<

2 ஆன்மிக பயணம் <<<<<

மின்னஞ்சல் முகவரி : sivamgss@gmail.com

Back to index ^

## SRIPADMAM GOSALAI (ADVT)



श्री:



**SRIPADMAM GOSALAI** was started during **Sri Ramanuja Sahasrabdi Year 1000th Star Birthday on 01.05.2017 at Mannivakkam, Chennai-600 048** to startwith to accomadate 108 cows in a hygienic environment.

Cow is the greatest blessing of human race, lands grow rich, home flourish and civilization advances where the cow is protected and cared for.

The protection and maintenance of cows are the greatest Dharma. Taking care of cow is taking care of one's own mother.

Let us join hands together in this divine cause.



"தாய்க்கு நிகரான தெய்வம்" என்ற பட்டம் பசுவிற்கு மட்டுமே தரப்பட்டு இருக்கின்றது. பசு தனது கன்றுகுட்டிக்கு தரவேண்டிய உணவை நமக்கு அளித்து நம் உயிரைக் காப்பதால்தான் இரண்டாவது தாயாக வணங்கப்படுகின்றது.

அத்தகைய புனிதமான பசுக்களை வளர்த்து, பாதுகாத்து தொடர்ந்து உணவு அளித்துவர குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகி, திருமண தடையின்றி நல்ல பண்பும், அறிவியல் தெளிவும், ஞானமும் உள்ள குழந்தைகள் பிறந்து வாழையடி வாழையாக குடும்ப விருத்தி அடையப்பெறுவது உறுதி என்பது மிகையில்லை.



எனவே முடிந்தவரை எல்லோரும் (ஒவ்வொருவரும்) இக் கோசம்ரக்ஷணத்தில் பங்கு கொள்வது என்பது நமக்கு நம் வாழ்நாளில் கிடையா வரமானாலும் கிடைக்கப் ப்ராப்தி என்பதே மெய்.

காமதேனு காயத்ரி மந்திரம்

ஓம் சுபகாயை வித்மஹே காமதாத்ரியை சதீமஹி தந்நோ தேனு: ப்ரசோதயாத்

## YOU CAN DO IT

**Sripadmam Gosalai** gives an opportunity to all Philanthropists and those who believe in this noble cause to contribute liberally and seek the blessings of Holy Kamadhenu for a bright, prosperous and healthy life.



**Gopuja** : **Rs.3,600/-** per puja. Cow puja on your wish day or Your Birthday / Wedding Anniversary / Kids Birthday / Ancestor's Death Anniversary.

**Godhanam (Cow Donation)** : **Rs.27,000/-** and above or you can donate the cow and calf

**Gosamrakshan (Cow Maintenance)** : As you wish

**Cow Feeding** :

| Per day per cow | Per day for all cows | Per month per cow |
|---|---|---|
| Rs.108/- | Rs.1008/- | Rs.3000/- |

*All donations & contributions can be sent in the name of*

**"SRI MADURAKAVI TRUST"**

To

**Sripadmam Gosalai**
P.No.4401, Sri Ganesha Nagar,
Manivakkam
Chennai - 600 048

(or)

**Karur Vysya Bank**
Nanganallur Branch
Chennai - 600 061
SB A/c No : 1255155000007898
IFSC : KVBL0001255



**J. Gopalan**
Founder & Co-ordinator
98412 90610

Back to index ^

# அந்த நாள் பொங்கல் மீண்டும் வாராதா? தேவராஜன் சண்முகம்.

இப்போதைய நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருக்கண்ணபுரம் என்ற கிராமத்தில் பால்யபிராயத்தில் நான் கொண்டாடி அனுபவித்த பண்டிகை நினைவுகள் எல்லாம் அப்போது செய்த பலகாரங்கள்போல இனிப்பவை.

1980கள் 1990களில் நடந்த பண்டிகைகளையும் திருவிழாக்களையும் அனுபவித்த சுவாரஸ்யங்களை நினைக்கும்போது, கண்களில் கண்ணீர்துளிகள் அரும்புகின்றன. மீண்டும் அந்தநாள் வாராதா! என்ற ஏக்கம் நெஞ்சுக்கூட்டில் வந்து தகிடதகிடவென்று தாளம் போடுகிறது.

அப்போது உண்ட தைப்பொங்கல் மனதுள் தித்தித்தது. நாவில்இனித்தது.
இப்போது உண்ணும் பொங்கல் இனிக்கிறது நாவினில் மட்டுமே!

போகி என்பது எங்களுக்கு மார்கழி பிறந்ததுமே வந்துவிடும். தெருவில் சகோதரர்கள்,சகோதரிகள், நண்பர்கள், அக்கம்பக்கம் வீட்டுகளில் உள்ள எம்வயதொத்தவர்கள் எல்லாம் பனைவோலை, தென்னவோலை, மூங்கில் இலைகள், சுப்பிகளைக்கொண்டு எரியூட்டி வட்டம்கட்டி குந்தி, குளிர்காய்வோம். அந்த வெப்பச்சூடு போல சுகம் உலகினில் ஏதுண்டு?

அப்பாவிடம் கெஞ்சி கூத்தாடி ஒருரூபாய் வாங்கி, திருமருகல் நடந்தே சென்று, 5 பைசா பொங்கல் வாழ்த்து அட்டை 11, 10 பைசா வாழ்த்து அட்டை 2, 25 பைசா அட்டை ஒன்று என்று வாங்கி வந்து, அதற்கு ஸ்டாம்பு ஒட்டி நண்பர்களுக்கும் சொந்தக்காரங்களுக்கும் அனுப்பி வைத்து, அவர்கள் நமக்கு அனுப்பும் வாழ்த்து அட்டைக்காக தினம் தினம் போஸ்ட்மேன் மாமாவை எதிர்பார்த்து காத்திருக்கும் சுகம், பருவ வயதில் வந்த காதலில் வந்த காத்திருப்பு சுகத்திற்குக்கூட அது ஈடாகாது.

பொங்கல் நெருங்கும் பத்துதினங்களுக்கு முன்பாக வீடெங்கும் ஒட்டடை அடிப்போம். ஆளுக்கொரு ஈச்சம் இலை கட்டிய தடிகளை எடுத்துக்கொண்டு,கூடம், தாழ்வாரம், அறைகள் எல்லாம் போட்டிப்போட்டுக்கொண்டு ஒட்டடை அடிப்பதில் தான் எத்னை மகிழ்ச்சி!

அதன்பின்னர், அப்பாதான் சுண்ணாம்பு அடிப்பார். அது ஒருவாரம் நீடிக்கும்.

அம்மாவும் சகோதரிகளும் வீட்டிலுள்ள பாத்திரங்கள் பொருட்களை எல்லாம் சுத்தம் செய்வார்கள்.

பொங்கலுக்கு முதல்நாள் பாதி இரவு வரை அம்மாவும் சகோதரிகளும் ஆட்டுக்கல்லில் அரிசி உளுந்து ஆட்டுவார்கள்.

பிறகு, பின்னிரவு முழுவதும் உறங்காமல் வீட்டுவாசலில் சகோதரிகள் வண்ண கோலங்கள் போடுவார்கள்.

அதற்கு முன்தினம் நாங்கள் செங்கல், கரி, சுண்ணாம்பு, கோவையிலைகளில் செய்து தயாரித்த வண்ணபவுடர் கோலங்களில் படரும்போதும் பார்க்க பார்க்க ஆனந்தம் கொப்பளிக்கும்.

விடிந்தும் விடியாத காலைப்பொழுதில் தென்னங்குருத்து ஓலையில் அப்பா தோரணம் பின்னல் செய்வோர். நாங்களும் அவரோடு சேர்ந்து தோரணம் பின்னல்போட, அதுசரியாக வராமல், முயன்று முயன்று இறுதியில் முழுமைப்பெற்ற பின்னல் கண்டு அப்பா ‘சபாஷ்’ என்று சொல்ல, ஏதோ இமயமலையைப்புரட்டி அந்தப்பக்கம் வைத்த சந்தோஷம் வருமே! இப்போதும் தென்னவோலை தோரணங்கள் ஜோடி 25 ரூபாய்க்கு வாங்கும்போதெல்லாம் அப்பா வந்து நினைவில் வந்து ஏளனமாய் சிரிக்கிறதுபோல தோன்றும்.

விடிந்ததும் நாங்கள் காக்காமங்கலத்தில் இருக்கும் எங்கள் வயல்வெளிக்குச் சென்று புத்தம்புது நெற்கதிரும், கள்ளிகளும் எடுத்துவரச்செல்வோம்.

வீடெல்லாம் கோலத்தால் சிரிக்கும். முற்றம் முத்தம் தர வா… வா… என்று கூப்பிடுவதுபோலவே இருக்கும்.

முற்றத்தில் முக்கோண வடிவில் மூன்று கல் வைக்கப்பட்ட அடுப்பு தயார்செய்யப்பட்டிருக்கும். ஆண்டுக்கு ஒருமுறை குசலம் விசாரிக்க பரணில் இருந்து வெண்கலபானை வந்து கிடக்கும். அந்தப்பானைக்கு கால்கிலோபுளிபோட்டு தேய்த்து தேய்த்து பளபளப்பாக்காமல் விடமாட்டாள் அக்கா. அதற்குப் பார்த்து பார்த்து ரசனையோடு அலங்காரம் செய்வார் அப்பா.

நாலு பக்கமும் திருநீறுபட்டை இட்டு, சந்தனம் தடவி, அதன்மேல் குங்குமம் வைத்து, மஞ்சள் கொத்து, இஞ்சி கொத்து கட்டி, கரும்பு வெட்டி சிறு துண்டுகளாக அரிந்து சணலில் கோர்த்து கட்டி விடுவார்.தேங்காய் உடைத்து அதில் துளையிட்டு, கடைசிக் கணுக்களை துளையிட்டு அவற்றையும் கோர்த்து, முழு வாழைப்பழம் சேர்த்து மாலையிடுவார். அந்தப் பெரிய வெண்கலப்பானை விறகடுப்பில் அமரவைக்கப்படும். அடடா! ராஜதோரணை வந்துவிடும் அதற்கு!

முக்கால் அளவுக்குப் பாலும் நீருமாக கொதிக்க ஏலக்காய், பச்சைக் கற்பூரம், முந்திரிப்பருப்பு, குங்குமப்பூ, வெண்ணை சேர்த்த கலவையில் புத்தரிசி போடப்படும். பிறகு அச்சுவெல்லம் சேர்க்கப்படும். பொங்கல் பொங்கும். எங்கள் மனசெல்லாம் மகிழ்ச்சியில் பொங்கும். பிறகு பூஜை செய்வார் அப்பா.

கூடத்தில் இலை போட்டு எல்லாரும் சேர்ந்து உண்ணும் ஆனந்தம், இப்போது உயர்தர ஸ்டார் ஓட்டலில் சாப்பிட்டும்கூட அந்த ஆனந்தம் கடுகளவும் வரவேயில்லை.



அதன் பிறகு ஆளுக்கொரு கரும்பை எடுத்துக்கொண்டு கொல்லைப்புறத்திலும், சிவன்கோயிலுக்கும், மூங்கில்தோப்புக்கும் சென்று விடுவோம்.

சகோதரிகள் புளியமரத்தில் ஊஞ்சல்கட்டி ஆடிக்கொண்டு கரும்புதின்று சுவைப்பார்கள். அவரவர்களுக்கு அந்தந்த இடம் சொர்க்கம்.

மாலையில் ரஜினி ரசிகர்கள் திருமருகல் பரணி டூரீங் டாக்கீஸ்கும், கமல் ரசிகர்கள் வவ்வாலடி வைரம் திரையரங்குக்கும் சென்றுவிடுவோம்.

மறுநாள் மாட்டுப்பொங்கல்! இதன் சுவாரஸ்யங்கள், அடுத்த நாள் கன்னிப்பொங்கலுக்குக் கட்டுச்சோறுகட்டி ஆற்றுநீர்நிலைக்குச்சென்று நண்பர்கள் ஊரார்களோடு சேர்ந்து மகிழ்ந்து உண்டுவந்த அனுபவங்க வார்த்தையில் இங்கு விவரிக்க இயலாத சந்தோஷ நிகழ்வுகள் அவை.

அன்று பொங்கலில் மகிழ்ந்த பெரிய ஓட்டுவீடு இப்போது யாருமில்லாமல் பாழ்பட்டுப்போனது. அம்மாவும் அப்பாவும் வானகம் போனார்கள். பிழைப்புக்காக உடன்பிறப்புகள் எல்லாம் திசைக்கு ஒருவராய் இடம்பெயர்ந்தோம். நண்பர்களும் அப்படித்தான். இப்போதும் என் ஊரினில் எங்கள் நினைவுகள் ஊர்வலம்போகின்றன. எங்கள் தேகம்தான் எங்கெங்கோ தேங்கிக் கிடக்கின்றன.

இப்போதும் ஆண்டுதோறும் பொங்கல் வரத்தான் செய்கிறது. ஆனால், அந்த சந்தோஷங்களை ஏனோ கொண்டு வருவதேயில்லை.

**சுயகுறிப்பு:**

**ச.தேவராஜன், எம்.ஏ.,பிட். வயது 50. நாகைமாவட்டம், திருக்கண்ணபுரம் பூர்வீகம்.**
**20 ஆண்டுகளாக பத்திரிகையில் பணி. 13 ஆண்டுகளாக தினமலரில் உதவிஆசிரியராக பணி தொடர்கிறது.**

**அச்சுவடிவில் 10 புத்தகங்களும் மின்புத்தகங்கள் 15ம் பிரசுரம்.**
**பிரபல பத்திரிகைகளில் 100க்கும் அதிகமான சிறுகதைகள், கவிதைகள் மற்றும் ஆயிரத்துக்கும் அதிகமான ஆன்மிக கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.**

**மின்னஞ்சல் முகவரி : tkpdev@gmail.com**



[Back to index ^]

# திரவியம்.. சிறுகதை :: துரை செல்வராஜூ

" மாமா... ஆயிரந்தான் சொல்லுங்க... நம்ம ஊரு மாதிரி வரவே வராது... "

ஜட்கா வண்டிகளும் கை ரிக்ஷாக்களும் கடகட என்று ஓடிக் கொண்டிருந்த சாலையின் ஊடாக தலைச் சுமையுடன் அங்குமிங்குமாக பலதரப்பட்ட மக்கள்... அந்தச் சாலையின் ஒரு ஓரமாக ' டங்கு டக்கு... டங்கு டக்கு... ' - டோலக் சத்தத்துக்கு ஏற்றார் போல சிறுவன் ஒருவனின் கழைக்கூத்து வேறு...

உறவு முறைத் திருமணத்துக்கு என்று தஞ்சாவூரில் இருந்து சென்னப் பட்டினத்திற்கு வந்திருக்கிறார்கள் மாமனும் மாப்பிள்ளையும்... மாமன் மாரிமுத்து .. மாப்பிள்ளை சுந்தரம்...

இன்றைய அவியல் போல் இல்லாமல் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவொற்றியூர், திருவான்மியூர், தண்டையார்பேட்டை - இன்னும் பலவான ஊர்களும் தனித்திருந்த காலம் அது..

மாமனுக்கு ரொம்ப நாளாக ஆசை ஒன்று - வடபழனி முருகனைத் தரிசனம் செய்ய வேண்டும் என்று!..

நேற்று கல்யாணம் நல்ல விதமாக முடிந்து விட்டது.. இன்று சாயங்காலமாக போட் மெயிலில் புறப்பட வேண்டியது தான்.. இடைப்பட்ட நேரத்தில் ஆலய தரிசனத்திற்காக இதோ வட பழனி கோயில் அருகினில்..

' கமகம.. ' - என்று வெங்காய சாம்பார் வாசம் உணவகத்தின் உள்ளிருந்து வர - வாசலில் சில நாய்கள் எதற்காகவோ அடித்துப் புரண்டு கொண்டு இருந்தன..

பக்கத்திலேயே சாலையின் ஓரத்தில் கூடைக்குள் பானையை வைத்துக் கொண்டு அதனுள்ளிருந்து புளித்த வாடையுடன் எதையோ எடுத்து ஏவாரம் செய்து கொண்டிருந்தார்கள் சிலர்..

" அது தெரிஞ்ச விசயந்தானே மாப்ளே.. கேட்பார் இல்லாமக் கிடந்த மண்ணுக்கு பிரிட்டிஷ்காரனும் பிரஞ்சுக்காரனும் ஒருத்தனோட ஒருத்தன் அடிச்சி மோதிக்கிட்டானுங்க... பிரஞ்சுக்காரன வெரட்டிட்டு பரங்கியனுங்க இங்கே கடையப் போட்டானுங்க.. மெட்ராஸ்..ன்னு பேரு வைச்சிக் கிட்டானுங்க... இது எல்லாம் அவிங்களோட ஏவாரத்துக்கு.. ன்னு.. சொன்னாலும் சூது வாது.. ன்னு எல்லாத்தையும் முன்னெடுத்து செஞ்சவன் பேரு ராவர்ட்டு கிளைவு!.. " விவரித்தார் மாரிமுத்து..

" இதெல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கீங்க.. மாமா!.. " சுந்தரத்துக்கு மாமனின் அறிவைக் கண்டு வியப்பு..

" நானும் திண்ணப் பள்ளிக் கூடத்துல சுப்பு ஐயர் கிட்ட படிச்சிருக்கேனே.. " மீசையைப் பெருமையுடன் முறுக்கிக் கொண்டார்...

" என்னமோ ஏவாரம்.. ஏவாரம்..ங்கிறீங்க மாமா!.. அப்படி அவன் என்னத்தைக் கொண்டு வந்து வித்தான்!?... "

" மத்தது கிடக்கட்டும்.. சாராயத்தைக் கொண்டு வந்து வித்ததே அவனுங்க தானே!.. அவனுங்க வித்ததை விட கொள்ளை அடிச்சிக்கிட்டுப் போனது தான் ஏராளம்.. சரி..அத விடுங்க மாப்ளே... கோயில் வாசலுக்கு வந்துட்டோம்... அர்ச்சனைத் தட்டும் மாலையும் வாங்குங்க... இந்தாங்க பணம்!.. " - என்றார் மாரிமுத்து..

" பணத்தை வைங்க மாமா!.. “ - என்றபடி முன் நடந்த சுந்தரம் தேங்காய் பழங்களுடன் சம்பங்கி மாலை ஒன்றை வாங்கிக் கொண்டு வந்தான்...

கோயிலுக்குள் கூட்டம் அதிகமில்லை.. நின்று நிதானமாக வடபழனி ஆண்டவனைத் தரிசனம் செய்தார்கள் மாமனும் மருமகனும்.




" அப்பனே... முருகா...எல்லாரையும் நல்ல படியா வைக்கணும்.. ஐயா!... "

மனதார வேண்டிக் கொண்டு பிரகாரம் சுற்றி விட்டு கோயில் வாசலுக்கு வந்தனர்..

" பல வருசத்து ஆசை மாப்ளே.. இப்ப தான் நேரம் கூடி வந்திருக்கு... "- என்றவர் சட்டென கையை நீட்டி,

" அதோ நிக்கிறவன் சம்முவத்தண்ணன் மகன் தானே!.. " - என்று ஆச்சரியமானார்..

" டே... காசி!.. "

நாலெட்டில் விரைந்து அந்த இளைஞனின் தோளைப் பிடித்து அழுத்தினார்...

" இல்லே... நான் இல்லே!.. " - என்று தடுமாறினான்..

சற்றே அழுக்கான வேட்டி சட்டையுடன் அந்த இளைஞன்.. அவனது விழிகள் அங்கும் இங்குமாக மருண்டன..

" என்ன... இல்லே!... எங்க அண்ணன் மவன் தானே நீ?.. "

" நீங்க யாரையோ நெனைச்சிக்கிட்டு!.. "

" எங்கே அந்த முருகனப் பார்த்து சொல்லு!.. "

குப்பென அவன் முகம் வியர்க்க கண்களில் நீர் வழிந்தது...

" உனக்கு ஏன்டா.. இந்தத் தலையெழுத்து?.. வீடு வாச.. ன்னும் வாய்க்கா வரப்பு.. ன்னும் பத்து பேருக்கு சோறு போட்டுக்கிட்டு இருக்குறப்ப உனக்கு என்னடா விதி இது?.. "

" தப்பு பண்ணிட்டேன் சித்தப்பா... தப்பு பண்ணிட்டேன்!... "

காசி எனப்பட்ட காசிநாதன் முகத்தில் அடித்துக் கொண்டு அழுதான்..

அவனை ஆதரவாகத் தோளில் சாய்த்துக் கொண்டார் மாரிமுத்து...

" காசி... ஒன்னை எங்கண்ணுல காட்டுறதுக்குத் தான் இந்த முருகன் இங்கே அழைச்சிருக்கான் போல!... "

" என்ன விட்டுடுங்க மாமா!... " - மறுபடியும் அழுதான் காசி...

" மச்சான்.. என்ன இது சின்னப் புள்ள மாதிரி... பழச விடுங்க... இன்னிக்கு புதுசா பொறந்ததா நெனச்சுக்குங்க!... "

" சுந்தரம்... நான் அதுக்கெல்லாம் லாயக்கானவன் இல்லடா... "

" காசி சும்மா இரு... திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கிட்டு!.. " - அதட்டினார் மாரிமுத்து..

" இத்தோட பீடை எல்லாம் தொலைஞ்சது... எம் புள்ள நல்லாயிருக்கணும் முருகா!.. "

- என்றபடி மடித்து வைத்திருந்த திருநீற்றை அள்ளி காசிநாதனின் நெற்றியில் பூசி விட்டார்...

" மாப்ளே... அர்ச்சனைக் கூடையத் திருப்பிக் கொடுத்துட்டு வாங்க ... அந்த ஓட்டலுக்குப் போய் சாப்பிடுவோம்!.. "

மாரிமுத்து முன் நடக்க அவரது நினைவு பின்னோக்கிச் சென்றது.

சண்முகம் சீன் செட்டிங்ஸ் & சவுண்ட் சர்வீஸ்!

**சண்முகம் சீன் செட்டிங்ஸ் & சவுண்ட் சர்வீஸ்**

பதினெட்டு அடி நீளத்துக்கு நீலப் பட்டுத் துணியில் ஜரிகை வைத்துத் தைக்கப்பட்ட எழுத்துக்கள்..

தொம்பைகளும் தோரணங்களும் நாடக அரங்கின் முகப்பில் மினுமினுக்கும்..

" கணகண.. கணகண!.. " - என, ஹார்மோனியம், தபேலா, தாளம், டோலக், கஞ்சிரா எல்லாம் சேர்ந்து முழங்க நாடக மேடையின் திரைகள் இப்படியும் அப்படியுமாக நகரும் போது - பச்சை, மஞ்சள், சிவப்பு... ன்னு ஆயிரத்தெட்டு சீரியல் லைட்டுங்க சிலுசிலுக்கும்...

'அனைவருக்கும் நல்வரவு..' 'சண்முகம் சவுண்ட் சர்வீஸ்.. '
என்று டூரிங் டாக்கீஸ் மாதிரி ஸ்லைடுகளைப் போட்டதும் ஜனங்களோட ஆரவாரம் காவேரியைத் தாண்டி திருவையாத்துக்குக் கேட்கும்...

" வந்தேனே... யே.. வந்தேனே!... " - ன்னு எட்டுக் கட்டையோட ராஜபார்ட் வர்றப்ப சிவப்பு ஸ்பாட் லைட்...

ஒரு பூச்செண்டுடன் மகாராணி வர்றப்ப மஞ்ச ஸ்பாட் லைட்... ன்னு மாரியம்மன் கோயில் திருவிழா அட்டகாசமா ஆரம்பமாயிடும்..

தஞ்சாவூர், புதுக்கோட்டை, பொன்னமராவதி.. ன்னு போய் நல்லா கூத்து கட்டுறவங்களைக் கொண்டாந்து திருவிழாவ பெருவிழாவா ஆக்கிடுவான் காசிநாதன்...

ஏழாந் திருவிழா அன்னைக்கு மாயவரத்து பொம்மலாட்டம் நடக்கும்.. பொம்மைகள் ஆடுறதைப் பார்த்துட்டு ஜனங்க கிறங்கிக் கிடப்பாங்க...

சேலம்.. காரைக்குடி... போயி அங்கே நடக்குற சினிமா சூட்டிங் பார்த்துட்டு வந்து அதே மாதிரி ராஜா ராணி டிரஸ், அலங்கார சீன் செட்டிங், ஸ்கிரீன் எல்லாம் வேணும்... ன்னு ஒத்தக் கால்ல நிப்பான்... இவன் கேக்கிற மாதிரி ரெடி பண்ணிக் கொடுக்குறதுக்குள்ள மேலராஜவீதி விட்டல் ராவுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிடும்... விட்டல் ராவ் டெய்லரா இருந்தாலும் ஓரளவுக்கு புல்லாங்குழல் வாசிப்பார்... பெரும்பாலும் கூத்து கட்டும் இசைக் குழுக்களில் புல்லாங்குழல்கள் இருப்பதில்லை.. இதனால் கிருஷ்ண லீலா, அல்லி அர்ஜூனா, திரௌபதி வஸ்த்ராபகரணம் என்றெல்லாம் நாடகம்

போடுறப்போ தஞ்சாவூர்..ல இருந்து இவரைத் தள்ளிக்கிட்டுப் வந்துடுவான்.. கிருஷ்ணனுக்கு வாசிக்கணுமே!...

நாடகம் முடிஞ்சதும் விட்டல் ராவுக்கு மாலையுடன் மரியாதை.. தட்டில் தேங்காய் பழத்துடன் நூற்றியொரு ரூபாய் வைத்துக் கொடுப்பான்...
நூறு ரூபாய் பெரிய காசு... விட்டல் ராவுக்கு கண்ணு கலங்கிடும்...

திருவிழாவுக்குக் காப்பு கட்டி பந்தக் கால் நாட்டுனதும் கோயிலுக்கு கிழக்கால நாடகக் கொட்டாய்க்கும் முகூர்த்தம் பண்ணிடுவாங்க... அதுல இருந்து பதினோரு நாளைக்கு காசிநாதனைக் கையில பிடிக்க முடியாது...

' ஐநூறு தர்றோம்.. ஆயிரந் தர்றோம்!.. ' ன்னு யார் வந்தாலும் உள்ளூர் திருவிழா முடியிற வரைக்கும் அசைஞ்சு கொடுக்க மாட்டான்...

கல்யாணங்காட்சியில மணவறை ஜோடிக்கிறதுலயும் லவுட் ஸ்பீக்கர் கட்டி - சிவாஜி பாட்டு, எம்ஜியார் பாட்டு, செய்சங்கர் பாட்டு, தங்கவேல் காமெடி, திருவிளையாடல் ஒலிச்சித்திரம்.. ன்னு ரெகார்டு போட்டு பட்டைய கிளப்புறதுலயும் இவனை அடிச்சுக்க முடியாது..

எல்லாம் நல்லபடியா போய்க்கிட்டு இருக்கிறப்போ தான் - கூத்து கட்ட வந்தவங்க யாரோ சொன்னாங்கன்னு வீட்டுல தகராறு பண்ணி அம்மாவோட ஆறு பவுன் காசு மாலையக் கையில எடுத்துக்கிட்டு மெட்ராசுக்குப் போய்ட்டான்..

அப்போ போனவன் தான்... ரெண்டு வருசத்துக்குப் பின்னால இப்பதான் ஊர்க்காரங்க கண்ணுல மாட்டியிருக்கான்..

திடீரென்று அழுதான் காசிநாதன்..

' ஆயி அப்பனை விட்டுட்டு வந்து கஷ்டப்பட்டதை நினைச்சு அழுகிறான்!.. '
என்று தெரிந்து கொண்ட மாரிமுத்து ஆதரவாக முதுகைத் தடவிக் கொடுத்தார்...

" மானம் மரியாதை எல்லாம் போச்சே... சித்தப்பா!... வீட்டுக்குள்ள நுழையுறப்போ வௌக்குமாத்தால அடிக்க மாட்டாங்களா?.. "

" யார்ரா இவன்!... தண்ணியடிச்சு தண்ணி விலகுமா காசி?... ஊரு ஒலகத்துல யாரு தான் தடுமாறிப் போகலே?.. "

" என்னை இப்படியே விட்டுடுங்க சித்தப்பா!.. " - விசும்பினான்..

" உம்மேல ஒரு குத்தமும் இல்லே... காலம் போட்ட கணக்கு தான் நடந்து இருக்கு.. அத நெனச்சு இப்போ கண் கலங்குறதால சல்லிக் காசுக்குப் பிரயோஜனம் இல்லை.. நகை போனதோட இருக்கட்டும்.. நீ நல்லபடியா எங்களுக்குக் கிடைச்சியே.. அதுவே போதும்!... "

" அம்மா கழுத்துல கிடந்த திரவியத்தைப் புடுங்கிக்கிட்டு வந்தேன்.. உருப்படாத காரியம் பண்ணி ஒரே நாள்..ல அழிச்சிட்டேன்... அந்தத் திரவியத்தை மறுபடியும் சம்பாரிச்சு எடுக்கணும் சித்தப்பா!.. "

" சம்பாதி.. நிறைய சம்பாதி.. அதுதானே ஆம்பளைக்கு அழகு... ஆனா, அது இந்தப் பட்டணத்துல வச்சி வேணாம்!... நீ சம்பாதிக்கணும்.. சம்பாதிக்கணும்.. ன்னு சொல்றியே அந்தக் காசுமாலையா உனக்கு திரவியம்?.. "

சட்டெனத் திரும்பி சித்தப்பாவின் முகத்தை நோக்கினான்...
" உனக்கு அப்பன் ஆத்தா திரவியம்... அவங்களுக்கு நீ திரவியம்... செம்பொன் நழுவி சேத்துல விழுந்தா.. அதுக்குப் பேர் வேற...ன்னு ஆயிடுமா?.. நீ பக்கத்தில இருந்தாலே போதும்.. அப்பனுக்கும் ஆத்தாளுக்கும் ஆயுசு நூறு.. பொழைக்க பூமியில்லையா.. பொங்கித் திங்க வாசல் இல்லையா!.. இன்னைக்கு மறு ஜென்மம்.. ன்னு நெனைச்சுக்கிட்டு வேட்டிய மடிச்சுக் கட்டு.. இன்னும் ரெண்டு மாசத்துல ஊர்த் திருவிழா.. பந்தக் காலை எடுத்து நட்டு ஸ்பீக்கர் செட்டை தூக்கிக் கட்டு!.. "

புன்னகைத்த சித்தப்பா காசிநாதனின் கையைப் பிடித்துக் கொண்டு அந்த உணவகத்தினுள் நுழைந்தார்...

முன்னிரவுப் பொழுது..

ஜன்னலோரத்தில் காசிநாதன் அமர்ந்திருக்க எழும்பூர் ஸ்டேஷனில் இருந்து புதிய உற்சாகத்துடன் கிளம்பியது - தஞ்சாவூர் வழியாக ராமேஸ்வரம் செல்லும் போட் மெயில்...
ஃஃஃ

**திரு துரை செல்வராஜூ சுயகுறிப்பு :**

**தஞ்சை மா நகர் பிறப்பிடம்.. படிப்பு PUC வரையில் .. வாழ்ந்ததும் வளர்ந்ததும் கும்பகோணம் பட்டுக்கோட்டை வட்டாரங்களில்..**
**அந்த நாளைய கிராம கர்ணமாக வாழ்க்கையைத் தொடங்கியும் அரசியல் மாற்றங்களால் அந்த வேலை பறிபோனது... அதன் பின் சிங்கப்பூரில் நான்காண்டுகள்.. தற்போதைய வசிப்பிடம் வளைகுடா நாடுகளில் ஒன்றான குவைத்... Catering நிறுவனம் ஒன்றில் Store keeper.. ஆள் குறைவினால் சில மாதங்களாக கடுமையான வேலை.. வலைத் தளங்களின் பக்கம் வரும் நேரம் குறைந்தே விட்டது.. மீண்டும் கதைகள் எழுத வைத்து இளைஞனாக்கிய பெருமை அன்பின் ஸ்ரீராம் அவர்களுக்கும் சமீப நாட்களில் கதைக்கு ஏற்றவாறு அழகிய படங்களை இணைத்து சிறப்பிக்கும் அன்பின் கௌதம் அவர்களுக்கும் எங்கள் பிளாக் வலைத்தளத்திற்கும் நெஞ்சார்ந்த நன்றி..**

**Blog link : [thanjavur14.blogspot.com](thanjavur14.blogspot.com) email : [duraiselvaraju14@gmail.com](mailto:duraiselvaraju14@gmail.com)**



[Back to index ^]

# ஒரு அக்ரஹாரத்தின் பொங்கல் நினைவுகள் : காமாட்சி மஹாலிங்கம்

====

முதலில் ஏதாவது எழுதுவோமென்று நினைத்தவுடன், பழைய ஞாபகங்களாக இவைகளே என் மனதில் அணிவகுக்க ஆரம்பித்தது. வீறுநடை போடாவிட்டாலும், இந்தத் தொண்ணூறைத் தொட தளர்ந்த நடையுடனாவது என்னுடைய ஞாபகங்களை ஒரு எண்பது வருஷங்களுக்கு முன் எப்படியெல்லாம் நடந்தது என்பதே பொங்கலின் நினைவலைகள்.

வெள்ளையடிக்கணும். வீட்டின் சுவர்களுக்கு சுண்ணாம்பு பூசுவது.
வாசலில் சுண்ணாம்பு வந்தால் சொல் என்ற வார்த்தையுடன் ஒருவருக்கொருவர் செய்தி அஞ்சலாகும். சுண்ணாம்புக்கல் வீதியில் கூடையில் வைத்து விற்பனைக்கு வரும். அதையும் சிறிது மாதிரிக்கு வாங்கி சின்ன டப்பாவில் தண்ணீர் விட்டுப் பார்த்து சீறிக்கொண்டு வந்து நல்ல வெண்மை நிறமாக இருந்தால் வாங்குவார்கள்.

ஆள் ஆளுக்கு எத்தனைபடி வேண்டும்? எல்லாம் அலசி ஆராய்ந்து மறுநாளுக்கு அவர்கள் மொத்தமாகக் கொண்டு வருவார்கள். அக்கம்,பக்கம் எல்லாம் ஆர்டர் கொடுக்கப்படும். எல்லாவற்றையும் பசங்களாகிய நாங்கள்தான் பார்த்துச் சொல்ல வேண்டும்.

சுண்ணாம்பு ஆச்சா அடுத்து பசங்களா செம்மண் வந்தா சொல்லுங்கோ! அதுவும் வாங்கி மொத்தமாக ஜலம் விட்டுப் பிசைந்து பெரிய பெரிய உருண்டைகளாக உருட்டி வருஷத்திற்கும் கோலத்திறகு அழகு செய்ய, மங்ளகரத்தைப் பறைசாற்ற ஒரு ஓரத்தில் வந்து வெயிலோடு உட்கார்ந்து கொண்டு பறைசாற்றும்.

வீடு கிளீனிங், ஒட்டடை அடித்து, சுவற்றில் போனது வந்தது துவாரங்களை அடைத்து வெள்ளை அடித்துக் கொள்ளும்.

வாசலிலேயே பெரிய கட்டை வண்டிகளில் அதாவது கூடு இல்லாத வண்டிகளில் விற்பனைக்கு ஸாமான்கள் கொண்டு வருவார்கள். அதெல்லாம் பார்த்துப் பார்த்துச் சொல்ல வேண்டும்.

சவுக்கு விறகு,கரி டின் கணக்கிலும் விறகு குண்டு கணக்கிலும் விலைக்குக் கொடுப்பார்கள்.,

வராத ஸாமான்களே இருக்காது. உளுந்து,பயறு,கட்டி வெல்லம் எல்லாம் ஸஹாய விலையில். படிப்படியா கல்லுப்பு கூட. காலை வேளையில் கோலமாவு, கோலமாவு. அடுத்து பன்னுருட்டி அருகிலுள் ஊர் ஆதலால் முந்திரிப் பருப்பு கூடை கூடையாக விற்பனைக்கு வரும்.

எல்லா ஸாமான்களும் கடை விலையை விட குறைந்த விலையில் நல்ல பொருட்களாகவே கிடைக்கும். நெல் விளையாத வீடே கிடையாது.

இப்போது நினைத்துக் கொள்கிறேன். ஸாமான்கள் சேகரம் வருஷம் பூராவும் வருவதற்கு வாங்கி இருப்பார்கள்.

இது மட்டுமா? களிமண் கூட விலைக்கு வந்து விடும். வயதானவர்கள் வேலை புதுசு புதுசா கொடியடுப்பு, ஒத்தையடுப்பு, குமுட்டி, கட்டியடுப்பு என்று வேண்டியவர்களுக்காகவும், அகத்திற்குமாக அதுவும் அணி வகுக்காத குறைதான்.

எல்லாம் மழை ஓய்ந்து வெயில் அடிப்பதால் இருக்கும் என்று இப்போது தோன்றுகிறது!

கறிகாய் அதுவும் கிராம அக்கிரஹாரங்களில் சொல்லவே வேண்டாம்.!
கொடியிலேயே காம்பு காய்ந்து நன்றாக முற்றிய பூசணி பறங்கிக்காய்கள் உறிகட்டி அதில் சும்மாட்டில் உட்கார்ந்து ஊஞ்ஜலாடிக் கொண்டிருக்கும்.

அவரை கார்த்தி பார்க்கவே பூத்துக் காய்த்துக் கொண்டிருக்கும். எத்தனை வகை?

வெள்ளை, பச்சை ஆட்டுக்கொம்பு, வயலெட், பறித்து மாளாது. கொடுத்தும் மாளாது. அத்தனை வகை. கூடை கூடையாகப் பறிக்கலாம்.

வாழை ஐப்பசி அடைமழையைப் பார்த்தது தப்பிப் பிழைத்து குலை , முற்றி நிற்கும் பேயன், மொந்தன், ரஸ்தாளி, கற்பூரவல்லி என்று அவைகள் பெயர் சொல்லி அறிமும் செய்வது போல உள்ளது. வாழை இலைக்குப் பஞ்சமே கிடையாது.

புடலை ஒருபக்கம் சிரித்துக் கொண்டு தொங்கும். பாகல் பறித்து மாளாது. பசு மஞ்சள் வாவா என்று கூப்பிடும்.

இப்படி பல தினுஸு காய்கள் அக்கம்,பக்கம் பலதினுஸாக அவர்கள் கொடுக்க, இவர்கள் வாங்க பஞ்சமே இல்லை.


வாசலில் காவி, வெள்ளை பட்டையடித்து, வீடு பூரா வெள்ளையடித்துத் தயார்.
கரும்பு விலை கொடுத்து வாங்கவே வேண்டாம். நெல்லி குப்பம் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு எங்கள் தெரு வழியேதான் போகும் கட்டுக்கட்டாக இரட்டை மாட்டு வண்டிகளில்.



“ஏம்பா ஒரு கரும்பு போடேன் !” இழுத்துக்கோ என்பான் வண்டிக்காரன் . தெரிந்த வண்டிக்காரன் யாராவது எல்லோருக்கும் உண்டு.

கிளிப்பச்சை நிறக்கரும்பு மளுக் மளுக்கென்று சாப்பிட வெகு சுலபம்.
மீதி நாட்களில் ஒரு கரும்பையே சுலபமாக யாவரும் போட்டி போட்டுக் கொண்டு நிமிஷத்தில் காலி செய்யும் போட்டி கூட உண்டு.

அப்புறம் மாட்டுக கொட்டாய். மாட்டுக்கு ,கன்றுக்கு அலங்காரம். கழுத்துக்கு மணி. கொம்புக்கு கலர் எல்லாம் பொங்கலுக்காகத் தயார்.



வீடு தயார். போகிப் பண்டிகை ஆகிவிட்டது. மாவிலைத் தோரணங்களும்,கோலங்களுமாக பொங்கலையும் வரவேற்க வேண்டியதுதான்.

நான் சொல்வது சிறிய வயதின் நினைவுகளைத்தானே? பூஜை, புனஸ்காரங்களெல்லாம் பெரியவர்களின் பாடு. பூப்பறிப்பது,கூடமாட வேண்டிய ஒத்தாசைகள் செய்வதுதான் நம்முடைய வேலையாக இருக்கும். மடியாக எல்லாம் செய்வோம்.

எங்கள் வீடுகளில் புதுப்பானையில்தான் பொங்கல் செய்வோம் என்ற வழக்கம் இல்லை. புதிய அடுப்புகளை மெழுகி கோலம் போட்டு இருப்பார்கள். வெண்கலப்பானைகளில்தான் நல்ல நேரத்தில் பொங்கல் செய்வார்கள். அதற்குதான் மஞ்சள் கட்டிய அலங்காரமெல்லாம்.



திறந்த முற்றத்திலோ,மாடியிலோ கோலத்தில் ரதம் வரைந்து அதில் சந்திர ஸூரியன் வரைந்து அதற்குதான் பூஜை. தேருக்கு சக்கரம் ஏன் ஒன்று என்று கேள்வி கேட்டுக் கொண்டு இருப்போம்.

அவ்விடம்தான் பொங்கல்செய்த வெண்கலப்பானையுடன் சட்ட சோபிதமாக பூஜைகளும், தீபாராதனை நிவேதனம் எல்லாம் நடக்கும்.

அப்போதுதான் பொங்கலோ பொங்கல் முழக்கமும., இதெல்லாம் உங்கள் யாவருக்கும் தெரிந்ததுதான்.

மூன்றுமணி சுமாருக்கு இனாம் அணி வகுப்பு ஆரம்பமாகிவிடும். எங்களூரிலுள்ள எல்லா கோவில்களிலும் நாதஸ்வரம் வாசிக்கும் ஒவ்வொரு கோஷ்டியும், குரூப், குரூப்பாக எல்லோர் வீடுகளுக்குமுன் இரண்டு நிமிஷங்கள் மங்கள வாத்தியங்களை வரிசையாக வாசிப்பார்கள்.



வீட்டின் பெரியவர்கள், தயாராக ஒரு பாத்திரத்தில் போட்டுவைத்திருக்கும் ரூபாய்களை வினியோகம் செய்வார்கள். பெரிய தொகை என்று நினைக்காதீர்கள். பணக்காரர்கள் வீட்டில் ஐந்து ரூ கிடைக்கலாம். இங்கெல்லாம் இரண்டு ரூ. தான். சிலவீடுகளில், “இன்னும் சிறிது நேரம் வாசிப்பா. நீ வந்த வேளை தொடர்ந்து கல்யாணங்களாகவே வரட்டும்” என்பார்கள்.

இப்படி மாரியம்மன், பெருமாள் ,ஈசுவரன், திரௌபதியம்மன், கோணம்மா, பிள்ளையார் கோயில்கள் என்று சொல்லி வருவார்கள். சரி இவர்களெல்லாம் வாசித்து ஆகிவிட்டது. இனி வருபவர்களுக்கு ரேட் குறைந்து விடும்.
எல்லாம் ஒத்தை ரூபாய் பணமாகவே இருக்கும்.

‘இது சொந்த வீடு இல்லேப்பா!! இங்கே யாரும் சம்பாதிக்கலே’என்று முதலிலேயே தட்டிக் கழிப்பவர்களும் உண்டு!

தெரிந்த தோழிகளின் வீட்டிற்கு இதெல்லாம் வேடிக்கை பார்க்க நாங்களும் போவோம் அவர்களும் வருவார்கள். ஆண் பசங்களும் அப்படியே!!!!!!!!!!!!!!!!

எங்களுக்கும் காசு கிடைக்கும். பிகுவோடு வாங்கிக் கொள்வோம் என்று நினைக்கிறேன்.

போஸ்ட்மேன், தச்சு, இரும்பு வேலை, வண்ணான் என யாவரும் அப்போதே ஆஜர். இதெல்லாம் வழக்கமாக இருந்தது. வைதீகர்கள் வந்து பஞ்சாதி சொல்லுவார்கள். நமஸ்காரம் செய்து சம்பாவனை செய்வார்கள்.

மாட்டுப் பொங்கலன்றுதான் வெளியில் சென்று திறந்த வெளியில் பொங்கலிடுவதைப் பார்க்கப் போவோம். அந்த விதரணையும் சொல்லி மாளாது. அவர்கள் வீட்டுப் பெண்கள் பிறகு கும்மி அடிப்பார்கள். சாயங்காலம் ஜல்ஜல் மாட்டு வண்டிகளில் பொங்கலோ பொங்கல் என்று கோஷித்துக் கொண்டு , குரூப் குரூப்பாக நாங்கள் யாவரும் ஊரைச் சுற்றி வந்ததும் எப்படி மறக்க முடியும்? எங்கள் அக்கிரஹாரத்தில் அப்போது 180 குடும்பங்கள். இருந்தன என்று சொல்லுவார்கள்.

இதுவும் ஒருவித பொங்கல் ஞாபகங்கள் தானே??

= = = = =


திருமதி காமாட்சி மஹாலிங்கம் அவர்கள் பற்றிய குறிப்பு :

இயற்பெயர்-----காமாட்சி. காமாட்சி மஹாலிங்கம்.
வலைப்பூ------சொல்லுகிறேன். https://chollukireen.com/
மின்னஞ்சல்--- kamatchi.mahalingam@gmail.com



Back to index ^

# அய்யா பொங்கல்! - சிறுகதை :: தேவராஜன் சண்முகம்.




சுட்டெரிக்கும் வெயிலுக்குக் கடற்கரைக்காற்று இதமாக, சுகமாகத்தான் இருந்தது. சூரியன்மேற்கு பக்கம் நகர்ந்து விட்டான். இப்போது காற்று இன்னும் ஜோராக ஜில்லென்று வீசியது.

கடற்கரை மணலில் நடந்து கொண்டிருந்தேன்.

“ஐஸ்... ஐஸ்... ஐஸ்...” முப்பது வயதொத்த இளைஞன் தள்ளுவண்டியை மணலில் சிரமப்பட்டு தள்ளிக்கொண்டே கூவி சென்று கொண்டிருந்தான்.

‘இது எங்கேயோ கேட்ட குரல் மாதிரி...’ மனசுக்குள் அந்த ஐஸ் வார்த்தை நங்கூரம்போட்டு, பானையில் இருக்கும் மோரை மத்து கடைவதுபோல் கடைந்து கொண்டிருந்தது.

அந்தக்குரலுக்கு உரியவனை பின்பக்கம் பார்த்ததால் சட்டென்று அந்த உருவம் கண்ணில் வழுக்கி வழுக்கிப் போனது.

கொஞ்சம் நடையை துரிதப்படுத்தி, அந்த ஐஸ்காரனை நெருங்கி விட்டேன்.
புடைத்த நெற்றியும், பிதுங்கிய உதடும், அடர்மீசையும்,பொசுபொசுவென வளர்ந்து சுருண்டிருந்த தாடியும்,மரக்கா மண்டையும் யாரையோ நினைவுப்படுத்தியது.

" யப்பா, கொஞ்சம் நில்லேன். ஒரு ஐஸ் கொடுப்பா" என்ற சொல்லி, அவனை பாதம் முதல் தலைவரை ஸ்கேன் செய்து ஆராய்ச்சி செய்தேன்.

" சார், என்ன ஐஸ் வேணும்? பால் ஐஸ், சேமியா ஐஸ் எது வேணும்?" என்று கேட்டான்.

"ஒரு பால் ஐஸ் கொடுப்பா..."

" பதினைஞ்சு ரூபா" என்றான் அவன்.

ஐஸ் வாங்கிக் கொண்டு, பதினைந்து ரூபாயைக் கொடுத்துவிட்டு, அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

இப்போது- அவன் என்னை மேலும் கீழும் பார்க்க ஆரம்பித்துவிட்டான்.
என்ன நினைத்தானோ தெரியவில்லை. என்னைப் பார்த்து கொஞ்சமாய் சிரித்துவிட்டு நகர்ந்தான்.

நாற்பது அடி தொலைவு சென்றிருப்பான் அவன். சட்டென்று உச்சி மண்டையில் யாரோ என்னை ஓங்கி குட்டுவது போல் இருந்தது. என்னை அறியாமலேயே " ஏஏஏ... அய்யா பொங்க!" என்று கத்தி கூப்பிட்டேன்.
அவன் சற்று நின்று, நிதானித்து என்னைத் திரும்பிப் பார்த்தான்.
நான் அவனை நோக்கி விருவிரென்று நடந்தேன். அவன்- வண்டியை தள்ளிக்கொண்டே 'ஐஸ்... ஐஸ்...' என்று கூவியப்படி சென்றான்.

"ஏஏஏ அய்யா பொங்க!"
"........"
"ஏ அய்யா பொங்க!"
"........"
"அய்யா பொங்க"
"....."
'அவனா இவன்? அவன்தானா? அவன், இவன் இல்லையா...' எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

என் எதிரே அவன் ரொம்ப தொலைவில் வண்டியைத் தள்ளியப்படி சென்று கொண்டிருந்தான்.

நின்ற இடத்திலேயே அப்படியே அமர்ந்து விட்டேன். அப்படியே அய்யா பொங்கலும் என் மனதில் அமர்ந்துவிட்டான்.

****

நதிமூலம் ரிஷிமூலம் தெரியாது என்பார்களே! அதுபோலத்தான் அய்யா பொங்கலுக்கும் மூலம் தெரியாது.

யார் அவன்? அவர் பெயர் என்ன? ஊர் எது? சொந்தம் பந்தம், சாதி சனம் எதுவும் அவனுக்குத் தெரியாது. அதனால் எனக்கும் அவனைப்பற்றி எதுவும் தெரியாது.

கூடையைக் கவிழ்த்து வைத்ததுபோல தலையில் பிசுபிசுப்பான செம்பட்டை தலைமுடி. கண்ணில் பீழை ஒழுகும். பிதுங்கிய உதடு. கோரைப்பல். திட்டு திட்டாய் அழுக்குத் தேமல். சூம்பிப்போன கை, கால்கள். அண்டிதள்ளிய பானை வயிறு. அழுக்கேறிய ஒரு காக்கி டவுசர் போட்டிருப்பான். வயசு எட்டோ ஒன்பதோ இருக்கலாம்.

ஒரு மாசிமாதத்து தெப்போற்சவத்துக்கு எங்கிருந்தோ கூட்டத்தோடு கூட்டமாய் திருக்கண்ணபுரம் வந்தான்.

தெப்பம் பார்க்க வந்த பக்தர்களுக்கு மூன்று மடங்களில் இலவச அன்னதானம் போட்டதால், இவனுக்கும் தினமும் மூன்று வேளைச் சாப்பாடு கிடைத்தது.

காலையில் பெருமாள் பல்லக்கில் புறப்பட்டு, மீண்டும் கோயில் வரும் வரை பல்லக்கை தொடர்ந்து வருவது பட்டாச்சாரியாரும் இவனும் தான். இரவு அப்படித்தான் ஒவ்வொரு வாகனத்தில் பெருமாள் உலாவரும்போது இவனும் பெருமாளுக்கு அடிபொடிபோல வருவான்.

இப்படியே நாட்கள் ஓடின.

பதினைந்தாம் நாள் தெப்பம் உற்சவம் சிறப்பாக முடிந்தது.
மறுநாள் கொஞ்ச கொஞ்சமாக வந்த பக்த ஜனங்கள் எல்லாம் ஊர் திரும்பினர். அடுத்தடுத்த நாளில் இலவச உணவுபோடுவதும் நிறுத்தப்பட்டது. மடங்கள் மூடப்பட்டது.

பாவம் அவனுக்குப்பசி! யார் சாப்பாடு போடுவார்கள்?

உச்சி வெயில் மாங்குட்டையில் அவன் தண்ணீரில் மூழ்கி, மூழ்கி எழுந்து கொண்டிருந்தான். கையில் என்னவோ கறுப்பாக இருந்தது. அதைப் பல்லால் கடித்து தின்று கொண்டிருந்தான்.

அப்போது நான் குளக்கரையில் நின்று கொண்டிருந்தேன்.

“ ம்ம்வா...” என்று என்னைக்கூப்பிட்டான்.

“எனக்கு நீச்சல் தெரியாது. வரலே... போ... நீ என்ன திங்கற?”

தண்ணீரில் இருந்து வெளியே வந்தான். அம்மணமாய் இருந்தான். கையில் இருந்ததைக் கொடுத்து, “இந்தா தின்னு... இது அல்லிக்கிழங்கு. நல்லாருக்கும்.” என்று என் கையில் திணித்தான். கொஞ்சம் கடித்துப் பார்த்தேன். சப்பென்று இருந்தது.

மீண்டும் குளத்தில் அவன் இறங்கிவிட்டான்.
நான் வீடு திரும்பினேன்.

இதுவரைக்கும் அவனைக் கூப்பிட பெயரில்லை. அவனுக்குப் பெயரே இல்லை. இவனை எப்படி கூப்பிடுவது என்று தீவிரமாய் யோசித்தேன்.
அவனுக்குப் பெயர் வைக்க அந்தச் சந்தர்ப்பம் வந்தது.

அன்றைக்குச் சனிக்கிழமை. இரவு ஏழு மணி இருக்கும். பெருமாள் சந்நிதியில் நான் மாமாவோடு நின்று கொண்டிருந்தேன். சாயரட்சை பூஜை நடந்து கொண்டிருந்தது. கருட வாகனத்தின் பின் அவன் நின்று கொண்டிருந்தான்.

அரை மணி நேரத்தில் பூஜை முடிந்தது.
பிரசாதம் கொடுக்க ஆரம்பித்தார்கள்.
முதல் சுற்று சுண்டல்.
இரண்டாம் சுற்று பஞ்சாமிர்தம்.
மூணாம் சுற்றில் பொங்கல்.
அவன் பிரசாதம் கொடுப்பவரின் பின்னாலேயே சென்று " அய்யா பொங்க... அய்யா பொங்க... அய்யா பொங்க" என்று கையேந்தியபடி கெஞ்சி கொண்டிருந்தான்.
' ஏ... தள்ளிப்போ... எத்தனை முறைதான் கேட்ப... எப்ப பாரு அய்யா பொங்க... அய்யா பொங்கன்னுகிட்டு' பிரசாதம் கொடுத்தவர் அவனை அடிக்காத குறையாக விரட்டினார்.

அப்போதுதான் கவனித்தேன். அவன் கூப்பிட்ட ஐயா பொங்கல் என்பதையே.
பெருமாள் சந்நிதியில் அவனுக்கு அய்யா பொங்கல்ன்னு பெயர் வைத்தேன்.
அப்போதே 'ஏ அய்யா பொங்கல்' என்றேன்.

அவன் திரும்பிப் பார்த்தான்.

"இந்தா, வாங்கிக்கோ' என்று என் கை நிறைய வைச்சிருந்த பொங்கலைக் கொடுத்தேன்.

அவன் வாங்கிக்கொண்டு வாய்நிறை திணித்து சாப்பிட்டான்.

நான் கூப்பிட்ட அய்யா பொங்கல் பெயரை, பிறகு எல்லாரும் ஐயா பொங்க என்றுகூப்பிட ஆரம்பித்து விட்டார்கள்.

அவனை 'அய்யா பொங்க'ன்னு யார் கூப்பிட்டாலும் திரும்பிப் பார்ப்பான்.

நாளாக நாளாக அதுவே அவனுக்குப் பெயராகிவிட்டது.

கீழத் தெரு ருக்குமணி பாட்டி வீட்டு திண்ணையில் படுத்திருப்பான். பாட்டிக்கு உதவியாக வேலைகள் செய்வான். ருக்குமணி பாட்டி மூணு வேளை சோறு போடும்.

யார் சொன்னாலும் வேலை செய்வான். எட்டணா கொடுத்தா போதும்.
அவன் இந்த ஊருக்கு வந்து நாலு வருஷத்துக்கு மேல ஓடிவிட்டது.
அவனுக்கு அரும்பு மீசை முளைக்க ஆரம்பித்து விட்டது.
அன்றைக்கு பிரதோஷம். ராமநந்தீஸ்வரம் சிவன் கோயிலில் அய்யா பொங்கவுடன் சேர்ந்து விளையாடி விட்டு வீடு திரும்பும்போது மணி எட்டு.
கீழத் தெருவில் ஒரே சத்தம். மாட்டு வண்டி ஒன்று ருக்குமணி வீட்டு முன்பாக நின்றுகொண்டிருந்தது.
ருக்குமணி பாட்டியை பாம்பு கடிச்சுட்டதாம்.
கோட்டூர் நாட்டு வைத்தியரிடம் ருக்குமணியை கூட்டிச் சென்றார்கள்.
வண்டி பின்னாலேயே 'பாட்டி... பாட்டி... பாட்டி...' என்று ஓலமிட்டு அய்யா பொங்க ஓட்டமும் நடையுமாய் சென்றான்.

பொழுது விடிந்தது.
ருக்குமணி பாட்டி சடலமாகத்தான் வீடு திரும்பியது.
ருக்குமணி பாட்டிக்குச் சொந்தம் பந்தம் எல்லாம் அதிகம் கிடையாது.
அன்றைக்கு சாயந்தரமே பாட்டியைத் தகனம் செய்தார்கள்.
மயானக் கரையில் அழுதுகொண்டே இருந்தான் அய்யா பொங்க.
ராத்திரி பூரா அங்கேயே அழுதுகிட்டு இருந்தான்.
பொழுது விடிந்தபோது அய்யா பொங்க ஊருக்குள் வரவேயில்லை.
ஒரு நாளாச்சு...
ஒரு வாரமாச்சு...
ஒரு மாதமாச்சு...
ஒரு வருஷமாச்சு...
அய்யா பொங்க வரவேயில்லை.
எங்கே போனான்... ஏன் போனான்.. இன்னை வரைக்கும் யாருக்கும் தெரியாது.
அது ஆச்சு இருபது வருஷம்.
***

இருள் படர்ந்தது. கடற்கரைக்கு ஜனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்.
பிளாஸ் பேக்கில் என் நினைப்பு இருந்ததில்...
நிஜ நிகழ்வுகளில் என் மனம் ஒட்டாமல் இருந்துவிட்டது.
எப்படியும் இந்தக் கடற்கரையில்தான் இருப்பான். அவனைத் தேடினால் கிடைக்காமலா போய்விடுவான்.
நாலா பக்கமும் தேடினேன். அவன் என் கண்களுக்குத் தென்படவேயில்லை.
வீடு திரும்பினேன்.
இரவு உறக்கத்தில் அய்யா பொங்கதான் வந்தான்.
அவனுக்குப் பேர் வைத்த என்னையே அடையாளம் தெரியவில்லையே?
என்னிடம் பேச அவன் ஏன் விரும்பவில்லை?
என்னைப் பார்த்து லேசாக சிரித்தானே?
எங்கிருந்தோ வந்தான். எங்கேயோ ஓடிப்போனான்.
இப்போ இருபது வருஷம் கழித்து கண்டுகொண்டேன்.
நாளைக்கு அவனை நிச்சயம் கடற்கரையில் கண்டுபிடித்து விட வேண்டும்.
இப்பவும் அவன் பெயர் அய்யா பொங்கதானா?
இல்லேன்னா இப்போது அவனுக்கு வேறு பெயரா? அவனைச் சந்தித்தால் முதலில் இதைத்தான் கேட்க வேண்டும் என்று நினைத்தப்படிதான் இருந்தேன். நித்ராதேவி என்னை தழுவிக்கொண்டாள்.

Back to index ^

# படப் புதிர் :: பானுமதி வெங்கடேஸ்வரன்.

**மொத்தம் ஐந்து ஊர்கள். அவை என்னென்ன? படங்களைப் பார்த்து ஊர்களை கண்டுபிடியுங்கள்:**

**ஊர் 1. (3 படங்கள்)**








**ஊர் 2. (3 படங்கள்)**









================

**ஊர் 3. (2 படங்கள்)**





**ஊர் 4. (4 படங்கள்)**









**ஊர் 5. (4 படங்கள்)**









**விடைகள் : கடைசி பக்கத்தில்**

சுய அறிமுகம்: பானுமதி வெங்கடேஸ்வரன்



## என் பிளாக்: தம்பட்டம்

சிறு வயதில் விளையாட்டுகளில் திறமை குறைவு, தவிர தோற்றுப்போவதை ஒப்புக்கொள்ள முடியாது என்றால் யார் விளையாட சேர்த்துக் கொள்வார்கள்? நல்ல வேளை புத்தகங்கள் கிடைத்தது. நிறைய படித்தேன். கல்லூரி காலத்தில் சிவசங்கரி, இந்துமதி, வாஸந்திக்குப் பிறகு நான்தான் என்று நினைத்தேன். நிறைவேறாத சில ஆசைகளில் அதுவும் ஒன்றாகிப் போனது.

எங்கள் வீட்டுக்கு அருகில் வசித்த ஒரு பெண்மணி மூலம் ப்ளாக் பற்றி அறிந்தேன். என் மகள் பிளாக் துவக்கி கொடுக்க, ஆகஸ்ட் 30, 2010 அன்று என் பிளாக் ஆகிய 'தம்பட்டம்' பிறந்தது. முதல் பதிவு 'மதராச பட்டினம்' திரைப்பட விமர்சனம். இதுவரை 399 பதிவுகள் எழுதியிருக்கிறேன். கதை, கட்டுரை, பிரயாணம், திரை விமர்சனம், நூல் விமர்சனம், சமையல்,அனுபவம் என்று கலந்து கட்டி எல்லாவற்றையும் இதில்தான் எழுதுகிறேன்.

எங்கள் பிளாக் - கேட்டு வாங்கிப் போட்ட கதையில் என்னுடைய 'மாங்காய் நெக்லெஸ்', 'சீதை ராமனை மன்னித்தாள்' 'கேட்ட வரம்' போன்ற கதைகள் அதிகம் பாராட்டைப் பெற்றன.

எங்கள் பிளாக் கொடுத்த உற்சாகத்தில் JB channel என்ற பெயரில் 'யூ டியூப்' தொடங்கி அதில் என் சகோதரியையும் இணைத்துக் கொண்டு காணொளிகளை வழங்கி வருகிறேன். அதற்கும் எங்கள் பிளாக் மெம்பர்கள் ஆதரவளித்து உற்சாகமூட்டி வருகிறார்கள்.

வணக்கங்களும், நன்றியும்.

Back to index ^

# பழைய நினைப்புதான் பேராண்டி :: நெல்லைத்தமிழன்

**ஒவ்வொருத்தரும் அவங்க, மனசுல, இது தன் மண் என்று நினைக்கறதுதான் அவங்களோட சொந்த ஊர் என்று சொல்லும் தகுதி பெறும். அதற்காக அந்த மண்ணிலேயே காலம் முழுதும் வாழ்ந்திருக்கணும் என்று அர்த்தம் கிடையாது. நான், அப்பாவின் ஆசிரியப் பணி காரணமாக பல மாவட்டங்களில் ஆரம்பக் கல்வி முதல் பயின்றிருந்தாலும் என் மனதில், நான் நெல்லையைச் சேர்ந்தவன் என்ற உணர்வே இருக்கிறது.**

**எனக்கு நெல்லைத் தமிழ் – வட்டார வழக்கு வராது, ஆனால் நெல்லைப் பகுதியைச் சேர்ந்தவர்களின் தமிழை எங்காவது கேட்க நேர்ந்தால், அட 'எங்கூர்க்காரன்' என்ற எண்ணம் வரும். நிறைய தடவை, தமிழை மட்டும் கேட்டுவிட்டு, நீங்க நெல்லைப் பகுதியா, நாகர்கோயிலா என்று கேட்டிருக்கிறேன். சொந்தக் கதை ஒரு புறம் இருக்கட்டும்.**




நெல்லையப்பர் கோவில், நெல்லை டவுன்



எங்க அம்மா சைடு, கொஞ்சம் லிபரல், அதாவது ஆசாரமாக இருந்தாலும், ஹோட்டலில் எப்போதாவது வாங்கிச் சாப்பிடுவதோ இல்லை லாலா கடைகளில் வாங்கிச் சாப்பிடுவதோ உண்டு. நெல்லை ஜங்ஷனில் இருந்து சில கிலோமீட்டர்கள் தள்ளி அப்பா சைடு வீடு உண்டு. அங்க, அடுத்த வீட்டில் சாப்பிடுவதற்கே அனுமதி கிடையாது, நாங்க சின்னப் பசங்க என்பதால், பெருமாள் கோவில் பிரசாதம் மட்டும் வாங்கி (கோவில்ல குடுக்கறதுதான். அது வியாபார ஸ்டால்கள் இல்லாத காலம்) நாங்க சாப்பிடலாம். ஆனா வீட்டுப் பெரியவங்க சாப்பிட மாட்டாங்க.

பாட்டி வீட்டிற்குச் சென்றால்தான் கொஞ்சம் மனசு ரிலாக்ஸ்டாக இருக்கும், இந்த மாதிரி விஷயத்தில். அப்போல்லாம் (70களில்) நெல்லை ஜங்ஷனில், இரயில்வே டிராக் அருகில் இருக்கும் எங்கள் பாட்டி வீட்டின் பகுதியில் தெருவுக்கு இரண்டு இடங்களில் (வீடுகளில்) மிக்சர், தவலைவடை போன்றவைகள் தயார் செய்வார்கள். மாலை 3 மணி ஆகிவிட்டால், எங்கள் பாட்டி வீட்டில், என் அம்மாவோ இல்லை மாமாக்களோ காசு கொடுத்தால் அங்கு சென்று பொட்டண மிக்சர், காராசேவு, தவலைவடையெல்லாம் வாங்கி வருவேன். இதுவே வளர்ச்சியுற்று, லாலாக் கடைகளாக வர ஆரம்பித்தது. எங்க பாட்டி வீட்டிலிருந்து என் பெரியம்மா இருக்கும் வீட்டிற்குப் (அது சில தெருக்கள் தள்ளி) போகும் வழியில், வரதராஜர் கோவில் இருக்கும் தெருவில் குறைந்த பட்சம் 5-6 லாலாக் கடைகளாவது உண்டு. அங்கெல்லாம் 50 பைசாவுக்கு அல்வா வாங்கினால், அதனோடு கொஞ்சம் மிக்சரும் தருவாங்க.

அப்போதெல்லாம் ஹோட்டலிலிருந்து என் மாமாவோ இல்லை பெரியம்மா பசங்களோ, பேப்பர் ரோஸ்ட் என்று வாங்கி வருவார்கள். தோசையை, நியூஸ் பேப்பரில் மேல் வைத்த

வாழை இலையில் சுற்றி, ஒரு கேலண்டர் போலச் சுற்றித் தருவார்கள். சில சமயம் பூரி செட். எங்கள் வீடுகளில் சந்திரவிலாஸ் ஹோட்டல் என்றெல்லாம் பெயர் அடிபடும்.




ஹோட்டல் சந்திரவிலாஸ், நெல்லை ஜங்ஷன், சாலைக்குமரன் கோவில் அருகே - 2018 ஜூலை




பல வருடங்களுக்குப் பிறகு, கிட்டத்தட்ட 30-35 வருடங்களுக்குப் பிறகு ஜங்ஷனுக்கு குடும்பத்துடன் சென்றிருந்தேன். அப்போ ஃபேமஸா இருந்த கடைகள் சில இப்போதும் இருக்கிறது. சாலைக்குமரன் கோவில் அருகில் (மேம்பாலத்துக்குக் கீழ்) இருக்கும் சந்திரவிலாஸும் அதில் ஒன்று. எல்லோரையும் ஹோட்டலிலேயே கழற்றி விட்டுவிட்டு,

எனக்கு காலார பழைய நினைவுகளுடன் நடக்கணும் என்று தோன்றியது. சந்திரவிலாஸ் ஹோட்டல் பெயரைப் பார்த்ததும் உள்ளே நுழைந்தேன். வெளியூர்களெல்லாம் பல வருடங்கள் சுற்றிவிட்டு, திரும்ப சொந்த ஊரில் பாட்டி வீட்டிற்குள் நுழைந்தால் என்ன மாதிரி ஃபீலிங் இருக்கும்? மனது தான் பார்த்தவைகளைக் கம்பேர் செய்யும் இல்லையா? பழைய ஹோட்டல் என்ற ஃபீலிங்தான். சும்மா ஓரிரு ஐட்டங்கள் ஆர்டர் செய்து சாப்பிட்டேன். நிச்சயம் என் மனைவி அங்கு சாப்பிட விரும்பமாட்டாள். பசங்க, எட்டிப் பார்க்கக்கூட விரும்ப மாட்டாங்க. இப்படித்தான் மைலாப்பூரில் (பேயாழ்வார் கோவில் அருகில்) இராயர் மெஸ் என்ற ஃபேமஸ் மெஸ்ஸுக்கு அவளை அழைத்துச் சென்றிருந்தேன். அங்கிருந்தவர்கள் விருந்தோம்பல் அருமை என்றாலும், உணவு ரொம்பவே சுமாராகத் தோன்றியது. அவள் உணவு, மற்றவர்கள் புகழ்ந்து தள்ளிய அளவு இல்லை என்று சொன்னாள். அட.. சந்திரவிலாஸிலிருந்து மனது ராயர் மெஸ்ஸுக்குத் தாவி விட்டதே. இது அந்த ஹோட்டல்களின் குறை கிடையாது. எவ்வளவோ ஹோட்டல்கள், ஊர்கள், உணவு வகைகளைப் பார்த்த பிறகு மனது ஒப்பீடு செய்யும். அந்த ஊரிலேயே இருப்பவர்கள் மனது அப்படியே இருக்கும். அவ்வளவுதான். இணையத்தில் பலர் ஆஹா ஓஹோ என்று எழுதும் விஞ்சை விலாஸில் டிபன் சாப்பிடணும் என்று எனக்கு ஆசை. அதற்கு என் மனைவி, எல்லாரும் பழைய நினைவில்தான் எழுதறாங்க. போயிட்டு எதற்கு ஏமாற்றமடையணும் என்று சொன்னாள்.

நாங்கள் நெல்லையப்பர் கோவிலின் முன் உள்ள இருட்டுக்கடைக்குச் சென்றோம். அங்கு அல்வா வாங்கினோம். ஜங்ஷனில் உள்ள சாந்தி ஸ்வீட்ஸ் கடையில் 10 ரூபாய்க்கு வாழை இலையில், மாலை 6 மணி வாக்கில் அல்வா தருவாங்க. அது அவளுக்கு ரொம்பவே பிடித்திருந்தது. ஒப்பீட்டளவில் இருட்டுக்கடை அல்வா அவ்வளவு சுவையாகத் தெரியவில்லை. நெல்லை மேம்பாலத்துக்குக் கீழ், சாலைக்குமரன் கோவில் இருக்கும் ரோடில், சந்திரா ஸ்வீட்ஸ் கடையும் வெகு புராதானமானது. அங்கும் இதேபோல அல்வா வாங்கினோம். இது தவிர பாளையங்கோட்டை தெற்கு பஜாரில் ஸ்ரீராம் லாலா ஸ்வீட்ஸ் கடையிலும் அல்வா வாங்கினோம். சரி... எதையோ எழுத வந்து, மனது அல்வாவில் அமர்ந்துவிட்டது.



இருட்டுக்கடை, நெல்லை டவுன், நெல்லையப்பர் கோவில் எதிரே - 2018 ஜூலை.






நெல்லை டவுன் - விஞ்சை விலாஸ், பாளையங்கோட்டை தெற்கு பஜார் ஸ்ரீராம் லாலா ஸ்வீட்ஸ் (நிற்பவரின் வலதுகைப் பக்கம்)



நான் பாளையங்கோட்டையில் வாழ்ந்தபோது, நெல்லைல சமோசா கிடைக்கும். உள்ள நல்லா வெங்காயம் இருக்கும், சோம்பு இருந்த நினைவு இல்லை. அவ்வளவு ருசி. அதை நினைத்து நாங்கள் சென்றிருந்தபோது சமோசா வாங்கினால், பழைய ருசி இல்லவே இல்லை. இப்போ புதுசா பட்டாணி இன்ன பிற சமாச்சாரங்களை நுழைக்கறாங்க. இதுவேதான் எங்கள் ஊர் புகழ் பூரி மசாலுக்கும் நேர்ந்துவிட்டது என்று நினைக்கிறேன். செய்பவர்கள் மாறுகிறார்களா இல்லை செய்யும் முறையே மாறிடுதா என்று தெரியவில்லை. அங்க சாப்பிடும் பூரி மசாலுக்கும் மற்ற ஊர்களில் கிடைக்கும் பூரி மசாலுக்கும் வேறுபாடே இல்லாமல் போயிடுது.

சென்னையை மாடலா வச்சுக்கிட்டு, புதுசு புதுசா நிறைய பிராண்ட் ஹோட்டல்கள் (சரவண பவா போன்று) முளைத்திருக்கின்றன, ஆனால் நெல்லையின் பாரம்பர்யச் சுவைதான் மிஸ்ஸிங். யாராவது, இல்லை, இந்த இந்த ஹோட்டலில் பூரி மசால் அதே சுவையுடன் இருக்கு என்று சொன்னால் அடுத்த முறை சாப்பிட்டுப் பார்க்கணும்.

நெல்லைத்தமிழன் பற்றிய குறிப்பு :

**நான் நெல்லைத் தமிழன். நெல்லை பகுதியைச் சேர்ந்தவன், ஆனால் தமிழகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்தவன், வேலை பார்த்தவன். எப்படியோ எங்கள் பிளாக் இணையதளம் வாசிக்க ஆரம்பித்து நண்பர்கள் குழுவில் இணைந்திருப்பவன். கல்ஃப் தேசங்களில் 25 ஆண்டுகள் வேலைபார்த்தவன். பணி நிமித்தமாக பல நாடுகளைச் சுற்றியவன், கலாச்சாரத்தை, மக்களின் பண்புகளைக் கண்டவன். இந்தியா திரும்பி இரு வருடங்களாகின்றன. குறிப்பிட்டுச் சொல்வதற்கு வேறு ஒன்றும் இல்லை.**

Back to index ^

# அழகி :: சிறுகதை :: சியாமளா வெங்கட்ராமன்

திருமதி. சியாமளா வெங்கட்ராமன் அவர்கள் சென்னை ராமாபுரத்தில் வசிக்கிறார்கள். நெய்வேலியில் பள்ளி ஆசிரியையாக பணியாற்றி ஒய்வு பெற்றவர். ராமாபுரத்தில் விக்னேஸ்வரா லேடீஸ் க்ளப்பினை தொடங்கி அதன் மூலம் பல சமூக பணிகள் ஆற்றி வருகிறார். தற்பொழுது மத்யமரில் இவருடைய படைப்புகள் நிறைய வெளியாகின்றன, அதில் போஸ்ட் ஆஃப் தி வீக் விருது அடிக்கடி வாங்குகிறார். அதைத் தவிர பிரதிலிபி , சஹானா போன்ற இணைய இதழ்களிலும் எழுதுகிறார். அவரை நம்முடைய மின் நிலா பொங்கல் சிறப்பிதழுக்காக எழுதச் சொல்லி வேண்டிக் கொண்டேன். அதற்கிணைந்து அவர் எழுதி அனுப்பியிருக்கும் கதைதான் 'அழகி'.

அன்புடன்,
பானுமதி வெங்கடேஸ்வரன்.

= = = = = =

## அழகி

## சியாமளா வெங்கட்ராமன்.

சீதா, சீதா என்று கூப்பிட்டு கொண்டு எதிர் வீட்டு மாமி வந்தார்கள். கையை புடவை தலைப்பில் துடைத்துக்கொண்டு சீதா வாசலுக்கு வந்தாள்... “ஏண்டி சீதா உன் பெண்ணுக்கு ஏதோ ஸ்காலர்ஷிப் கிடைச்சிருக்காமே! மேல்படிப்புக்கு !ஊரே பேசி கொள்கிறார்களே! நீ ஒன்னும் சொல்லலையே........” என்று மாமி கேட்டாள்.

“எனக்கு அதைப்பற்றி ஒன்னும் தெரியாது மாமி, மேல்படிப்பு ன்னு சொன்னா அவ்வளவுதான்!!! அதோ நந்தினியே வரா .. நீங்களே கேட்டுக்கோங்கோ” என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

“ஏண்டி நந்தினி. உனக்கு ஏதோ மேல்படிப்புக்கு ஆர்டர் வந்திருக்காமே? என்னடி அது?” என்று மாமி கேட்க..... “அதான் நான் எம்பிபிஎஸ் முடிச்சுட்டேன். அதில் நல்ல ரேங்க் வாங்கியிருக்கேன், எனவே மேலே படிக்க அப்ளிகேஷன் போட்டு இருந்தேன் அது வந்து இருக்கு, அதோட எனக்கு ஸ்காலர்ஷிப்பும் தரதா சொல்லி இருக்கா....” என்று கூறினாள்,
“அது என்ன படிப்பு ?” என மாமி கேட்டாள்...
“அது பிளாஸ்டிக் சர்ஜரி என்ற படிப்பு மாமி....”
“ அப்படின்னா என்னடி?”
“ நம் உடம்பில் ஏதாவது அடிபட்டு மேல்தோல் சிதைந்து போயிருந்தா அதை சரிப்படுத்துவது. முன்பு இருந்தது போல பழையபடி ஆய்டும்” என்று நந்தினி கூறினாள்,
“ரொம்ப சந்தோஷம்! தீர்காயுசா இரு!!!” என்று வாழ்த்தி விட்டு மாமி கிளம்பினாள்.

சமையல் அறையில்இருந்த சீதா இதைக்கட்டு பழைய நினைவுகளில் முழுகினாள். சீதா பெயருக்கேற்ற அழகும் அடக்கமும் அறிவும் உடையவள். எப்போதும் அவள் தான் வகுப்பில் முதல் மாணவியாக வந்து கொண்டிருந்தாள்.

எட்டாம் வகுப்பு பரீட்சை முடிந்து வீட்டிற்கு வரும்போது வீட்டு வாசலில் கூட்டமாக இருப்பதை பார்த்து ஓடிவந்தாள். உள்ளே கூடத்தில் அவள் அம்மா கிடத்தப்பட்டு மாலை போடப்பட்டிருந்தது, அதைப் பார்த்து விஷயம் தெரிந்து கொண்டு ஓ......... வென்று அழுதாள்.

அதற்குப்பின் அவள் அப்பா அவள் படிப்புக்கு முற்று புள்ளி வைத்தார். தான் செய்யும் சமையல் வேலைக்கு ஒத்தாசைக்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்தார். இப்படியாக நாட்கள் செல்லச் செல்ல ஆரம்பித்தது... வயது ஏற ஏற அவளுடைய அழகும் அதிகமாயிற்று... அவள் அப்பாவுடன் வேலை செய்யும் மூர்த்திக்கு சீதாவின் மேல் ஒரு கண்!!! அவன் சீதாவின் அப்பாவிடம் சீதாவை கல்யாணம் பண்ணிக்கொள்ள சம்மதம் கேட்டான்... அவனுக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லாததால் சம்மதம் தெரிவித்தார், கோவிலில் சிக்கனமாக கல்யாணத்தை நடத்தி முடித்தார், அவர்கள் இருவரும் தனிக்குடித்தனம் நடத்தினார்கள்.

சீதா கர்ப்பமானாள், அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது, அந்த நேரத்தில் அவள் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார்.

சீதாவிற்கு தாயும் இல்லை தகப்பனும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது, அடுத்து மறுபடியும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது, இந்த நேரத்தில் மூர்த்திக்கு வேறு ஒரு பெண்ணின் சகவாசம் ஏற்பட்டது, பல நாட்கள் வீட்டிற்கு வருவதே இல்லை என்ற நிலை ஏற்பட்டது, தன் குழந்தைகளை வளர்க்க, அக்கம் பக்கத்து வீடுகளில் சமையல் வேலை செய்ய சீதா சென்றாள்.

குழந்தைகள் வளர வளர இந்த பணம் போதவில்லை, எனவே குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கு அருகில் மாலையில் பஜ்ஜி போண்டோ போன்றவைகளை போட்டு குழந்தைகளை வளர்த்தாள்.

ஒரு நாள் மழை வரும் போல் இருந்ததால் வீட்டிலேயே பலகாரங்களை செய்வதற்கு ஆயத்தம் ஆனாள், அப்போது குடித்துவிட்டு ஒருவன் உள்ளே வந்தான், சீதாவின் கையை பிடித்து இழுத்தான். அவனுடன் போராடினாள். சமையலறையில் சட்டியில் எண்ணெய் கொதித்துக் கொண்டிருந்தது, அதை எடுத்து தன் மூஞ்சியில் தேய்த்துக்கொண்டாள். வலி தாங்காமல் அலறிய அலறலில் அக்கம் பக்கத்து வீட்டார் ஓடி வந்தார்கள், அவள் நிலைமையை பார்த்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கு முதலுதவிசெய்யப்பட்டு அவள் பிழைத்தாள். முகம் விகாரமாயிற்று, ஊர் மக்கள் இப்படி செய்ததற்கு என்ன காரணம் என்று கேட்க, ‘என் அழகுதான் காரணம் எனவே அதை அழித்து விட்டேன். இனி எவரும் என்னை துன்புறுத்த மாட்டார்கள்’ என்று கூறினாள். ‘நான் போலீசுக்கு சென்றால் என்னைப் போன்ற ஏழைகளுக்கு நீதி கிடைக்காது எனவேதான் இப்படி செய்தேன்’ என்று கூறினாள். நாட்கள் வேகமாக ஓடியது அவளுடைய பெண் நந்தினி நன்றாக படித்து மாநிலத்திலேயே முதலாவதாக வந்தாள், சில நல்லோர்களின் உதவியால் எம்பிபிஎஸ் படித்து முடித்தாள். இன்று மேல் படிப்புக்கும் ஆர்டர் வந்துவிட்டது. அதை எண்ணி சீதா சந்தோஷப்பட்டாள் தன் கனவு நினைவுகளிலிருந்து சுயநினைவுக்கு வந்தாள்.

நந்தினியை கூப்பிட்டாள். அவளிடம் அவள் மேல் படிப்பு பற்றி விவரம் கேட்டாள்.

“அம்மா... நான் படிக்கப் போவதே உனக்காக தான்!”

“ என்னடி சொல்கிறாய்?”

“ ஆமாம் அம்மா....... நான் இப்போது படிக்கப் போவது பிளாஸ்டிக் சர்ஜரி என்ற படிப்பு. விபத்தில் ஏற்படும் மேல்தோல் சிதைவை சரிப்படுத்துவது. என் அழகு அம்மாவிற்கு ஏற்பட்ட இந்த விபத்தை நான் சரிசெய்யவே இந்தப் படிப்பை எடுத்துக் கொண்டுள்ளேன்” என்று கூற, சீதா ஆனந்த கண்ணீருடன் தன் மகளை கட்டி அணைத்துக்கொண்டாள்...




தன் அம்மாவின் அழகிய முகத்தை மனக்கண் முன் கொண்டு நிறுத்தி ஆனந்தப் பட்டாள் நந்தினி!!! உடனே அம்மாவை தூக்கி ஒரு சுற்று சுற்றி கன்னத்தில் முத்தம் கொடுத்து, “என் அழகு அம்மா .....அழகு அம்மா ......” என்று கூறினாள்.

இதைக் கேட்ட சீதா, “என்னை மட்டும் குணப்படுத்தினால் போதாது. நம்மைப்போன்ற ஏழைகளை குணப்படுத்த சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும்” என்று தன் மகளுக்கு அறிவுரை கூறினாள்.

= = = =

சுய குறிப்பு :

**Syamala Venkata Raman**
**Retired teacher NLC higher secondary schools**
**Neyveli**
**Now**
**Sri vigneshwara ladies club**
**Ramapuram,chennai**



**Back to index ^**

# டெல்லிப் பொங்கல் :: ஆதி வெங்கட்

பொங்கல் என்றாலே தித்திக்கும் பொங்கலும், கரும்பும், சூரிய பகவானும் நினைவுக்கு வருவது போல், எனக்கு பொங்கல் நினைவுகளில் மனதில் பசுமையாக இருக்கும் நிகழ்வு என்றால் அது நாங்கள் இந்தியத் தலைநகராம் டெல்லியில் நிகழ்த்திய பொங்கல் கொண்டாட்டம் பற்றி தான்.

15 வருடங்களுக்கு முன்பு அப்போது நாங்கள் இருந்த பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் வசித்தனர். ஜனவரியில் மிகவும் கடும் பனி இருக்கும். அந்த மாதத்தின் முதல் வார ஞாயிறில் எல்லோருக்கும் ஒரு மாறுதலாகவும், அன்றைய நாள் முழுவதும் குதூகலத்துடனும், உற்சாகத்துடன் நேரத்தை செலவிட என் கணவரும், அவரது நண்பரும் இணைந்து திட்டமிட்டனர்.

ஏறக்குறைய ஒரு மாதம் போல நேரத்தைச் செலவிட்டு நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்தனர். குழந்தைகளுக்கான ஓவியப் போட்டி, பாட்டுப் போட்டி, நடனப் போட்டி, பெரியவர்களுக்கு மியூசிக்கல் சேர் போன்றவை பல போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வது என்றால் சும்மாவா?? நிகழ்ச்சி நடத்த இடம் ஏற்பாடு செய்வது முதல் போட்டிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் தயார் செய்வது, உணவு மற்றும் தேநீர் ஏற்பாடு செய்வது, நிகழ்ச்சியில் பரிசு வழங்க, நடுவர்களாக இருக்க வயதில் மூத்தவர்களையும், சிறப்பு விருந்தினர்களையும் ஏற்பாடு செய்வது, புகைப்படங்கள், வீடியோ எடுக்க (இப்போது போல் எல்லோரிடமும் கேமிராவெல்லாம் இருக்காதே!!) என்று ஆட்களை ஏற்பாடு செய்வது என்று ஏகப்பட்ட வேலைகள் இருக்கும்.

இப்படி செய்த ஏற்பாடெல்லாம் செயல்படுத்தும் நாள் வந்தது.. அன்றைய நாளில் எல்லோருமே பங்கேற்கும் படி பல போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் தரப்பட்டன..

அதோடு முடிந்தால் நன்றாக இருக்குமா? மதியம் எல்லோருக்கும் தலைவாழை இலையில் வடை, பாயசத்தோடு நல்லதொரு தென்னிந்திய விருந்து பரிமாறப்பட்டது.. மாலை வரை எல்லோருமே இருந்து நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்பித்தனர்..


இந்தியத் தலைநகரில் அதுவும் அந்த கடும் பனியில் ஒரு நாள் முழுவதும் ஆட்டம் பாட்டம் என்று மகிழ்வுடன் கொண்டாடிய நிகழ்ச்சி எல்லோருக்குமே மிகவும் பிடித்திருந்தது.. இதே மாதிரி கொண்டாட்டங்களை தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு என் கணவரும், அவரது நண்பரும் இணைந்து நடத்தினர்.

இது நிஜமாகவே பெரிய விஷயம் தானே! ஏனென்றால் பலதரப்பட்ட மக்களை ஒன்றிணைத்து, சமாளித்து , அவர்களை மகிழ்வுடன் வீட்டிற்கு அனுப்பி வைப்பது வரை அனைத்தையும் கவனித்து செயல்பட வேண்டும்.

இன்று நினைத்தாலும் மனதில் பசுமையான நினைவுகளையும் அதே சமயம் பிரமிப்பாகவும் இருக்கும் நிகழ்வு..இதை பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததற்கு 'எங்கள் ப்ளாக்' குழுவுக்கு என் மனமார்ந்த நன்றிகள். ஆதி வெங்கட், திருவரங்கம்.

திருமதி ஆதி வெங்கட் குறிப்பு :

**இயற்பெயர் - ஆதிலக்ஷ்மி**
**புனைபெயர் - ஆதி வெங்கட்.**
**வலைப்பூ - https://venkatnagaraj.blogspot.com**
**YouTube link - https://youtube.com/channel/UCQc6JED6cw2B_CJnGvSj4UQ**
**மின்னஞ்சல் - kovai2delhi@gmail.com**



**Back to index ^**

# அன்புள்ள அண்ணா - சிறுகதை :: மாலா மாதவன்

**அன்புள்ள அண்ணாவுக்கு,**

**உங்கள் அன்புத் தம்பி ஸ்ரீதரன் எழுதுவது. க்ஷேமம் . க்ஷேமத்துக்குப் பதில்.**



**வெகு நாட்கள் கழித்து உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டிய சூழ்நிலை. உருவாக்கினது என் இயலாமையே.**

**உங்கள் உறவும் வேண்டாம் ஒட்டும் வேண்டாம் எனத் தூக்கியெறிந்து விட்டு வந்தவன்தான் நான்.. அதுவும் எப்பேற்பட்ட அண்ணனைத் தூக்கி எறிந்திருக்கிறேன். அறிந்தா செய்தேன் அப்போது? ஆனாலும் அறியாத வயதில்லை அப்போது!**

**அன்னை, தந்தையை இழந்த போது என் வயது பதினாறு. குடும்பத்தில் ஏழாவது பிள்ளையாய் மிகவும் தாமதமாகப் பிறந்த என்னைச் சட்டென்று தந்தையாய் கையில் ஏந்திக் கொண்டவர் நீங்கள்தானே அண்ணா!**

**ஒவ்வொரு வகுப்பையும் கடந்தது உங்கள் தயவால்தான். இன்னும் வேலை கிடைக்க எத்தனை ஆயிரங்கள் எனக்காகக் கொடுத்து உதவினீர்கள். அவற்றுக்கு இப்போது லட்ச மதிப்பு.**

**வேலையை விடுங்கள். சாப்பாடு! அதைப் பசியறிந்து எனக்கு இடும் போது எனக்கு அன்னையுமானீர்கள். பிறந்தால் உங்களுக்குப் பிள்ளையாகப் பிறக்க வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டிருந்தேன்**

**வீட்டில் அக்காக்கள் நால்வரும் திருமணம் முடித்துச் சென்ற பிறகு, இருக்கும் சொத்தைப் பிரிக்கலாம் என்று நீங்கள் சொன்ன போது , சின்ன அண்ணன் தன் பங்கைப் பிரித்துக் கொண்டு விட, நான் ரொம்பப் பெருந்தன்மையாய், " இருக்கட்டும் அண்ணா! நானே உங்கள் சொத்து! எனக்கெதற்குத் தனிச் சொத்து?" என்றேன். நீங்கள் அப்போது என்ன**

சொன்னீர்கள்.." எலி வளையானாலும் தனி வளை வேண்டுமடா படவா!" இன்னும் மறக்கவில்லை அதனை. நான் மறந்தாலும் என் மனைவி மறக்க விட மாட்டாள்.

" வேணுமான்னு கேட்டாராம்; வேண்டாம் அண்ணான்னு இவர் விட்டுக் கொடுத்து விட்டு வந்தாராம்!"




இப்படிக் கேட்டுக் கேட்டு, என் காது இரண்டும் புளித்துப் போய் விட்டது. என் முன்னால் நிலமுடன் வீடு, நீங்கள் என இருந்தால் நான் நிச்சயம் உங்கள் பக்கம் வந்து நின்று விடுவேன் அண்ணா. ஆனால் , என் மனைவி எனக்கான அளவுகோலாய் என் சொத்தை வைத்திருக்கிறாள்.

என்ன செய்ய? பிள்ளை வக்கீலாகி விட்டான். பெண் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கிறாள். என் மனைவி சொல்கிறாள்.. " பிள்ளைக்காவது ஒரு கேஸ் கொடுங்க!" என்று. அவள் எந்தக் கேஸ் போடச் சொல்கிறாள் என உங்களுக்குப் புரிகிறதா அண்ணா?

அன்றைய நாள் நான் காதல் என்று வந்து நின்ற போது நீங்கள் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஜாதி விட்டு ஜாதி பண்ணுவதா என ஆக்ரோஷமாகக் கத்தினீர்கள். அதை ஆங்காரம் என்கிறாள் என் மனைவி. உங்கள் சொத்தும் வேண்டாம், உறவும் வேண்டாம் என வெளியேறி வந்தவனை மனைவியின் அழகு கண்ணை மறைத்துக் கூட்டிச் சென்ற பின் உங்களை சற்றும் நான் நினைத்துப் பார்த்ததில்லை என்பதே உண்மை. வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது எனத் துடித்திருப்பீர்கள். நான் மெத்தப் படித்தவன் என்னும் மமதை என்னைத் தூக்கி எங்கே போட்டிருக்கிறது தெரியுமா?

ஆளிருந்தும் ஆளில்லாக் கொடுமையில்.. ஆம் அண்ணா! கேட்பார் யாருமில்லை. கேட்பவர் எவருமில்லை. சொத்தென்று என் பேரில் இல்லை. சொந்தமும் அருகில் இல்லை. மனைவியும் மக்களும் உண்டு. மற்றபடி அவர்கள் யாரோ!

சட்டென்று சூழ்ந்த தனிமை. சகலமும் நீங்கள் என்ற நினைவு. இருந்தும் இல்லாத வாழ்க்கை. சூன்யத்தோடான இருப்பு. என் மனம் என்னைக் கொல்லும். கொல்வதால் இக்கடிதம் இங்கு.

ஒரே ஒரு கோரிக்கை அண்ணா! பாதை மாறிய என் கால்கள் வளர்ந்த பாதையில் இளைப்பாறத் துடிக்கின்றது. பணக்கட்டை அவிழ்த்து மீண்டும் பாசக்கட்டை அணிந்து கொண்ட உன் செல்லத் தம்பிக்கு உன் மடியில் இளைப்பாற இடம் கொடுப்பீர்களா? ஓடோடி வந்து விடுகிறேன்.

அன்பு மகனுக்கும், மருமகளுக்கும் என் ஆசிர்வாதம்.

அன்புத்தம்பி

ஸ்ரீதரன்.
====

லஷ்மி படித்து முடிக்க, ஆதிகேசவன் தன் தலையில் வழிந்த வியர்வையைத் துடைத்தபடி சொன்னார்.

பதில் எழுதிப் போட்டுடும்மா!.

"வனம் எப்பவும் பசுமையாத் தான் இருக்கு. எந்தப் பறவையின் எச்சமும் அதன் பசுமையை ஒன்றும் செய்யாது. இளைப்பாற வருபவர்களை அது என்றும் இருகரம் நீட்டி வரவேற்கும். அதன் காற்றில், சலசலப்பில், சுகத்தில் மனம் புத்துணர்ச்சி பெறும் நிச்சயமாய். மற்றபடி, வக்கீலுக்குப் படித்தவனுக்கு நல்ல கேஸ் கிடைக்க என் ஆசீர்வாதங்கள். ஏனென்றால் வக்கீலுக்கு வேலை இல்லாது உனக்குரிய சொத்து உன் பேரில்தான் இருக்கிறது என்றுமே!"

இப்படிக்கு
தந்தையாய் மாறிய தனயன்
ஆதிகேசவன்.
= = = =

**மாலா மாதவன் சுய குறிப்பு :**

**படித்தது MCA. கதை , கவிதைகளில் ஆர்வம் உண்டு. முதல் கதை, 'விருட்ச விதைகள்' தினமலர் வாரமலரில் வெளி வந்தது. எங்கள் ப்ளாக் உள்பட பல மின்னிதழ்களில் எழுதி வருகிறேன். ஆண்டாளின் திருப்பாவையை ஒட்டி பாவை என்ற வெண்பா புத்தகம் எமது ஆசான் சந்தக்கவி ஸ்ரீமான் ராமசாமி அவர்கள் உரையுடன் வெளியிட்டு இருக்கிறேன்.**

**பல கவியரங்கிலும் கலந்து கொண்டிருக்கிறேன்.**

**Email - malamadhav@gmail.com**



Back to index ^

## பொங்கல் பண்டிகை வரலாறும் - கொண்டாடும் விதமும் கீதா சாம்பசிவம்.

தமிழில் பொங்கல் பண்டிகை, என்றும் வடமாநிலங்களில் மகர சங்கராந்தி என்றெல்லாம் அழைக்கப்படும் இந்தப் பண்டிகை முன்காலங்களில் இந்திரவிழாவாகக் கொண்டாடப் பட்டிருக்கும் என்று கூறப்படுகிறது.

வடமாநிலங்களில் இப்போதும் மகர சங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. இதுவும் இந்தியா முழுதும் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையே. சங்க காலத்திலேயே இது தை நோன்பு என்ற பெயரில் கொண்டாடப் பட்டிருக்கலாம் என்றாலும் ராஜராஜ சோழன் காலத்தில் தான் வருடத்தின் முதல் அறுவடைத் திருநாள் புதியீடு என்ற பெயரில் கொண்டாடப்பட்டிருக்கிறது என்பது காணக்கிடைக்கிறது.

இந்தியா முழுதும் கொண்டாடப்படும் இது வெவ்வேறு மாநிலங்களிலும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் பொங்கல் என அழைக்கப்படும் இது ஆந்திரம், ஒரிசா, மேற்கு வங்கம், பிஹார், மத்தியப்பிரதேசம், உத்தரப் பிரதேசம், மஹாராஷ்டிரா, மணிப்பூர் ஆகிய இடங்களில் மகர சங்கராந்தி என்ற பெயரிலும், குஜராத், ராஜஸ்தானில் உத்தராயணம் என்ற பெயரிலும், பஞ்சாப், ஹரியானா, ஹிமாசல் பிரதேசம் ஆகிய இடங்களில் லோஹ்ரி என்ற பெயரிலும், அஸ்ஸாமில் மாகே பிகு என்ற பெயரிலும், நேபாளத்தில் மாகே சங்க்ராந்த் என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. மற்றத் தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்தில் சொங்க்ரான் என்றும், மியான்மரில் திங்க்யான் எனவும், லாவோஸில் பி மா லாவ் என்ற பெயரிலும் கொண்டாடுகிறார்கள்.

பெரும்பாலான வடமாநிலங்களில் எள்ளினால் செய்த இனிப்பு வகைகள், அல்லது வேர்க்கடலையினால் செய்யப்பட்டவை விநியோகிக்கப்படுகின்றன.

இது சூரியனின் வான்வழிப் பயணத்தில் சூரியன் மகரராசிக்கு மாறும் நாள் என இந்துக்களால் நம்பப்படுகிறது. வான்வெளியில் வடக்கு நோக்கி சூரியன் நகரும் இந்த நாளில் இருந்து பகல் நேரம் அதிகரிக்கும் என்பதாலும் இது கொண்டாட்டத்தின் முக்கியகாரணமாகிறது. ஆடி மாதம் சூரியன் தென் திசை நோக்கிப் பயணம் செய்யும் காலத்தில் விதைக்கப்படும் விதைகள் அனைத்தும் இதற்குள் பூரணமாக அறுவடை செய்யத் தயாராகக் காத்திருக்கும். வருடத்தின் முதல் அறுவடையை அமோகமாகத் தங்களுக்கு அளித்த சூரியனுக்கு நன்றி கூறும் விதத்திலும் இந்தப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. எனினும் இது மழைக்கடவுளான இந்திரனுக்கு நன்றி செலுத்தும் விழாவாகவே முதலில் இருந்திருக்கவேண்டும் என்றும் பின்னர் முதல்நாளை மட்டும் இந்திரனுக்கு நன்றி செலுத்தும் விழாவான போகியாகவும், அடுத்த நாளை சூரியனுக்காகவும், மூன்றாவது நாளை இதற்கெல்லாம் உதவி செய்யும் கால்நடைச் செல்வங்களுக்காகவும் கொண்டாடி வந்திருக்கின்றனர். நாளாவட்டத்தில் நான்காம் நாள் உறவினரை, நண்பரைக் கண்டு செல்லும் நாளாகக் கொண்டாட ஆரம்பித்தனர். ஆக தற்காலங்களில் இது நான்கு நாட்கள் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது.

ஆரம்பத்தில் அதாவது சங்ககாலத்தில் இது மஹாவிஷ்ணுவைக் குறித்தே இளம்பெண்களால் கொண்டாடப்பட்டிருக்கவேண்டும் என்றும் ஒரு கூற்று உண்டு.

சாணத்தால் பெரியதொரு உருண்டை பிடித்து நடுவில் வைத்து அதில் பறங்கிப்பூவையும் வைத்துச் சுற்றிலும் சிறிய சிறிய சாண உருண்டைகளையும் வட்டமாக வைத்து அவற்றிலும் பூக்களை வைப்பார்கள். நடுவில் உள்ள பெரிய உருண்டையை கண்ணனாகவும், சுற்றிலும் உள்ள சின்ன உருண்டைகளை கோபியராகவும் பாவித்து இளம்பெண்கள் அந்தக் கோலங்களைச் சுற்றி வந்து கும்மி, கோலாட்டம் ஆடிக் களிப்பார்கள். மேலும் பொங்கல் வைப்பதன் தாத்பரியம், உணவுக்கு நமக்கு உதவி செய்த பஞ்சபூதங்களையும் போற்றுவது ஆகும். மண்ணிலிருந்து நமக்குக் கிடைத்த பொருட்களை வைத்துச் சமைப்பது முன்பெல்லாம் மண்ணாலாகிய அடுப்பிலேயே, மண்பானைகளிலேயே பொங்கல் வைப்பார்கள். காலக்கிரமத்தில் இது மாறிவிட்டாலும், மண் அடுப்பும், மண்பானையும் பூமித்தாயையும், அதில் பொங்கலுக்கு ஊற்றப்படும் பாலும், நீரும், தண்ணீரையும், எரியும் நெருப்பு அக்னியையும், பொங்கல் வேகும்போது கிளம்பும் ஆவி வாயுவையும், வெட்டவெளியில் பொங்கல் சமைத்துப் பின்னர் வெட்டவெளியிலேயே வழிபாடு நடத்துவது ஆகாயத்தையும் குறிக்கும் என்பார்கள்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் ஆரம்பம் ஆகும் விழாவறை காதையில் “இந்திர விழா” என்ற பெயரிலேயே பொங்கல் பண்டிகை கொண்டாடப் பட்டிருக்கவேண்டும் என அறிய வருகிறது.

முதல் முதல் இந்திரவிழா கொண்டாட ஆரம்பிக்கையில் அதைப் பொது மக்கள் மன்றத்தில் முரசறைந்து தெரிவிக்கப்பட்டதாகவும், சுமார் 28 நாட்கள் விழா நடந்ததாகவும் தெரிந்து கொள்கிறோம். மேலும் அகத்திய முனிவர் இந்திரனுக்கு அழைப்பு விடுத்ததாகவும் இந்திரன் பூம்புகாருக்கு வந்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன. தற்காலங்களில் பொங்கலுக்கு முன்னர் வீட்டை அலங்கரித்துச் சுத்தம் செய்து பழையன கழிதல் போல் அந்தக் காலங்களிலும் வீட்டை மட்டுமின்றி நாடும், நகரங்களுமே சிறப்பாக அலங்கரிக்கப்பட்டன. கமுகுக் குலைகளும், தென்னை ஓலைத் தோரணங்களும், வாழை மரங்களும் கட்டப்பட்டு, பொன்னாலான பாலிகைகள், பூரண கும்பங்கள் ஆகியவற்றால் வீடுகள், கோயில்கள், அரண்மனைகள் அலங்கரிக்கப்பட்டன. வீதிகளிலே புது மணல் பரப்பி, காவல் தெய்வங்கள் முதல் அனைத்துத் தெய்வங்களுக்கும் சிறப்பான வழிபாடுகள் நடத்தப்பட்டன. மழைத் தெய்வம் ஆன இந்திரனைச் சிறப்பிக்கும் வகையில் அவனுக்கு நன்றி கூறும் வகையில் எடுக்கப்பட்ட இந்த விழா நாளில், பகைமையும், பசியும் நீங்கச் சிறப்பான பிரார்த்தனைகள் செய்யப்பட்டதோடு ஒருவருக்கொருவர் பகைமை பாராட்ட வேண்டாம் என்பதும் வலியுறுத்தப்பட்டது. ஒருவருக்கொருவர் பகையுள்ளவர்கள் விலகி இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இப்படியாக ஆரம்பித்த இந்த விழா பின்னர் நாளாவட்டத்தில் கண்ணுக்குத் தெரியும் ஒரே கடவுளான சூரியனுக்காகக் கொண்டாடப்படும் விழாவாக மாறி இருந்திருக்கலாம். ஏனெனில் சூரியன் இருப்பதாலேயே நமக்கு மழை, ஒளி, எல்லாம் கிடைப்பதோடு உயிர்கள் வாழவும் முடிகிறது. சூரியனில்லாத பூமி இருண்டுவிடும். மனிதர்களின் வாழ்வாதாரமாகச் சூரியனே இருந்து வருகிறது.
பொங்கல் வழிபாட்டில் பொங்கலோடு சேர்த்துக் கரும்பு, வாழைப்பழம், மஞ்சள் கொத்து, இஞ்சிக்கொத்து, வெற்றிலை, பாக்கு, தேங்காய் போன்றவைகளோடு ஏழுவகைக் கறிகள்/கூட்டுகள்/குழம்பு போன்றவை செய்யப்படும். அனைத்தும் வழிபாட்டில் வைக்கப்படும். அநேகமாக வழிபாடுகள் வீட்டின் கொல்லைப்புறம் கிழக்கு நோக்கியே

செய்யப்படும். அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்தாலும் வீட்டின் வெளியே வந்து சூரியனுக்குக் கற்பூரமாவது காட்டுவார்கள். பொங்கல் பால், நெய், அரிசி, பருப்பு, வெல்லம் போன்றவை சேர்த்துச் செய்யப்படும். பால் பொங்க வேண்டும். பால் நன்றாகப் பொங்கினால் அந்த வருடம் விளைச்சலும் பொங்கி வரும் என்பார்கள். வீட்டில் உள்ள அனைவரும் பொங்கல் பானையில் பால் ஊற்றுவது உண்டு. அப்போது பொங்கலோ பொங்கல் எனச் சொல்லிக்கொண்டே பாலை ஊற்றுவார்கள்.

கரும்பு இனிப்பான சுவையை உடையது. ஆனாலும் அடிக்கரும்பே தித்திப்பு அதிகம் உடையது. நுனிக்கரும்பு உப்பாகவும் இருக்கும். அதோடு கரும்பில் நிறையக் கணுக்களும் காணப்படும். இந்தக் கரும்பின் கணுக்கள் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளைக் குறிக்கிறது என்றும் ஆரம்பத்தில் உப்புப் போல் கரிக்கும் வாழ்க்கை போகப் போக அடிக்கரும்பு போல் இனிக்கும் எனவும் கூறுவார்கள்.

மஞ்சள் கொத்துக்களும் வழிபடப் படுகின்றன. மேலும் பொங்கல் பானையில் மஞ்சள் கொத்துக் கட்டும் வழக்கமும் உண்டு, மஞ்சள் மஹாலக்ஷ்மிக்கு உரியது.



மஹாலக்ஷ்மியாகவே கருதப்படும் மஞ்சளை அனைத்து சுபகாரியங்களுக்கும் பயன்படுத்துகிறோம். மஞ்சள் இல்லாத மங்கல காரியங்களே இல்லை. ஆகவே மஞ்சளைப்பொங்கல் பானையில் கொத்தோடு கட்டும் வழக்கம் ஏற்பட்டது. பானையில்கட்டும் மஞ்சளையே பத்திரம் செய்து ஒரு துண்டை எடுத்து சுவாமி அறையில் வைத்துவிட்டு மற்ற மஞ்சளை உடலில் தேய்த்துக் குளிக்க அரைத்துப் பயன்படுத்துவார்கள். சுவாமி அறையில் வைத்திருக்கும் மஞ்சளையே பொங்கலுக்கு மறுநாள் கனுவன்று நெற்றியில் கீறிக்கொள்ள எடுத்துச் செல்வார்கள். அக்கம்பக்கம், வீட்டுப் பெரியவர்கள் என எல்லாரிடமும் கொடுத்து நெற்றியில் மஞ்சளைக்கீறிவிடச் சொல்வார்கள். அரைத்திருக்கும் மஞ்சளில் சிறிதளவு எடுத்து சாதத்தில் கலந்து கொண்டு, குங்குமம் போட்டும் கலந்து, பொங்கல், கலந்த சாதவகைகள், தயிர்சாதம், கரும்புத்துண்டுகள், வாழைப்பழம், தேங்காய் வெற்றிலை, பாக்கு எல்லாமும் வைத்து கனுவன்று காலையில் காக்காய்ப்பிடி, கனுப்பிடி என வைப்பார்கள். இதன் தாத்பரியம் காக்கைகள் எப்படிச் சுற்றம், சொந்தங்களோடு சேர்ந்து உணவு எடுத்துக்கொள்கிறதோ அவ்வாறே நாமும் நம் உறவு, சுற்றம், நட்பு ஆகியோருடன் சேர்ந்து மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதே ஆகும்.

ஒரு சிலர் வீட்டு வழக்கப்படி புதிதாய்ப் பிறந்திருக்கும் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பத்து வயதுக்குட்பட்ட மற்றொரு குழந்தையின் மடியில் உட்கார்த்தி வைத்துச் சின்னச் சின்ன கொழுக்கட்டைகள் செய்து அவற்றோடு, கரும்புத்துண்டுகள், இலந்தைப்பழம், நாணயங்கள் எல்லாம் கலந்து அரிசி அளக்கும் படியில் நிறைநாழி என சுவாமிக்கு எதிரே வைத்து இருப்பார்கள்.

அக்கம்பக்கம் சுற்றத்தார், சின்னக்குழந்தைகள், பெண்கள் என எல்லாரையும் அழைத்து மாலை விளக்கு ஏற்றியதும் வீட்டில் இருக்கும் வயதான சுமங்கலிப் பெண்ணை விட்டுச் சின்னக் குழந்தையின் தலையில் மெதுவாய்க் கொட்டுவார்கள். இதற்குக் காசு, இலந்தைப் பழம் கொட்டுதல் என்று பெயர். குழந்தைகள் காசைப் பொறுக்கப் போட்டி போடும். குழந்தைகளோடு சேர்ந்து பெரியவர்களும் பொறுக்குவார்கள். பின்னர் வந்திருக்கும் அனைவருக்கும் வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள் வைத்துக்கொடுத்து அவரவருக்கு இயன்ற பொருளை வைத்துக் கொடுப்பார்கள். இது குழந்தைக்கு திருஷ்டி கழியவேண்டிச் செய்யப்படுவது. இது பெரும்பாலும் குறிப்பிட்ட சில வீடுகளிலேயே செய்யப்படுகிறது.

ஒரு சில கிராமங்களில் மார்கழி மாதம் வைக்கும் சாண உருண்டைகளைச் சேகரம் செய்து பிள்ளையார் பொங்கல் என வைப்பது உண்டு. இன்னும் சிலர் வீடுகளில் இப்படியான உருண்டைகளைச் சேகரம் செய்து கொண்டு, பொங்கலுக்கு அடுத்து வரும் முதல் ஞாயிற்றுக்கிழமையில் புதியதாய்ச் சாண உருண்டை பிடித்துக்கொண்டு அவரவர் ஊர்களின் நதிக்கரையில் அல்லது குளக்கரையில் அதை நடுவில் வைத்து மற்ற உருண்டைகளைச் சுற்றிலும் வைத்துப் பூசணி, பறங்கி, பூவரசம்பூக்கள் போன்றவற்றால் அலங்கரித்து மணலில் வீடுபோல் ஓவியம் வரைந்து அதன் நடுவே அடுப்பு மூட்டிப் பொங்கல் பானை வைப்பார்கள். பொங்கல் செய்து, ஒரு முறம் அல்லது சுளகைத் திருப்பிப்போட்டு நுனி இலை விரித்துப் பொங்கல் கொஞ்சமும் , பழமும் அதில் வைத்துவிட்டுக் கற்பூரமும் ஏற்றி அதில் வைப்பார்கள். பின்னர் அந்த இலையை அப்படியே நீரில் விட்டுவிட்டுச் சாண உருண்டைகளையும் நீரில் கரைப்பார்கள். இதனால் வரும் வருடம் மழை நன்கு பொழிந்து நீராதாரம் மேம்படும் என்று நம்பிக்கை. நீர், நிலைகளுக்கு மட்டுமின்றி நீர்வாழ் ஜந்துக்களுக்கும் உணவளிக்கும் விதமாகச் செய்யப்படும் இதை இன்றைய தினம் பெரும்பாலான மக்கள் அறிந்திருக்கவில்லை.

மனிதன் வாழ ஆதாரமான உணவைக்கொடுக்கும் உழவர்களின் திருநாள் என்றும் சொல்லலாம். பொங்கலுக்கு மறுநாள் மாடுகள், உழவுக்கருவிகள் அனைத்துக்கும் வழிபாடு நடக்கும். தற்காலங்களில் காலம் தப்பிப் பெய்யும் மழையினால் விவசாயிகள் கஷ்டப்படுவதே பார்க்க முடிகிறது. தேசந்தோறும் பாஷை வேறு என்பதற்கு ஏற்ப ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருவிதமாய்க்கொண்டாடப்படும் இந்தப் பண்டிகையும் ஒரு தேசியப் பண்டிகையே. அனைவருக்கும் பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக்கொண்டு கீழே அக்கார அடிசில் செய்முறையைத் தருகிறேன்.

அக்கார அடிசிலுக்குப் பால் நிறைய வேண்டும். ஆண்டாள் செய்தாப்போல் நூறு தடா இல்லைனாலும் ஒரு லிட்டராவது வேண்டும். நல்ல பச்சை அரிசி கால்கிலோ, வெல்லம் பாகு அரை கிலோ, நெய் கால் கிலோ. பாசிப்பருப்பு ஒரு கிண்ணம். நீரே வேண்டாம். பாலிலேயே வேகவேண்டும். ஆகவே முடிந்தவரைக்கும் ஒரு லிட்டருக்குக் குறையாமல்

பால் எடுத்துக்கொள்ளவும். குங்குமப் பூ, ஏலக்காய், பச்சைக்கற்பூரம் ஒரு சிட்டிகை அளவு மட்டுமே. முந்திரிப்பருப்பு, திராக்ஷை எல்லாம் தேவைப்பட்டால். சாதாரணமாய் இதற்குப் போடுவது இல்லை. ஆனால் நான் போடுவேன்.

பாசிப்பருப்பையும், பச்சை அரிசியையும் வெறும் வாணலியில் தனித்தனியாக வறுத்துக்கொள்ளவும். நன்கு களைந்து சுத்தம் செய்து கொள்ளவும். வெண்கலப்பானையை அடுப்பில் வைத்துப் பாலைக் கொஞ்சமாக முதலில் ஊற்றவும். தேவையான பாலில் பாதி அளவு ஊற்றலாம். பால் கொதிக்க ஆரம்பித்ததும் பாசிப்பருப்பைக் களைந்து சுத்தம் செய்து அதில் போடவும். சிறிது நேரத்துக்கு ஒருமுறை கிளறவும். பால் அடியில் பிடிக்காமல் பார்த்துக்கொள்ளவும். இதை நான் ஸ்டிக் பாத்திரத்திலோ அல்லது குக்கரிலோ செய்தால் அவ்வளவு சுவை வராது. பருப்பு வெந்ததும் அரிசியைக் களைந்து அதோடு சேர்த்துப் போடவும். மிச்சம் இருக்கும் பாலைக்கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்க்கவும். அரிசி நன்கு வெந்து குழையும் பதம் வரவேண்டும். அப்போது வெல்லத்தைத் தூளாக்கிச் சுத்தம் செய்து சேர்க்ககவும். வெல்ல வாசனை போக நன்கு கொதிக்கவேண்டும். வெல்லம், பால் இரண்டும் சேர்ந்து வரும்வரையில் நெய்யைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்து விடாமல் கிளற வேண்டும். நன்கு கலந்து பாயசம் போலவும் இல்லாமல் ரொம்பக் கெட்டியாக உருட்டும்படியும் இல்லாமல் கையால் எடுத்துச்சாப்பிடும் பதம் வரும் வரை கிளற வேண்டும். பின்னர் ஏலப்பொடி சேர்த்துப் பாலில் கரைத்த குங்குமப் பூவும் சேர்த்துப் பச்சைக்கற்பூரமும் சேர்க்கவும். தேவைப்பட்டால் நெய்யில் முந்திரிப்பருப்பு, திராக்ஷை வறுத்துச் சேர்க்கவும். அது இல்லாமலேயே நன்றாக இருக்கும்.



குக்கரில் வைப்பவர்கள் பாதிப்பாலை விட்டுக் குக்கரில் அரிசி, பருப்பைக் குழைய வைத்துக்கொண்டு பின்னர் வெளியே எடுத்து அடிகனமான பாத்திரத்தில் வெல்லத்தைப் போட்டு நீர் அல்லது பால் விட்டுக் கரைத்துக் கொதிக்கையில் குக்கரில் இருந்து எடுத்த கலவையைப் போட்டு மிச்சம் பாலையும் விட்டுக் கிளறவேண்டும். இதிலும் அடிப்பிடிக்காமல் நன்கு கிளற வேண்டும். பின்னர் நன்கு சேர்ந்து தளதளவென்று கொதிக்க ஆரம்பித்ததும், வெல்ல வாசனை போய்விட்டதா என்று பார்த்துவிட்டு அடுப்பை அணைக்கவும். ஏலக்காய், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் சேர்க்கவும்.

Back to index ^

# பொங்கல் கொண்டாட்டங்களில் சுற்றுச் சூழல் காப்போம் எம் தில்லைநாயகம்

சுற்றுச்சூழல்: ஒரு 'மாசு மற்றும் கழிவு இல்லாத' பொங்கலுக்கு போங்கி பக்கெட் சவாலை அறிமுகப்படுத்துகிறது.

'தி போகி பக்கெட் சேலஞ்சின்' பல இடங்களில் வாளிகள் வைக்கப்படும், அங்கு குடிமக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகளை டெபாசிட் செய்து அதற்கு பதிலாக துணிப் பைகள் பெறலாம்.

மதுரையில் உள்ள போகி பக்கெட் சவால்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழக மக்கள் கொண்டாடும் முதல் பண்டிகைகளில் ஒன்று பொங்கல். இது ஆண்டு அறுவடைக்கு நன்றி செலுத்தும் விழாவாக கொண்டாடப்படும் நான்கு நாள் அறுவடை விழா. சுவாரஸ்யமாக, 'போகி' என்று அழைக்கப்படும் முதல் நாளில், மக்கள் தங்கள் வீடுகளை சுத்தம் செய்து, தேவையற்ற பொருட்களை நிராகரிக்கின்றனர். விவசாயக் கழிவுகளுடன், அப்புறப்படுத்தப்பட்ட பொருட்கள் பாரம்பரியமாக மாட்டு சாணம் கேக்குகள் மற்றும் மரங்களால் ஆன நெருப்புக்குள் எறியப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் டன் கழிவுகள் எரிக்கப்படுவதால் காற்று மாசுபாடு அதிகரிக்கும். இந்த சிக்கலைச் சமாளிக்க, எம்.எம்.சி ஒரு தனித்துவமான 'தி போகி பக்கெட் சேலஞ்ச்' கொண்டு வந்துள்ளது, அங்கு மக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகளை எரிப்பதற்கு பதிலாக அவற்றை டெபாசிட் செய்யலாம்.

பிளாஸ்டிக் தடை. ஒரு சூழல் நட்பு குறிப்பில், குடிமக்கள் துணி பைகளுடன் பிளாஸ்டிக் பரிமாறிக்கொள்கிறார்கள்

குச்சிகள், பிளாஸ்டிக் மற்றும் மின்னணு கழிவுகள் உள்ளிட்ட எந்த வகையான கழிவுகளையும் எரிக்க வேண்டாம். நகரம் முழுவதும் வாளிகளை வைக்கும், அங்கு குடிமக்கள் தங்கள் கழிவுகளை வாளியில் வைப்பார்கள், அதற்கு பதிலாக ஒரு துணி பை கிடைக்கும். சேகரிக்கப்பட்ட கழிவுகளை விஞ்ஞான ரீதியாக சுத்திகரிக்க கழிவுகளை கையாளும் நகரத்தைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனமான குப்பைகாரனுடன் நகராட்சி நிறுவனம் ஒத்துழைக்கும் சுற்றுச்சூழலுக்கும்.

பொங்கலின் சுற்றுச்சூழலுக்கு மற்றும் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அதைக் கொண்டாட வேண்டியது

பொங்கல் என்பது தமிழ்நாட்டின் பிரதான திருவிழாவாகும், இது உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது மற்றும் பெரும் மத முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. இருப்பினும், கழிவுகளை எரிப்பதால் இது சுற்றுச்சூழலுக்கு உகந்ததல்ல. நூற்றாண்டு பழமையான பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் பின்பற்றுவதைத் தடுக்க மாற்று வழியைக் கொண்டு வந்துள்ளோம். மக்கள் தங்கள் கழிவுகளை விட்டுவிட்டால், வாளி

தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் எடுக்கப்படும். இந்த வழியில் டன் கழிவுகள் நிலப்பகுதிக்குச் செல்வதையும் தடுப்போம்.

ஜனவரி 11 முதல் 22 வரை வாளி சவால் மேற்கொள்ளப்படும். பஸ் ஸ்டாண்டுகள், கார்ப்பரேஷன் அலுவலகம், பொது பூங்காக்கள் மற்றும் அரசு பள்ளிகள் உள்ளிட்ட நியமிக்கப்பட்ட பகுதிகளில் வாளிகள் வைக்கப்படும்.

புகை இல்லாத பொங்கலைக் கொண்டாடும் உன்னத செயலுக்கு மக்களுக்கு ஊக்கமாக, குடிமைக் கழகம் குடிமக்களுக்கு துணிப் பைகளை இலவசமாக வழங்கும். உண்மையில், கடந்த ஆண்டு எம்.எம்.சி வாளி சவாலின் கீழ் மக்களுக்கு நீல மற்றும் பச்சை நிற தொட்டிகளை வழங்கியிருந்தது. கழிவுகளை பிரிக்க மக்களை ஊக்குவிப்பதே இதன் யோசனை.

(கழிவுப் பிரிப்பு பற்றி மக்களுக்குத் தெரிவித்தல் மற்றும் புகை இல்லாத திருவிழாவைக் கொண்டாடுவது)

**சூழல் நட்பு (eco friendly) அலங்கார யோசனைகள்.:**

இலைகள் மற்றும் மலர் இதழ்களைப் பயன்படுத்தி இயற்கையான ரங்கோலியை முயற்சிக்கவும்: உங்கள் கோலத்தில் வண்ணங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, வண்ணமயமான இலைகள், மலர் இதழ்கள் மற்றும் பருப்பு வகைகள் போன்ற இயற்கை கூறுகளைப் பயன்படுத்தி அழகான வடிவங்களை உருவாக்கவும். மலர் கம்பளம் ஒரு புதிய அதிர்வைக் கொடுக்கும் மற்றும் உங்கள் மனநிலையை உடனடியாக உயர்த்தும். முடிந்ததும், அவற்றை தோட்டக்கலை நோக்கங்களுக்காக உரம் பயன்படுத்தலாம், இதனால் பூஜ்ஜிய விரயத்தை உறுதி செய்யலாம்.

குடும்பம் மற்றும் விருந்தினர்களுக்கு பண்டிகை சிறப்புகளை வழங்க வாழை இலைகள்: உணவை பரிமாற சிறந்த சூழல் நட்பு வழிகளில் இதுவும் ஒன்றாகும், இது உணவுக்கு நுட்பமான மற்றும் இனிமையான சுவையை அளிக்கிறது.

உங்கள் வீட்டு இடங்களை அலங்கரிக்க காகித குயிலிங்கை ஆராயுங்கள்: காகித குயிலிங் உங்கள் வீட்டு அலங்காரத்திற்கு அருமையான தொடுதலை சேர்க்கிறது. உங்கள் வீட்டை அலங்கரிக்க காகித குயிலிங்கைப் பயன்படுத்தி ஏராளமான அலங்கார யோசனைகள் உள்ளன.

🙏மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களிலிருந்து DIY விளக்குகள்: பாரம்பரிய டயாக்கள் மற்றும் எண்ணெய் விளக்குகள் தவிர, பிளாஸ்டிக் பாட்டில்கள், முட்டை அட்டைப்பெட்டிகள், சீஷெல் விளக்குகள், பழைய சாஸ் / ஜாம் ஜாடிகளில் இருந்து தயாரிக்கக்கூடிய சில DIY டயாக்களுக்கு நீங்கள் செல்லலாம். இது உங்கள் அலங்காரத்திற்கு தனித்துவத்தை சேர்க்கும், மேலும் உங்களைச் சுற்றியுள்ள உலகைக் காப்பாற்றும் திருப்தியையும் தரும்.

பீங்கான், டெரகோட்டா மற்றும் பாரம்பரிய டைனிங் டேபிள் ஆபரணங்களைத் தேர்வுசெய்க !

**திரு எம் தில்லைநாயகம்**

**இவர் அசோக் லேலண்ட் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் பல குழுக்களில் வேலை செய்தவர். என் ( கௌதமன் ) குழுவிலும் வேலை செய்தவர். பல கடினமான வேலைகளை இவரை நம்பி ஒப்படைத்து அவற்றை இவர் செய்து முடித்த திறனை பல அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பாராட்டியது உண்டு.**

**இவரை 'தகவல் தில்லை' என்று நண்பர்கள் வட்டத்தில் எல்லோரும் அழைப்பது உண்டு. நண்பர்களின் பிறந்தநாள், திருமணநாள் என்று பல தகவல்களையும், ஆன்மீக தகவல்களும், கதைகளும் போன்று பல தகவல்களை தன்னகத்தே கொண்டவர்.**

**சென்னையிலிருந்து திருப்பதிக்கு இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட முறைகள் நடை பயணம் செய்துள்ளார். இவருடைய பாதயாத்திரை பற்றிய பேட்டி, இந்த மலரில், வேறு பக்கங்களில் காணவும்.**

**தாம்பரம் - வல்லக்கோட்டை நடை பயணங்களும், திருவண்ணாமலை கிரிவலம் என்று நடை பயணங்கள் பல செய்துள்ள சாதனையாளர்.**



[Back to index ^]

# மருதாணிச் சித்திரம். - சிறுகதை :: துரை செல்வராஜூ

" யக்கா!... அவ எம்பொண்ணு..க்கா... பேரு அஞ்சலை!.. " என்றார் பழனி பெருமையுடன்...

" அங்கே நிக்கிறது யாரு?... வேலி ஓரமா!.." - என்று பெரியம்மா கேட்ட கேள்விக்குப் பதில் தான் பழனி சொன்ன வார்த்தைகள்...

பெரியம்மா இந்த வீட்டுக்கு வர்றது இது தான் முதல் தடவை.. இந்த வீடு வாங்கி ஆச்சு அதுவும் பத்து வருசம்...

அந்த ஊர்ல ரெண்டு வருசம்.. இந்த ஊர்ல மூணு வருசம்.. ன்னு காலம் எல்லாம் போனதுக்கு அப்புறம் யாரோ சொன்னதைக் கேட்டு - இந்தக் கிராமத்துக்கு வந்து இந்த வீட்டைப் பார்த்ததுமே பிடித்து விட்டது..

அஞ்சு ஏக்கர் தென்னந்தோப்பு.. அது நடுவால தெற்கு பார்த்த வீடு.. அந்தப் பக்கமா வருண மூலையில நல்ல தண்ணிக் கேணி.. கூடவே சின்னதா பம்பு செட்...

எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம். உடனே மெடிக்கல் காலேஜ் ரோட்ல இருந்த ரெண்டு மனைக் கட்டையும் வித்துட்டு அப்படி இப்படி இன்னுங் கொஞ்சம் பணத்தைப் புரட்டி வீட்டைக் கிரயம் செஞ்சது..

இந்த வீட்டை வாங்கினது - பத்து வருசத்துக்கு முன்னாலங்கிறதால வெண்ணெயை வெட்டுற மாதிரி அவ்வளவு சீக்கிரம் வேலை முடிஞ்சது...

இப்போ...ன்னு வெச்சுக்கோங்க வீட்டு வேலி ஓரத்தில கூட நெருங்க முடியாது...

பெரியம்மா கேட்டார்கள்..
" அது ஏன் பழனி.. உம் பொண்ணு அங்கேயே நிக்கிறா... உள்ளே வர வேண்டியது தானே!... இங்கே வாம்மா அஞ்சலை!..." - என்று அழைத்தார்கள்...

எளிமையிலும் செம்மை.. என்பது இதுதான் என்று அஞ்சலையைப் பார்த்ததுமே யாருக்கும் புரியும்... புன்னகையும் வெட்கமும் முகமெல்லாம் பரவிக் கிடக்க மெல்ல நடந்து வந்தாள் - அஞ்சலை...

" வாம்மா.. வா!. ஏன் அங்கேயே நிற்கிறே!.. "

பெரியம்மாவைப் பார்ப்பதும் அந்தப் பக்கம் தகப்பனைப் பார்ப்பதுமாகத் தடுமாறினாள் அந்தப் பெண்...

" யக்கா... நாந்தான் சொல்லியிருக்கேன்... வௌக்கு வெக்கிற நேரத்தில வீட்டை விட்டுட்டு அங்கிட்டு இங்கிட்டு பொட்டப் புள்ள வரப்படாது.. ன்னு.. "

" அதான்.. நீ சொன்னதை எப்படிச் சொல்றது..ந்னு யோசிச்சுக்கிட்டு நிக்கிறாளா!.. அப்பா சொல்றது நல்லதுக்குத் தான்... இருந்தாலும் நம்ம வீட்டுக்கு வர்றதுக்கு என்ன பயம்?... அப்புறம்... இப்படி வீட்டுக்குள்ளேயே அடைஞ்சி கிடந்தா தைரியம் வர்றது எப்படி?... பொம்பளைப் புள்ளைக்கு தைரியம் தானே முக்கியம்!... " விஸ்தாரமாகப் பேசியவர் அருகில் வந்து நின்ற அஞ்சலையை ஆதரவாக அணைத்துக் கொண்டார்...

" என்னம்மா படிக்கிறே?... "

" பத்தாம்..ப்பு!... "

" நல்லாப் படி... டைப் அடிக்க கத்துக்க... எனக்குத் தெரிஞ்சவங்க கிட்ட சொல்லி வேல வாங்கித் தர்றேன்... "

" அதுக்கெல்லாம் பணப் புழக்கம் இருக்கணுமே அக்கா!.. " - பழனியிடமிருந்து விரக்தியின் வெளிப்பாடாக கேள்வி...

" அதெல்லாம் வேணாம் பழனி... சர்க்கார் எவ்வளவோ நல்லது செய்றாங்களே... அதெல்லாம் ஒனக்குத் தெரியாதா!.. நீ எதுக்கும் கவலைப் படாதே!... புள்ளய படிக்க வச்சா போதும்!.. " - என்ற பெரியம்மா அஞ்சலையைப் பார்த்து,

" நீ என்னம்மா சொல்றே!.. " - என்றார்கள்..

தலையைக் குனிந்தபடி புன்னகைத்த அஞ்சலை - " அப்பா என்ன சொல்றாங்களோ அதான்!.. " - என்றாள்..

" பழனி சொல்றதுக்கு என்ன அர்த்தம்... ன்னா - அவுங்களுக்கு ஏன் சிரமத்தைக் கொடுப்பானேன்... நடக்குறது நடக்கட்டும்... ங்கறது தான்... என்ன பழனி.. சரி தானே!... "

பதில் சொல்வதில் பழனிக்குத் தடுமாற்றம்...

அதற்குள் வீட்டுப் பெண்கள் எல்லாரும் கூடி விட , பேச்சும் சிரிப்புமாக கலகலத்தது அந்த இடம். வீட்டினுள்ளிருந்து வந்த ராதிகா, " காஃபி குடிக்கிறியா அஞ்சலை!.. " என்றாள்..

" வேணாங்..க்கா!.. " - அஞ்சலை சொல்வதற்குள் வார்த்தைகள் பளிச்சிட்டன பெரியம்மாவிடம் இருந்து...

" சாப்பிடுறது எதையும் வேணாம்... ன்னு சொல்லக் கூடாது!.. " - என்றபடி திரும்பியவர்,

" அஞ்சலை நம்ம வீட்டுப் பொண்ணு.. அவளக் கேக்கணுமா?.. காஃபி எடுத்துட்டு வா ராதிகா!... பழனி உனக்கு?... " - என்று புருவங்களை உயர்த்தினார்...

" யக்கா.. நான் குடிச்சிட்டேன்... கள்ளிச் சொட்டு மாதிரி காப்பி... ரொம்ப ஜோர்!.. கும்மோணம் யானையடி காப்பிய எல்லாம் தூக்கி அடிச்சிடும் நம்ம ஊட்டுக் காப்பி!.. "

காஃபியின் மகத்துவத்தைப் பழனி பேசவும் எல்லாரும் சிரித்தார்கள்...

பத்து வருசமா இந்த வீட்டோட நம்பிக்கைக்கு உரிய பணியாளர் பழனி.. வடக்குத் தெருவில் சாதாரண ஓட்டு வீடு.. இருந்தாலும் அந்த வீட்டில் இருந்த நேரத்தை விட இங்கே - பழைய கிளார்க் ஐயா வீட்டில் கழித்த நேரம் தான் அதிகம்...

மாடு கன்னு பார்த்துக்கிட்டு ரெண்டு வேளையும் பால் கறக்கணும்... புண்ணாக்கு பருத்திக் கொட்டை .. ன்னு வாங்குறதுக்கு வாரச் சந்தைக்கு வண்டி கட்டணும்.. எல்லாத்துக்கும் மேல தோப்பு..ல இளநி, தேங்கா, மட்டை, பாளை, கீத்து.. ன்னு எல்லாத்தையும் காபந்து பண்ணிக்கணும்.

வருசத்துக்கு பன்னிரண்டு மூட்டை நெல்லும் மூவாயிரம் ரூபாய் பணமும்...

தோப்புல வருசத்துக்கு நாலு வெட்டு தேங்காய்... ஒவ்வொரு வெட்டுக்கும் அம்பது தேங்கா பழனிக்கு.. மரத்துல இருந்து பழுத்து விழுற மட்டையும் பழனிக்குத் தான்... இதுபோக பொங்கல் தீவாளிக்கு வேட்டி துண்டு..

இப்படி சம்பளம் பேசிக்கிட்டாலும் அதுக்கு கணக்கு வழக்கு.. ன்னு எதுவும் கிடையாது...

' மூனு வேளையும் வயிறார சாப்பாடு போட்டு காப்பி கொடுக்குற மகராசன் வீட்டுல சம்பள கணக்கு பார்த்தா சாமி கண்ணைக் குத்திடும்...' ங்கிறது பழனியோட கட்சி..

எந்தக் குறையும் இல்லாம இத்தனை வருசம் ஓடிடுச்சு...

" தோப்புக்குள்ளேயே வீடு கட்டித் தாறோம்.. இங்கேயே வந்துடேன்... பழனி!.. " - என்று அழைத்தார்கள் ஒருமுறை..

" செல்லம் இருந்த வீடுங்க அது... விட்டுட்டு வர்றதுக்கு மனசு இல்ல!.. " - கலங்கிய கண்களுடன் பழனியின் நெஞ்சம் துடிக்கும்..

பத்து வருசத்துக்கு முன்னால் சீட்டு, குடி, கூத்து இவை தான் பழனியின் அடையாளங்கள்.. பழனியை மீட்பதற்காகவே மகள் பிறந்தாள்..

புது உறவின் பூ முகத்துப் புன்னகை - பழனியை புது மனிதனாக உரு மாற்றிய வேளையில் ஏதோ நோய் வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்து போய்ச் சேர்ந்தாள் பழனியின் மனைவி..

ஆதரவு காட்ட யாரும் முன் வராத நிலையில் அன்புக் கரம் நீட்டியது - அந்த ஊருக்கு புதிதாய் வந்திருந்த இந்தக் குடும்பம் தான்...

அதிலிருந்து பழனிக்கு கோயில் குளம் எல்லாம் இவர்களது வீடும் தென்னந் தோப்பும்தான் என்றானது...

இந்த நாலு வருசமா பழனி கைச் சம்பளம் வாங்காததால அது பெரிய ரொக்கமா அவங்க வீட்லயே சேர்ந்திருக்குது - அஞ்சலை கல்யாணத்துக்கு... ன்னு...

' எனக்கு எல்லாமும் நீங்களே!... ' ன்னு சொல்லாமல் சொல்லி விட்டார் பழனி..

இதுதான் இந்தக் குடும்பத்துக்கும் பழனிக்குமான நல்லுறவு..

ரெண்டு மூனு நாள் கழிச்சு கூடை நெறைய மருதாணி இலையோட வந்தா அஞ்சலை... எல்லாருக்கும் சந்தோஷம்...

கொப்பும் குலையுமா இருந்த மருதாணியை சுத்தமா ஆய்ந்தெடுத்த பெரியம்மா சொன்னார்கள்..

" மருதாணிய நான் அறைச்சுடறேன்.. பசங்க எல்லாரும் சீக்கிரமா சாப்பிட்டுட்டு வாங்க!... "

குறுக்கிட்ட அஞ்சலை - " நான் அறைச்சுத் தர்றேம்மா!.. " - என்றாள்..

மெல்லச் சிரித்த பெரியம்மா, " இல்லடா செல்லம்... மருதாணி அறைக்கிறப்போ கையெல்லாம் சிவப்பாயிடும்.. அதுக்கு மேல மருதாணி வைச்சா எடுப்பா இருக்காது!.. " - என்றபடி அஞ்சலையின் கன்னத்தை வருடினார்கள்.

தென்மலையின் சந்தனமே
தேன்வழியும் செண்பகமே
பொன்னி நதிப் பூங்காற்றே
வந்திடம்மா பூ முடிக்க..

பொன்னிறத்துப் பூவரும்பே
நன்னிலத்து செங்கரும்பே
தங்கநிறத் தாமரையே
வந்திடம்மா மை எழுத..

முத்து முத்துப் புன்னகையே
முத்தமிழின் இன்சுவையே
நெத்திச் சுட்டி சூடிடவே
வந்திடம்மா வான்மதியே...

மல்லிகையும் பூத்திருக்க
மங்கலங்கள் காத்திருக்க
மஞ்சள் முக நித்திலமே
மருதாணிச் சித்திரமே..

மெலிதாகப் பாடியபடி பிள்ளைகளுக்கும் தனது தங்கைக்கும் மருதாணி வைத்து விட்ட பெரியம்மா கடைசியாக தனக்கும் வைத்துக் கொண்டார்கள்...




கை விரல் சிவப்பைக் காட்டுவதற்காக பொழுது விடிவதற்கு முன் ஓடி வந்த அஞ்சலை உறக்கத்தில் இருந்த பிள்ளைகளை எழுப்பி விட்டாள்...

கண் விழித்து கைகளைக் கண்ட பிள்ளைகளின் முகம் கீழ் வானச் சிவப்பாகியது..

பிள்ளைகளின் புன்னகையைக் கண்டு பெரியவர்களுக்குப் பூரிப்பு...

இன்னும் சில நாட்கள் தான்.. பெரியம்மா ஊருக்குச் சென்று விடுவார்கள்.

* * *

அன்று ஞாயிற்றுக் கிழமை..

மதியப் பொழுதுக்கு மேல் ஈரமான  சாக்குச் சுருளுடன் வந்தாள் அஞ்சலை..

மகளை இந்த நேரத்தில் கண்ட பழனி, " என்னம்மா இது!.. " - என்றார்...

ஒன்றும் பேசாமல்  புன்னகைத்த அஞ்சலை சாக்கை விரித்துப் போட்டாள்.. வெளிர் மஞ்சள் மடல்களுடன் தாழம்பூக்கள்...

" தாழங்காட்டுக்குள்ளே போய் பறிச்சது யாரும்மா?.. "  - பழனியின் கேள்விக்குப் பதிலாக -

" கார்மேகம் அத்தான்!.. " - என்றாள் அஞ்சலை..

திண்ணையும் முன் வாசலும் தாழம்பூக்களின் நறுமணத்தால் நிறைந்தன...

பிள்ளைகளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை..

அவ்வளவு தான்..

கொல்லையில் பூத்திருந்த மல்லிகைப் பூக்கள் கூடத்தில் குவிந்தன.. கொஞ்ச நேரத்தில் ஊசியும் பட்டு நூலும் ரிப்பன் நாடாக்களும் குஞ்சங்களும் வந்து சேர்ந்தன..

இதெல்லாம் சின்னவளுக்கு சடங்கு சுத்துனப்போ வர்றவங்களுக்குக் கொடுக்கிறதுக்காக வாங்குனது...

தாழம் மடல்களைப் பிரித்து ஓரத்து முட்களை நறுக்கி விட்டு பிள்ளைகள் அனைவருக்கும் ஜடை பின்ன ஆரம்பித்தார் பெரியம்மா..

முதலில் அமர்த்தப்பட்டவள் அஞ்சலை.. சூரியப் பிரபை மாதிரி ஜடைப் பில்லையுடன் மல்லிகை மொட்டுகள் பட்டு நூல் ஜரிகை இழைகளையும் சேர்த்துத் தைத்து முத்துக் குஞ்சத்துடன் ஜடையைப் பின்னி முடித்ததும் தேவதைகள் நடமாடும் திருமாளிகை ஆனது வீடு..

வீட்டுப் பிள்ளைகள் மூவருடன் நிற்க வைத்து ஆரத்தி எடுத்து திருஷ்டி கழித்து நெற்றியில் பொட்டு வைத்த பெரியம்மா முகத்தைத் துடைத்தபடி முற்றத்துத் தூணில் சாய்ந்த போது அருகில் வந்த அஞ்சலை,

" உங்க தோள்..ல சாஞ்சுக்கவா அம்மா!.. " என்றாள்...

" தோள்..ல யா?.. எம் மடியிலயே சாஞ்சுக்கடி செல்லம்!.. " - என்றபோது தாயில்லாத அந்தப் பிள்ளையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது..

வானவர்கள் கூடி நின்று சந்தோஷப் பூக்களை வாரியிறைத்துக் கொண்டிருந்தனர்...
ஃஃஃ

Back to index ^

# பீட்ரூட் தொக்கு :: சுபஸ்ரீ ஸ்ரீராம்

**தேவையான பொருட்கள் : -**
**மீடியம் சைஸ் பீட்ரூட் --- ஒன்று (1)**
புளி --- நெல்லிக்காய் அளவு
குண்டு வர மிளகாய் --- 10 நம்பர்
மஞ்சள் பொடி --- ஒரு சிட்டிகை
பெருங்காயம் --- ஒரு சிறிய கட்டி
கடலெண்ணெய் --- ஒரு குழி கரண்டி
கல் உப்பு --- தேவையான அளவு

தாளிக்க :-- (1) கடுகு --- ஒரு டீஸ்பூன்
(2) உளுத்தம் பருப்பு --- ஒரு டீஸ்பூன்
(3) கறிவேப்பில்லை --- பத்து இலைகள்

செய்முறை :

(1) முதலில் பீட்ரூட்டை அலம்பி விட்டு தோல்சீவிக்கொள்ளவும். பின்னர், நன்றாக துருவிக்கொள்ளவும்.

(2) அடுப்பில் வாணலியை ஏற்றி, ஒரு சிறிய ஸ்பூன் எண்ணெய் விட்டு, பெருங்காயத்தை பொரித்துக் கொள்ளவும். பின்னர், புளியை ஒரு அரை செகண்டு வதக்கி எடுத்துக் கொள்ளவும்..அதை அடுத்து வரமிளகாய் வதக்கவும். கடைசியில் பீட்ரூட்டை பச்சை வாசனை போக கல் உப்பு சேர்த்து வதக்கவும்..

(3) நன்கு ஆறியவுடன், மிக்ஸியில் நைசாக மூன்றையும், அரைக்கவும்.தேவை என்றால் கால் டம்ளர் ஜலம் சேர்த்துக்கொள்ளலாம்.

(4) மறுபடியும் ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு, சூடானதும், கடுகு, உ. பருப்பு, கறிவேப்பில்லை போட்டு தாளித்தவுடன், பீட்ரூட் அரைத்ததையும் போட்டு நன்கு வதக்கவும். அதனுடன் மஞ்சள்பொடி சேர்க்கவும். அடுப்பை சிம்மில் வைக்கவும்..எல்லாம் ஒருசேர கலந்து, கடைசியில் எண்ணெய் பிரிந்து வரும்.. இப்பொழுது அட்டகாசமான உப்பு, புளிப்பு, தித்திப்பு காரத்துடன் கூடிய பீட்ரூட் தொக்கு ரெடி..

குறிப்பு : -

(1) பீட்ரூட்டை துருவிதான் வதக்கணும்..நம்ம சௌகரியத்த்திற்கு க்யூப்பாக கட் பண்ணி வதக்கினால் பச்சை வாசனை போகவே போகாது. (பொதுவாக சமையலில் காம்ப்ரமைஸ் பண்ணக்கூடாது.. அப்படிச்செய்தால் டேஸ்ட் மாறிவிடும்..)
(2) வர மிளகாய்க்குப் பதில், சக்தி மசாலா வர மிளகாய்ப் பொடி சேர்க்கலாம். நல்ல காரமாகவும்,கலரும் கொடுக்கும்..எனவே என் சாய்ஸ் சக்திவரமிளகாய் பொடி..

(3) இந்த தொக்கு, ஒருவாரம் வரை ப்ரிஜ்ஜில் வைக்கலாம். மெம்பருக்கு ஏற்ப இரண்டு பீட்ரூட் சேர்க்கலாம்..

(4) சப்பாத்தி,பூரி,இட்லி,தோசைக்கு தொட்டுக்கொள்ளலாம். சாத்தில் நல்லெண்ண்ய் விட்டு பிசைந்தும் சாப்பிடலாம்.




= = = = =



சுபஸ்ரீ ஸ்ரீராம் - குறிப்பு :

இயக்குனர் சுபஸ்ரீஸ்ரீராம் அவர்கள் சுமார் 10 வருடம் பஹ்ரைனில் வசித்து வந்த இவர், 2010 இல் துபாயில் குடியேறினார். இவருக்கு சிறுவயதில் இருந்தே எழுத்தில் ஆர்வம் உண்டு. இவர் பள்ளிக்காலத்தில் இருந்தே நிறைய எழுதிக்கொண்டு இருக்கின்றார்.

இதற்கு முக்கிய காரணம் அவரது தந்தையின் ஊக்குவிப்பு. இவரது கொள்ளுத் தாத்தாவும், சூரிய நாராயண சாஸ்த்ரி என்கின்ற பரிதிமாற் கலைஞர் அவர்களும் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தினமலர், தினத்தந்தி, குமுதம், ஸ்நேகிதி போன்ற இதழ்களில் இவருடைய கவிதை, கட்டுரை, பேட்டி இடம்பெற்றுள்ளன.

இதைத் தவிர இணையத்தில் நிறைய இதழ்களில் எழுதியிருக்கிறார், இன்னும் எழுதிக் கொண்டு இருக்கின்றார்.

2017ம் ஆண்டு துபாயில், திரு. க்ரேசி மோஹன் மற்றும் திரு. மாது பாலாஜி தலைமையில் நடைபெற்ற குறுநாடகப் போட்டியில் , சிறந்த திரைக்கதை, வசனம் எழுதியதற்காக திரு.க்ரேசி மோஹன் அவர்களின் திருக்கரங்களால் முதல் பரிசை பெற்றார்.

அடுத்து 2018 வருடம் துபாயில், திரு. டெல்லி கணேஷ் தலைமையில் நடந்த குறுநாடகப் போட்டியிலும் கலந்துக்கொண்டு கதை, திரைக்கதை வசனம், எழுதி இயக்கியும் இருந்தார். அந்த நாடகம் இரண்டு பரிசுகளைத் தட்டிச் சென்றது.

2019 ல், தீபாவளி மலரில், துபாயில் உள்ள சிவன் கோவில் பற்றிய இவரது கட்டுரையும், அதே இதழில் இவருடைய நகைச்சுவை சிறு கதையும் வெளிவந்தது.
2020- இல் ஜனவரி மாதம், மங்கையர் மலரில் இவருடைய பேட்டி வெளிவந்தது.
அக்டோபர் மாதம் துபாயில் நடைபெற்ற, குறும்படப் போட்டியில் கலந்துக் கொண்டு, கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கிய அவருடைய "பேண்ட்" என்ற குறும் படத்திற்கு நான்கு அவார்ட்கள் கிடைத்தது.
சமீபத்தில், இந்த மாதம் மின்னிதழ் தீபாவளி மலரில், இவருடைய இரண்டு கட்டுரைகள் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

**Name:- Subhasri Sriram/சுபஸ்ரீஸ்ரீராம்**

**My mail id : pgssubhaaiyar@gmail.com**

Back to index ^

# சிரோட்டி :: கீதா ரெங்கன்

எபி வாசகர்கள், நட்புகள், அமைதியாக வாசித்துக் கடந்து செல்லும் அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பார்ந்த பொங்கல் நல்வாழ்த்துகள்! தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது மெய்ப்பட வேண்டும். கொரோனா இல்லாத நல்ல காலம் பிறந்து உலகம் மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்ற வாழ்த்துடன் ஒரு சுவையான இனிப்பு.

மின்(னும்) நிலாவுக்கு நாங்கல்லாம் ராக்கெட்ல போய் அங்க எபி கிச்சன் செட் போட்டுச் செய்ததாக்கும்!!! ஸ்பெஷல்!

சிரோட்டி என்பது கர்நாடகா ஸ்பெஷல். இதனை பதிர்ஃபேனி என்றும் சொல்கிறார்கள். ஆனால் நான் அறிந்த வரையில் சிரோட்டியும், பதிர் ஃபேனியும் சிறு வித்தியாசங்களில் வேறுபடுகின்றன. சிரோட்டியை பலரும் மைதாவில் செய்கிறார்கள். அதனால் பதிர்ஃபேனி என்றும் சொல்கிறார்களோ என்றும் தோன்றுகிறது. வட இந்தியாவில் குறிப்பாக ராஜஸ்தானில் ஃபேனி. லச்சா வெர்மிஸில்லி/லச்சா சேவை, ஃபேனியா, ஃபின்னி, ஃபென்னி என்றும் பல பெயர்களில் சொல்வாங்க. ரெடிமேடாக பாக்கெட்டுகளில் கிடைக்கவும் செய்கிறது இந்த ஃபேனி.

ஃபேனி என்பது மைதா மாவில் நிறைய நெய் விட்டு விட்டு பிசைந்து அது ஒரு ப்ராசாஸில் மெலிதாக ஓமப்பொடி போன்று மெலிதாக ஆக்கி சுருட்டி பொரித்தெடுப்பது. வியாபாரம் என்றால் இதற்கான மெஷின் இருக்கிறது. தொட்டாலே பொடியும் அளவு இருக்கும். ஃபேனியில் சர்க்கரைப் பாகு ஊற்றி பாதாம், முந்திரி என்று உலர் பருப்புகள் பழங்கள் போட்டும் சாப்பிடலாம் அல்லது ஃபேனி கீர் என்றும் சுண்டக் காய்ச்சிய பால் ஊற்றி உலர் பருப்புகள் பழங்கள் போட்டுச் சாப்பிடலாம்.

இங்கு பங்களூரிலும் கூட சிரோட்டியும், (பதிர்)ஃபேனியும் ரெடிமேடாகக் கடைகளில் கிடைக்கிறது. சிரோட்டியையும், ஃபேனியையும் குழப்பிக் கொள்ளத் கூடாது என்பது நான் என் அனுபவத்தில் கற்றது.

சிரோட்டி - சிரோட்டி ரவையில் செய்வது. இந்த ரவை மிக மிகப் பொடியாக இருக்கும். லச்சா பரோட்டா போன்று லச்சா பூரி எனலாம் இதை. அப்படி லேயர் லேயராக இருக்கும். சரி இப்ப நாம சிரோட்டி செய்யறது எப்படின்னு பார்க்கலாம். இதைப் பார்த்ததும் நீங்கள் இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் தெரிந்து கொள்ளலாம். ஃபேனி வேறொரு சமயம் செய்து காட்டுகிறேன்.

சிரோட்டிக்குத் தேவையான பொருட்கள் : நான் செய்த அளவை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறேன். நான் குறிப்பிடும் கப், ஸ்பூன் எல்லாமே அளவு கப், ஸ்பூன்கள்.

சிரோட்டி ரவை - ½ கப் (சிரோட்டி ரவை கிடைக்காதவர்கள் பாம்பே ரவையை மிக்சியில் பொடித்துக் கொள்ளலாம்)

தண்ணீர் - சிரோட்டி ரவையைக் கெட்டியாப் பிசைய தேவையான அளவு

நெய் - 2 டேபிள் ஸ்பூன் + 1 டீ ஸ்பூன்
அரிசி மாவு - 2 டேபிள் ஸ்பூன்
எண்ணெய் - பொரிக்கத் தேவையான அளவு
உப்பு - ஒரு சிட்டிகை
பால் - ¾ லிட்டர்
சர்க்கரை - 1/3 கப் உள் அளவில்.
ஏலப்பொடி - ஏலக்காயை கொஞ்சம் சர்க்கரை சேர்த்துப் பொடித்துக் கொண்டு சலித்து வைத்துக் கொள்ளவும்.

உலர் பருப்புகள் உங்கள் விருப்பம் போல் எடுத்து கொஞ்சம் நெய்யில் வறுத்து வைத்துக் கொள்ளலாம்.

## கொலாஜ் 1



கொலாஜ் படம் 1 ல் உள்ளது போல் அரை கப் சிரோட்டி ரவையில் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் தெளித்து பூரிக்குப் பிசைவது போன்று பிசையவும் (படம் 2, 3). அதில் 1 டீஸ்பூன் நெய் விட்டு (படம் 4) நன்றாகத் தேய்த்துப் (படம் 5) பிசைந்து உருட்டி வைக்கவும் (படம் 6). மாவு நன்றாக மென்மையாக இருக்க வேண்டும். ஒரு மெல்லிய துணி கொண்டு மூடி 15-20 நிமிடங்கள் அப்படியே வைத்துவிடவும் (படம் 7).

இந்தச் சமயத்தில் ஒரு கிண்ணத்தில் 2 டேபிள் ஸ்பூன் நெய்யை எடுத்துக் கொண்டு (படம் 9) அதை ஒரு ஸ்பூனாலோ அல்லது விரல்களாலோ அல்லது சிறிய விஸ்கராலோ நன்றாக அடித்துக் கலக்கவும் (படம் 10). நன்றாக மை போன்று குழைந்ததும் அதில் 2 டேபிள் ஸ்பூன் அரிசி மாவைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு தேவையான அளவு போட்டு நன்றாகக் கலக்கவும்
(படம் 10, 11). சில சமயம் 2 டேபிள் ஸ்பூனுக்குக் குறைவாகவே போட வேண்டி வரலாம். மையான பேஸ்ட் போல இருக்க வேண்டும்.

இப்போது மூடி வைத்திருக்கும் அந்த உருண்டையை எடுத்து மீண்டும் கொஞ்சம் பிசைந்து மிருதுவாக உருட்டிக் கொள்ளவும் (படம் 8).

## கொலாஜ் 2 :



உருட்டிய மாவிலிருந்து எலுமிச்சை அளவிற்குச் சிறிய உருண்டைகளாகப் பிரித்து உருட்டி வைத்துக் கொள்ளவும் (கொலாஜ் 2 படம் 1) ஒவ்வொரு உருண்டையையும் நல்ல மெலிதாகப் பூரிக்குத் தேய்ப்பது போல் தேய்த்துக் கொள்ளவும் (படம் 2). ஒரு பூரியின் மேல் நெய் அரிசிமாவு பேஸ்ட் ஒரு ஸ்பூன் தாராளமாகப் போட்டு (படம் 3)

பூரி முழுவதும் தடவி (படம் 4) அதன் மீது மற்றொரு பூரியை வைத்து (படம் 5) அதன் மேல் மீண்டும் அரிசிமாவு நெய் பேஸ்டைப் போட்டு தடவி (படம் 6) அதன் மீது மற்றொரு பூரியை வைத்து (படம் 7) அதன் மீது மீண்டும் ஒரு பூரி வைத்து அதன் மீதும் பேஸ்டைத் தடவவும் (படம் 8). அடுத்து அதை நன்றாகப் பாய் சுருட்டுவது போன்று டைட்டாகச் சுருட்ட வேண்டும் (படம் 9). சுருட்டியதை ஒரு பக்கமாக உருட்டி மெதுவாக உருட்டிக் கொஞ்சம் நீளமாக்கலாம் (படம் 10). அதன் நீளத்திற்கு ஏற்ப கட் செய்து கொள்ளலாம். நான் மூன்று பகுதிகளாகக் கட் செய்து கொண்டேன் (படம் 11). அதை நிமிர்த்தி வைக்கவும் (படம் 12). பிரி தெரிகிறது அல்லவா? இப்படி இருந்தால்தான் பொரியும் போது நன்றாகப் பிரிந்து ஹாலோவாக. இப்படி நான் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கியது நான்கு பூரிகள். உங்களுக்குத் தேவையானல் 5, 6 கூட வைத்துக் கொள்ளலாம். பொரிக்கும் போது நன்றாகப் பிரி பிரியாக வரும். கவனம் : கடைசியாக மேலே வைக்கும் பூரியின் மீது கண்டிப்பாக பேஸ்டை தடவ வேண்டும். இது மிகவும் முக்கியம்.

## கொலாஜ் 3



நிமிர்த்தி வைத்ததைக் கையால் மென்மையாக அழுத்தவும் (கொலாஜ் 3 படம் 1). மென்மையாக அழுத்திவிட்டு பூரிக்கட்டையால் மெதுவாக அதிகம் அழுத்தாமல் தேய்க்க வேண்டும் (படம் 2). அடுப்பில் எண்ணையைக் காய வைத்து இட்டு வைத்த சிரோட்டி பூரிகளை ஒவ்வொன்றாகப் பொரிக்கவும். நிறைய எண்ணை வைத்தால் மூன்று நான்கு கூடப் பொரிக்கலாம். நான் அதிகம் எண்ணை வைத்துப் பொரிப்பதில்லை என்பதால் ஒவ்வொன்றாகப் பொரித்தெடுத்தேன்.

இரு பக்கமும் திருப்பிப் போட்டு பொரிக்கவும் (படம் 3, 4). பொரித்த பூரிகளை அடுக்கி வைத்திருக்கிறேன் பாருங்க (படம் 5, 6).

பாதாம் மற்றும் முந்திரி (படம் 7) உங்கள் விருப்பத்திற்கேற்ப. ¾ லிட்டர் காய்ச்சிய பாலில் 1/3 கப் சர்க்கரை போட்டு (இதுவே நல்ல ஸ்வீட்டாக இருந்தது. எனவே கூட்டிக் குறைப்பது உங்கள் விருப்பம்) ½ லிட்டராக சுண்டக் காய்ச்சவும். அல்லது சர்க்கரைக்குப் பதில் பாலில் கண்டென்ஸ்ட் மில்க் கூடத் தேவையான இனிப்பளவு சேர்த்துக் கலக்கிக் கொள்ளலாம். அதில் நெய்யில் வறுத்த பருப்புகளைப் போடலாம் (படம் 8). அல்லது தனியாக வைத்துக் கொள்ளுங்கள். பூரி நன்றாகப் பிரி பிரியாக வந்திருக்கு (படம் 9) பரிமாறும் போது அதைத் தட்டில் லைட்டாக உடைத்துப் போட்டு (படம் 10) பூரியின் மீது ஏலக்காய்ப் பொடி தூவி (படம் 11) தனியாக வைத்துள்ள பருப்புகளைத் தூவி (படம் 12) அதன் மீது சுண்டக் காய்ச்சிய பாலை விட்டுப் பரிமாற வேண்டியதுதான். சிரோட்டி ரெடி. சரி ஒவ்வொருத்தரா வந்து எடுத்துக்கோங்க. படம் பார்த்துக் கொஞ்சமோன்னு நினைக்காதீங்க. இன்னும் நிறைய உள்ளே இருக்கு!. எஞ்சாய்!

மனமார்ந்த நன்றி எபி ஆசிரியர்களுக்கும் மின் நிலா பொங்கல் மலர் ஆசிரியர் குழுவினருக்கும்!.

= = = =

சுய குறிப்பு :

என் விவரங்கள் : நான் கீதா. என்னைப் பற்றி பெரிதாகச் சொல்லிக் கொள்ள ஒன்றுமில்லை.

https://thillaiakathuchronicles.blogspot.com/ வலைப்பூவில் நண்பருடன் எழுதத் தொடங்கினேன்.

தற்போது எங்கள் எழுத்து குறைந்து, எழுதுவதில் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

எங்கள் ப்ளாகில் ஆசிரியர்கள் தரும் ஊக்கத்தால் உற்சாகத்தால் அங்கு படைப்புகள் வருவதுண்டு. ஆசிரியர்களுக்கு மிக்க மிக்க நன்றி.

Back to index ^

# அம்மா செய்த மோர்க்குழம்பு திருமங்கலம் 1958 :: ரேவதி நரசிம்ஹன்

எங்கள் வீட்டில் தம்பிக்குப் பிடித்த மோர்க்குழம்பும், கொத்தவரங்காயும் எனக்கு நோ நோ.
எனக்குப் பிடித்த கத்திரிக்காயும், மிளகு குழம்பும் அவனுக்கு ஒத்துக்காது.:)

தம்பி வாடா. உனக்குப் பிடித்த உசிலி செய்து தருகிறேன்.

சின்னவனுக்கு ரசம் மட்டும் பிடிக்கும்.:)

++++++++++++++++++++++++++++++++++++

மோர்க்குழம்பு எனக்குப் பிடிக்காத காரணம் அதன் புளிப்பு வாசனை. ஒரு நாள் அம்மா என்னையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு மோர்க்குழம்பு செய்யும் விதத்தைக் காட்டினார்.

நல்ல கடைந்த மோரில் பெருங்காயம்,கருவேப்பிலை, துளி தேங்காய் எண்ணெய் சேர்த்து தனியாக வைத்தார்.

தேங்காயை உடைத்து ஒரு மூடியைத் திருகச் சொன்னார். துவரம் பருப்பு இரண்டு தேக்கரண்டி அளவில் நன்றாக அலம்பி ஊறவைக்கக் காண்பித்துக் கொடுத்தார்.

எனக்கோ 'இவ்வளவுதானேம்மா. போதும்' என்று சொல்லத்தோன்றியது.

அதற்கு அடுத்தாற்போல அம்மா வாணலியை அடுப்பில் வைத்ததும் மீண்டும் கவனிக்க ஆரம்பித்தேன்.

அம்மாவின் அடுப்பு எப்பொழுதுமே நிதானமாக எரியும். அவசரமாக எதையும் கறுக்கி விடமாட்டார். வாணலியில் 6 சிகப்பு மிளகாய், இரண்டு டீஸ்பூன் உளுத்தம்பருப்பு, கொஞ்சம் வெந்தியம், கூடவே துருவி வைத்திருந்த தேங்காய்த்தூளையும் போட்டு கவனமாக வறுத்துக் கொட்டினார்.

"அம்மா தேங்காய்த் தொகையல் போல இருக்குமா" என்று ஆவல் மீறக் கேட்டேன்.

"பின்ன என்னன்னு நினைச்சே. அதேதான். நீ வேணா பாரு" என்று எல்லாவற்றையும் அரைக்கிற( ஏற்கனவே அலம்பி வைத்திருந்த உரலில்) சேர்த்தார்.

"ம்ம். குழவியைச் சுத்து" என்று சொல்லிவிட்டு, கத்திரிக்காய் திருத்தி வைக்க ஆரம்பித்தார்.

" கையை, விரலைப் பார்த்துக் கொண்டு அரைத்து எடு. வெழுமூண வேண்டாம்" என்று அவ்வப்போது புத்திமதிகள் வரும்,

அரைத்தவுடன் வந்த வாசனை மிகப் பிடித்தது. என்ன 'தான்' போடலாம் என்றதும் சுற்றிப் பார்த்துவிட்டு, "வெண்டைக்காய் போடலாமா" என்றேன்.

” இன்னிக்கு வெள்ளைப் பூசணி எடுத்துக்கலாம். வெண்டைக்காய் தனியே வதக்கணும். சாப்பிட நேரமாகிறது .இன்னிக்கு கார்த்திகை இல்லையா. இன்னும் விளக்கெல்லாம் தேய்ச்சு வைக்கணும்.

அகல் விளக்கைத் தண்ணீரில் போட்டுத் துடைத்து வைக்கணும். திரிகள் போட்டு, குங்குமம் சந்தனம் வைத்து, நல்லெண்ணெய் சிதறாமல்.அகல்களில் விடணும்.

நீயும் தம்பிகளும் அதை செய்யும் போது நான் பொரி உருண்டை, அப்பம், வடை, திருக்கண்ணமுது எல்லாம் செய்யணும். இப்போ இதைப் பாரு” என்று அடுப்பில் வென்னீரில் பூசணித்துண்டுகளைப் போட்டார்.

துளி உப்பு சேர்த்து,கொஞ்சம் மஞ்சள் பொடியும் போட்டார்.

து.பருப்பு,அரிசி ,உ.பருப்பு,வெந்தியம் தேங்காய் அரைத்த கலவையை

வைத்திருந்த மோரில் சேர்த்தார். பூசணித்தான் வெந்து விட்டதா என்று பார்க்கும் கட்டம்.

கையில் வைத்து சோதிக்காமல் ஒரு ஸ்பூனால் நசுக்கிப் பார்ப்பதை வேடிக்கை பார்த்தேன்.

” இப்ப என்ன செய்யணும்?” என்னைக் கேட்டார்,

” இந்த மோரை அதில சேர்க்கணும்." என்று சொல்லி மூக்கைப்

பிடித்துக் கொண்டேன்.

” முதல்ல கையெடு. தளிகை செய்யும் போது கொனஷ்டை செய்யாதே.

இப்ப பாரு” என்று மோர்க்கலவை பொங்கி வருவதைக் காட்டினார்.

”இவ்வளவுதான் இதற்கு மேல் கொதிக்கக் கூடாது. இதற்கு சீரகம் திருமாறினால் போதும்” என்று முடித்தார்.

பக்கத்திலிருந்த கிண்ணத்தை எடுத்து அதில் மோர்க்குழம்பையும் தானையும் போட்டு என்னிடம் கொடுத்து, “ சாப்பிடு” என்றதும் தயக்கம் தான்.

” உம்மாச்சிக்குக் காண்பிச்சுட்டு சாப்பிடலாம்” என்றவளைப் பார்த்து வாய்விட்டு சிரித்து விட்டார்.

ம்ம்ம் .மோர்க்குழம்பு நன்றாகத் தான் இருந்தது !

சுய குறிப்பு :

இயற்பெயர் ரேவதி நரசிம்ஹன்.
வலைப்பெயர் வல்லிசிம்ஹன்
இணைய வலைப்பூ நாச்சியார்.

லிங்க் www.naachiyaar.blogspot.com
2006 ஏப்ரில் மாதத்திலிருந்து தமிழ்ப் பதிவுகள். அதற்கு முன் ஆங்கிலத்தில் பதிவுகள். பல தளங்களில் இயங்கிவிட்டு ஒரே வலைப்பூவில் தொடர்கிறேன்.

அனுபவம், சலிப்பு,களிப்பு, நாட்டு நடப்பு எல்லாம்
பதிந்த பிறகு நிறைய எழுத முடியாமல்
காணொளிகளை மட்டும்
இணைத்து வருகிறேன்.
அலுக்காமல் என் பதிவுகளைக் கண்டு போகிறவர்கள்
அனேகம் இருந்தாலும் கருத்து சொல்பவர்கள் குறைவே.

நட்புகள் அனைவருமே கௌரவமானவர்கள்.
உயர் எழுத்துக்குச் சொந்தமானவர்கள்.
அனைவருக்கும் நன்றி.
இனிய புத்தாண்டு நல் வாழ்த்துகள்.



Back to index ^

# அக்கா மகள் - சிறுகதை :: 'பரிவை' சே.குமார்

ராஜேஷ் அக்கா வீட்டுக்குள் நுழைந்தபோது யாருமே அவனுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. கேட்ட கேள்விக்குப் பதில் யாரிடமிருந்தும் வரவில்லை. எல்லாருமே ஏதோ ஒரு வேலை பார்ப்பது போல் நடித்துக் கொண்டிருந்தார்கள்.

அக்கா கமலா அவனைப் பார்த்தும் பார்க்காதது போல் டிவியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.




ஹாலில் நின்றபடி ஒவ்வொருவரின் முகமாய்ப் பார்த்தான்... அவனாகப் பேசிப் பார்த்தான்...

ஒருவர் கூட அவன் குரலுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை என்பதை உணர்ந்தவன், "ஆரா எங்கே இருக்கா..?" சற்றே சத்தமாகக் கேட்டான்.

அதற்கும் எந்தப் பக்கமிருந்தும் பதில் வரவில்லை என்பதால் இங்கு நிற்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்தவன் வெளியில் போவது உத்தமம் என்ற நிலைக்கு வந்தபோது படுக்கையறைக் கதவைத் திறந்து வெளியில் வந்த வந்தனா, "ஆரா மாடியில் படிச்சிக்கிட்டு இருக்கா மாமா" என்றாள்.

"உன்ன யாருடி கேட்டா... மாமா போட வந்துட்டாக... மாமா... போடி உள்ளே... வயசுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்க..." கத்தினாள் கமலா.

"மாமாவ மாமான்னு சொல்லாமா வேற எப்படிச் சொல்லுவாங்களாம்..." பதிலுக்குக் கத்தியபடி படுக்கை அறைக் கதவை அறைந்து சாத்திக் கொண்டாள் வந்தனா.

"திமிரெடுத்து ஆடுறாளுக... தூக்கிப் போட்டு மிதிக்காத வாசி...." மகளைத் திட்டியபடி "ஆ...ரா... போடுறாக ஆ...ரா..." சத்தமாகச் சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்கும் மனநிலையில் அவன் இல்லை... மாடிப்படி ஏறிக் கொண்டிருந்தான்.

"அவளையெல்லாம் யாரும் போயிப் பார்க்க வேண்டியதில்லை..." கோபத்துடன் வார்த்தைகள் வந்தாலும் அவனுக்கு முன் போய்த் தடுக்க அவளால் முடியவில்லை... அவன் கோபக்காரன் என்பதால் எங்கே தன்னை படக்கெனத் திட்டிவிடுவானோ அல்லது கையை உயர்த்தி விடுவானோ என்ற பயமும் அவளுக்குள் இருந்தது.

அறைக் கதவைத் தட்டினான்.

"ஏய் வந்து... கதவு திறந்துதான் இருக்கு... வாடி..." உள்ளிருந்து ஆராதனாவின் குரல் வந்தது.

"நான் ராஜேஷ்..."

"மாமாவா... உள்ள வா... என்ன புதுசா... வெளியில நின்னுக்கிட்டு..." குரலில் பதட்டம் தெரிந்தது.

உள்ளே போனான்...

அவள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள்.

"எ... என்ன எழுதுறே...?" மெல்லக் கேட்டான்.

"நாளைக்கு ஒரு செமினார் இருக்கு... அதுக்கு நோட்ஸ் எடுத்துக்கிட்டு இருக்கேன்..." தரையப் பார்த்தபடி பேசினாள்.

"ம்... மாமா மேல கோபமா...?"

"இ... இல்ல... மா...மா..." வார்த்தையில் தடுமாற்றம் தெரிந்தது. அவளுக்குக் கோபமில்லை ஆனால் வருத்தம் இருக்கிறது என்பதை உணர்ந்தான்.

"சாரி ஆரா..."

"என்ன மாமா நீ... எங்கிட்ட சாரி கேட்டுக்கிட்டு... உக்காரு..."

அங்கு கிடந்த பெட்டில் அமர்ந்தான்... அவனருகில் வந்து அமர்ந்து அவனின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

அவன் கண்களில் இருந்து கண்ணீர் இறங்கியது.

"எதுக்கு நீ இப்ப அழறே...?" அவளுக்கும் உதடு துடித்தது.

"இல்லை ஆரா... யாருமே என்னப் புரிஞ்சிக்க மாட்டேங்கிறாங்கடா..."

"ஏய் இங்க பாரு... சின்னப் புள்ளையாட்டாம்... அவங்க புரிஞ்சிக்கலைன்னா என்ன இப்போ..." வந்த அழுகையை அடக்கியபடி அவனைத் தேற்றினாள்.

ராஜேஷ் ஒண்ணும் பேசாமல் தலை கவிழ்ந்திருந்தான்.

"மாமா... வா வெளியில போலாம்..."

"இல்ல.... அக்கா... அத்தான்... எதாச்சும் சொல்லுவாங்க... நீயும் ஏதோ எழுதிக்கிட்டு இருந்தே.... இங்கயே பேசுவோம்..."

"இங்க வேணாம்...வந்து எழுதிப்பேன்... நீ இப்ப நல்ல மூடுல இல்ல... உனக்கு வாய் விட்டு அழணும்ன்னு தோணுது... எனக்கும்தான்..." சொன்ன போது அவள் உடைந்தாள்.

"ஆர்ரா... டேய்... சாரிடா..."

"என்ன மாமா நீ சும்மா சும்மா சாரி சொல்லிக்கிட்டு... வா வெளியில போலாம்...."

"வேண்டாம்... ஏதாவது சொல்வாங்க..."

"அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டார்... அம்மாதான் கத்தும்... பிரச்சனையில்லை வா..." என்றபடி ஸ்கூட்டி சாவியை எடுத்துக் கொண்டு அவனின் பதிலை எதிர்பார்க்காமல் கிளம்பினாள்... அவனும் எழுந்து அவள் பின்னால் போனான்.

"எங்கடி போறே....?" ஹாலில் நின்றபடி கேட்டாள் கமலா.

"வெளியில..."

"அவங்கூட இப்ப எதுக்கு நீ போறே..."

"ஏம்மா... எங்க மாமா கூடத்தானேம்மா போறேன்..."

"அவங்கூட நீ போவேண்டாம்... அவன் பண்ணினது போதும்... இனி இங்க எதுக்கு அவன் வரணும்..."

"அம்மா..."

"என்னடி கத்துறே... சொன்னாக் கேக்கமாட்டே..."

"அப்பா... நான் மாமா கூட வெளியில பொயிட்டு வாரேன்... உங்களுக்கெல்லாம் விருப்பமில்லையின்னாலும் இப்ப நான் மாமாக்கிட்ட பேசணும்... அதைவிட முக்கியம் மாமா மனசுல இருக்கதையெல்லாம் யார்க்கிட்டயாச்சும் கொட்டணும்... அது நானாவே இருந்துட்டுப் போறேனே..."

பதில் பேசாமல் பேப்பரைப் பிடித்துக் கொண்டிருந்தார் அப்பா ரத்னவேல்.

"என்னங்க... அவ சொல்றா பேசாம இருக்கீங்க..."

"என்ன பேச... எது நல்லது கெட்டதுன்னு முடிவெடுக்கிற வயசுதானே அவளுக்கு... போய் பேசிட்டு வரட்டும்... என்ன இப்ப..? எல்லாம் முடிஞ்சிருச்சு... இனி என்ன இருக்கு... அவ பேசுறதுதான் சரி... நீ போம்மா..."

"ம்... நீங்க புள்ளை வளக்குற லெட்சணத்துக்கு.... அடியே... போக்கூடாதுன்னா போக்கூடாது அம்புட்டுத்தான்..."

"சும்மா இரும்மா... கத்தாம... மாமா... நீ... வா..." என்றபடி வெளியேறினாள்.

ஸ்கூட்டியை எடுக்கும் போது "என்னோட வண்டியில போலாம்..." என்றான் ராஜேஷ்.

"இதுலயே போவோம்.... சும்மா உக்காரு..."

பதில் பேசாமல் உட்கார்ந்தான்.

****

அந்தப் பார்க் பகல் நேரத்தில் ஆள் அரவமற்று இருந்தது.

மரத்தினடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் இருவரும் அமர்ந்தனர்.

"சாரி ஆரா..." என்றான்.

"எத்தனை தடவைதான் சாரி சொல்வே...." உலர்ந்த புன்னகையை உதிர்த்தாள்.

"ம்... நான் இப்படி ஒரு இக்கட்டுல மாட்டுவேன்னு நினைக்கலை..."

"இது நம்ம ஜாதியில நடக்குறதுதானே மாமா... ஆமா ஆயா, ஐயா என்ன சொன்னாங்க..."

"எங்கிட்ட பேசவே இல்லை... என்னால அங்க இருக்க முடியலை... என்னோட நிலமையை எடுத்துச் சொன்னா ஊருல உலகத்துல இருக்கவனெல்லாம் இப்படியா சொல்லிக்கிட்டு நிக்கிறானுங்கன்னு கேக்குறாங்க... செத்துடலாம் போல வருதுடா... என்னால உனக்கும்..."

"எல்லாரும் சொல்லிச் சொல்லி என்னோட மனசுலயும் ஆசை வளர்ந்திருச்சு... ஆரம்பத்துல இருந்து வீட்ல பேசும்போதெல்லாம் நீயும் சிரிச்சிக்கிட்டே எந்திரிச்சிப் போயிருவே... அப்ப எதுத்துப் பேசலை... எனக்கு விருப்பம் இல்லைன்னு சொல்லலை... இப்ப நீ முடியாதுன்னு மறுக்கவும் அவங்களால ஏத்துக்க முடியலை..."

"ம்... எனக்குத் தெரியும் உன்னோட மனசுல தேவையில்லாம ஆசை வளர நான் காரணமாயிட்டேன்... இருந்தாலும் உன்னை எப்படி நான்... எடுத்துச் சொல்லியும் புரிஞ்சிக்க மாட்டேங்கிறாங்க... என்னால யோசிச்சிக் கூட பார்க்க முடியலை..."

ஆராதனா சிரித்தாள்.

"என்ன ஆரா... சிரிக்கிறே... நான் சொன்னது தப்புங்கிறியா... அவங்க சொன்னதுக்குச் சரியின்னு சொல்லியிருக்கணுங்கிறியா..."

"அப்படிச் சொல்லல மாமா... ஆனா கட்டிக்கிட்டா என்ன தப்பு... நம்ம சொந்த பந்தத்துல கட்டிக்கலையா... புள்ள குட்டி பெத்துக்கலையா..."

"கட்டிக்கலாம்... பெத்துக்கலாம்... ஆனா எப்படி... என்னால உன்னைய என்னோட மனைவியா சும்மா நினைச்சிக் கூடப் பாக்க முடியலை ஆரா... சாரி..."

"அய்யோ மாமா... அதான் முடியாதுன்னு சொல்லிட்டியே... அப்புறம் எதுக்கு ஆயிரம் சாரி... விடு..."

"இல்லை ஆரா... அது..."

"மாமா... எங்க மாமாவைக் கட்டிக்கப் போறேன்னு ரொம்ப மகிழ்ச்சியா இருந்தேன்... நீ முடியாதுன்னு சொல்றேன்னு ஆயா போன் பண்ணினப்போ அம்மா அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுச்சு... எனக்குள்ளயும் எதையோ இழந்த மாதிரி இருந்துச்சு... ரொம்ப நேரம் அழுதேன்... என் மனசுக்குள்ள நாம ரெண்டு பேரும் மணக்கோலத்துல இருக்க மாதிரியெல்லாம் கற்பனை பண்ணி ஒரு காதல் கோட்டையே கட்டி வச்சிருந்தேன்... அது எல்லாமே நொறுங்கிருச்சு மாமா... உன்னோட விருப்பம் இல்லாம இந்தக் கல்யாணம் நடந்தா... பெரியவங்க கட்டாயத்துல நடந்தா... நாம மகிழ்ச்சியா இருக்க முடியாது மாமா... அதான் என்னோட மனசைத் தேத்திக்கிட்டேன்... இப்ப நான் உன்னைய என் அம்மாவோட தம்பியாத்தான் பார்க்கிறேன்... என்னோட...." பேச்சை நிறுத்தினாள்...

தரை பார்த்துக் கவிழ்ந்திருந்தவளின் கண்ணீர் அவளின் சுடிதாரில் விழுந்தது.

"அவங்க என்னையப் புரிஞ்சிக்கலை ஆரா.... நீ புரிஞ்சிப்பேன்னு நினைச்சேன்... உனக்கு மிகப்பெரிய வேதனையைக் கொடுத்துட்டேன்... சாரி... நான் தூக்கி வளர்த்த பொண்ணை... என் மார்புல போட்டு தாலாட்டுன பொண்ணை... எங்க மாமா... எங்க மாமான்னு என் கையைப் பிடிச்சிக்கிட்டு விடாத பொண்ணை... நான் ட்ரஸ் பண்ணி விட்ட பொண்ணை... மருமகளா... மகளா... தங்கச்சியாத்தான் என்னால பாக்க முடியுதே ஒழிய. என் மனைவியா.... என்னோட கட்டிலைப் பகிர்ந்துக்கிறவளா என்னால பார்க்க முடியலை ஆரா... என்னை மன்னிச்சிடு..."

"மாமா... சாரி மாமா... அவங்க எல்லாரும் உன்னோட மனசை ரொம்ப உடைச்சிட்டாங்க மாமா... என்னால புரிஞ்சிக்க முடியுது... வீட்ல பெரியவங்க சொன்னப்போ இதை நான் ஏன் யோசிக்காம கனவுக் கோட்டை கட்டினேன்னு இப்ப வெக்கமா இருக்கு மாமா... நீ சொல்றதுதான் சரி... நான் உன் மகளா... மருமகளா... தங்கச்சியா இருக்கலாம்... மனைவிங்கிற இடத்துக்கு வர முடியாது... வரக்கூடாது... மாமாவைக் கட்டிக்கலாம்ன்னு வச்சிக்கிற முறையே தப்புத்தான்... தூக்கி வளர்த்த பொண்ணக் கட்டிக்கிறதுன்னா... வேண்டாம் மாமா... உன்னோட முடிவு சரிதான்..." அழுகையை அடக்கியபடி பேசினாள்.

"நீ புரிஞ்சிப்பேன்னு தெரியும்... அதான் எல்லாரும் என்னைய வெறுத்து ஒதுக்கினாலும் உங்கிட்ட பேசணும்ன்னு வந்தேன்... ஆரா... நீ என்னையப் புரிஞ்சிக்கிட்டே அது போதும்... இது போதும்டா... போதும்..." கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

"ம்... வா மாமா போகலாம்..."

**வண்டி வீடு திரும்பியபோது ராஜேஷ் கவலை மறந்து அமர்ந்திருந்தான்...**

**அவன் முகத்தில் நீர்த்துளிகள் வந்து விழுந்த வண்ணம் இருந்தன....**

**ஆம் ஆராவின் அழுகையை காற்று வாங்கிக் கொண்டிருந்தது.**

= = = =

**பரிவை சே குமார் சுய குறிப்பு :**

**'பரிவை' சே.குமார் என்ற பெயரில் கதை, கவிதை, கட்டுரைகள் எழுதி வருகிறேன். மனசு ( http://vayalaan.blogspot.com/ ) என்னும் வலைப்பூவில் கடந்த பத்தாண்டுக்கும் மேலாக எண்ணங்களை எழுதி வருகிறேன். கிராமிய மணத்தோடு கதைகள் எழுதுவது பிடிக்கும். என் கதைகள் நிறையப் போட்டிகளில் வென்றிருக்கின்றன. மின்னிதழ்கள், இணைய இதழ்களில் தொடர்ந்து எழுதி வருகிறேன்.**

**சென்ற ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்ட எனது முதல் சிறுகதை தொகுப்பான 'எதிர்சேவை'க்கு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மேடையின் தஞ்சை பிரகாஷ் வளரும் படைப்பாளர் விருது கிடைத்திருக்கிறது. இந்த வருட புத்தகக் கண்காட்சிக்கு 'வேரும் விழுதுகளும்' என்னும் நாவல் கொண்டு வரும் முயற்சியில் இருக்கிறேன்.**

**email : kumar006@gmail.com**



Back to index ^

# உலகளாவிய ஊறுகாய் வகைகள் :: எம் தில்லைநாயகம்

இந்தியா மட்டுமல்லாமல், உலகின் பல நாடுகளிலும் ஊறுகாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. தென்னிந்தியர்களுக்கு தயிர் சாதத்திற்கு ஊறுகாய் என்றால், வட இந்தியர்கள் சப்பாத்திக்கே ஊறுகாய் தொட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். கிடைக்கும் அனைத்து வகைக் காய்களிலும் ஊறுகாய்கள் தயாரிக்கப்படுகின்றன.

1. UM அமெரிக்கா - இருபதாம் நூற்றாண்டிலிருந்து வெள்ளரிக்காயைக் கொண்டு செய்யப்படும் 'Dill' ஊறுகாய் அங்கு மிகப் பிரபலம்.
1893இல் Heinz நிறுவனம் அதனை அமெரிக்காவில் அறிமுகம் செய்தது.

உலகம் முழுவதும் வெவ்வேறு பழங்கள், காய்கறிகள் ஊறுகாய் வடிவில் பதப்படுத்தப்படுகின்றன.

2. IN இந்தியா: ஊறுகாய்
நம்மில் பலருக்குத் தெரிந்தது மாங்காய் ஊறுகாய். ஆனால் இஞ்சி, காய்கறி, எலுமிச்சை, பச்சை மிளகாய் இப்படிப் பலவற்றைக் கொண்டு ஊறுகாய் தயாரிக்கப்படுகிறது.

தென்னிந்தியாவில் நல்லெண்ணெய் கொண்டு செய்யப்படுகிறது.
ஆனால் வட இந்தியாவில் அதில் கடுகு எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது.

3. ITஇத்தாலி:

அது குடை மிளகாய், முள்ளங்கி, காலிஃபிளவர், ஸுக்கினி (cauliflower, zucchini), வெங்காயம் ஆகிய காய்கறிகளைக் கொண்டு செய்யப்படுகிறது.
சிவப்பு அல்லது வெள்ளை வினிகரில் (vinegar) தாளிதப் பொருள்களுடன் அந்தக் காய்கறிகள் ஊறவைக்கப்படுகின்றன.

4. ⛳மொரோக்கோ: L'hamd Markad என்பது மஞ்சள் எலுமிச்சைகளைப் பதப்படுத்தும் முறையாக மொரோக்கோவில் தொடங்கியது.
எலுமிச்சை, அதன் சாறு, தண்ணீர், உப்பு ஆகியவற்றால் செய்யப்படும் அது பின் ஊறுகாயாகவும் பிரபலமானது.

5. 🎴ஜப்பான்:
'Dill' ஊறுகாய் போல Kyuri Zukeயும் வெள்ளரிக்காயைக் கொண்டு செய்யப்படுகிறது.
ஆனால் அது ஜப்பான் ரக வெள்ளரிக்காய்.

6. ILஇஸ்ரேல்:
மத்தியக் கிழக்குப் பகுதிகளில் பிரபலமானது Torshi எனும் ஊறுகாய்.
'Torsh' என்றால் புளிப்பு என்று அர்த்தம்.
Torshi பல காய்கறிகளைக் கொண்டு தயாராகலாம்.

ஆனால் சிவப்பு முள்ளங்கியைக் கொண்டு தயாரிக்கப்படும் Torshiதான் அதிகம் விரும்பப்படுகிறது.

7. KRதென் கொரியா: Kimchi

இன்று சிங்கப்பூரிலும் பலர் Kimchiயை விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.
முட்டைகோஸால் செய்யப்படும் இவ்வித ஊறுகாய் 18ஆம் நூற்றாண்டிலேயே கொரியாவில் அறிமுகமானதாம்.
அது தென்கொரியாவின் தேசிய உணவாகவும் திகழ்கிறது.

8.SE ஸ்வீடன்: Pickled Herring

ஸ்வீடனில் பனிக்காலம் நீண்டகாலம் நீடிப்பதால் அங்கு உணவு அதிகம் பதப்படுத்தப்படுகிறது.
Herring எனும் மீனை உப்பு, வினிகர், தாளிப்புப் பொருள் ஆகியவை கலந்து இந்த ஊறுகாய் செய்யப்படுகிறது.

9. SEஜெர்மனி: Sauerkraut

Sauerkraut ஜெர்மனியில் பிரபலமாக இருந்தாலும் அது சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.
முட்டைகோஸ், தண்ணீர், உப்பு ஆகிவற்றுடன் ஜுனிப்பர் பெரிகளையும் சேர்த்து ஜெர்மனியில் அந்த ஊறுகாய் செய்யப்படுகிறது.

10. FR.ஃபிரான்ஸ்: Cornichon

சிறிய வெள்ளரிக்காயைக் கொண்டு செய்யப்படும் இந்த ஊறுகாயை 'gherkin' என்றும் கூறலாம்.
வினிகர், தாளிப்புப் பொருள்கள், சின்ன வெங்காயம், பூண்டு போன்றவற்றைக் கலந்து இந்த ஊறுகாய் செய்யப்படுகிறது.

**From: தகவல் தில்லை** 🙏🙏🙏

Back to index ^

## ஒப்புக்குச் சப்பாணி :: நெல்லைத்தமிழன்

எனக்கு 'ஊறுகாய்' என்ற தலைப்பில் கேஜிஜி கேட்டபோது, உடனே மனதுக்குத் தோன்றியது, நாம் சிறுவயதில் நம்மை ஒத்த வயதினருடன் விளையாடும்போது, யாரையேனும் நம்மைவிடச் சிறியவனையோ அல்லது அந்த விளையாட்டு தெரியாதவனையோ நம்மோடு சேர்த்துக்கொள்ளச் சொன்னால், 'ஒப்புக்குச் சப்பாணி ஊருக்கு மாங்கொட்டை' என்று சொல்லி அவனைச் சேர்த்துக்கொள்வோம். எங்க ப்ராஜக்ட்ல என்னை ஊறுகாய் மாதிரி பயன்படுத்திக்கிட்டு விட்டுட்டாங்கடா என்று புலம்புவதையும் நான் கேட்டிருக்கிறேன்.

நம்மில் பலருக்கு உணவில் ஊறுகாய் இருக்கணும். ஆனால் ஊறுகாய் என்பது எப்போதுமே முழு உணவாக முடியாது. அப்பளாம், மோர் மிளகாய் என்பதுபோல ஊறுகாயும் ஒரு எக்ஸ்ட்ராதான். அவைகள் இருந்தால் உணவு இன்னும் கொஞ்சம் ருசிக்கும். இல்லையென்றாலும் பாதகமில்லை என்ற நிலைதான். கடைகளில் மதிய சாப்பாடு சாப்பிடும்போது இந்த ஊறுகாய் என்பது கொஞ்சம் தேவையில்லாத சமாச்சாரம்தான்.



ஆனால் பேச்சலர்களுக்கு, forced பேச்சலர்களுக்கு, மிக வயதானவர்களுக்கு ஊறுகாய் சமாச்சாரங்கள் போன்ற உற்ற துணைவன் இல்லை. வெறும் மோர் சாதம், அதற்கு ஏதேனும் ஒரு ஊறுகாய்.என்று ஒரு வேளை உணவை ரொம்பவே சிம்பிளாக வைத்துக்கொள்ளலாம். 40 வருடங்களுக்கு முன்பு, கடைகளில் ஊறுகாய் விற்கிறார்கள், நாங்கள் வாங்கினோம் என்பதே கிடையாது. மோர் மிளகாய், வித வித வடகம், இட்லி மிளகாய்ப்பொடி, ஊறுகாய் - அதிலும் எலுமிச்சை, மாங்காய், மாவடு மட்டும்தான் வருடம் முழுவதற்கும் வரும்படியான செய்முறையில் போடுவாங்க, இவை எல்லாமே வீட்டுத் தயாரிப்புகள்தான். இன்னொருவர் வீட்டிலிருந்துகூட நாம் கேட்டு வாங்கும் பழக்கம் கிடையாது. அந்த அந்த சீசன் வரும்போது, நமக்குப் புத்தம் புது ஊறுகாய்கள், தொக்கு வகைகள் கிடைக்கும். மாகாணி, மாங்காய் இஞ்சி, மாங்காய்த் தொக்கு போன்றவை இந்த ரகம்.

எல்லாவற்றிலும் நுகர்வுக் கலாச்சாரம் வந்த பிறகு, ஊறுகாய், அப்பள-வடகம் மற்ற சமாச்சாரங்கள் பெரிய இண்டஸ்டிரியாகவே வளர்ந்துவிட்டன. வீட்டுத் தயாரிப்பை விட, நாட்பட இருப்பதற்காக கெமிக்கல், அதிக அளவு உப்பு போன்றவை சேர்த்து அழகிய பிளாஸ்டிக் பாட்டில்களில் வர ஆரம்பித்துவிட்டன. கொஞ்சம் கூகிளிட்டால், எத்தனை வகையான ஊறுகாய் கம்பெனிகள், அதில் எத்தனை வகையான ஆர்கானிக் ஏமாற்றுவேலைகள், வித விதமான ஊறுகாய் தொக்கு வகைகள் என்றெல்லாம் பார்த்தால் நமக்குத் தலை சுற்றாத குறைதான்.

எனக்கு, சப்பாத்திக்கு, ரவா பொங்கலுக்கு எலுமிச்சை கார ஊறுகாயும், மோர் சாதம், ரவா/அரிசி உப்புமா வகையறாக்களுக்கு மாங்காய் ஊறுகாயும் பிடித்தமானது. கடை ஊறுகாய் எனக்குப் பிடிப்பதில்லை. (mass production, Too much salt content இவைதான் முக்கியக் காரணம்)

என்னைக் கேட்டால்... முடிந்த அளவு 'நமக்கு நாமே' என்று நாமே ஊறுகாய்களைத் தயாரித்துக்கொள்வது நல்லது. அப்படி முடியாத பட்சத்தில், அருகில் யாராவது இதனைச் செய்து விற்பவர்களிடம் வாங்கி, அவர்களது வாழ்வாதாரத்துக்கு நம்மால் முடிந்த பங்களிப்பாகச் செய்யலாம். நான் சென்னையில் இருந்தபோது, அடையாறு பத்மநாபர் கோவில் அருகில் சனிக்கிழமை தோறும் ஊறுகாய்/வடகம்/அப்பளாம் கடை பரப்புபவரிடம், இல்லை என்றால் மாம்பலத்தில் ஒரு பெரியவர், தள்ளு வண்டியில் 'கும்பகோணம் மங்களம் மாமி' என்ற பெயரில் விற்பனை செய்வார், அவரிடம்தான் வாங்குவது வழக்கம். மற்றபடி, இந்த பிராண்ட் ஊறுகாய் அருமை, அந்த பிராண்ட் தொக்கு அருமை என்று சொல்லிக்கொள்வதெல்லாம் சுத்தப் பேத்தல் என்பது என் அபிப்ராயம்.

Back to index ^

# ஊறுகாய் தகவல் :: எம். தில்லைநாயகம்




**In INDIA May 29 ஊறுகாய் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.**

**14th November. அமெரிக்கர்கள் ஊறுகாய் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.**

**அட! நம்ம குழந்தைகள் தினம் அமெரிக்காவில் ஊறுகாய் தினமா!**

[Back to index ^]

# அம்மாவின் நினைவு ஊறும் ஊறுகாய் தேவராஜன் சண்முகம்

ஊறுகாய் என்றதுமே அம்மாவின் சாப்பாட்டு ருசிதான் மனதில் வந்து ஊற்றெடுக்கிறது.

அம்மா தயாரிக்கும் 'ஊறுகாய் ஸபெஷல்' கண்ணிலாடுகிறது. கோடைக்காலங்கள்தான் ஊறுகாய் பிறக்கும் கருவறைக்காலம்.

கொல்லைப்புறத்தில் இருக்கும் இரண்டு நார்த்தங்காய் மரங்களில் காய்த்து தொங்கும் நார்த்தங்காய்களைப் பார்க்கப் பார்க்கப் பரவசமாக இருக்கும். அப்பா அலக்கைக்கொண்டு கொத்து கொத்தாய் பறித்துப்போடுவார், நாங்கள் கிரிக்கெட்டில் எல்லைக்கோட்டுக்கு ஓடும் பந்தைத் தடுத்து பிடிப்பதுபோல பிடித்து ஒவ்வொன்றாய் எடுத்துவந்து அன்னக்கூடையில் சேகரிப்போம்.

நான்கைந்து அன்னக்கூடை சேர்ந்ததும் வீட்டின் முற்றத்தில் கொண்டு வந்து சேர்ப்போம்.

மதியப்பொழுதில் அம்மா முறத்தை எடுத்து வந்து அதில் அறுவாள் மனையை வைப்பார்.

அவர் கைகளில் நார்த்தங்காய் ஸ்பின் பவுலரின் கையில் சுழலும் பந்து போல அதுசுழலும்.

அரிவாள்மணையில் அறுபட்டு அதுபாம்புபோல பின்னி பின்னி வரும்.

அதை கையில் பிடித்துத்தொங்கவிடும்போது சாட்ஷாத் நீண்டபாம்பு போலவே இருக்கும். பாம்பு போன்றே தலையும் வாலுமிருக்கும்.

கூடத்தில் அப்பா நான்குபுறமும் கட்டிய கயிறுகொடியில் அதை உலர்த்தக்காயப்போடும் அழகைப்பார்த்தால் ஜப்பான்காரன் சீனக்காரன் எல்லாம் இந்த ஐடியாவைக் காப்பியடித்து அவன் ஊரில் பாம்பு ஊறுகாய்போட ஆரம்பித்துவிடுவான்.

வீட்டில் கட்டிய நூற்றுக்கணக்கான ஊறுகாய் உலர்த்தலில் எழும் வாசம் தெருவையே கூட்டிவந்து வேடிக்கைப்பார்க்கச் செய்யும் . வந்தவர்கள் எல்லாம் "அண்ணி எங்களுக்கும் கொஞ்சம் கொடுங்க . முதலியார் வீட்டு ஊறுகாய் வாசனைக்கே ஒருசட்டி பழையது இறங்கும் என்பார் என் புருஷன்"என்று அம்மாவின் ஊறுகாய் புராணம் பாடுவார்கள்.

புகழ்புராணத்தில் உச்சிக்குளிர்ந்த அம்மாவும்" உனக்கில்லாததா எடுத்துக்க கைநிறைய." என்றுசொல்வார் அம்மா.

ஒருவாரகாலத்தில் ஊறுகாய் நன்றாக உலர்ந்ததும் அதையெடுத்து பிரிட்டினியா தகர டப்பாவில் நிரப்புவார்.

அதன்பிறகு அவை எல்லாம் பாகம் பிரிக்கப்படும்.
தகர டப்பாவில் சுண்ணாம்பு கட்டியால் அப்பா பெயர் எழுதுவார்.

மாமா
சித்தப்பா
பெங்களூரு அக்கா

நாகை சித்தி
திருவாரூர் அத்தை...
இப்படி எல்லாரும் லேபிள் எழுதப்படும்.

அக்கம்பக்கம் உள்ளவர்களுக்கும் அதில் பங்குபிரிப்பார் அப்பா.

இது முதல் சுற்று.

அடுத்த பதினைந்தாம்நாள் மீண்டும் முன்போலவே நார்த்தங்கள் பறிக்கப்படும். ஊறுகாய் தயாரிக்கப்படும்.

பிரம்மச்சாரி வாழ்க்கையை சென்னையில் நடத்திய எங்களுக்கு பலநாட்கள் உணவுக்கு அம்மா கொடுத்த கிடாரங்காய் ஊறுகாய்தான் சைடிஷ் என்றால் நீங்கள் நம்புவீர்களா என்ன?

இப்போது கிடாரங்காய் சுவைத்து இருபது ஆண்டுகள் ஆச்சு!

சும்மாவா சொனானார்கள் அம்மாவோடு அறுசுவைபோம் என்று!

Back to index ^

# “ ஊறுகாய் என்றால் .. .” :: பானுமதி வெங்கடேஸ்வரன்

ஊறுகாய் என்றால் முதலில் நினைவுக்கு வருவது பானுமதி ராமகிருஷ்ணா எழுதிய "மாமியார்" கதைகள்தான்.

பிறகு நான் பள்ளி மாணவியாக இருந்த பொழுது குமுதத்தில் வந்த"சுத்தம் ரொம்ப சுத்தம் ரொம்ப, ரொம்ப ரொம்ப சுத்தம்" என்னும் கதை. அதில் ஒரு ஒண்டுக் குடித்தனத்தில் வசிக்கும் பெண்களுக்கு ஆந்திராவில் இருந்து வந்த ஒரு பெண் ஆவக்காய் ஊறுகாய் போட கற்றுக் கொடுப்பாள்.

ஊறுகாய் கெட்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்றால் அதற்கு உப்பு, காரம் போடும் பொழுது உடைகள் அணிந்து கொண்டிருக்கக் கூடாது என்று கூறி தன் உடைகளை களையத் தொடங்குவாள், மற்ற பெண்கள் முதலில் தயங்கினாலும் பின்னர் ஒவ்வொருவராக தங்கள் உடைகளை களைந்து விடுவார்கள். அந்த சமயத்தில் உடம்பு சரியில்லாததால் அலுவலகத்திற்கு விடுப்பு எடுத்திருந்த ஒரு பெண்ணின் கணவர், குடிக்க தண்ணீர் வேண்டும் என்பதற்காக தன் மனைவியைத் தேடி வருவார், ஒரே சமயத்தில் ஐந்து பெண்களை நிர்வாணமாக பார்த்த அவர் மாரடைப்பில் இறந்து விடுவார்.

இந்த கதைக்கு அடுத்த வாரம் ஒருவர்,அந்தக் கதை அசுத்தம் ரொம்ப, அசுத்தம் ரொம்ப, ரொம்ப ரொம்ப அசுத்தம்" என்று கடிதம் எழுதியிருந்தார். இந்த(அ)சுத்த கதையை எழுதியது ரா.கி.ரா.வா? ஜ.ரா.சு.வா? என்று தெரியவில்லை.

கதைகளைத் தாண்டி நிஜத்திற்கு வந்தால். ஆவக்காய்க்கு அடுத்த படியாக எனக்கு பிடித்தது நார்த்தங்காய். கடாரங்காய்,கசப்புக்காய் எல்லாமே பிடிக்கும். கொளஞ்சிக்காய் என்னும் காய்ந்த நார்த்தங்காய் ஓ.கே. ! அதை எங்கள் மாமா, அதிகப்பிரசங்கி என்பார். காய்ந்த நார்த்தங்காய் சாப்பிட்டால் ஏப்பம் வருவதால் இந்தப் பெயர்.

என் அக்கா இதற்கு கேடலிஸ்ட் என்று பெயர் வைத்திருந்தாள். சாப்பிட்ட மற்ற உணவுகளை ஜீரணம் செய்யும் காய்ந்த நார்த்தங்காய், தான் ஜீரணம் ஆகாது என்பதால் இந்தப் பெயர்.

என் தோழி ஒருத்தி காய்ந்த நார்த்தங்காய் இல்லாமல் பயணிக்க மாட்டாள்.
இதற்கு அடுத்த இடத்தில் நெல்லிக்காயும், மாகாளிக்கிழங்கும் பிடிக்கும். வெஜிடெபிள் ஊறுகாய், பூண்டு ஊறுகாய் போன்றவைகள் அவ்வளவாக பிடிப்பதில்லை.

ஊறுகாய் என்றால் நினைவுக்கு வரும் இன்னொரு விஷயம் வினைத்தொகை!!

Back to index ^

## ஊறுகாய் நன்மைகளும், பிரச்சனைகளும் எம் தில்லைநாயகம்

நன்மைகள் :

சிறிதளவு மட்டுமே பயன்படுத்தும் இந்த ஊறுகாயினால் எத்தனை பலன்கள் :

1. தீய பாக்டீரியாக்களை அழிக்கிறது ஊறுகாயில் அதிக அளவு ஆண்டிஆக்டிடன்டுகள் நிறைந்துள்ளன. இது உடலில் உள்ள தீங்கு விளைவிக்கும் செல்களை எதிர்த்து போராடுகிறது. மேலும் நமது உணவில் உள்ள கெமிக்கல்களால் உண்டாகும் தீமைகளை குறைக்க இது உதவுகிறது.

2. செரிமான பிரச்சனை
ப்ரோபியோடிக் பாக்டீரியாக்கள் செரிமானத்திற்கு உதவுகிறது. நமது உடலில் செரிமானத்திற்கு எதிராக உள்ள பாக்டீரியாக்களை கொல்ல இவை உதவியாக இருக்கிறது. வினிகர் பயன்படுத்தாமல் இயற்கையாகவே உப்பு சேர்த்து புளிக்க வைக்கப்பட்ட ஊறுகாய் செரிமானத்திற்கு உதவுகிறது.

3. விட்டமின்கள், இரும்பு, கால்சியம், பொட்டாசியம்
புதிய ஊறுகாய் அல்லது சட்னிகளில் இலை காய்கறிகளின் ஏராளமான சத்துக்கள் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாக கொத்தமல்லி, கறிவேப்பில்லை, கீரை, போன்றவை அடங்கியுள்ளன.
இதனால் குழந்தைகள் இதனை விரும்பி சாப்பிட முடிகிறது. வேறு சில விதமாக கொத்தமல்லி, கறிவேப்பில்லை ஆகியவற்றை கொடுத்தால் அதை வெறுத்து ஒதுக்கிவிடுவார்கள். இதனை சாப்பிடுவதால் வைட்டமின் சி, ஏ, கே, மற்றும் இரும்பு, கால்சியம் மற்றும் பொட்டாசியம் போன்ற அத்தியாவசிய வைட்டமின்கள் கிடைக்கின்றன.

4.நீரிழிவு
வினிகர் கொண்ட ஊறுகாய்களை சாப்பிடுவதன் மூலம் நீரிழிவு பிரச்சனை கொண்டவர்களுக்கு ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கிறது. இது சக்கரையை கட்டுப்படுத்த உதவியாக இருக்கிறது என ஆய்வுகள் கூறுகின்றன. இருப்பினும் நீங்கள் அதிக அளவு உப்பு உள்ள ஊறுகாய்களை தவிர்க்கவும். ஏனெனில் ஊறுகாய்களில் உள்ள அதிக உப்பு இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும்.

4. ஜீரண சக்தியை அதிகரிக்கிறது
இந்தியாவில் கிடைக்கும் சிறிய மற்றும் பெரிய நெல்லிக்காய் ஊறுகாய்கள் ஜீரண சக்தியை அதிகரிக்க உதவியாக இருக்கின்றன. இந்த ஊறுகாய்கள் ஆயுர்வேத அடிப்படையிலும் பரிந்துரைக்கப்படுகிறது. நிறைய இந்திய குடும்பங்கள் நெல்லிக்காய் ஊறுகாயை ஜீரமாவதற்காக சாப்பிட்டு வருகின்றனர்.

5. கல்லீரலை காக்கிறது
நெல்லிக்காய் ஊறுகாய் ஜீரண சக்தியை அதிகரிப்பதற்காக மட்டுமல்லாமல் இதில் உள்ள ஹெப்டோப்ரோடெக்ட்டிவ் கல்லீரலை பாதுக்காகவும் உதவியாக உள்ளது. ஒரு ஆய்வில் கல்லீரல் பாதிக்கப்பட்ட மிருங்கங்களுக்கு நெல்லிக்காய் கொடுத்ததன் மூலம் அவற்றின் கல்லீரல் நல்ல நிலைக்கு மாறியது கண்டறியப்பட்டுள்ளது.

🙏அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு🙏

வயிற்றில் ஏற்பட்ட புண்ணிற்கு நார்த்தங்காய் ஊறுகாய் நல்ல மருந்தாக அமைகிறது. நாரத்தங்காயை வட்ட வட்டமாய் நறுக்கி உப்பு சேர்த்து ஒரு மண் பானையில் இட்டு வாயை துணியால் மூடி விடவும். இதனை அவ்வப்போது வெயிலில் உலர்த்தி வரவும். இப்படி 40 நாட்கள் செய்து பிறகு அதில் இருந்து தினமும் ஒரு துண்டை எடுத்து காலையிலும், மாலையிலும் சாப்பிட்டு வர வயிற்றுப் புண் குணமாகும்.

🙏 நாரத்தங்காயை அல்லது பழத்தை எந்த வடிவத்திலாவது உணவில் சேர்த்து வர ரத்தம் சுத்தமடையும். வாதம், குன்மம் (வயிற்றுப் புண்), வயிற்றுப் புழு இவை நீங்கும். பசியை அதிகரிக்கும். நாரத்தை பழத்தின் மேல் தோலை தேன் அல்லது சர்க்கரைப் பாகில் ஊற வைத்து நன்கு ஊறிய பின் சீதக் கழிச்சல் உடையவர்களுக்கு கொடுக்க நல்ல பலன் தரும். நாரத்தை பழத்தை சாறு பிழிந்து குடித்து வர உடல் வெப்பத்தை போக்கி குளிர்ச்சி தரும். வாந்தியையும், தாகத்தையும் தணிக்கும்.

சிலர் கொஞ்சம் சாப்பிட்டால் கூட வயிறு பெரிதாக பலூன் போல் காணப்படும். சில சமயங்களில் வாயுத் தொல்லையும் அதிகரிக்கும். இவர்கள் நார்த்தம் பழத்தை சாறு பிழிந்து வெந்நீர் கலந்து அடிக்கடி பருகி வந்தால் வாயுத்தொல்லையிலிருந்து விடுபட்டு வயிற்றுப் பொருமல் நீங்கும். எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் நார்த்தம் பழத்தை தினமும் சாப்பிட்டு நீண்ட ஆயுளோடு வாழலாம்.

மலச்சிக்கல் மற்றும் சிறுநீரகக்கல் நோய்களுக்கு மருந்தாகிறது. கனியின் தோலுறை வயிற்றுப் போக்கை நிறுத்தும். வயிற்றில் ஏற்பட்ட புண்ணிற்கு நார்த்தங்காய் ஊறுகாய் நல்ல மருந்தாக அமைகிறது.

பிரச்சனைகள்:

1. செரிமான பிரச்சனைகள்:
ஊறுகாயை தொடர்ந்து உட்கொண்டு வரும் போது, ஊறுகாயில் உள்ள சாறானது வயிற்றில் பிரச்சனைகளை ஏற்படுத்தும். அதில் அடிவயிற்றில் வலி, பிடிப்புக்கள் மற்றும் சில சமயங்களில் வயிற்றுப் போக்கை கூட உண்டாக்கும்.

2. அல்சர்
ஊறுகாயில் மசாலா பொருட்கள் அதிக அளவில் சேர்ப்பதால், அவற்றை தொடர்ந்து எடுத்து வர, அல்சர் பிரச்சனையை சந்திக்கக்கூடும். எனவே சாதாரணமாக அதிக அளவில் காரம் உட்கொள்வதை தவிர்ப்பதோடு, ஊறுகாயை அதிகம் எடுப்பதையும் தவிர்க்க வேண்டும்.

3. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஊறுகாயை தவிர்ப்பதோடு, இரத்த அழுத்தம் இல்லாதவர்கள் அன்றாடம் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். நீரிழிவு இருப்பவர்கள், ஊறுகாயை அறவே தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் மோசமான நிலைமையை அவர்கள் சந்திக்கக்கூடும்.

4. இதய நோய்:

ஊறுகாயில் எண்ணெய் அதிகம் சேர்ப்பதால், அவை இரத்தத்தில் உள்ள ட்ரை கிளிசரைடுகளின் அளவை அதிகரித்து இதய நோய்க்கு வழிவகுக்கும்.

5. வயிறு உப்புசம்:
ஊறுகாயில் பதப்படுத்தும் பொருட்கள் மற்றும் அதிகம் இருப்பதால் அவை உடலில் நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தும். இதனால் வயிறு எப்போதும் உப்புசமாக இருப்பது போன்ற உணர்வை உணரக்கூடும்.

பல வகையான ஊறுகாய் நிறைய எண்ணெய், மசாலா பொருட்கள் மற்றும் உப்பு சேர்த்து செய்வதால், மிகவும் சுவையாகவும், காரசாரமாகவும் இருக்கும். அதனால் எல்லோரும் விரும்பி சாப்பிடுகின்றனர்.

வியாபாரத்திற்காக தயாரிக்கப்படும் ஊறுகாய்களை அன்றாடம் உட்கொள்ளும் போது பல உடல் நலப் பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். அன்றாடம் கடைகளில் வாங்கி சாப்பிடுவதை தவிர்ப்பதோடு, வீட்டிலேயே தேவைப்பட்டால் ஆரோக்கியமான முறையில் ஊறுகாயை செய்து அளவோடு சேர்த்துக் கொள்ளுங்கள்.

Back to index ^

## ஊறுகாய் அதிகாரம் ! A J சூர்யப்ரகாஷ்

1) எக்காய் இருப்பினும் ஊறுகாய் இல்லா சோறு சுவை இலாது.

2) உண்ணும் உணவுடன் ஊறுகாயும் சேர்ந்தால் சுவை மிகுந்து உணரப்படும்.

3) உவர்ப்பினும் துவர்ப்பினும் ஊறி இருக்க ஊறுகாய் என்று கொள்ளப்படும்.

4) நீர்த்தமோரும் ஊறியகாயும் நித்தம் இலா உணவும் சுவை இராது.

5) முக்காலத்தையும் குறிக்கும் ஊறுகாயின் சுவை எக்காலத்திலும் உணரப் படும்.

6) ஊறுகாய் சுவை பெரிதெனினும் குறைத்து உண்டு உடம்பை பேணிக் கொள்க.

7) உடம்பின் ஊண் அழுத்தம் மிகப்பெறின் ஊறுகாய் இச்சையை தவிர்க்க.

8) உப்பிலும் துவர்ப்பிலும் ஊறிய காயைப்போல் வினைப்பயனில் ஊறியது இவ்வாழ்க்கை.

9) உவர்ப்பும் துவர்ப்பும் கலந்திருக்கும் ஊறுகாய்போல் இன்பதுன்பம் இனைந்திருப்பது வாழ்வு.

10) ஊறும் காயை விடா உப்பைப் போல் வாழ்க்கையை விடாது கர்மவினை.

Back to index ^

# ஊறுகாய் ! K G Y RAMAN

ஊறுங்காய் ஊறினகாய் ஊறவே போகுங்காய்

உணவுக்காய் சுவைக்குமாய் உலகத்தார் உவக்குங்காய்

உப்பாயிருக்குங்காய் உறைப்பும் சேர்த்தக்காய்

தப்பாது தயிர்சாதம் மோர் சாதம் விரும்பம் காய்.

எப்போதும் நல்லகாய் ஏற்றமாய் ஊறுகாயே

**K G Y Raman – எங்கள் blog / மின்நிலா ஆசிரியர் குழு மூத்த ஆசிரியர். TNEB இல் தமிழ் நாட்டின் பல ஊர்களில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றவர். ஆங்கில / தமிழ்ப் புத்தகங்கள் படிப்பது, கர்நாடக சங்கீதத்தில் ரசனை - பாடல்களுக்கு ராகங்கள் கண்டுபிடிப்பது, புதிர் கணக்குகளுக்கு விடை கண்டுபிடிப்பது என்று எங்கள் எல்லோருக்கும் inspiration அவரிடமிருந்து கிடைத்ததுதான்.**

Back to index ^

# வெந்தய ஊறுகாய்  காமாட்சி மஹாலிங்கம்

**என்ன மெந்தியமாங்காய்  ஊறுகாய்தானே என்றுதான் கேட்கிறீர்களா?**
**இல்லை, இல்லை இது வெந்தய விதையையே நேரில் ஊறுகாயாகப்  போடுவது.**
**இதை ஒவ்வொரு முறையும் என் பிள்ளை காட்மாண்டு போகும் போது அவ்விடமிருந்து வாங்கி வருவது வழக்கம். யாவரும் விரும்பி ருசிப்போம். இப்போது மின்னிலாவிற்காக செய்யும் விதம் தெரிந்து கொண்டு எழுதுகிறேன். சற்று மாறுதலாக இருக்குமென்று நான் யோசிக்கிறேன். நீங்கள் யோசிக்க வேண்டுமே!**
**வேண்டியவைகள்----**
**வெந்தயம்  200 கிராம்.**
**எலுமிச்சம் பழம் ஒரு ஆறு அல்லது ஏழு. (சாறு  ஒண்ணரை கப் அளவிற்கு வரும்படியாக)**
**மிளகாய்ப்பொடி---1 1/2 டேபிள் ஸ்பூன் .**
**\மஞ்சள்பொடி ---ஒரு  ஸ்பூன்**
**கடுகு---இரண்டு டேபிள்ஸ்பூன்,**
**பெருஞ்சீரகம்–இரண்டு டேபிள்ஸ்பூன்.**
**நல்லெண்ணெய் --- ஒரு கப்பிற்கு அதிகம்.**
**உப்பு---1 1/2 டேபிள்ஸ்பூன்.**
**பெருங்காயம் பொடி செய்தது இரண்டு டீஸ்பூன்**




**செய்முறை**
**வெந்தயத்தை முதல்நாள் இரவே தண்ணீரில் சுத்தம் செய்து ஊற வைக்கவும்.**
**மறு  நாள் காலையில் நீரை ஒட்ட வடிய வைத்து,  ஒரு துணியில் பரப்பி வெயிலில் நன்றாக காயவைக்கவும்.**
**நன்றாக உலரட்டும்.**



கடுகையும், பெருஞ்சீரகத்தையும் வெறும் வாணலியில் வறுத்துப் பொடிக்கவும். பெருஞ்சீரகம் பிடிக்காதவர்கள், சீரகத்தை உபயோகிக்கவும்.
அடுத்து வெந்தயம் நன்றாக காய்ந்தவுடன், எலுமிச்சை சாற்றை கலக்கவும். (கலகலவென்று காய்ந்த வெந்தயம் ஞாபகமிருக்கட்டும். )



அதில் உப்பு சேர்த்து வெந்தயத்தைக் கலந்து ஒரு மெல்லிய துணியினால் மூடி வெயிலில் வைக்கவும்.. இரண்டு மூன்று தினங்கள் இப்படியே வெயிலில் வைத்து ஊறவைக்கவும்.

எண்ணெயைக்காய்ச்சி ஆறவைத்துக்,கொள்ளவும்.

எல்லா பொடிகளையும் ஊறிய வெந்தயத்தில் கலந்து, எண்ணெயைச் சேர்க்கவும்.



நன்றாகக்  கிளறிவிடவும்.



.

நன்றாக உலர்ந்த பாட்டிலில்  முக்கால் பாகம் இருக்கும்படியாக நிரப்பிக் கிளறிவிட்டு ஊறவிடவும்.



**இன்னும் நான்கைந்து தினங்களில் ஊறுகாய் ஊறிவிடும்.சாப்பிட்டுப் பாருங்கள். இப்படியும் ஊறுகாய் உண்டு என்றாவது சொல்லலாம் அல்லவா?**

======

[Back to index ^]

**விட்டில் பூச்சி :: சிறுகதை - மாலா மாதவன்**

# விட்டில் பூச்சி

மாலா மாதவன்




**"யோசிச்சுக்கோ வருண்! குடும்பத்துக்கு சரிப்படுமா என்று.!" இழுத்தான் நவீன், வருணின் ஆத்ம நண்பன்.**

**விஷயம் ஒன்றுமில்லை . வருண் ஒரு மாடலைப் பார்த்து ஆசைப்பட்டு விட்டான். ஆசையோடு நிறுத்திக்கோ என நவீன் சொல்வதைப் பொருட்படுத்தாமல் கல்யாணம்**

பண்ணி குடும்பத்துக்குள் கொண்டு வரலாமா என நவீனிடமே கேட்டு விட்டான். அதான் இந்த பதில்.

மாடல் ஸ்வயதா வெகு அழகி. அழகு என்பது பெரியவர்கள் மொழி. அம்சம் என்பது வாலிப மொழி. சினிமாவுக்குப் போய் சேதாரம் ஆக விரும்பாமல் மாடலிங்கோடு நிறுத்திக் கொண்டிருப்பவள்.

"செல்லம்.. இன்னுமா தூங்கல!" பேஸ்புக் மெசெஜ்சர் இன்பாக்ஸில் வழிந்தது ஒன்று.

" ஏண்டா ! உடம்பு சரியில்லையா?" அடுத்த பந்து அவளை நோக்கி வீசப் பட்டது.

யாரு நீங்க? ஏன் எனக்கு மெசெஜ் அனுப்பறீங்க என கேட்க ஒரு நிமிடம் ஆகாது. கேட்டால் பின் தொடர்கதையாகி விடும் . தினம் இரவு பத்து மணிக்கு மேல் இந்தத் தொல்லை. " ம்ஹூம்" என்றபடி மொபைலைக் கீழே வைத்தாள் ஸ்வயதா.

"நீ தோழியா இல்லை காதலியா யாரடி நீ இங்கு?" என்றது மெசெஜ்.

தலையைப் பிடித்துக் கொண்டாள் அவள். மாடலிங் என்பது சற்று அங்கம் பளிச்சிடும் துறைதான். அது ஒரு தொழில். அவ்வளவே. அதற்காக இப்படி மெசெஜ்கள் குவிவது பேஸ்புக்கை விட்டு வெளிவந்து விடலாமா என யோசித்துப் பின் மெசெஜ்சரை எடுத்து விட்டாள். சில நாட்களில்

" ஏம்மா! போன்ல நீ எட்டலைன்னா பேஸ்புக், வாட்ஸப்ல மெசெஜ் தட்டி விடுவேன். இப்ப அதையும் பார்க்கறதில்லையா நீ! எப்படி உனக்கு சான்ஸ் வரும்..ஹூம்.. " எகிறினார் ஏஜன்ட். அவரிடம் சொல்ல முடியுமா வரும் அனாமதேய மெசெஜ் பற்றி. மீண்டும் புதுப்பித்தாள்.

விழுந்தது மெசெஜ் . இம்முறை கொஞ்சம் எல்லைமீறி..

சென்ற வாரம் மாடலிங்கில் தாபத்தைக் காட்ட வேண்டி இருந்தது. கதா நாயகன் அவள் முகவாயைத் தூக்கி முத்தமிட வருவது போல் காட்சி. ஏதோ ஒரு வாசனைத் திரவியம் விளம்பரத்துக்கான காட்சி. அதற்கும் அரைகுறை துணி தான் வேண்டி இருந்தது. என்ன செய்ய ? ஆனாலும் தன்னைக் காத்துக் கொள்வதில் கெட்டி அவள். ஏடாகூடமாக நடந்தால் மானத்துக்காக உயிரை விடத் துணிந்தவளாய் தன் கையில் ஒரு சயனைடு மோதிரம் அணிந்திருப்பாள்.

ஒருமுறையாவது இழுத்துப் போர்த்திக் கொண்டு ஒரு புடவையில் வரவேண்டும் என்று நினைக்கிறாள். உன் உடம்புவாகுக்கு எல்லாத்தையும் மூடினா எடுபடாதும்மா என்கிறார் ஏஜண்ட்.

காப்பகக் குழந்தை அவள். கைகொடுப்பார் யாருமில்லை. சுவாதி என்ற அவள் பெயரை மாடலிங் உலகம் ஸ்வயதா என மாற்றி வைத்தது.

விடியலில் அவளின் கதை மாற்றப் பட்டது.

வாசனைத் திரவியத்தில் அவளுடன் நடித்த பிரபல கிடார் கலைஞன் வருண் அவளை மணந்து கொள்ள இருப்பதாக டிவியில் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தான். சில மாதங்களாகத் தொடரும் காதல் விரைவில் திருமணத்தில் முடியப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

" இவனா? நானா? இவன் எப்போ கேட்டான்? நான் எப்போ சொன்னேன்? என்னடா நடக்குது உலகத்துல?!"

அவளின் கனவு நாயகன் இவன் தானோ? தன் போனில் அடிக்கடி மெசெஜ் அனுப்புபவர்களில் இவனும் ஒருவனோ? என்னை ரசித்திருப்பானோ? பல வகை எண்ணங்களினூடே ஒன்று நிம்மதியாய் இருந்தது. இனி இழுத்துப் போர்த்திக் கொண்டு குடும்பப் பெண்ணாய்... நினைக்க இனித்தது அவளுக்கு.

அவளுக்கான சுயம்வரம் நடத்த எந்த ஜனகன் காத்திருக்கிறான்? தானாய் தலையைக் கொடுக்கவும் தெரியாத பெண்.

வருண் இன்னும் இவள் வாசல் தேடி வரவில்லை. அதற்குள் ஆயிரம் போன்கால்கள்..உண்மையா என்று அறிய நீட்டப்படும் காக்கைமூக்குகள். இரை கிடைத்தால் அகன்று விடும் அடுத்த இரை எங்கே என்று.

உடையவள் இங்கு இருக்க எங்கோ இட்ட இடிக்கு இங்கு மழை எதிர்பார்த்தால் எப்படி? ஸ்வயதாவின் மௌனத்தை சம்மதமாய் எடுத்துக் கொண்டவர்கள் வருணிடம் செய்தியைச் சேர்க்க அடுத்த அரைமணியில் அவள் முன்னே நின்றான் அவன்.

" என்ன பண்ணிக்கிட்டு இருக்க ஸ்வே!"

உரிமையாய் அவள் போனை எடுத்து தன் பர்சனல் எண்ணை இட்டவன் அவளைப் பார்த்துக் கேட்டான்

" எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம்?"

ஸ்வயதா கடவுளிடம் வரம் கேட்கும் பக்தையாய் மாறிப் போனாள்.

" நான் அதிகம் படிக்கவில்லை வருண்!"

" இருக்கட்டும்!"

" நான் அனாதை வருண்!"

" இருக்கட்டும்!"

" நான் சொத்தும் அதிகம் சேர்க்க வில்லை!"

" இருக்கட்டும்!" பார்வை அவள் மேல் நிலைக்கப் பதில் சொன்னான் அவன்.

" அப்போ.. என்னை.."

"ம்! உன்னை கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். இனி நீ திருமதி. ஸ்வயதா வருண்!"

" இல்லை வருண்! நான் சுவாதி.. ஸ்வயதா என்பது மாடலிங்க்குக்காக வைத்த பெயர். இனி நான் குடும்பப் பெண்ணாகவே இருக்க ஆசைப் படுகிறேன். "

அவன் புருவம் உயர்த்திச் சொன்னான்

"எனக்கு ஸ்வயதா தான் பிடிச்சிருக்கு!"

அதற்கு மேல் பேச ஒன்றும் இருக்கவில்லை. திருமணம் என கோவிலில் மாலை மாற்றுவதைத் தவிர.

உலகத்தில் யார் அதிகமான அதிர்ஷ்டசாலி எனக் கேட்டாள் அவள் தன்னைத் தான் கண்ணாடியில் காண்பிப்பாள்.

அதிர்ஷ்டம் அவளுக்கு வருணைத் தந்தது.

" நீங்களும் எனக்கு மெசெஜ் அனுப்புவீங்களா முன்னாடி?"

" நானா? இல்லையே? கொடு .. படிக்கலாம்!"

மனம் லேசாக அடிபட்டது அவளுக்கு. யாருன்னு கேட்டா அக்கறைன்னு நினைச்சுக்கலாம்.கொடு.. படிக்கலாம்ன்னு கேட்டா.. இதென்ன ரசிப்புத் தன்மை.. புரியலையே என நினைத்தாள்.

பல மாதங்கள் கடந்தன.

அன்று தள்ளாடிக் கொண்டே நுழைந்தான் வருண். அவனைப் பிடித்துக் கொண்டிருந்த நவீனின் துச்சாதனப் பார்வையில் சற்றே முகம் சுளித்தவள்..

" என்னாச்சு வருண்?"

" இன்னும் என்ன ஆகணும்? மகராசி நீ வந்த.. அவனுக்கு வேலையே போச்சு!"

" ஏன் ? ஏன்? கம்பெனில நல்ல பொறுப்புல.."

" அட! கம்பெனியே போச்சுங்கறேன். இனி கோவிந்தா பொழப்பு தான்! நேரத்தப் பாரு.." வருண் கத்தினான்.

" காம்டவுன் வருண்! இனி ஸ்வயதா பார்த்துப்பா.. நீ காலாட்டி உட்கார்ந்து சாப்பிடலாம்" சொன்ன நவீன்

" இந்தா! இதில் கையெழுத்துப் போடு" என்றான்.

" எதுக்கு? என்னதிது.. எதுக்குப் போடணும்?" அவள் பதற..

வருண் எழுந்தான்.

" ஆசை ஸ்வயதா! உன் மேல் ஆசை! நீ நல்லா இருக்கணும்ன்னு ஆசை! உன்னை ராணி மாதிரி வைச்சுக்கணும்ன்னு ஆசை.. வாய்ப்பும், வளமும் என்னைத் தேடி வரலையே. உன்னத் தேடில்ல வருது.. வந்ததைப் பிடிக்காமல் இருக்க வாத்து மடையனா நான்? பிடிச்சுட்டேன்... கொடுத்துட்டேன்.. நவீன் ! இன்னிக்கு நீயும் என் சந்தோஷத்தைப் பகிர்ந்துக்கணும். இங்கேயே இருடா!"

நவீன் தேன் குடித்த நரியானான்.

" ஸ்வே! இரவுப் பார்ட்டிக்கு நீ .. நாங்கள். ட்ரிங்க்ஸ்.. ரெடி பண்ணு!" சொல்லி விட்டு நவீனோடு உள்ளே சென்றான் வருண்

அன்றைய இரவு தன்னை வற்புறுத்தி கையெழுத்து வாங்கிய பேப்பரைப் பார்த்த அவள் தான் ஏமாற்றப் பட்டோம் என்பதை அறிந்தாள். அவள் இளமையும், அவள் நடிப்பும் பிரபல தயாரிப்பாளரால் குத்தகைக்கு எடுக்கப் பட்டிருந்தது.

விளக்கின் அடியில் இருள் வட்டம் போடுமென்பது தெரிந்து இருந்தும் வட்டமிட்ட இருளில் கலந்து இன்னும் இருளடைய இருந்தேனே என்ற கழிவிரக்கம் அவளை அழத் தூண்டியது.

இல்லை! இல்லை! நான் அழ மாட்டேன்! கண்ணில் பெருகிய நீரை அடக்கிப் புடவையால் துடைத்துக் கொண்ட அவள் மெல்ல வருணின் அறையை நெருங்கக் கதவின் இடைவெளி அவளுக்கு உண்மையைப் போதித்தது. போதிமரக் கதவே நீ வாழ்க!

" ஆசைப்படச் சொன்னா இது.. இது.. பேராசையா இருக்குடா மச்சான்! " வருணின் தோள் தட்டிச் சிரித்தான் நவீன்.

" பின்ன?! எத்தனை கண்கள் இவளைச் சுற்றி? ரசிகனாய்.. காமுகனாய்.. அதைப் பணமா பண்ணத் தெரிய வேணாம்? அந்தப் பணம் நமக்கே நமக்குன்னா.. ஹே! என்ன ? சரியா நான் சொல்றது? இப்போ.. ஸ்வயதா இந்த வருணோட ப்ராப்பர்டி. பணம் காய்ச்சி மரம்! அப்படியே கை மாத்தி மாத்திப் போகட்டும். பணமா வந்து இங்க பெட்டி நிறையட்டும்!" வருணின் பேச்சு ஸ்வயதாவின் காதில் அமிலத்தை ஊற்றியது.

அந்த ஒப்பந்தத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு வைத்த ட்ரிங்க்ஸில் ஒரு துளி தன் மோதிரத் துளியைக் கொட்டி விட்டு, ஒரு சாதாரணப் புடவையைக் கட்டிக் கொண்டு இழுத்துப் போர்த்தியபடி வீட்டை விட்டு வெளியேறினாள்.

மீண்டும் வந்து விடுவாள். இந்த சொத்துக்களை அவள் பெயரில் முன்பே எழுதி வைத்திருக்கிறானே வருண்.

அவள் எதிர்பார்த்த செய்தி வந்ததும், அவளாகவே ஒப்பந்தப் பத்திரத்துடன் போலீஸில் சரணடைந்து விடுவாள். இனி அவள் விட்டில் பூச்சியல்ல.. விழுவதற்கு!

Back to index ^

# என்னை பேசச் சொன்னால் ! :: பானுமதி வெங்கடேஸ்வரன்

( திருமதி பானுமதி வெங்கடேஸ்வரன், Facebook - Mathyamar தளத்தில் பதிந்தது, அவர் அனுமதியோடு இங்கே நம் வாசகர்களுக்காக மறு ஒலிபரப்பு !!)



ஆங்கிலத்தில் பேச முடியாதது குறித்து தாழ்வு மனப்பான்மை இருந்தது பற்றியும், அதை வெற்றி கொண்டது பற்றியும் சுபியும், உமா வெங்கட்டும் ரசிக்கும்படி எழுதியிருந்தார்கள். அவைகளை படித்ததும் எனக்கு இருந்த தாழ்வு மனப்பான்மை குறித்து எழுதலாம் என்று தோன்றியது.

சுபிக்கு ஆங்கிலத்தில் பேச முடியாதது குறித்து தாழ்வு மனப்பான்மை என்றால் எனக்கு பேச முடியாதது குறித்து தாழ்வு மனப்பான்மை. ஆமாம் என்னால் மெதுவாக பேச முடியாது. மிகவும் வேகமாக பேசுவேன். அதனால் நிறைய கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளானேன்.

சிறு வயதில் அதிகம் பேச மாட்டேன். எங்கள் குடும்பம் பெரியது , நான் கடை குட்டி, எல்லோரும் பெரிய பேச்சாளர்கள், பெரியவர்க பேசி முடித்தபி பிறகு நாம் பேசலாம் என்று காத்திருப்பேன். அந்த சான்ஸ் கிடைப்பது கஷ்டம். தவிர கொஞ்சம் மழலையாக பேசியதால் நான் பேசினாலே என் மாமா, "தத்த பித்த தத்த பித்த" என்று கேலி பண்ணுவார். எனக்கு வெட்கமாகவும், ரோஷமாகவும் அழுகையாகவும் வரும். அதனால் வாயை மூடிக்கொண்டு விடுவேன்.

அந்த மழலை மாறியதும் வேகமாக பேசத் தொடங்கி விட்டேன். வேகம் என்றால் எப்படிப்பட்ட வேகம் என்றால் என் வாயிலிருந்து ஏதோ சப்தம் வருகிறது என்ற அளவில்தான் மற்றவர்களுக்கு புரியுமே தவிர, என்ன பேசினேன் என்று புரியாது. "என்னது? என்னது?" என்பார்கள் நான் மறுபடியும் இல்லை.. என்று ஆரம்பிப் பேன். அதில் இல்லை என்பதுதான் பெதுவாக இருக்கும், மீண்டும் அதே வேகம். எதிரே இருப்பவர்களுக்கு சிரிப்பு வந்து விடும். பெரும்பாலான நேரங்களில் என் மூன்றாவது அக்கா நான் என்ன சொன்னேன் என்று மற்றவர்களுக்கு சொல்லுவாள். தமிழில் பேசியதை தமிழில் மொழி பெயர்ப்பு செய்ய ஆள் வைத்துக் கொண்டவள் நானாகத்தான் இருக்கும்.

இதில் நான் ஜோக் சொல்வதுதான் மஹா சிரிப்பு! நான் ஒரு நகைச்சுவையை ரொம்பவும் ரசித்து சொல்லிவிட்டு எல்லோர் முகத்தையும் பார்ப்பேன், ஒருவரும் சிரிக்க மாட்டார்கள். "நீ என்ன சொன்னாய் என்று ஒரு வார்த்தை கூட புரியவில்லை" என்பார்கள். நொந்து போய் விடுவேன்.

பள்ளியில் படிக்கும் பொழுது சில சமயங்களில் வகுப்பில் இருக்கும் ஒவ்வொருவரையும் ஒரு பாரா படிக்கச் சொல்வார்களே அப்போது என் முறை வரும் பொழுது எல்லோருக்கும் அது நல்ல பொழுது போக்கு. "எந்த ட்ரையினை பிடிக்க வேண்டும்? என்ன அவசரம்?" என்பார்கள் ஆசிரியர்கள். சில ஆசிரியர்கள் என்னை படிக்க வேண்டாம் என்று கூறி விடுவார்கள்.
கடைகளுக்குச் சென்று, ஒரு கிலோ உளுத்தம் பருப்பு, ஒரு கிலோ துவரம் பருப்பு... என்று வேண்டிய சாமான்களை வேகமாக சொன்னால், "இரு இரு அப்படி என்ன அவசரம்? இங்கே எல்லோரும் காத்துகிட்டு இருக்கும் பொழுது உனக்கு மட்டும் அவசரமா?கொஞ்சம் நில்லு.." என்று வேண்டுமென்றே காக்க வைப்பார்கள்.

சில பெரியவர்கள் நான் மரியாதையில்லாமல் பேசுவதாக நினைத்துக் கொள்வார்கள். "ஏன் இப்படி பேசற? நாக்கை நீட்டு, கூழாங்கல்லை வாயில் போட்டு உருட்டு பேச்சு நன்றாக வரும் என்றெல்லாம் அறிவுரைகள் வரும். "கமா, கோலன், செமி கோலன், போன்ற விஷயங்கள் இருப்பது தெரியுமா?" என்று கேலிகளும் உண்டு. இதனால்லெல்லாம் எனக்கு கொஞ்சம் தாழ்வு மனப்பான்மை இருந்தது. புதிதாக மற்றவர்களோடு பேசவும், பழகவும் தயக்கம் இருந்தது.

நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பொழுது மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்து பள்ளிகள், கல்லூரிகள் எல்லாம் ஒரு மாதம் மூடப் பட்டன. எங்கள் அம்மா எங்களை விடுமுறைக்கு கிராமத்துக்கு அனுப்பினார். ஊரில் தாத்தா வீட்டில் தினமணி பேப்பர் வாங்குவார்கள். நான் தினசரி அந்த பேப்பரை எடுத்துக் கொண்டு குதிர்கள் இருக்கும் பகுதிக்குச் சென்று, குதிர் மறைவில் உட்கார்ந்து கொண்டு வாய் விட்டு நிதானமாக படித்து பழகினேன். என்னால் நிதானமாக படிக்க முடிந்தது.

அப்போது எங்கள் பள்ளியில் ஒவ்வொரு வெள்ளியும் கடைசி வகுப்பு கல்சுரல் பிராக்டிஸ். ஒவ்வொரு வாரமும் இரண்டு பேர் ஏதோ ஒரு தலைப்பில் பேச வேண்டும். என் முறை வந்து பொழுது நான் பேசுவதற்காக எழுந்ததும், என் வகுப்பில் இருந்தவர்கள் 'ஊ..' என்று கத்தினார்கள். ஆனால் அவர்கள் எதிர் பார்ப்பை மீறி நான் நிதானமாக பேசியதும் எல்லோருக்கும் ஒரே ஆச்சர்யம். பேசி முடித்ததும் பலமாக கர கோஷம் செய்ததோடு,"எப்படி டி? நிதானமா பேசினாய்?" என்றார்கள். அன்றுதான் எனக்கே

தெரிந்தது என்னால் நிதானமாகவும் பேச முடியும் என்று. கொஞ்சம் கொஞ்சமாக பழக்கிக் கொண்டேன். முழுமையாக மீள முடியவில்லை.

அந்த சமயத்தில்தான் ஒருவர் நடிக்க வந்தார். ஸ்டைலும், வேகமும் அவருடைய பலங்கள். வெள்ளையாக, அழகாக இருந்த அவருடைய சமகால நடிகரை விட கருப்பாக இருந்த அந்த நடிகர்தான் காந்தமாக எண்களைக் கவர்ந்தார். இப்போது உங்களுக்குப் புரிந்திருக்குமே அவர் யாரென்று? எஸ்! ரஜினிகாந்த்தான் அவர். இளமை ஊஞ்சலாடுகிறது, நினைத்தாலே இனிக்கும் போன்ற படங்களில் ரஜினிகாந்தின் நடிப்புதான் எனக்கு மிகவும் பிடித்தது. அதுவும் இளமை ஊஞ்சலாடுகிறது படத்தில் அவர் மிகவும் வேகமாக பேசியிருப்பார்.

ஆனந்த விகடன் விமர்சனத்தில், 'பல இடங்களில் ரஜினிகாந்த் பேசுவது ஒரு வார்த்தை கூட புரியவில்லை, அவர் பேசும் வேகத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்' என்று எழுதியிருந்தார்கள். ஆனால் எனக்கோ அதுதான் ரொம்ப பிடித்திருந்தது. ஒரு நடிகர் இத்தனை வேகமாக பேசி வெற்றியடைய முடிகிற பொழுது, வேகமாக பேசுவது ஒன்றும் அப்படி வெட்கமோ,வருத்தமோ பட வேண்டிய விஷயம் அல்ல என்ற ஒரு நம்பிக்கையை எனக்குத் தந்தவர் சூப்பர் ஸ்டார்தான்.

இதன் பிறகு என் பேச்சின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக மட்டுப்பட்டது. பட்டிமன்றத்தில் பேசினேன். நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினேன். இப்போது நான் ஒரு யூ டியூபர் கூட.

JB Channel (LINK) என்று ஒரு யூ டியூப் சேனலில் அவ்வப்பொழுது உரைகள் நிகழ்த்துகிறேன்.

JB Channel kids என்பதில் குழந்தைகளுக்கு கதைகள் சொல்கிறேன்."

Back to index ^

# அயல்நாட்டுச் சிறுகதை :: ஏகாந்தன்

**வில்லியம் சிட்னி போர்டர் (1862-1910) ஒரு அமெரிக்க எழுத்தாளர். 'ஓ. ஹென்றி' (O. Henry) என்கிற புனைப்பெயரில்தான் ஆங்கில இலக்கிய உலகில் அடையாளம். சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரென பிராபல்யம். சாதாரண மக்களின் வாழ்வுச் சிடுக்குகளை, சிதறல்களை லாவகமாகத் தன் புனைவெழுத்தில் கொணர்ந்த படைப்பாளி. தற்செயல் நிகழ்வுகளாக பொதுவாக அறியப்படும் வாழ்வின் ரசமான காட்சிகளை, சில கதைகளில் அங்கதமாக வடித்திருப்பார். சமயங்களில் பீதி கிளப்புவார். அதிர்ச்சியாகவோ, திடீர்க் கிளர்ச்சியாகவோ வரும் ஆச்சரிய முடிவுகளுக்கு அவருடைய கதைகள் பேர்போனவை. டெக்ஸஸின் ஆஸ்டின் நகரில், எழுத்தாளர் ஓ. ஹென்றியின் பெயரில் ஒரு மியூஸியம் உள்ளது. அவரின் சிறுகதை ஒன்றை மொழியாக்கம் செய்து கீழே தருகிறேன் >>>>**



*சிறுகதை : O. Henry / தமிழில்: ஏகாந்தன்*

## ஒரு வினோதமான கதை



ஆஸ்டின் நகரின் வடபகுதியில் ஒரு காலத்தில், 'ஸ்மாதர்ஸ் குடும்பம்' என அழைக்கப்பட்ட ஒரு நேர்மையான குடும்பம் வசித்துவந்தது. ஜான் ஸ்மாதர்ஸ், அவரின் மனைவி, அவர், அவர்களின் ஐந்துவயதுப் பெண்குழந்தை மற்றும் அவளது பெற்றோர் ஆகியோரைக் கொண்டது அந்தக் குடும்பம். அதாவது, நகரின் ஜனத்தொகையைக் கணக்கிடும் அரசாங்கப் பதிவேட்டில் அந்தக் குடும்பத்தில் ஆறுபேர். நிஜமான கணக்கு மூன்று.

ஒரு நாள் இரவு உணவுக்குப் பின், அவர்களின் மகளுக்குத் திடீரென வயிற்றில் வலி உண்டாகியது. கொஞ்ச நேரத்தில் தாங்கமுடியாமல்போக, அழ ஆரம்பித்தாள். ஊருக்குள் போய் அவளுக்கு மருந்து வாங்கி வருகிறேன் எனச் சொல்லிவிட்டு, ஜான் ஸ்மாதர்ஸ் அவசரமாக வீட்டின் வெளியே சென்றார்.

திரும்பவே இல்லை.

அந்தச் சிறுமி கொஞ்சநேரத்தில் தானாகவே குணமாகிவிட்டாள்.

அவளின் அம்மா தன் கணவன் காணாமற்போனதற்கு மிகவும் வருந்தினாள். அவர் போய் மூன்று மாதத்திற்குப் பிறகுதான், இன்னொரு கல்யாணம் செய்துகொண்டாள். ஸான் அந்தோனியோ நகருக்கு புதுக் கணவனுடன் குடிபெயர்ந்தாள்.

அந்தச் சிறுமியும் வளர்ந்தாள். தகுந்த வயது வர, பெண்ணானாள்.

எந்த வீட்டில் தன் அப்பா அவர்களை எல்லாம் விட்டுவிட்டுப் போனாரோ, எதற்குத் திரும்பவேயில்லையோ, அதே வீட்டில்தான் அந்த இளம்பெண் வாழ்ந்துவந்தாள். சரியாகக் காலம் கனிகையில், ஒருவனைப் பார்த்து மணமும் செய்துகொண்டாள். சில வருடங்கள் உருண்டோடின. அவளும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். பெண் குழந்தை.

அதுவும் வளர்ந்துவந்தது. அவளது மகளுக்கு அப்போது வயது ஐந்தாகிவிட்டிருந்தது. ஒருநாள் இரவு நேரம். அந்தச் சிறுமிக்கு வந்தது வயிற்றுவலி. வயிற்றில் கைவைத்து, தாங்கமாட்டாது பரிதவித்தாள். தற்செயலாக, காணாமற்போன தன் அப்பாவின் பிறந்தநாள் அன்றுதான் என, சிறுமியின் அம்மா திடீரென நினைவுகூர்ந்தாள். இப்போது அவர் உயிரோடு இருந்து, ஒரு ஸ்டெடியான வேலையிலும் இருந்தால்.... என் பெண்ணிற்கு அவர் தாத்தா அல்லவா.. என அவளது சிந்தனை சோகமாக அலைந்தது.

"நான் ஊருக்குள் போய் இவளுக்கு ஏதாவது மருந்து வாங்கிவருகிறேன்.." என்று எழுந்தான் ஜான் ஸ்மித் - அதுதான் அவள் கணவனின் பெயர்.

"நோ! நோ! டியர் ஜான்! வெளியே போகாதே. போனால், நீயும் வீட்டுக்குத் திரும்பி வர மறந்துபோவாய். ஒரேயடியாகக் காணாமற்போய்விடுவாய்.. வேண்டாம்!" பதறினாள் அவள்.

அதனால் அவள் கணவன் வெளியே செல்லவில்லை. இருவரும் தங்கள் மகள் பான்ஸியின் (Pansy) படுக்கையருகில் கவலையோடு உட்கார்ந்திருந்தார்கள். நேரம் ஆக

ஆக, பான்ஸியின் வலி அதிகமாகியது. பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியவில்லை. மருந்து வாங்கி வரத்தான் வேண்டும். ஜான் எழுந்தான் மீண்டும். அவன் மனைவி ஆவேசமாக அவன் கையைப் பிடித்து இழுத்து உட்காரவைத்தாள். அவனைப் போகவிடவில்லை.

அப்போது திடீரென க்ரீச்... என வாசலில் சத்தம். மெல்லத் திறந்தது கதவு. கூன்விழுந்த முதுகுடன் ஒரு கிழவர் தள்ளாடியவாறு உள்ளே நுழைந்தார்.

மற்ற இருவரைவிடவும், பான்ஸிதான் முதலில் அடையாளம் கண்டாள். "ஹே!.. தாத்தா.. தாத்தா வந்துட்டார்!" என்றவளின் கண்களில் பிரகாசம். குரலில் ஆனந்தம்.

நெருங்கி வந்த கிழவர் தன் ஜாக்கெட் பாக்கெட்டிலிருந்து ஒரு மருந்து பாட்டிலை நிதானமாக எடுத்தார். திறந்தார். ஒரு ஸ்பூன் மருந்தெடுத்து, அவளது வாயில் மெல்ல விட்டார்.



அருந்திய உடனே பான்ஸிக்கு வலி சரியாகிவிட்டது.

"ட்ராம் வண்டிக்காகக் காத்திருந்தேனா... கொஞ்சம் லேட்டாகிவிட்டது.." என்றார் மெதுவாக, ஜான் ஸ்மாதர்ஸ்.

=====

எழுத்தாளர் சுயகுறிப்பு :

**ஏகாந்தன்**: எழுத்தாளர், கவிஞர்

பல வருடங்களாகப் பதுங்கிக் கிடந்தது அடியேனின் எழுத்து! இரண்டாயிரங்களின் ஆரம்பத்தில் ஜப்பான்-வாழ் தமிழர்கள் வெளியிட்ட பொங்கல் மலர்களில் கவிதைகள், கட்டுரைகள் சில வெளிச்சம் கண்டன. பிறகு இணைய இதழ்கள் சிலவற்றில் சில கவிதைகள். 2017-லிருந்து, இணையத்தின் தரமான கலை, இலக்கிய இதழான ‘சொல்வனம்’, கிரிக்கெட்டில் ஆரம்பித்து தத்துவம், பிறமொழி ஆளுமை, வெளிநாட்டு வாழ்வனுபவங்கள், சினிமா என எனது சில கட்டுரைகளோடு, ஒன்றிரண்டு சிறுகதைகளையும் வெளியிட்டிருக்கிறது.

"ஆதிசங்கரர், ராமானுஜர், வேதாந்த தேசிகர்", “தூரத்திலிருந்து ஒரு குரல்", “தாமதத்திற்கு அருந்துகிறேன்" என்கிற தலைப்புகளில் எனது மின்னூல்களை சமீபத்தில் அமேஸான் வெளியிட்டுள்ளது. மூன்றாவதாகக் குறிப்பிட்டது எனது முதல் கவிதைத் தொகுப்பு.

பால்யத்திலிருந்தே எனது ஆர்வம், ஈடுபாடு எனப் பார்த்தால் - அரசியல், சர்வதேச அரசியல்செல்நெறிகள், இலக்கியம், கலை, சினிமா, வானியல், கிரிக்கெட் - இப்படிப் போகும்...

2013 - இறுதியிலிருந்து வலையிலும் தென்படுகிறேன். தொழில்நுட்பம், அறிவியல் புனைவு, மருத்துவம், ஜோஸ்யம் போன்றவைபற்றி எழுதவில்லை இதுவரை. மற்றபடி பல்வேறு விஷயங்கள் பேசும் கட்டுரைகள், மூடுக்கேற்ற கவிதைகள் என வெளியிட்டு வாசகர்களை சீண்டிவருகிறேன் !

**வலைப்பக்கம்** : https://aekaanthan.wordpress.com

**தொடர்பு** : aekaanthan@gmail.com

Back to index ^

# அன்பு மகள் (சிறப்புச் சிறுகதை) :: அப்பாதுரை

“ கர்ப்பம் நிச்சயமாயிடுச்சு... வாழ்த்துக்கள்" என்றார் கைனகாலஜிஸ்ட் இலவசப் புன்னகையுடன். "பிறக்கப் போற குழந்தைக்கு என்ன பெயர் வைக்கத் தீர்மானிச்சிருக்கீங்க?".

"ரதி" என்றான் அருண். "ரகு" என்றாள் உமா. உரக்கச் சிரித்த கைனகாலஜிஸ்ட் "ரெண்டு பெயர்களும் அவசியம் தான்" என்றார்.

ஒரு கணம் அதிர்ந்து சுதாரித்து ஒரே குரலில் "எதிர்பார்க்கவில்லை டாக்டர்" என்றனர் இருவரும். டாக்டர் தயங்கி, "இரட்டையர் என்பதால் இயற்கை பிரசவத்துல ரிஸ்க் இருக்கு. சில முன்னெச்சரிக்கைகள் சொல்கிறேன். தயவுசெய்து கடைபிடியுங்கள்" என்று அடுக்கினார். "சரி.. போய் நல்ல செய்தியைக் கொண்டாடுங்க. அடுத்த செக்கப்புக்கு லேட்டா வராதிங்க". போகிற போக்கில் உபரிப் புன்னகை.

====

"கொஞ்சம் மெதுவா போ, அருண்" என்று தன் பருத்த வயிற்றைப் பிடித்துக் கொண்டாள் உமா. "ஏழு மாசம், கவனமிருக்கா? ரகு இப்பவே கடுப்பாயிட்டான் உம்மேலே.."

"சாரி டியர்" என்றான் அருண். "ஒவ்வொரு மாசமும் செக்கப்புக்கு தாமதமா போறோமேனு அவசரப்பட்டேன். மன்னிச்சுரு.. ரகுப் பையா, பொறுத்துக்கடா" என்று காரின் வேகத்தைத் தணித்துச் சீராக்கியபடி மென்மையாக உமாவின் வயிற்றைத் தொட்டான்.



அப்படிச் செய்யாமல் சாலையில் கவனமாக இருந்திருந்தால் பக்கத்தில் வந்து இடித்த காரையும் விபத்தையும் தவிர்த்திருப்பான்.

** **

"உங்க மகளை மட்டும் பிழைக்க வைக்க முடிஞ்சுது. உள்காய ரத்தச் சேதத்துனால ஏற்பட்ட கருச்சிதைவு காரணமா உங்க மகன் இறந்தே பிறந்தான். ஸாரி. ஆனா உங்க மனைவிக்கு அதிக ஆபத்தில்லே. நிறைய ரெஸ்ட் தேவை. கவனமா பார்த்துக்குங்க". அருணின் வலது தோளை ஆதரவாகத் தட்டினார் டாக்டர்.

** = =

"ஏய்.. படுக்க வரியா? பொண்ணு பிறந்த நாள்னா பொண்டாட்டிய மறந்துடறதா? எனக்கு பரிசு தர வேண்டாமா?" என்று ஏறக்குறைய கூவினாள் உமா. பிறகு மகளை எழுப்பி விட்டோமோ என்று பரபரத்துப் பக்கத்துப் படுக்கையில் ரதி நிம்மதியாகத் தூங்குவதை ஒரு கணம் கவனித்துப் பார்த்தாள். மெள்ள அடியெடுத்து அருணின் பின்னால் சென்று டிவியில் இலயித்தாற் போலிருந்த அவன் கண்களைப் பொத்தினாள். பதறினாள். "அய்யோ.. என்ன இது.. டிவி பாக்குறேனு நினைச்சேன்.. அழுதிட்டிருக்கே?"

"போன வருடம் இன்னேரம் நான் மட்டும் கவனமா இருந்திருந்தா... என்னவோ தெரியலே... ரகு நினைப்புல அழுகையா வருது.. என்னால் தானே நம் மகனை இழக்கும்படி ஆச்சு... " என்றான் அருண்.

"அருண்.. என்ன இது? உன் தப்பு இதில் எதுவுமில்லை.. உன்னைப் போலவே எத்தனை அழகான பெண் நமக்கு! அதைக் கொண்டாடுவோம். அப்படியே இன்னொரு ரகுவுக்கு முயற்சி பண்ணலாம், என்ன சொல்றே?" என்று அருண் மடியில் புரண்டு அவன் சட்டைக்குள் கை நுழைத்து முதுகை வருடினாள். "மம்மி நீட்ஸ் பர்த்டே கிப்ட் டேடி".

களைத்துத் தூங்கிக்கொண்டிருந்த இருவரும் சட்டென்று விழித்தனர், "ரதி அழுறாளே?" தொட்டிலுக்கு ஓடினர். "இதென்ன அலாரம் வச்சிருக்கே? இதான் குழந்தையை எழுப்பியிருக்கு" என்றாள் உமா, படுக்கையில் கிடந்த அருணின் ஐபோனை எடுத்து. "அதுவும் ராத்திரி ஒரு மணிக்கு?"

"ஆறு மணிக்கு தானே அலாரம் வச்சேன்?" குழம்பினான் அருண். அரை மணி அழுது தானாகவே தூங்கினாள் ரதி.

**

இரண்டாவது பிறந்தநாளன்றும் ஆறு மணிக்கு வைத்த அலாரம் அடித்து அழத்தொடங்கினாள் ரதி. மணி சரியாக ஒன்று. அரை மணி போல் அழுதுவிட்டுத் தூங்கினாள்.

**

மூன்றாவது பிறந்தநாளன்று வீட்டில் கிடந்த அத்தனை செல்போன்களையும் மூட்டை கட்டி ஆபீசில் வைத்துவிட்டு வந்தான் அருண்.

ஏதோ பேச்சுக்குரல் கேட்கிறதே என்று இரவில் விழித்த உமா, அருணை உடனடியாக உலுக்கி எழுப்பினாள். தொட்டிலில் உட்கார்ந்து யாருடனோ மழலையில் பேசிக்கொண்டிருந்தாள் ரதி. அழவில்லை. எழுந்து ஓடி சமையலையறையில் இருந்த சுவர்கடிகாரத்தைப் பார்த்தான் அருண். மணி 1:01.

அரை மணி நேரம் போல் பேசிவிட்டு சுவிச் நிறுத்தியது போல சட்டென்று படுத்துறங்கினாள் ரதி. திடுக்கிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தனர் அருணும் உமாவும்.

**

தன் அம்மாவிடம் உமா விவரம் சொன்னதும் மறுநாளே ஊர் பூசாரியுடன் வந்துவிட்டனர் உமாவின் பெற்றோர்.

"தம்பி.. எனக்கு உமாவை இதா இத்த பெரிசிலந்து தெரியும்.. பயப்படாதிங்க.. இது குட்டிச்சாத்தான் வேலை. கர்ம பலன். வீட்ல செத்தவங்களுக்கு சரியா திதி திவசம் செய்யலினா கோவத்துல குட்டிச்சாத்தானை ஏவி விடுவாங்க. குட்டிச்சாத்தான் ஒரு தேவதை. பேய் பிசாசு கிடையாது. பொதுவா நல்லது செய்யும். வன்மம் இருந்தா மட்டும் கெட்டது செய்யும். ஒரு சிக்கலும் வராம நான் பை போட்டுர்றேன்" என்ற பூசாரி ஓட்டமாக வாசலுக்கு ஓடி மரக்கிளை ஒன்றை ஒடித்து அதை வழுவழுவென்று தரையில் தேய்த்தெடுத்து வந்தார். கிழிந்த வேட்டித்துணி போல ஒன்றை எடுத்து அதில் மஞ்சள் பொடி தடவினார். "தம்பி உங்க கையால ஒரு கைப்பிடி அரிசி, ஒரு கைப்பிடி காராமணிப் பருப்பு எடுத்து இந்தப் பைல போடுங்க.., உமாம்மா.. நீங்களும்.." என்று பூசாரி முடிக்குமுன் மாமியார் அரிசி பருப்புடன் நிற்பதைக் கவனித்த அருண் பேச்சின்றி ஒத்துழைத்தான். உமாவும் அரிசி பருப்பு சேர்த்ததும் பூசாரி அதன் மேல் விபூதி குங்குமம் தூவினார். ஒரு மூட்டை போலக் கட்டினார். முன்பே தேய்த்து வைத்திருந்த மரக்கிளையுடன் மூட்டையைச் சேர்த்துக் கட்டினார். வெளியே ஓடி காற்றில் ஏதோ பேசினார். மூட்டையையும் கழியையும் தரையில் சில இடங்களில் வைத்து எடுத்தார். ஐந்தே நிமிடங்களில் திரும்ப ஓடி வந்தார். வீட்டின் சில இடங்களில் மூட்டையை வைத்துப் பார்த்தார். "தெற்கே பாத்து நாலு திக்கிலும் சூத்திரம் வச்சு மந்திரம் சொல்லிட்டு வந்தேம்மா.." என்று தயங்கினார்.

"சொல்லுங்க பூசாரி" என்றார் உமாவின் அம்மா.

"இந்த வீட்டுல நிச்சயம் குட்டிச்சாத்தான் வன்மம் இருக்குதுமா.. கழி மூட்டைல வன்மம் ஏறி எப்படி மஞ்சளாவுது பாத்திங்களா?"

"அரை கிலோ மஞ்சள் பொடி துணில கொட்டினா என்னாவுங்க?" என்றான் அருண். கவனிக்காமல் பூசாரி தொடர்ந்தார். "இன்னிக்கு ராவே தொட்டி கட்டணும் சொல்லிட்டேன்" என்றார்.

திடுக்கிட்டார் உமாவின் அம்மா. அருண் முகம் சுளித்து "தொட்டியா, என்ன அது?" என்றான்.

"தம்பி.. ஒரு சின்ன குழி வெட்டி அதுல தண்ணி நிரப்பணும், அதான் தொட்டி. இந்தக் குட்டி தேவதைகள் ராத்திரி சரியா ஒரு மணிக்கு உலாத்தி அரை மணி நேரத்துல அடங்கிரும். குட்டிச்சாத்தான் உலாத்துற அரை மணி நேரம் வெறுங்காலோட தொட்டில்ல இந்த கழி மூட்டையை உயரத் தூக்கி நின்னுகிட்டு நான் சொல்ற வசிய மந்திரத்தை சொல்லணும்.. உங்க பின் பக்கமா வரும் குட்டிச்சாத்தான்.. எட்டியெட்டி மூட்டையப் பிடுங்கப் பார்க்கும்.. வசிய மந்திரம் சொல்லுற மட்டும் அதால ஒண்ணும் செய்ய முடியாது.. நேரம் ஆவ அது கெஞ்சும்.. அப்ப நீங்க குட்டிச்சாத்தானை குழியிறங்கச் சொல்லி சத்தியம் கேக்கணும்... அது சத்தியம் செஞ்சா உங்க கால்ல தண்ணி படபடனு தெளிக்கும்... சட்டுனு நீங்க மேலே வந்து பின் பக்கம் திரும்பாம மூட்டைய குட்டிச்சாத்தான் கிட்டே குடுங்க.. அது வாங்கிட்டு

பூனையாட்டம் அடங்கி குழில இறங்கிடும். சட்டுனு குழிய மூடிருங்க.. பயப்படாதிங்க, நானும் துணைக்கு இங்கனயே இருப்பேன்"

"இதெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லிங்க.. என்னால முடியாது. நீங்க போயிட்டு வாங்க" என்றான் அருண்.

"உங்க இஷ்டம்.. நீங்க மனமொப்ப செஞ்சாத்தான் கறுப்பு தீரும்" என்று பூசாரி கழி மூட்டையுடன் கிளம்பினார்.

**

நாலாவது பிறந்தநாள் வாக்கில் ரதிக்கு நன்றாகப் பேச்சு வந்துவிட்டது. பிடிவாதமும். "டேடி, பர்த்டேக்கு எனக்கு பப்பி வேணும்" என்று சில நாட்களாகவே அடம் பிடித்துக்கொண்டிருந்தாள். "இப்ப வேணாம்டா செல்லம்" என்று ஒரு நாய் எந்திரப் பொம்மை வாங்கிக் கொடுத்தார்கள். தொடும் போதெல்லாம் "உவ் உவ்" என்று குரைத்தது. "வா" என்றால் உடனே வந்தது. "ரோல்" என்றவுடன் புரண்டது. ரதிக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. "லவ் யூ டேடி, மம்மி.." என்று முத்தமாகத் தந்தாள்.

பிறந்தநாள் இரவு சுமுகமாகப் போன நிம்மதியில் மறுநாள் காலை எழுந்ததும் தன் அறையில் விளையாடிக் கொண்டிருந்த ரதியைப் பார்த்துத் திகைத்த உமா, அவசரமாக அருணை ரதியின் அறைக்கு இழுத்துச் சென்றாள்.

ரதி எந்திர நாயுடன் பேசிக்கொண்டிருந்தாள். "ரதிக்குட்டி.. யாரோட பேசிட்டிருக்கே?" என்றாள் உமா.

"ஹாயம்மா... என் தம்பியுடன் பேசறேன்.. மை லிடில் ப்ரதர்" என்றாள் ரதி.

"இந்த நாய் உன் தம்பியாம்மா?" என்று சிறு கேலியுடன் கேட்டான் அருண்.

"நாய்னு கூப்பிடாதிங்க டேடி.. இவன் பேர் ரகு" என்றாள் ரதி. "இனிமே எங்கூடயே இருப்பேன்னு சொல்லியிருக்கான்"

**

ரதியை சில பரிசோதனைகள் செய்த பிடியேட்ரிக் சைக்யேட்ரிஸ்ட் "ரதிக்கு எந்தக் குறையும் இல்லை, பயப்படத் தேவையில்லை, ஷி இஸ் நார்மல் எஸ் யு ஆர் மி" என்றார்.

"டாக்டர்.. எங்களுக்கு பிறக்கவிருந்த இரட்டையர்ல ஆணுக்கு ரகு, பெண்ணுக்கு ரதினு பெயர் தேர்வு செஞ்சிருந்தோம்.. இந்த பெயர் ரதிக்கு எப்படி தெரியும்? எங்க குடும்பத்துல கூட யார் கிட்டயும் சொல்லலே" என்றான் அருண்.

"அனாவசியமான கவலைனு தோணுது.. உங்களுக்கு அமானுஷ்ய பயங்கள் இருந்தால் வேறு இடம் குடிபெயருங்களேன்?"

"இல்லை டாக்டர்" என்றாள் உமா. "இங்கே அருகிலேயே என் பெற்றோர்கள் இருப்பது பெரிய துணை"

**

நாளடைவில் ரதிக்கும் உமாவுக்கும் நிறைய வாக்குவாதம். சாதாரண தாய்-சேய் தொந்தரவுகளுக்கு அப்பாற்பட்டு ரதி சில வார்த்தைகள் பேசத் தொடங்கினாள். "அம்மா.. உன்னை வெறுக்கிறேன்" என்றாள் ஒரு நாள். "இதெல்லாம் பிள்ளைகளை மூணு

வயசுலயே ஸ்கூல் போடறதுனால வர பக்கவிளைவு" என்று அருண் அமைதிப்படுத்தினான்.

ஐந்தாம் பிறந்தநாள் காலை ரதிக்கு உணவு கொடுத்துப் பள்ளிக்கூடத்துக்குத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். "ரதி.. சாயந்திரம் பர்த்டே பார்டிக்கு உன் ப்ரெண்ட்ஸ் யாரையெல்லாம் கூப்பிடப் போறே?" என்றான் அருண்.

"டேடி, அம்மா என் பர்த்டே பார்டிக்கு வரக்கூடாதுனு ரகு சொல்லிட்டான். நீங்க வராதிங்கம்மா" என்றாள் ரதி.

உமாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "இன்னொரு தடவை இந்த மாதிரி ஏதாவது பேசினா ரகுவை தூக்கிப் போட்டுருவேன்" என்றாள்.

"அதான் ஏற்கனவே ரகுவைத் தூக்கிப் போட்டிங்களே?" என்றாள் ரதி.

அதிர்ந்த உமா அழுகையை அடக்க முடியாமல் அறையை விட்டு வெளியேறினாள். "அம்மா ரகுவைத் தூக்கிப் போட்டாங்க டேடி" என்று கண்கலங்கினாள் ரதி. சில கணங்கள் தடுமாறிய அருண் நிதானமாக "என்ன சொல்றே ரதி? அம்மா எப்ப தூக்கிப் போட்டாங்க?" என்றான்.

"உனக்கு ஒண்ணும் தெரியாது டேடி. ரகுவும் நானும் ஒண்ணா இருந்தப்ப அம்மா அவனைத் தூக்கிப் போட்டுட்டாங்க.."

"யார் சொன்னது?"

"ரகு"

"ரகுவை எங்கிட்ட சொல்லச் சொல்லு ப்லீஸ்?"

"மாட்டான் டேடி.." என்றாள். அருணின் காதருகே வந்து மென்மையாக "டேடி.. ரகு எங்கூட மட்டுந்தான் பேசுவான், சரியா?" என்றாள்.

"ஓ! அப்ப நீயே ரகு கிட்டே ஒண்ணு சொல்றியா? அம்மா ரகுவைத் தூக்கிப் போடலே.. ஒரு விபத்து.. நீ அன்னிக்கு பால் க்ளேஸை தவறவிட்டு கண்ணாடி கிழிச்சு என் கை புண்ணாச்சுல்ல? அது மாதிரிதான்.. சில சமயம் இதெல்லாம் நடக்கும்.. அம்மாவுக்கு ரகு ரொம்ப இஷ்டம் ரதிம்மா.. ரகுனு பேர் வச்சதே அம்மாதான். அம்மா லவ்ஸ் ரகுனு அவன் கிட்டே சொல்றியா? இது புரியாம ரகு அப்படி சொன்னது அம்மாவுக்கு ரொம்ப வருத்தம். பிக் சிஸ்டர் நீ சொன்னா ரகு கேட்பான் இல்லையா?"

இருவரும் உமாவிடம் சென்றனர். "ஐம் ஸாரிமா.." என்று உமாவைக் கட்டிக்கொண்டாள் ரதி. "நீ என் பிறந்த நாளுக்கு வரலாம் ஓகே? ரகு சரியான லூசுமா.. அவனுக்கு ஒண்ணும் தெரியாது.. நான் சொல்லிடறேன் சரியா? நான் இப்போ பிக் சிஸ்டர்மா..".

பிறந்தநாள் முடிந்து எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தனர். வியர்த்து எழுந்த உமா அருணை உலுக்கினாள். "கனவுல ரகு வந்தான் அருண்" என்றாள். "அம்மா.. நான் ரகும்மா.. ரதியை நம்பாதம்மா.. அவளால உனக்கு ஆபத்துமா.. என்னை விடமாட்டேங்குறா.. நீ

எங்கூட வந்துருமா.. எனக்கு நீ வேணும்மா.. நீ என் கூட இருக்கணும்னு திரும்பத் திரும்ப அதே குரல்” என்று அருணின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். “எனக்கு பயமா இருக்கு அருண்”.

**

“உமாவுக்காகவாது நீங்க இதை நம்பணும்” என்றார் அருணின் மாமியார்.

“ஆமாங்க தம்பி.. ரெண்டு வருசம் முந்தி தொட்டி கட்டி செஞ்சிருந்தா இன்னேரம் குழியிறங்கி எல்லாம் சமாதானமாயிருக்கும்.. இப்ப போக்கு காட்டுற சூனியமாட்டம் வளந்துடுச்சே?” என்றார் பூசாரி. “இப்ப தொட்டி கட்டிப் பத்தாது தம்பி. பிறப்புக்கொடி பாத்துத் தீயிடணும்”

“அப்படினா?”

“இந்த குட்டிச்சாத்தான் உமாம்மா வயுத்துல இருந்த சிசுனு இப்ப தெரிஞ்சிருச்சு இல்லியா? சிசு ஆத்மா தொட்ட எதுனா இருந்தா அதான் பிறப்புக்கொடி.. அதை தெற்கால வச்சுத் தீயிடணும்.. கோடித்தெரு மேஸ்திரியை கூட்டிட்டு வந்து தீயிடல் நடத்திருவோம், சரிங்ளா? எதோ நாய்க்குட்டி இருக்குறதா அம்மா சொன்னாங்க…”

“நாய்க்குட்டி இல்லிங்க, பொம்மை”

“அதான்.. அதை வச்சுதானே குட்டிச்சாத்தான் நம்ம பாப்பாவோட வெள்ளாடுது? அதான் பிறப்புக்கொடி.. வசிய மந்திரம் சொல்லி அதைத் தீயிட்டிருவோம்.. பொம்மை தானே..”

“விட்டா நாயையே கொளுத்தத் தயங்க மாட்டிங்க… ஏழு மாசம் உமா வயத்துல இருந்த சிசு.. அதைக் குட்டிச்சாத்தான்னு..” அருணுக்கு உள்ளுக்குள் ஆத்திரம் வந்தது. “நாய் பொம்மையை ஏதாவது செஞ்சா என் பெண் நொறுங்கிப் போயிடுவா.. ஆறு வயசு கூட ஆகலே.. இதெல்லாம் காட்டுமிராண்டித்தனம்” என்றான்.

“தம்பி.. இதை இன்னும் வளத்திங்கன்னா எட்டு வயசுக்குள்ள அப்பா அம்மாவை இழுத்துரும்.. உள்ளதை சொல்லிட்டேன்.. என்னைக் கேட்டிங்கன்னா குட்டிப் பாப்பாவையும் ஒரு தடவை மாந்த்ரிக சக்கரத்துல உக்கார வச்சு பின் கைல சூடு போட்டு காத்து கறுப்பு அண்டிச்சானு பாத்துடலாம்”

“கிளம்புங்க.. இனி இந்த வீட்டுப் பக்கம் வராதிங்க”

**

ரதியுடனான பரிசோதனை மற்றும் ஆலோசனை முடித்து உமாவையும் அருணையும் அழைத்த சைகியேட்ரிஸ்ட், “எனக்கு இதில் ஆபத்தில்லை என்றே தோன்றுகிறது. உங்கள் விபத்துகளுக்கு ஒரு அறிவுபூர்வ விளக்கம் இருப்பதாகவே நினைக்கிறேன். ஷி இஸ் எ சைல்ட். கற்பனைத் தோழனோ தோழியோ.. இந்த வயதில் இருப்பது ரொம்ப சாதாரணம். உதாரணத்துக்கு.. ரகு இவளுக்கு பறக்க சொல்லிக் கொடுத்தானாம்… எப்படி இருக்கிறது கற்பனை? ஷி இஸ் இமேஜினெடிவ்.. அவ்ளோ தான். இதுக்கு ட்ரீட்மென்ட் எதுவும் இப்ப தேவையில்லை”

**

ஆறாவது பிறந்தநாளின் போது வீட்டை அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். முதல் பட்டுப் பாவாடையுடன் மிக அழகாக இருந்த ரதி ஆர்வமாக ஒத்துழைத்தாள்.

தோரணம் கட்டுவது, பூ ஒட்டுவது என்று குதூகலமாக இருந்தாள். தோரணம் ஒன்றை இழுத்துக் கொண்டு மாடியில் இருந்து இருவரையும் கூப்பிட்டாள். "அம்மா.. அப்பா.. நான் இப்போ பறக்கப் போறேன்" என்று கைப்பிடிச் சுவரைத் தாண்டிக் குதித்தாள். பறவை போல் கை கால் ஆட்டியபடி.

அலறித் துடித்த உமா பெண்ணைப் பிடிக்கப் போனாள். அவளுக்குத் துணையாக அருண் ஓடி வர… கைகளை விரித்து வந்த உமாவின் கழுத்தில் விழுந்த ரதி அரை குறையாக அவளை கட்டிக் கைவிட்டு அருண் மேல் விழுந்தாள்.. கழுத்து ஏறக்குறைய முறிந்து சுழன்று விழுந்த உமா மாடிப்படியில் மோதி விழுந்தாள்.

"உங்கள் கைகளில் கட்டு போட்டிருக்கிறேன்.. இரண்டு நாளில் சரியாகிவிடும்" என்றார் டாக்டர். "உங்கள் பெண் ரதிக்கு பலமான காயம்.. எலும்பு முறிவு.. ஒரு மாத சிகிச்சையில் சரியாகி விடுவாள்". குலுங்கி அழுத அருணை சமாதானப் படுத்த முடியாமல் "ஐம் சாரி.. உங்க மனைவிக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டம்.. மகள் விழுவதைப் பார்த்த அதிர்ச்சியிலும் கழுத்து முறிந்து விழுந்து க்ரேனியம் விரிசல் பட்டதிலும் உடனடியாக மாரடைப்பில் மரணம்" என்றார்.

**

உண்டான ஈமச் சடங்குகள், தொட்டி, பிறப்புக்கொடி தீயிடல் ஒன்று விடாமல் செய்தான் அருண். ரகுப் பொம்மையைத் தீயிட்டுக் கொளுத்தினான். மகளுடன் சேர்ந்துத் துடித்துப்போனான்.

"இனி எந்தக் குறையும் இல்லே.. சாத்தான் குழியிறங்கியாச்சு" என்றார் பூசாரி.

"என்னை மன்னிச்சுடுங்க" என்று உமாவின் பெற்றோர் காலில் விழுந்தான் அருண். "நானும் ரதியும் இந்த ஊரை விட்டுப் போறோம். வேலை மாத்தல் வாங்கிட்டேன்" என்றான் அருண்.

**

சில மாதங்களில் இயல்பு நிலைக்குத் திரும்பினார்கள். தந்தையும் மகளும் மிக நெருக்கமானார்கள். ரகுவைப் பற்றிய பேச்சே இல்லை. எந்தப் பிரச்சினையும் இல்லாது ஏழாவது பிறந்தநாள் கழிந்தது.

விடுவிடுவென வேகமாக வளர்ந்தாள் ரதி. அய்ஷா என்று ஒரு டீச்சர் தனக்கு மிகுந்த துணையாக இருப்பதாகச் சொன்னாள். "எதுவானாலும் அவங்க கிட்டே பேசுவேன் டேடி, ஷி இஸ் ஸோ அன்டர்ஸ்டேன்டிங்..". அய்ஷாவைப் பற்றி அடிக்கடி பேசினாள். "நீங்க அய்ஷா டீச்சரை சந்திக்கணும் டேடி"

வளர்ந்து வரும் பெண்ணுக்கு ஒரு வளர்ந்த பெண்ணின் துணை கிடைத்ததில் நிம்மதியடைந்தான் அருண். "கண்டிப்பா அவங்களைச் சந்திக்கலாம்".

**

எட்டாவது பிறந்தநாளன்று அதிகாலை திடுக்கிட்டு எழுந்த அருண் முகத்தைத் துடைத்துக் கொண்டான். உமா அவனை உலுக்கி எழுப்பி "உன்னை எங்கெல்லாம் தேடுறது அருண்?" என்றாள். "அவசரமா உனக்கு ஒரு உண்மையைச் சொல்லணும்.. ரகு நல்லவன். ரதி உண்மையில் பிசாசு. அவளை நம்பாதே. இன்றைக்கு உன்னைப் பலி

வாங்கப் பார்ப்பாள்.. என்ன ஆனாலும் இன்றைக்கு அவள் சொல்லும் வழியில் போகாதே..” என்று கெஞ்சினாள். கண்டது கனவா? நேரத்தைப் பார்த்தான். சரியாக ஒரு மணி.

ஏதோ தோன்றிச் சட்டென்று எழுந்து மெள்ள ரதியின் அறைவாசலில் நின்று கவனித்தான். உள்ளே யாரோ குறுக்கும் நெடுக்கும் நடக்கும் சத்தம். “வேணாம் மம்மி, ஸாரி மம்மி, என்னை விட்டுரு ரகு” என்று திரும்பத் திரும்ப ரதி சொல்லிக் கொண்டிருந்தாள். இடையே சிரிப்பு.

கதவைத் தட்டினான். உள்ளே நுழைந்து விளைக்கை இயக்கினான். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் ரதி. சட்டென்று விளக்கணைத்துத் திரும்பினான். குழம்பினான்.

ரதி உண்மையில் பிசாசு, அவளை நம்பாதே, அவள் சொல்லும் வழியில் இன்று போகாதே. வேணாம் மம்மி, ஸாரி மம்மி என்னை விட்டுரு ரகு. இரண்டு குரல்களும் அருண் மனதுள் ஒலித்தன. அப்படியே தூங்கிப் போனான்.

காலை எட்டு மணிக்கு இருவரும் தயாரானார்கள். பள்ளிக்கூடம் போகக் காரில் ஏறிய ரதி, தெருமுனை வந்தும் காரை நிறுத்தச் சொன்னாள். “இன்னிக்கு இப்படி போக வேண்டாம் டேடி.. வேறே வழியா போக முடியுமா?”

திகைத்த அருண் “எப்படிப் போகணும்?” என்றான்.

“ஸாரி டேடி, மறந்தே போச்சு.. அய்ஷா டீச்சர் வீட்டுக்கு வந்து அவங்களை பிக்கப் பண்ணிட்டு போறதா சொன்னேன்.. அவங்க தினம் ஸ்கூல் பஸ்ல வராங்க.. இன்னிக்கு ஸ்கூல் பஸ் ப்ரேக்டவுனாம்.. வகுப்பு வாட்சப்ல மெசெஜ் அனுப்பினாங்க எல்லாருக்கும்.. நாம அந்த வழியா போனா பரவாயில்லையா டேடி? ப்லீஸ்..”

“இதெல்லாம் முன் கூட்டியே என்னிடம் சொல்லணும் ரதிம்மா...”

“ப்லீஸ் அப்பா, அய்ஷா டீச்ச்ர் கிட்ட ப்ராமிஸ் பண்ணிட்டேன்”

“சரி, இந்த ஒரு தடவை மட்டும்.. ஓகே.. இதுனால அவங்களுக்கு தொந்தரவு வரக்கூடாது...”

“தேங்க்ஸ் டேடி”

அதிகாலைக் கனவு மனதில் ஓட, காரை பக்கத்து தெரு வழியாகச் செலுத்தினான். ரதி சொன்ன முகவரி வந்ததும் நிறுத்தினான். வெளியே வந்தவரின் முகம், நடை, உடை, பாவனையைப் பார்த்து மயிர்க்கூச்செறிந்தான். அருணருகே வந்து “ஹலோ, ஐம் அய்ஷா” என்றாள் உமா.




.

அப்பாதுரை :

சில ஆண்டுகளுக்கொருமுறை தமிழ்நாட்டைத் தேடி வரும் சிகாகோ வாசி. முன் போல் ஓட முடிவதில்லை, எழுத முடிவதில்லை, பியேனோ வாசிக்க முடிவதில்லை. இப்போது தான் நினைவுக்கு வருகிறது, பியேனோ வாசித்ததே இல்லையென்று. எனக்கடுத்தத் தலைமுறை சுயமாக இயங்கத் தொடங்கிவிட்டதில் கிடைத்திருக்கும் புதிய சுதந்திரம் உற்சாகம் தருகிறது.

தனி இமெயில் (msuzhi@gmail.com) அதிகம் பார்ப்பதில்லை. என்னை எபி வாட்சப்பிலோ தனியாக வாட்சப்பிலோ பிடித்து விடலாம்.



Back to index ^

# அப்பாதுரை பதில்கள்

## உங்கள் கேள்விகளுக்கு அப்பாதுரை பதில் அளிக்கிறார்

==========

**Karthik Lakshmi Narasimman:**

**முதல் கேள்வி அதென்ன "மூன்றாம் சுழி" ??**

ண - இதுல இடமிருந்து வலமா மூணாவதா இருக்குற உருண்டை. பாக்குறதுக்கு ரெண்டாவது உருண்டை போலவே இருக்கும் ஆனா நாம நம்பிறக்கூடாது. அப்டினு எங்க தமிழய்யா சொன்னாரு. இதுல பாருங்க இதே கேள்விய வேறே தினுசுல கேட்டேன் அவர்ட்ட.. “ஐயாய்யா.. மூணு உருண்டை இருந்தா ண, ரெண்டு உருண்டை இருந்தா ன, ஒரு உருண்டை இருந்தா மட்டும் எ அப்டின்றோமே ஏன் ஐயா?”. அன்னிக்கு துண்டை உதறி வகுப்பை விட்டுப்போனவரு மறுநாள் கணக்கு வாத்தியாராயிட்டாரு.

**Aaranyanivas R Ramamoorthy :**

**அப்பாதுரை எங்கிருக்கிறார்?**

இந்த பதிலில்.

**Hema Vl :**

**அவரது எழுத்துகளைப் பார்த்து நாளாகிவிட்டதே, வேறெங்கும் எழுதுகிறாரா?**

அவ்வப்போது எபி வாட்சப் குழுமத்தில் (GVக்கு பிடித்த) சமையல் சாப்பாட்டு சமாசாரங்களை எழுதுகிறார்... என்று கேள்வி.

**ரேவதி நரசிம்ஹன் :**

**யூ எஸ் வந்தது நன்மை கிடைப்பதாலா?**

பொதுவா நன்மையே. ஓரளவுக்கு மேம்பட்ட வாழ்க்கைத்தரம் இன்னும் அமெரிக்காவில் கிடைப்பது உண்மை ஆனால் அதிசயம் :-)

யாருக்கு நன்மை என்று நினைக்க தோணுது. வந்தவங்களுக்கும் நன்மை. அனுப்பினவங்களுக்கும் நன்மை (நான் ஒவ்வொரு முறை இந்தியாவை விட்டு வெளியேறும் போதும் ஊர் பேர் தெரியாதவர்கள் கூட வழியனுப்புகிறார்கள். நான் யுஎஸ் போறதுல உங்களுக்கு என்ன அவ்வளவு சந்தோஷம்னு கேக்குறேன்?)

ஒவ்வொரு முறை இந்தியா வந்திறங்கும் போது உற்சாகமும் ‘அடடா இதை விட்டுப் போனோமே’ என்ற உணர்வும் ஏற்படும். சரியாக இரண்டு நாளில் மாறி இயல்பாகி விடும். ஒவ்வொரு முறை அமெரிக்கா திரும்பும் போதும் ‘திரும்பப் போகணுமா? பேசாம இந்தியாலயே தங்கிட்டா என்ன?’ என்று நினைப்பேன். அமெரிக்கா வந்திறங்கி இரண்டாவது நாள் காலை நடக்கும் போது ‘நல்ல வேளை.. இந்தியாலயே

**தங்கிடலாம்னு கிறுக்குத்தனமா நினைச்சமே.. பொன்னான பூமினா இதல்லவோ?' என்று தோன்றிவிடும்.**

**இந்த உணர்வு அமெரிக்கா வாழ் இந்திய புலம்பெயர்ந்தோர்க்கு ஏற்பட்டிருக்குறதா தெரியவில்லை.**

**இந்தியாவை மிஸ் செய்வதுண்டா.(இதெல்லாம் எனக்கான கேள்விகள்.அதாவது நான் யோசிக்க வேண்டி.!.)**

**இந்தியரை மிஸ் செய்வதுண்டு - அதாவது இந்தியாவில் இருக்கும் பத்து இருபது இந்தியரை. மற்றபடி இந்தியாவை மிஸ் செய்ய அப்படி என்ன இருக்கு என்று யோசித்தால்... முதல் விரலிலேயே இன்னும் நிற்கிறேன்.**

**நெல்லைத் தமிழன் :**

**வானம் வசப்படும், எண்ணமே வாழ்வு, நூறுவயது வாழ்வது எப்படி என்றெல்லாம் புத்தகங்கள் எழுதும் ஆசிரியர் எவருமே தாங்கள் எழுதியதைக் கடைபிடித்ததாகத் தெரியவில்லையே. அவர்களுக்கே தாங்கள் எழுதுவதில் நம்பிக்கை இல்லையா?**

**நூறு வயது வாழ்ந்த பிறகு எழுதினால் நாற்பது வயதில் போவது எப்படினு எழுதும்படி ஆயிடுமோ?**

**வருடாந்தர சோதனைக்கு வந்திருந்த வாடிக்கையை சோதித்துப் பார்த்த டாக்டர் "உங்களுக்கு எதுவும் இல்லை.. க்லீன் ஹெல்த்.. எண்பது வயசுல எப்படி இத்தனை ஆரோக்கியமா இருக்கிங்க?" என்றார்.**

**"காலைல எழுந்ததும் தினம் ஒரு கப் சாராயம் குடிப்பேன்.. நாள் முழுக்க சீட்டாடுவேன். அதுவா இருக்கலாம்"**

**"ஆச்சரியமா இருக்கே? ஒருவேளை உங்க பரம்பரைல நீண்ட ஆயுளோ? உங்கப்பா இறக்கும் போது அவருக்கு என்ன வயது?"**

**"யார் சொன்னா அவர் செத்தாருனு? நூத்தி ஆறு வயசாவுது அவருக்கு. இன்னிக்கு கூட என்னோட எழுந்து ஒரு கப் சாராயம் சாப்பிட்டு காலைல நடக்கப் போனாரே?"**

**"அட! இத்தனை வயசுல நிக்குறதே அதிசயம்.. நடக்கிறாரா?"**

**"ஆமா டாக்டர்.. எங்க தாத்தா வீடு ஒரு மைல் தள்ளி இருக்கு.. நான் இங்க வந்துட்டேன்ல.. அதனால எங்க தாத்தாவுக்கு சாராயம் குடுக்க போயிருக்காரு அப்பா.. நாள் முழுக்க தாத்தாவோட சீட்டாடிட்டு வருவாரு"**

**மருத்துவ தொழிலை விட்டு சீட்டாட்டக் கிளப் ஒன்று தொடங்கி சாராயம் விற்கத் தொடங்கினார் டாக்டர்.**

**மேற்சொன்னது Bob Hope ஜோக். நூறு வயது வாழ்ந்தார். கடைசி நாள் வரை புகை பிடித்தவர். ஒரு முறை அவரிடம் "Quit smoking today" என்ற புத்தகத்தை ஒரு ரசிகை**

கொடுத்தாராம். உடனே பாப் ஹோப் ரசிகையிடம் பேனா கடன் வாங்கி quitக்கு முன்னால் WHY என்று எழுதி புத்தகத்தில் கையெழுத்திட்டு ரசிகையிடமே கொடுத்தாராம்.

இந்த self help புத்தகங்கள் விடியோக்களில் எனக்கு நம்பிக்கையில்லை. எனினும் இது 3பிலியன் டாலர் சந்தை என்பதால் ஆளாளுக்கு எழுதுகிறார்கள். எந்த வித அனுபவமும் தகுதியும் தேவையில்லாததால் இருக்குமோ?

எனக்கு மிகவும் நெருங்கிய ஒருவர் “அவனவன் இதெப்படி அதெப்படினு புஸ்தகம் எழுதுறான்.. சும்மா இருப்பது எப்படினு நான் புஸ்தகம் எழுதப் போறேன்” என்றார். “எழுதுவானேன்?” என்றேன்

2. பாவம், புண்ணியம் என்பதை ஓரிரு வரிகளில் விளக்க முடியுமா?

ஆன்மாவைப் பிறவியுடன் கட்டிப் போடும் விலங்குகள் எனலாம்.

நியாயமா? உன் பேரென்னனு கேட்டாலே நாலு வரில சொல்றவன் கிட்ட போய் பாவ புண்ணியம் பத்தி ஓரிரு வரியில விளக்கம் கேக்குறிங்களே? 'கொன்றாற் பாவம் தின்றாற் போச்சு'ன்ற தத்துவ விளக்கத்தை வச்சு எத்தனை பதிவு ஓட்டலாம் தெரியுமா?

3. உண்ணும் உணவுக்கும் ஒருவரது நடத்தைக்கும்-குணத்துக்கும் தொடர்பு உண்டா?

விஞ்ஞானம் அப்படித்தான் சொல்கிறது.

உண்ணும் உணவு வகை உண்ணும் முறை உண்ணும் காலம் எல்லாமே ஒருவருடைய குணம் நடத்தைகளைப் பாதிக்கின்றன... என்று நானும் நம்புகிறேன்.

நேரத்துக்கு நேராக உண்ணாதவர்கள் எரிச்சலும் கோபமும் காட்டுவதை நிறைய பார்க்கலாம். (“அவனுக்குச் சோத்தைப் போட்டு தொலை.. காட்டுத்தனமா கத்தறான் பார்” என்று என் ஞானி மாமா அடிக்கடி சொல்வார்).

Cleveland Clinic எனும் அமைப்பு இது பற்றி நிறைய ஆலோசனையும் அறிவுரையும் உலக நாடுகளுக்கு வழங்குகிறது (கோவிட்னால நிறைய பிரபலமாயிடுச்சு இந்த அமைப்பு). இப்ப food psychology பட்டப் படிப்பு வர அளவுக்கு உணவுக்கும் நடத்தைக்குமான தொடர்புகளை அம்பது வருஷமா பிட்டு வச்சுக்கிட்டிருக்காங்க.

கொலைக் குற்றவாளிகளுக்கும் அவர்களின் உணவு முறைகளுக்குமான தொடர்பு பற்றிய சுவாரசியமான ஆய்வு இணையத்தில் கிடைக்கிறது. மாமிச உணவு உண்போர் நடத்தைக்கும் முழுதும் மாமிசம் துறந்த உணவு உண்போர் நடத்தைக்குமான வித்தியாசங்கள் ஆய்வு வழியாக கொடுக்கப் பட்டுள்ளன. டெஸ்டாஸ்டரோன் புகட்டிய மாடுகளிலிருந்து கறந்த பால் முதன் முதலாக FDA அனுமதியுடன் 1975 வாக்கில் சேன் ப்ரேன்சிஸ்கோ நகரில் அறிமுகமானது. (பத்து ஆண்டுகளுக்கு முன் இது கட்டுப்படுத்தபட்டது, நிறுத்தப்படவில்லை). 2005 வாக்கில் அறிவிக்கப்பட்ட இருபது வருட ஆய்வு முடிவுகளை வைத்து 1980க்கு பிறகு பிறந்த அமெரிக்கருள் சேன்ப்ரேன் வாசிகள் அதிகமாக homosexual வாழ்வுமுறையை தேர்வு செய்ததற்கும் அவர்கள் இளமையில் உண்டு

வளர்ந்த டெஸ்டோ பாலுக்கும் தொடர்பு உள்ளது என்கிறது Cleveland clinic. எந்த அளவுக்கு உண்மையோ அறியேன்.

மெய்ஞானமும் இதை பலவாறாக வலியுறுத்துவதாகத் தோன்றுகிறது.


பொதுவாக உணவு ஆத்மாவை அமைதிப்படுத்துகிறது என்கின்றது ஆன்மிகம். மதம் என்று பார்த்தால் இந்து மத பித்ரு சாந்தி முறைகளில் கூட இதைப் பார்க்கலாம். டயத்துக்கு சோறு போடலின்னா பித்ருக்களுக்கு கோவம் வந்து சாபம் குடுத்துருவாங்களாம். அதுவும் அவங்களுக்குப் பிடிச்சதா சமைச்சு போடணும்னு நியமம் வேறே.

புலனடக்கம் தேடுவோர் சாப்பிடும் உணவும் சாப்பிடும் அளவும் சாப்பிடும் நேரமும் முக்கியம் என்று என் பதின்ம வயதில் என் ஞானி மாமா சொல்வார் (பகவத் கீதை உதாரணத்துடன்). எல்லாம் சரிதான் யாருக்கு எப்போ என்ன சொன்னா மண்டைல ஏறும்னு தெரியாம போச்சே ஞானி மாமாவுக்கு..:-) நானே நல்ல பசில உ.கி சாம்பார் வெண்டைக்காய் கறி வீட்டுல செஞ்ச வாழைக்காய் வறுவல்னு வெட்டிட்டிருக்குறப்ப இவர் வேறே.. மாமி குறுக்கீட்டால் பிழைப்பேன். (குழந்தைய சாப்பிட விடறேளா? அவன் என்ன சாமியார் வேலைக்கா போப்போறான்) ஆனால் மாமா சொன்னதெல்லாம் இப்பொழுது உறுத்துகிறது.

பூண்டு வெங்காயம் போன்ற உணவுகள் காம உணர்வுகளை அதிகரிப்பதாக நம் கலாசாரம் சொல்கிறதே?

“ பதார்த்த குணம்” பற்றிய (சித்தர்கள் நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டது) புத்தகம் ஒன்று வாங்கினேன் புத்தகக் காட்சியில். பத்து வருஷமாவது இருக்கும். அவ்வளவாகப் படிக்கப்டாமல் அப்படியே இருக்கிறது. அமைதியான மனம் தீர்க்க சிந்தனை தெளிந்த செயல்பாடு

- இவற்றுக்கு மிளகு எந்த வகையில் உதவுகிறது என்று இந்தப் புத்தகத்தில் இருக்கிறது.




இந்த டாபிக் என் சமீப ஆர்வம். வளவளனு போயிட்டதுக்கு என் அஞ்செழுத்து. (ஓரிரு வரிகளில் விளக்கவும்னு நிபந்தனை போடாததற்கு நன்றி)

**4. அம்மா என்று நினைக்கும்போது நீங்கள் மிஸ் செய்யும் ஒன்று என்ன?**

ஒன்று என்று கேட்டிருப்பதால் +17 என்று பதில் சொல்லமுடியாது இல்லையா?

அம்மா என்று நினைக்கும் பொழுது இந்நாளில் நான் மிஸ் செய்வது உடன் இருக்க முடியவில்லை என்பதே. நான் பாட்டுக்கு ஏதோ கேள்வி பதில் எழுதிட்டிருக்கேன், நீ பாட்டுக்கு அபிராமி அந்தாதியோ என்னவோ பாடிட்டிரு.. ஆனா கூட இரும்மா. அது போதும், வேறே எதுவும் வேண்டாம்.

யாரோ சொன்னார்களே (Faulkner?) என்ன அது?
"I'd just have a Mother so I could say Mother Mother"

அம்மா நினைவு பற்றி சமீபத்தில் நான் ரசித்த கவிஞர் வீரமணி அவர்களின் கவிதை.

## அ...ம்....மா...!

புயலுக்கு
பின்னான மழையிரவு
பொத்தி வளர்த்த
உன்னைத்தான் நினைவூட்டுகிறது.

என் பிள்ளைப்பருவத்து
உறக்கங்கள்
உன்
தலைகோதும் விரல்களால் ஆசீர்வதிக்கபட்டவை.

அலையும்
சருகை பூமியில் இறக்கிவிட
தென்றலாக மாறிவிடும் காற்றைப்போல்
உன்
வலிகள் மறைத்து கதைகள் சொல்லி துயிலவைப்பாய்.

பார்வைகளால் தாலாட்டி
ஸ்பரிசங்களால் பாலூட்டி
இமை தழுவும் உறக்கம்
இரவைக்கடந்தும்
தோள்களிலும்
தூளியிலும்
தொடரும்.

உன் அன்பின்
பெரு நதிகள்
என் கோடை இரவுகளை
குளுமையாக்கி
வழியனுப்பும்.

உன் சிறகுகளின் அரவணைப்பில்
என் குளிர்கால இரவுகள்
கதகதப்பாய்
கடந்து போகும்.

இவையேதும் வாய்க்கப்பெறாத
இந்த இரவில்
உன் நினைவுகளை
மட்டுமே போர்த்திக்கொண்டு
உறங்கிப்போகிறேன்.

**5. திரும்ப பதின்ம வாழ்க்கை வாழ்ந்த இடத்திற்குத் திரும்பி அந்தச் சூழலில்-வீடு, சுற்றுச்சூழல், வாழ இயலுமா?**

இயலும்.

பதின்ம வாழ்க்கை வாழ்ந்த இடத்தில் பதின்ம வாழ்க்கையைத் திரும்ப வாழ இயலுமா என்பது கேள்வியல்ல, சரியா?

அது கேள்வியாக இருந்தால் ஒரு சுவாரசியமான கதை சொல்லியிருப்பேன். ஒ ஹென்றி அல்லது எச் ஜி வெல்ஸ் இருவருள் யாரோ முதலில் எழுதி அடுத்தவர் சுட்டு அதை ப்ரேட்பரி சுட்டு பிறகு நம்ம சுஜாதா சுட்டு "சொந்த பாணியில்" எழுதிய கதை. தன் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்ள விரும்பிய ஒருவன் தன் இளைய வயதுக்கு திரும்பி அங்கிருந்து செப்பனிடும் எண்ணத்தில் கடவுளை வேண்டிக் கொள்கிறான்:

**கடவுளே என்னை 16 வயதுக்கு நான் வளர்ந்த இடத்துக்கு மறுபடி கொண்டு போ. கடவுளும் நல்ல மூடில் இருந்ததால் சரி என்கிறார்.**

**கொஞ்சம் இருங்க, கேட்காத கேள்விக்கு விளக்கமா பதில் சொல்லி உங்களைக் கடுப்படிக்கிறேன் பாருங்க.**

**ஒரு metaphysical பார்வையில் புனரபி ஜனனம் புனரபி மரணம் என்பதும் இதானோ? வாழ்ந்ததையே வாழ்ந்து வீழ்ந்ததையே வீழும் வரமெனக்கு ஏன் தந்தாய் வேலவா?**

**ரஞ்சனி நாராயணன் :**

**வணக்கம். மூன்றாம் சுழியில் உங்கள் கதைகள் பலவற்றைப் படித்திருக்கிறேன். இன்றைக்கும் மனதை என்னவோ செய்வது உங்களது 'தந்தை சொல்'. அந்தக் கதையை எத்தனை முறை படித்திருப்பேன் என்று எனக்கே தெரியாது. பலபேர்களிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். யாருமே இந்தக் கதையை விவாதிக்க முன் வந்தது இல்லை. மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று நினைத்துக் கொள்வேன். எப்படி இந்தக் கரு உருவானது? இதை உங்கள் signature கதை என்பேன்.**

**>>>>> LINK for தந்தை சொல் - post.**

**நிறைய தடவை படித்ததாக நீங்கள் சொல்வதே நெகிழ்ச்சி. அந்தக்கதை (நிச்சயமாகக் கதைதான்) தங்களை வெகுவாகப் பாதித்ததாக இன்னும் சிலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு அன்பர் கதையைப் படித்த விளைவாகத் தன் அப்பாவுக்கு சிரார்த்தம் செய்யத் தொடங்கியதாகவும், விட்டுப்போன காலத்தில் அவர் தந்தைக்கு என்ன பங்கம் உண்டானதோ என்றும் என்னைக் கேட்டு நீண்ட இமெயில் அனுப்பினார் - என்னவோ எனக்கு எல்லாம் தெரிந்தாற் போல். 2010 கட்டத்தில் சென்னை வந்தபோது ஒரு சக பதிவர் என் கைகளைப் பிடித்தும் கொண்டு சில நிமிடங்கள் அழுதார். சங்கடமான கதை.**

**கதையில் நடந்தாற்போலவே தோன்றிய கரு. கனெடிகட்-பாஸ்டன் வழியில் ஏற்பட்ட ஒரு சிறு காலக் குழப்பத்தில் தோன்றிய கதை. எனக்கே தெரியாமல் வண்டி ஓட்டும் பொழுது கண நேரம் மயங்கி விபத்தைத் தவிர்த்து ரெஸ்ட் ஏரியாவில் ஒதுங்கிச் சுற்றுப்புறத்தை நோட்டமிட்ட போது தோன்றிய விவரங்களை வைத்துப் புனைந்தேன்.**

**பெற்றோர், கணவன் அல்லது மனைவி போன்ற உறவுகளை இழக்கும் பொழுது சில நேரம் இழப்பாகத் தெரிவதில்லை. வரமாகத் தெரிகிறது. இதான் கதையின் மையம். மன்னிப்பு என்பது மனித நேயம் அதை எந்த நேரத்திலும் வழங்கும் பக்குவம் மானிட சாரம். இல்லையேல் மானிடப் பிறவியில் அவசியமில்லை என்ற என் எண்ணத்தைக் கதையின் செய்தியாகச் சொல்ல முயன்றேன்.**

**என் அப்பா நினைவு வந்துவிடும் என்பதால் நான் எழுதிய கதைகளில் மிகக் குறைவான முறைகள் படித்த கதை :-).**

என் அப்பாவிற்கும் எனக்கும் இடையே சுமுகமாகத் தீர்வாகாத சில விஷயங்கள் அந்தக் கதையின் சம்பவங்களாக இடம் பெற்றுள்ளன. அடையாளம் கண்ட என்னுடைய மூத்த சகோதரிகளுக்கு இது அதிர்ச்சியாகவே இருந்தது. "அப்பாவை மன்னிச்சுத் தொலைடா.. எத்தனை வருஷமா மனசுல வச்சிண்டிருக்கே?" என்று உடனடி வேண்டுகோள். மற்ற உடன் பிறப்புகளுக்கு எதுவும் தெரியாது. சமூகக் கண்ணியம் கருதி இங்கே நிறுத்திக் கொள்கிறேன். கூடுதல் விவரங்களுடன் உங்களுக்கு தனியாகப் பதில் சொல்லியிருக்கிறேன். என் மனதில் இருந்ததை உங்களிடம் சொன்னதில் சிறு ஆறுதல். கேள்விக்கு நன்றி.

**Geetha Sambasivam:**

**1."பக்தி" "ஆன்மிகம்" இரண்டையும் இந்தக் காலத்தில் அனைவரும் குழப்பிக் கொள்கிறார்களே! அதற்கான வேறுபாடாக எதைச் சொல்லுவீர்கள்?**

ஆஸ்திகம், பக்தி இரண்டையும் குழப்பிக் கண்டதுண்டு. பக்தியையும் ஆன்மிகத்தையும் குழப்பிக் கொள்கிறார்களா? தப்பாச்சே? ஆன்மிகம் தனியாகவே நிறைய குழப்புமே? இதுல பக்தியை வேறே இழுத்து விட்டா மய்ய நாயகன் போல பாய் பிராண்டுற நிலை ஆயிடுமே?

பக்தி சுலபம், ஆன்மிகம் கடினம்.
யார் வேண்டுமானாலும் பக்தியை உணரவோ செயல்படுத்தவோ இயலும். ஆன்மிகம் புரிந்தவரால் மட்டுமே செயலாக்க முடியும் எனலாம். பக்தியில் தேடல் இல்லை. ஆன்மிகம் தேடலன்றி வேறில்லை. பக்தி செலவு, ஆன்மிகம் வரவு எனலாம். பக்தி கண்மூடி. ஆன்மிகம் கண்திறப்பு. பக்தியில் பகுத்தறிவு கிடையாது. பகுத்தறிவில்லாமல் ஆன்மிகம் வராது (என்று நம்புகிறேன்).

பக்தி ஒரு மார்க்கம் அல்லது வழியென்று நினைக்கிறேன். ஆன்மிகத் தேடலுக்கு பக்தி உதவுவதாகவும் படித்திருக்கிறேன். ஆன்மிகவாதிகள் இயல்பாக பக்தி மார்க்கத்தை தழுவியோ உபதேசித்தோ வருவதால் இந்தக் குழப்பம் வந்திருக்கலாம். ஆன்மிகர்கள் பக்தியின் எல்லைகளை அறிந்தவர்கள் என்று நினைக்கிறேன். பக்திக்கு எல்லையுண்டு. ஆன்மிகம் எல்லைகளைக் கடந்தது என்று நம்புகிறேன். கடவுளிடம் தன்னைச் சேர்க்க பக்தி உதவுகிறது. கடவுளையும் தன்னையும் ஒருமிக்க ஆன்மிகம் உதவுகிறது எனலாம்.

பக்தி சாதாரணம்; ஆன்மிகம் அசாதாரணம். ஆன்மிகம் தொட முடியாத நிறைய பக்தர்கள் ஆன்மிக சூட்டில் குளிர் காய்கிறார்கள் - தானும் குழம்பி என் போல சாதாரண பக்தர்களையும் குழப்பியெடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

இது குறித்த இன்னொரு கேள்வி பதில் நினைவுக்கு வருகிறது.

"நாம் ஏன் இத்தனை கடவுள்களை வணங்குகிறோம்? ஒரு கடவுள் இருந்தால் போதாதா?" எனறு ஒருவர் கேட்டார்.

அதற்கு இன்னொருவர் இப்படி பதில் சொன்னார். "நாம் தினம் சாப்பிடுகிறோம். வயிறு நிரம்புவதற்காகத்தானே சாப்பிடுகிறோம். எதைச் சாப்பிட்டால் என்ன? அன்னத்தை மாத்திரம் சாப்பிட்டால் கூட, வயிறு நிரம்பி விடுகிறது. அநேகவிதமான பதார்த்தங்கள்

எல்லாம் எதற்காக என்று கேட்டால் என்ன சொல்வது? வயிறு நிரம்ப வேண்டும் என்பது சரி. ஆனால் நாக்கு என்ற ஒன்று இருக்கிறது அல்லவா? அது ருசி பார்க்கிறது. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு பதார்த்தத்திலே ருசி இருக்கிறது. அந்த ருசியை அனுசரித்து அவரவரும் சாப்பிடுகிறார்கள். அதனால் வெவ்வேறு ருசியுள்ளவற்றைச் சுவைக்கிறார்கள். வயிறு நிரம்ப வேண்டும் என்ற அன்றாட உணர்வைப் பெறுவதற்கே இத்தனை வகைகள் தேவைப்படும் பொழுது அன்றாடம் என்ற வரம்பைக் கடந்த பரம்பொருளை உணர எத்தனை வகை தியானம் எத்தனை வகை வழிபாடு எத்தனை வகை மூர்த்தங்கள் தேவைப்படும் என்று கணக்கிட்டுப் பலனில்லை"

கேள்வி கேட்டவரின் உணர்வு நிலைக்கும் பதில் சொன்னவரின் உணர்வு நிலைக்கும் மிகுந்த வேறுபாடு இருப்பது தெரிகிறதா?

கேள்வி கேட்டவர் பக்திமான்.
பதில் சொன்னவர் ஆன்மிகர்.

பதில் சொன்ன ஆன்மிகரை அனேகருக்கும் தெரிந்திருக்கும். காஞ்சி மகா பெரியவர்.

ஆளாளுக்கு பெரியவாளை உருட்டுறப்ப நானும் கொஞ்சம் உருட்டுனா கோச்சுக்கவா போறார்?

மகா பெரியவா ஆன்மிகரா பக்தரா?
மகா பெரியவரின் காமாட்சி பக்தி என் வயதினருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். என்னை விட மூத்த தலைமுறைகளுக்கு எக்கச்சக்கமாகத் தெரிந்திருக்கும். மகா பெரியவரின் ஆன்மிக வலிமைக்கு அவருடைய அசைக்கமுடியாத பக்தி ஒரு ஆதாரமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஏதோ ஒரு கட்டத்தில் ஆன்மிக உணர்வைப் பெற்ற தருணத்தில் பக்தியைத் துறந்திருப்பார் என்றே நினைக்கிறேன். எனில் பக்தி ஒரு பொருட்டில்லாது போயிருக்கும் என்கிறேன். அவருடைய காஷ்ட மௌன நிலையை பார்த்தவர்கள் பக்தி புத்தி மனம் என்று எதையும் ஏற்காத அந்த நிலையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவரை ஆன்மிகப் பெரியவர் என்று போற்றுகிற அளவுக்கு காமாட்சி பக்தர் என்று அடையாளம் காண்பதில்லை.

ஆன்மிகர்களைத் தனியாக அடையாளம் காண முடியும். சைனாவில் இறங்கிய அன்னியப் பாமரனின் பார்வை போல பக்தர்கள் மட்டும் எல்லாரும் ஒரே மாதிரித் தோன்றுகிறார்கள்.

இன்னும் எழுதலாம்.. எழுதினா கேஜிஜி சார் இனிமே ஒரு கேள்வி கூட என் பக்கம் அனுப்ப மாட்டார். என்னய்யா இது.. எதுக்கும் ஒரு அளவு வேணாம்?

**2."அவனன்றி ஓரணுவும் அசையாது!" என்பதை நீங்கள் உணர்ந்த தருணம் எது? ரொம்பத் தனிப்பட்ட காரணங்களாக இருந்தால் பதில் சொல்ல வேண்டாம். விட்டுடுங்க. ஆனால் உணர்ந்திருந்தால் அதை மட்டும் சொன்னால் போதும்.**

ஒரு கதை சொல்லவா? (ஏண்டா டேய்..கேள்வி கேட்டனா, கதை கேட்டனா? க்ர்ர்ர்)

அப்பர், சம்பந்தர்னு ரெண்டு சைவ ஆசாமிங்க. சிவன் பேர்ல சோக்கா பெரிய பாட்டெல்லாம் பாடினவங்க. ரெண்டு பேரும் எப்படியாவது சிவனைப் பார்த்தே ஆவணும்னு துடிக்கிறாங்க. பாட்டா பாடுறாங்க, கோவிலா சுத்துறாங்க.

ஒரு சிவன் கோவிலுக்குப் போனா அது பூட்டிக் கிடக்குது.

சுத்தியிருந்த மக்களைப் பாத்து கதவைத் தொறங்கப்பானு ரெண்டு பேரும் கடுப்பா சொல்ல ஜனங்க இடியாச் சிரிச்சு, “அட ஆசாமிங்க்ளா.. இது சாதா பூட்டில்லே.. வேத பூட்டு.. எங்க யார் கிட்டயும் சாவி கிடையாது.. உள்ள இருக்குற சிவன்ட்டதான் சாவி இருக்குது.. அவனே வந்து கதவு திறக்குற வரைக்கும் சிவனேனு கிடங்க.. ஆமா.. நல்லா பட்டை பூசிகினு கொட்டை உருட்டிகினு உங்க ரெண்டு பேரை பாத்தா.. ஆண்டி மாதிரி தெரியுதே.. ஒரு வேளை நீங்க வேண்டிகினா உள்ள இருக்குற ஆண்டி வந்து கதவைத் திறப்பாரு”னு நக்கலா சொல்லிடறாங்க..

சொம்மாவே பாடுறவங்க இப்ப சொம்மா இருப்பங்களா?

அடிச்சுதுரா ஜாக்பாட்டுனு கோவில் கதவைத் திறக்க பாட்டா பாடுறாரு அப்பரு. கதவு மூடியே இருக்குது. சரி ஒத்துபா நான் பாடுறேன்னு சம்பந்தர் வந்து ஒரு பாட்டு பாடினதும் பூட்டெல்லாம் கபால்னு உடைஞ்சு கதவு தொறக்குது..

“ஆகா.. சம்பந்தா சம்பந்தம் இல்லாம பாடுற சம்பந்தா.. இப்படி கதவைத் தொறந்து என் கண்ணைத் தொறந்துட்டியே.. நானா அப்பரு? இல்லை நீதான் அப்பரு, நான் வெறும் லோயரு”னு சொல்லி சம்பந்தர் கால்ல விழுறாரு. அதுக்கு சம்பந்தர் “அடடா.. நீங்க பாடின பத்து பாட்டுதான் பூட்டை உடைச்சது.. திகட்டாம ஒண்ணு போதாதுனு பத்து பாட்டு கேட்ட சிவன் பூட்டை உடைச்சாரு.. ஆனா நான் பாடின ஒரு பாட்டைக் கேட்டு பொறுக்காம போதும்டா ஆசாமினு கதவைத் திறந்துட்டாரு.. இது தெரியாம இப்படிப் பேசலாமா? இந்தாங்க பிடிங்க அப்பரு பட்டம்”னு சம்பந்தர் அப்பர் கால்ல விழுறாரு. அப்பர் விடாம “இல்லே நீங்கதான் அப்பரு”னு சம்பந்தர் கால்ல விழுறாரு. “இல்லே அப்பர் தகுதி உங்களுக்கு தான்”னு சம்பந்தர் அப்பர் கால்ல விழுறாரு.

“அடேய்.. ஆண்டிங்களா.. மாத்தி மாத்தி ஒருத்தர் கால்ல விழுந்துட்டுறக்கணும்னா ஜப்பான் போங்கடா.. கதவு திறந்திருக்கறப்ப எங்களையாச்சும் உள்ள விடுங்க”னு ஜனங்க சொல்லவும் கோவிலுக்குள்ள சிவனைப் பாக்கப் போறாங்க ரெண்டு பேரும்.

உள்ள சிவனைப் பாத்ததும்.. ஆசாமி தானே.. அடிச்சுக்கிறாரு அப்பரு. “ஏன்யா பரதேசிப் பண்டாரம்.. நான் எங்கல்லாம் சுத்தி உன்னைப் பத்தி எத்தினி பாட்டு பாடியிருக்கேன்? இங்கயும் நான் பாடின பத்து பாட்டுக்கு திறக்காம அந்தாள் பாடின ஒரு பாட்டுக்கு ஓடியாந்துட்டியே? இது நியாயமா முண்டைக்கண்ணா?”னு ரொம்ப கடுப்பா உருகி உருகிக் கேக்குறாரு.

சம்பந்தரோ சிவனைப் பாத்து “சடை.. ரொம்ப தேங்க்சுபா.. அந்தாளாட்டம் பத்து பாட்டு பாட வெக்காம ஒரே பாட்டுல ஓடியாந்து என் பேரை ரிப்பேர் பண்ணாம உட்டியே”னுறாரு. அதுக்கு அவர் காதுல மட்டும் கேக்குறாப்ல ஒரு குரல் பேசுது “நீ பாடி கதவு திறந்துச்சுனா நினைச்சே? அடக்கேண.. இதுக்கு பதில் நான் அப்பர் கனவுல சொல்றேன் கேட்டுக்க.. அவன் பாட்டுக்கு பாடுறான்னு நினைக்காதே.. அவன் பாட்டுக்கு

என்னையே பாட்டுக்கலாம்.. சே.. பாத்துக்கலாம்.. கதவு இன்னா கதவு"னு சொல்லிட்டு சுச்சாபாயிடுது.

உடனே சம்பந்தர் "உனக்கு ஏதாவது கனவு வந்துச்சா அப்பரு? மேட்டரு இன்னானு சொல்லு"ன்றாரு. சொல்லி வச்சாப்புல அப்பருக்கு ஒரு ஞானப் பிரகாசம் கிடைக்குது. அப்பராட்டமே பட்டை அடிச்சிகினு ஒரு உருவம் "வாய்மூரில் தொடரவா"னு சொல்லிட்டு மறைஞ்சுடுது.

ஷாக்காயிடுறாரு அப்பரு. உடனே எடுத்து உடுறாரு ஒரு பாட்டை.
"மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி உன்னி உறங்குகின்றேன் உனக்கு
தன்னை வாய்மூர் தலைவனாமா என்று
என்னை வாவென்று போனார்"னு சொல்லி சம்பந்தர் கையைப் பிடிச்சு இழுத்துட்டு அடுத்த நடராஜா சர்வீஸ்ல இடம்பிடிச்சு டாக் டாக்னு ரெண்டு பேரும் திருவாய்மூருக்குப் போய் அங்கே சிவனை நேரில பாத்ததோட இல்லாம சாயந்திரம் கோவில் மண்டபத்துல சிவன்-பார்வதி க்ரூப் டான்ஸ் முதல் வரிசைல உக்காந்து பாத்து சந்தோசமாயிட்டாங்க.
இதான் கதை.

அப்புறம் இன்னொரு சம்பவக் கதை.

என் அக்னிஹோத்ரி ஞானி மாமா. விஷ்ணு சஹஸ்ரநாம க்ளாஸ் எடுப்பாரு தினம் அவங்க பசங்களுக்கு.. சில சமயம் நான் மாட்டிக்குவேன். விஷ்ணுவை ஆயிரம் விதமான பேர் சொல்லிக் கூப்பிடறாங்க இதுல என்ன பெருமைனு தேங்காய் சீனிவாசன் போல கேட்பேன்.. அவுரு கண்டுக்காம என்னை நடுவுல உக்கார வச்சு வகுப்பெடுப்பாரு. இதுல ஒரு தடவை நான் ஏதோ தெரியாத்தனமா கவனிச்சதை கவனிச்ச மாமாட்ட சும்மா ஒரு கேள்வி கேட்டு வச்சேன். அதுக்கு மாமா "க்ஷேத்ரஞானினா சாதாரணம் இல்லேடா. ஆழமான அர்த்தம் இருக்கு.. நீ இந்தக் கேள்வி கேட்டாலும் நீயா கேட்கலடா"னு பதில் சொல்ல ஆரம்பிச்சாரு. அவுரு இப்படித்தான் பேசுவார். அவர் சொன்னதை நினைக்குறப்பல்லாம் சில சமயம் மய்யரே பரவாயில்லை இந்த அய்யருக்குனு தோணியிருக்கு. க்ஷேத்ரஞானிக்கு பொருள் தெரிஞ்சுக்கிட்டேன்னு வைங்க.

கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் கேட்காத புராணம் பாடுபவர் மீது எரிச்சல் வரும் எனக்கு என் அன்றாட வாழ்வில் :-).

அதனால் உங்கள் கேள்விக்கான நேரடி பதில்: June 4, 2017 அன்று காலை ஏழு மணி அளவில் உணர்ந்தேன்.

ஆனால் உங்க கேள்விக்கான அசல் பதில் மேற்சொன்ன இரண்டு கதைகளில் (?) இருக்குனு நினைக்கிறேன்.

June 4 ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஏகாதசி. தேதி, கிழமை, திதி பற்றிய இத்தகைய சாதாரண விவரங்களின் அசாதாரண பின்னணியைப் பின்னால் இன்னொருவர் துணையுடன்

புரிந்து கொண்ட போது ஏற்பட்ட உணர்வுகளின் அரைகுறை வரைபடம் நான் எழுதத் தொடங்கி நிறுத்தியிருக்கும் புள்ளி.

நேரில் சந்திக்கும் போது மேலும் பேசலாமே? இந்த உணர்வைப் பற்றி நிச்சயம் உங்களிடம் சொல்லியே ஆக வேண்டும் :-)
(சும்மா விடலாமா)

*** *** *** ***

அப்பாதுரை : " இது வரை அனுப்பின கேள்விகளுக்கு பதில் அனுப்பிட்டேன். ஆனா பதில் சரியானு மார்க் வந்தாத் தான் தெரியும்.

**எங்கள் கேள்வி : " யார் போடணும் மார்க்? "**

அப்பாதுரை : " என் தமிழ் டிச்சர்ட ஒரு தடவை இதைக் கேட்டேன்.

'பதில் எழுதுறது தான் உன் வேலை, யார் திருத்தினா உனக்கென்ன? நீயா சம்பளம் குடுக்குறே எனக்கு'னு கேட்டார்.

குரோம்பேட்டை அரசுயர் பள்ளியில் எங்கள் 9ம் வகுப்பில் மொத்தம் 60 பேரோ என்னவோ.. அதுவும் தமிழ் II என்று ஒரு வகுப்பு. அதில் இரண்டு செக்‌ஷன்களும் சேர்ந்து நூறு பேருக்கு மேல் ஆகிவிடும். தமிழ் II வில் ரோமன் எழுத்துருவை சேர்க்க கழகத் தமிழ்க் காவலர்கள் எப்படி அனுமதித்தார்களோ தெரியவில்லை.

தமிழ் டீச்சருக்கு ரெண்டு மனைவிகள். அவங்கதான் தமிழ் II விடைத்தாள் திருத்துவாங்கனு கசமுசவா பேசிக்குவாங்க. ஒரு நாள் அதான் அவரிடமே கேட்டுவிட்டேன்.

இப்போது யோசித்து பார்த்தால் அது சாத்தியமே என்று தோன்றுகிறது. 100 விடைத்தாள்களை 4 நாளில் எவன் படிச்சு திருத்துவான்.. அதுவும் அரசாங்க வாத்தியார் வேலைல இருந்துட்டு..

Back to index ^

## பொங்கல் பண்டிகை கண்களுக்கும் + வயிற்றுக்கும் : கமலா ஹரிஹரன்.



அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள். இந்த நன்னாள் அனைவருக்கும் நன்மைகளை கொண்டு வரட்டும். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது முதுமொழி. அதன்படி உலகத்தை தன் விருப்பப்படி ஒருவருட காலமாக அசைத்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த கொடிய தொற்று நோய் முற்றிலும் அகன்று, மக்கள் இயல்புடனும், நலமுடனும் வாழ இறைவன் நல்ல வழியை இந்நாளிலிருந்து தர வேண்டுமாய் அனைவரும் மனமாற பிரார்த்தித்துக் கொள்வோம்.🙏.

இந்நன்நாளில் கண்களுக்கும், வயிற்றிக்குமாய் ஒரு சிறு விருந்து. இவ்விரண்டும் நிறைந்தால், மனதும் ஆனந்தமான நிறைவடையும் அல்லவா?

காக்கும் கடவுள் கணேசனை மனமுருக முதலில் அழைப்போம்.. தூக்கிய துதிக்கையே துணை நமக்கு என நம்புவோருக்கு, அவனருள் கண்டிப்பாக என்றும் உண்டு.🙏. 🙏.



அடுத்து செங்கதிரும்...



முழுமதியும்......



**சேர்ந்தணைந்த சுந்தரனின் அருளும் கண்டிப்பாக நம் வாழ்வில் வளம் சேர்க்கும். 🙏.🙏.**



**பிறகு மலர்ந்து மணம் வீசி வரும் பொங்கல் திருநாளை, மங்களகரமான கோலங்கள் இட்டு பசும் மஞ்சளோடு வரவேற்கலாம்..**





முதலில் இனிப்பான பால் கொழுக்கட்டைகள்.

பச்சரிசி மாவை வென்னீர் சேர்த்து வேக வைத்துக் கொண்டு, சிறு உருண்டைகளாக செய்து, ஆவியில் வைத்து ஓரளவு வேக வைத்துக் கொண்டு, பால், மற்றும் கொஞ்சம் தேங்காய் பாலுடன், சேர்த்து மீண்டும் கொஞ்சம் கொதிக்க வைத்ததும்,வேண்டிய வெல்லமும் சேர்த்து, அந்த வெல்ல வாசனை போகுமளவிற்கு (வெல்லம் முழுமையாக கரைந்தால் அதுதான் அடையாளம்) கொதிக்க வைத்துக் கொண்டு ஏலக்காய் பொடி சேர்த்து இறக்கினால், இனிப்பான பால் கொழுக்கட்டைகள் தயார்.





அடுத்து இனிப்பான சேமியா கேசரி, மற்றும் உருளை கிழங்கு போண்டா.
சேமியாவை தேவைக்கேற்ப எடுத்து வறுத்துக் கொண்டு, அத்துடன் மூன்று மடங்கு தண்ணீர் சேர்த்து, அத்துடன் ஒரிரு சிட்டிகை கேசரி பவுடரையும் சேர்த்த பின், நன்றாக வேக வைத்துக் கொண்டு, சர்க்கரை ஒன்றரை பங்கு அதனுடன் சேர்த்து நெய் விட்டு அடி பிடிக்காமல் கிளறி ஏலக்காயும் சேர்த்த பின் மு. பருப்பு, உலர்ந்த திராட்சைகளை நெய்யில் வறுத்து போட்டு இறக்கினால், சுவையான சேமியா கேசரி பார்க்கவே அழகாக இருக்கும்.



உ. கி நான்கைந்தை வேக வைத்துக் கொண்டு, தோல் நீக்கிய பின், பொடிதாக அரிந்த வெங்காயம், ப. மிளகாய் இவற்றை எண்ணெய்யுடன் வதக்கி, அத்துடன் உதிர்த்த உ. கி சேர்த்து, உப்பு, காரப்பொடி கலந்து நன்கு வதக்கி, ஆறியதும் சிறு உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.
கடலைமாவையும், அரிசி மாவையும், பஜ்ஜி மாவுபோல கலந்து வைத்துக்கொண்டு, அந்த உ. கி உருண்டைகளை முக்கி எடுத்து எண்ணெயில் பொரித்தெடுத்தால், உகி போண்டா தயார். கூடவே தேங்காய் சட்னியும் செய்து சுடச்சுடப் பரிமாறலாம்...



அடுத்து இலையில் பரிமாற சேப்பங்கிழங்கு கறி, ரோஸ்டாக வேண்டுமென்றால் இப்படிச் செய்யலாம்.

சேப்பங்கிழங்கு மண் போக நன்றாக அலம்பி குக்கரில் வேக வைத்து எடுத்து நன்கு ஆறியதும், தோல் நீக்கி ஒன்றிரண்டாக நறுக்கிக் கொள்ளவும்..கடலை மாவை, கொஞ்சம் அரிசிமாவுடன் கலந்து உப்பு, மிளகாய்த்தூள், பெருங்காயத்துடன் பஜ்ஜி மாவு மாதிரி கரைத்துக் கொண்டு, அதில் சேப்பங்கிழங்கு துண்டுகளை முக்கி எடுத்து அடுப்பில் காயும் எண்ணெய்யில்
பொரித்தெடுத்தால் நன்றாக ரோஸ்டாக கரகரவென்ற சுவையுடன் வரும். எண்ணெய் அதிகம் சேர்க்க விருப்பமில்லாதவர்கள் கடாயில், கொஞ்சம் எண்ணெயில் முக்கி எடுத்த மாவுடன் கிழங்குகளை ஒன்றிரண்டாகப் போட்டு சிறு தீயில் வைத்திருந்து அடிக்கடி திருப்பி கொடுத்து கரகரப்பாக எடுக்கலாம். பொறுமையுடன் இதை அனைத்தையும் முடிக்க கொஞ்சம் நேரமாகும்.



அடுத்தாக இலையில் பரிமாற இரண்டாவது கறியாக புடலங்காய் உசிலி செய்யலாம்.

குருவி புடலங்காய் இரண்டோ, மூன்றோ வாங்கி நன்கு அலம்பிய பின் பொடிதாக நறுக்கி, உப்பு, மஞ்சள்தூள் சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும். து. ப அரை டம்ளர், க. ப இரண்டு, மூன்று பெரிய ஸ்பூன் அளவு சேர்த்து அலம்பி ஊற வைத்தபின், அத்துடன் சிகப்பு மிளகாய், ப. மிளகாய், உப்பு பெருங்காயம் கறிவேப்பிலை சேர்ந்து மிக்ஸியில் அரைத்துக் கொண்டு அதை இட்லி தட்டுக்களில் வேக வைத்து உதிர்த்த பின், கடாயில்,

தேங்காய் எண்ணெய் விட்டு, கடுகு. உ. ப தாளித்து உதிர்ந்த பருப்புக் கலவையை நன்கு உதிர்த்துக் பிரட்டி கொண்டு அத்துடன் வெந்த புடலங்காய்களைப் போட்டு அடுப்பை சிம்மில் வைத்து பிரட்டி எடுத்தால் அருமையான புடலங்காய் உசிலி தயார்.



இத்துடன் வாழைப்பூ வடையும் செய்தால் இரண்டு இனிப்புடன் நான்கு காரம்.
வாழைப்பூவை கள்ளன் ஆய்ந்து நன்கு அலம்பி வைத்துக் கொள்ளவும். , ஏற்கனவே ஊற வைத்த, அரை கிளாஸ் பச்சரிசியை, உப்பு, மி. வத்தல், ஒன்றிரண்டு பச்சை மிளகாயுடன் கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும். அத்துடன் ஊற வைத்த ஒரு கிளாஸ்( இது மொத்தமாக கலந்த கலவை) நான்கு பருப்பு வகைகளையும்,(அதாவது உ. ப, து. ப, க. ப, பா. பருப்பு வகைகளையும்) அரைத்துக் கொண்டு பெருங்காயத்தூள் கறிவேப்பிலை சேர்த்து, அத்துடன் அலம்பி வைத்திருக்கும் வாழைப்பூவையும் அரைத்தெடுத்து கொண்டு, அனைத்தையும் கலந்த பின் சிறுவடைகளாக தட்டி எண்ணெய்யில் பொரித்தெடுத்தால் சுவையான வாழைப்பூ வடை தயார்.



பொங்கலன்று, வழக்கமான இனிப்பான சர்க்கரை பொங்கலுடன், வெண் பொங்கலும் தயாரித்து கொண்டு, அதனுடன் மேற்கூறிய வகைகளையும் செய்து வைத்துக் கொண்டு பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என வேண்டியபடி, இறைவனுக்கு படைத்த பின் அனைவரும் உண்டு மகிழலாம்.

பொங்கலன்று இத்தனை ஐயிட்டங்களா...? எனத் திகைக்க வேண்டாம். சாதரணமாக அன்று மதிய சாப்பாடாக சர்க்கரை பொங்கல், வடை, அப்பளம், இரண்டு கறி, கூட்டு,

தயிர் பச்சடி, ரசமென சாப்பிடுவது அன்றைய நாள் தொட்டு இருந்து வரும் பாரம்பரிய பழக்கம். ( இப்போது அந்த பழக்க வழக்கங்கள் மங்கி வருகிறது. செய்யவும் நேரமில்லை. சாப்பிடவும் முடியவில்லை.) அதனால்தான் அப்போதெல்லாம் கிராமங்களில், பொங்கலன்று "பால் பொங்கியாச்சா.. வயிறு வீங்கியாச்சா.. " என்று கேட்பதும் ஒரு வழக்கம். இதில் சற்று வித்தியாசமாக காய்கறிகளை வைத்தே இப்படி செய்யலாம் (இந்த ஒவ்வொன்றையும் இப்படி செய்ய அன்றைய தினம் நேரம் கிடைப்பதும் அரிதுதான்) என இப்படி இத்தனை சமையல் தினுசுகளை பதிவிட்டேன்.
இன்னமும் என் விருப்ப இனிப்பான மைசூர் பாகையும் படங்களுடன் செய்முறையாக இதனுடன் இணைக்க மறந்து விட்டேன். அதையும் இணைக்கலாமென்றால்....... (ஆகா.. இதென்ன எல்லோரும் எங்கே ஓடுகிறீர்கள்...! ஹா.ஹா.ஹா சும்மா ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன். இல்லை.. .இல்லை.... இவ்வளவே அதிகம். மேலும் இரு இனிப்புக்களே, அதுவும் அன்றைய விஷேட இனிப்பான சர்க்கரைப் பொங்கலுடன் போதுமென்று நினைக்கிறீர்களா..! சரி. சரி.. 👍👍 .)

பி. கு... அன்றைய தினம் உத்தராயண புண்ணியகாலம் என்பதினால், வடை, போண்டா போன்றவற்றிக்கு வெங்காயம் தவிர்ப்பவர்கள் அதை தவிர்த்து செய்து கொள்ளலாம். ஏனென்றால், இதில் சில எண்ணெய் பலகாரங்கள் எப்போதோ எங்கள் வீட்டில் மாலை நேர சிற்றுண்டிக்காக தயாரித்தது. அந்தப் படங்கள், விவரணைகளுடன் இந்தப் பொங்கல் சிறப்பு(சிறப்பிதழு)டன் "நானும் வருவேன்" என பிடிவாதமாக வந்து சேர்ந்து கொண்டது. சரி.. போனால் போகிறதென தவிர்க்க முடியாமல், நானும் அவைகளையும் சேர்த்து பகிர்ந்து கொண்டேன்.

இரண்டாவதாக நாம் வாழும் இந்த மண்ணுக்கு நன்றி சொல்லும் விதமாய் மண்ணுக்கு மேல் விளையும், பயிர்கள், செடி, கொடிகள் நமக்குத் தரும் காய்கறிகள், பொங்கல் பண்டிகையை சிறப்பிக்கும் கரும்பு, பூக்கள் பழம், வெற்றிலைப்பாக்கு, மஞ்சள் இலைக்கொத்துகள், மாவிலை, வேப்பிலை, வாழையிலை, போன்றவற்றிக்கு முக்கியத்துவம் தருவது போல், மண்ணிற்கு அடியில் விளையும் காய்கறிகளான கிழங்கு வகைகளையும் பிரியத்துடன் இன்றைய தினம் (பொங்கலன்றும், அதன் மறுநாளும், ) உணவில் சேர்ப்பதை அவசியமாகவும். வழக்கமாகவும் கருதுவோம். எனவேதான் இதன் பேச்சுக்களுக்கு மதிப்பளித்தேன். ("எங்களை வைத்துதான் இந்தப் பதிவே....அதை மறந்து விடாதே... ரொம்பவும் அலட்டிக் கொள்ளாதே.. ...! போதும்.. போதும்..!! உன் பிர(பரி)தாபம் .. " என்று அவைகள் கொஞ்சம் மெதுவாக இல்லாமல், சத்தமாகவே கோபத்துடன் முணுமுணுப்பது என் காதுகளில் மட்டுந்தானா ? இல்லை, உங்களுக்குமா ? ஆனால், உங்களுக்கு அது ஏற்கனவே கேட்டிருக்கும் எனவும் ஐயமுற நினைக்(நம்பு)கிறேன். 😀 😁😁 . )

எப்படியிருந்தாலும் இந்தப் பதிவு, சிறப்பாக 👌 உள்ளதாவென உங்களிடமிருந்து அன்புடனான 👏👏 தட்டல் கருத்துக்களை எப்போதும் போல் ஆவலுடனும், ஆர்வத்துடனும் எதிர்பார்க்கும் உங்கள் சகோதரி.... கமலா ஹரிஹரன்.
அனைவருக்கும் மீண்டும் நன்றியுடன் கூடிய என் அன்பான பொங்கல் நல்வாழ்த்துக்கள். 🙏. 🙏.

= = = = = =

கட்டுரை ஆசிரியர் குறிப்புகள் :
பெயர் : கமலா ஹரிஹரன்.
எனக்கு கதைகள் எழுதுவது என்றால் சிறு வயதிலிருந்தே மிகவும் பிடித்தமானது. ஆனால் "நாம் கற்றதோ கைமண்ணளவு இதுவெல்லாம் எப்படி சாத்தியமாகப் போகிறது.. வெறும் கனவுதான்" என வாழ்ந்து வந்த என்னை என் கனவுடன் என் பெயரையும் இணைத்து, கணினியில் தட்டச்சு பழக்கத்தை கற்றுத்தந்து, எனக்காக வலைப்பூ - (https://kamalathuvam.blogspot.com) ஒன்றை தயாரித்து, என்னை வலைதளத்தில் உலாவ விட்ட என் வாரிசுகளுக்கு முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன். அப்படி கற்பனையில் உருவாகிய என் எழுத்துகளையும் விரும்பி (அப்படி வேறு உனக்குள் நினைப்பா? என மனசாட்சி கூவுவதை கூறாமலிருக்கவும் முடியவில்லை:))) படித்து அதற்கு நல்ல கருத்துரைகளை தந்து என்னை இத்தனை வருடங்களாக வலைத்தளத்தில் கட்டி காப்பாற்றி வரும் என் அன்பு சகோதர சகோதரிகளுக்கு , இன்னமும் நான் எத்தனை பிறவிகள் எடுத்து, எவ்வளவு நன்றிகள் சொன்னாலும் போறாது. ( ஆகா... இவர்களின் பதிவுகளை விட இது பெரிய கொடுமையப்பா என நீங்கள் புலம்பினாலும். . என் எண்ணம் இதுதான்... ஹா ஹா ஹா) உங்களுகெல்லாம் என் பணிவான நன்றிகள்.. ..🙏🙏🙏.
நன்றியுடன்
கமலா ஹரிஹரன்.

வலைப்பூ முகவரி : https://kamalathuvam.blogspot.com/
email : kamalathuvam@gmail.com

Back to index ^

# நான் ரேணு - சிறுகதை :: கீதா ரெங்கன்

'எனக்கு விடுதலை வேணும் வாங்கித் தருவீங்களா?'

"ஆன்டி மேய்ன் ரேணு. முஜே ரிஹாயி சாயியே. வாங்கித் தருவீங்களா? (நான் ரேணு. எனக்கு விடுதலை வேணும்.)

இதுதான் என்னைப் பார்த்ததும் அந்தச் சின்ன பெண் சொன்ன முதல் வாக்கியம். நெற்றிப் பொட்டில் நேரடியாகத் தாக்கிய அதிர்வு. பல பெண் குழந்தைகளின் பிரதிபலிப்பாகத் தெரிந்தது.

அந்தக் கிராமத்தில் பணிக்காக ஒதுக்கப்பட்ட வீட்டில் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தேன். 5 மாதங்களாக பாண்டமிக் லாக் டவுன் விதிகள் தளர்த்தப்பட்டதும் பணி தொடங்கியது. வந்து ஒரு நாள் கூட ஆகியிருக்காத நிலையில் வீட்டுக் கதவு தட்டும் சத்தம்.

நான் கை கழுவிவிட்டு மாஸ்க் அணிந்து கொண்டு முன்பக்கம் வந்து பார்த்த போது அந்தக் குட்டிப் பெண். அவள் சொன்னதுதான் அந்த முதல் வரி. விடுதலை! குட்டிப் பெண்ணிடமிருந்தா இத்தனை பெரிய வார்த்தை? அதுவும் புதிய மனுஷி என்னிடம்.

சல்வார் கம்மிஸ். துப்பட்டாவால் கழுத்தைச் சுற்றி தலையில் முக்காடிட்டிருந்தாள். நெற்றியில் பொட்டு. மூக்கிலிருந்து தழைத்திருந்த மாஸ்க். மூக்குத்தி தெரிந்தது. கை நிறைய கண்ணாடி வளையல்கள். காதில் டோலாக்கு. கண்களின் விளிம்பில் கண்ணீர். எதையோ சொல்ல நினைக்கும் உணர்வில் துடித்த உதடுகள். உடல் நலிந்திருந்தது. வயது ஒரு 10, 11 இருக்கலாம். அந்த வயதிற்கும் உடம்பிற்கும் ஒவ்வாத மார்பு. குழந்தைத்தனம், துடிப்பு, குறும்பு எதுவும் இல்லை. மனதில் சிறு வேதனை எழுந்தது.




"அப்னே க்யா பூச்சா?" – (என்ன கேட்டே நீ?) உறுதி செய்து கொள்ளுவதற்காகக் கேட்டேன்.

என் கண்களை நேருக்கு நேர் பார்த்தவளின் கண் மணிகள் இடமும் வலமும் வேகமாக உருண்டிட "ரிஹாயி" என்றாள். குரலில் கோபமும், வெறுப்பும் வெளிப்பட்டது. ரிஹாயி என்ற வார்த்தை எல்லாம் அவளுக்கு எப்படித் தெரிந்தது?

சாதாரணமாகவே பல கிராமங்களில் சிறிய பெண் குழந்தைகளையும் வீட்டு வேலைக்கு அனுப்புவதுண்டு அப்படியிருக்க இப்போதைய லாக்டவுனில் வேலையும் இல்லாத நிலை, பள்ளிகளும் இல்லாததால் வயிற்றுப் பிழைப்பிற்காகக் குழந்தைகளை விற்கிறார்கள் என்று நான் பணி புரியும் அமைப்பிற்கு வந்த தகவல்.......கடவுளே! அப்படி இருக்குமோ?

"ரிஹாயினா என்னனு தெரியுமா? எந்த க்ளாஸ் நீ? இப்ப ஸ்கூல் இல்லைன்றதுனால வீட்டு வேலைக்கு உன்னை அனுப்பறாங்களா?"

"..........."

என்னையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்கள் அப்போது எதையோ வேண்டுவது போல கண்களிலிருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. தலை குனிந்தது. "ரிஹாயி வேண்டும்" என்றவள் எதற்காகத் தயங்குகிறாள்? போட்டு வாங்க வேண்டும். இப்படியானவர்களிடம் ஒரு வார்த்தை ட்ரிகர் போதும் கொட்டிவிடுவார்கள். பணி அனுபவம்.

"இங்க பாரு ரேணு, எனக்கு வீட்டு வேலைக்கு ஆள் வேண்டாம். அதுவும் உன்னை மாதிரி குட்டிப் பொண்ணுங்களை எல்லாம் நான் வேலைக்குச் சேர்த்துக்க மாட்டேன். பயப்படாத அழாம கண்ணைத் தொடச்சுட்டு வீட்டுக்குப் போ. அம்மா தேடப் போறாங்க.."

நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் மீண்டும் கோபம். "நான் போகமாட்டேன்" என்று தலையை ஆட்டியவள் டக்கென்று தன் துப்பட்டாவை விலக்கிக் கழுத்திலிருந்த, கருப்புமணிகள் கோர்த்த ஒரு செயினை எடுத்துக் காட்டினாள். இரண்டு தங்க நிற உருண்டைகள் டாலர் போன்று. "மங்கல்சூத்ரா" என்றாள். அதிர்ந்து போனேன். அதிர்ச்சியிலிருந்து மீளும் முன்,

"எனக்கு விடுதலை வேணும். வாங்கித் தருவீங்களா?" மீண்டும் சொல்லியவள்,
"ஆன்ட்டி! எனக்கு உடம்பு சரியில்லைன்னு இங்க அம்மா அப்பா கிட்ட விட்டாங்க. நாளன்னிக்கு என்னை அம்மா திரும்ப கொண்டு விடும். ப்ளீஸ் என்னைக் காப்பாத்துங்க" என்று தேம்பி தேம்பி அழுதாள்.

மனம் நொறுங்கிப் போனது. வார்த்தைகள் எழவில்லை. இந்த வயதில் இதுவா வாழ்க்கை. ச்சே கடவுளே என்று கோபம் கொப்பளித்தது. என்னைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

"அங்க இருக்குது ஒரு வீடு. அங்கதான் எனக்கு ஜுரம்னு மருந்து கொடுத்த ஆன்டி இருக்காங்க. நான் அவங்ககிட்ட அழுதேன். எங்கிட்ட தனியா சொன்னாங்க இங்க ஒரு ஆன்டி வருவாங்க அவங்ககிட்ட சொல்லு ரிஹாயி (விடுதலை) கிடைக்கும்னு."

ஓ அதனால்தான் என்னிடம் வந்திருக்கிறாள் இந்த அப்பாவிப் பெண். அப்படி என்றால் குழந்தை எப்படியோ தைரியம் பெற்று சொல்லியிருக்கிறாள். கிராமத்தில் நடந்தது குறித்து யாரும் அதிகாரிகளிடம் புகார் கூறவில்லை. இப்படியான பெண்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவதில்லையே. எனவே, போலீசில் புகார் அளிக்கப்பட்டதா என்ற கேள்வி எழுவதில்லை. அப்பெண்தான் அமைப்பிற்குத் தகவல் கொடுத்திருக்க வேண்டும். கிராமத்தில் நடந்த குழந்தைத் திருமணங்கள் பற்றி. இங்கு கிளினிக் எதுவும் கிடையாது. கை வைத்தியம் பார்ப்பவராகத்தான் இருக்க வேண்டும். அந்த பெண்ணைச் சந்திக்க வேண்டும். கடவுளே! உன்னை எதற்கு அழைத்தேன்? நீ இருக்கிறாயா என்ன? இப்படி ஒரு கிராதகம் நடப்பதைப் பார்த்துக் கொண்டு…ச்சே…எனக்கு மனம் கொந்தளித்தது.

“எப்போ உனக்கு ஷாதி (கல்யாணம்) ஆச்சு?”

“கொரோனா வந்துச்சுல்ல அப்ப…” என்றாள்.

“உன் வயசு என்ன?”

“10…இல்லல்ல…11 ஆகுது….”

யாரோ ‘ரேணு’ என்று கூப்பிட்டுக் கொண்டே வருவது தெரிந்ததும் என் மனதில் சில சந்தேகங்கள் எழ டக்கென்று என் மொபைலில் அவளின் அந்த தாலி வெளியில் தெரிய அவளை ஒரு ஃபோட்டோ எடுத்துக் கொண்டேன்.

“ஐயோ…..தாதிமா (பாட்டி) வருது! நான் போறேன். எனக்கு விடுதலை வாங்கித் தரணும்” என்று என் கையைப் பிடித்துக் கும்பிட்டு ஓடினாள்.

என் மனம் ஒரு நிலையில் இல்லை. நான் வந்த வேலையைத் தொடங்கும் முன்னே முதல் கேஸ். தைரியமான பெண். சீக்கிரமாக ரேணுவின் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று மனம் சொல்லியது. வேகமாய் ஓடிப் புரண்ட எண்ணங்களைத் தடுத்தது மொபைல் ரிங். அம்மா.

சுருக்கமாக ரேணு விஷயம் பற்றி சொல்லிக் கொண்டே ஆயத்தமானேன். ரேணுவுக்காக 10 %, மீதி 90% என்னைப் பற்றிக் கவலைப்பட்டாள். அவளைக் காப்பாற்றப் போய் எனக்கு ஆபத்து வந்துவிடுமோ, கல்யாணமே நடக்காமல் போய்விடுமோ என்று. காரணம்….

நான் சட்டம் படித்து ஒரு பெரிய வக்கீலின் கீழ் என் பணியைத் துவக்கிய போது முதல் கேஸாக பெண்கள் கேஸிற்கு தகுந்த ஆதாரங்கள் கொடுத்து வாதாடிய போது அதில் சில பிரச்சனைகள் வந்தது. அம்மா அப்பா பயந்து போனார்கள். வக்கீல்களுக்கு எப்போதுமா அப்படி நடக்கிறது? எனக்கு ஏதோ அப்போது அப்படி நடந்தது. அவ்வளவுதான். பெரிய விஷயமில்லை. ஆனால்….

“அம்மா கீர்த்தி, உனக்கு பெயரிலேயே கீர்த்தி இருக்குமா. வெளிலருந்து எந்த கீர்த்தியும் வேண்டாம். வேறு வேலை பார்க்கலாம்மா…” என்று அப்பா அமைதியாக ஆணித்தரமான தீர்மானமாகச் சொல்ல……

கோர்ட்டில் என் சீனியரிடமும், ஜட்ஜிடமும் திறமையைக் காட்டிய என்னால், வீட்டின் இந்த ஜட்ஜின் செண்டிமென்டலான தீர்ப்பை எதிர்த்து எந்த விவாதத்தையும் அப்பீலையும் முன்வைக்க முடியவில்லை. அம்மாவிடமும் அப்பீலுக்குச் செல்ல முடியாது. அப்படியாக கருப்பு அங்கி அணிந்து கொண்டு வாதாடவில்லை என்றாலும் கருப்பு அங்கி என்னோடு பயணித்துக் கொண்டேதான் இருக்கிறது. மனதிற்குள் ஒரு தனி கோர்ட் எப்போதும் நடந்து கொண்டிருக்கும்.

கோர்ட் வேண்டாம். சரி. ஆனால் என் படிப்பிற்குச் சம்பந்தமில்லாத வேலையை என்னால் செய்ய இயலாது என்பதை வீட்டு கனம் கோர்ட்டார் அவர்களிடம் உறுதியாகச் சொல்லி, பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்காகச் சட்ட அமலாக்க ஏஜன்சிக்களுக்கு உறு துணையாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளித்தும் செயல்படும் அமைப்பு ஒன்றில் பணிக்குச் சேர்ந்தேன்.

மென்னியைத் திருகும் வறுமையில் "மணப்பெண் கடத்தல்" (ப்ரைட்Bride ட்ராஃபிக்கிங்), குழந்தைத் திருமணங்கள், கல்யாணம் என்று விற்கப்படுதல். ஒரே வீட்டிலேயே அண்ணன் தம்பிகள் என்றோ அல்லது வெளியிலோ பலரின் பலாத்காரங்களுக்குப் பலியாதல், அப்படியே தொழிலுக்கும் கடத்தப்படுதல்.......என் ப்ரெஷர் எகிறியது. தகவல் திரட்டி அமைப்புக்கு சட்ட ரீதியான விளக்கங்களுடன் கொடுத்துவிட்டால் அமைப்பு பார்த்துக் கொள்ளும். பஞ்சாயத்தா, கோர்ட்டா என்பதை.

இப்படி வாங்குவதிலும் விற்பதிலும் ஏஜெண்டுகளின் பங்கு மிகப் பெரியது. இந்தக் கடத்தலைத் தடுத்து மீட்கும் பணி அத்தனை சுலபமல்ல. அதுவும் பெருந்தலைகள் உட்பட்டிருந்தால். பொய்கள் பேசப்படும். ஆதாரங்கள் அழிக்கப்படும். பல விஷயங்கள் ரகசியமாக்கப்படும். பல குழந்தைகள் சித்திரவதை பயத்தில் ஏற்றுக் கொண்டுவிடுவார்கள். 14 லிருந்து 18 ற்குள் இருக்கும் பெண்குழந்தைகள், குழந்தைகளும் பெற்றிருந்தால் அந்த வாழ்க்கையை அப்படியே ஏற்றுக் கொண்டுவிடும் அவலங்களும் உண்டு. பிறந்த அக்குழந்தைகள்? நான் கடவுளைக் கூப்பிட மாட்டேன். ஆனால் முதல் தடவையாக ரேணு, ஒரு குட்டிப் பெண் விடுதலை வேண்டும் என்று தைரியமாக முன் வந்தது என்னை உத்வேகப்படுத்தியது.

ரேணுவின் வீட்டை அடைந்ததும் நான் எதிர்பார்த்தது போல ரேணுவை அன்றே அனுப்பத் தயாராவது தெரிந்தது. அவர்கள் வீடு என்பது ஒரு அறை மட்டுமே. அதிலேயே ஒரு புறம் அடுப்பு, மற்றொரு புறம் ஒரு மூலையில் தட்டி போட்டு மறைத்து அது குளியலறையாம். வீட்டின் வெளியே அதை ஒட்டிய பாதுகாப்பற்ற கழிவறை. இப்படியான வறுமையும், அறியாமையும்தான் என்னென்னவோ முடிவெடுக்க வைக்கிறது இவர்களை.

ரேணுவை அழைத்தேன். அவள் பெற்றோர் ஒத்துழைக்க மறுத்தார்கள். ரேணுவின் கழுத்தில் தாலியைக் காணவில்லை. எதிர்பார்த்ததுதான். ரேணு என்னையும் அவள் பெற்றோரையும் மாறி மாறி பார்த்தவள்,

"ஆண்டி என்னை உங்க கூட கூட்டிட்டுப் போங்க. எனக்கு விடுதலை வேணும்" குரலில் தைரியம். அதையே திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். அத்தனை ரணப்பட்டிருக்கிறாள்.

“அவ உளர்றா. அப்படீல்லாம் இல்லை.”

“லாக்டவுன்ல யாரும் செக் பண்ண வரலைன்னு ரகசியமா உங்க பொண்ணுங்களை வித்த விவரம் வந்திருக்கு. போலீஸ் இப்ப வரும். உங்க மேல கேஸ் போட்டு கோர்ட்டுக்குப் போவாங்க. உங்க ஏஜன்டு உங்களுக்கு எல்லார்க்கும் தண்டனை கூடவே பெரிய தொகை அபராதம். ஓகேவா? என்ன சொல்றீங்க?”

கொஞ்சம் பயம் பற்றியது போலும். “கல்யாணம் எதுவும் செய்யலை. எங்களுக்கு வேலை இல்லை அதனால வீட்டோட இருக்கற மாதிரி வீட்டு வேலைக்குத்தான் அனுப்பினோம்.”

நான் எடுத்த ஃபோட்டோவைக் காட்டியதும், அவள் பதில் சொல்லும் முன் ரேணு..
“ஆன்டி மங்கல்சூத்ரா கட்டிச்சுல்ல அது என் மாமா போல இருக்கும். என்னை டெய்லி நிறைய தடவை பலாத்கார் பண்ணும். அவரு கூட இன்னும் ரெண்டு பேரு. வீட்டு வேலை எல்லாம் செய்யணும். காப்பாத்துங்க ஆன்டி”

“அரே ரேப் நஹின். வோ இஸ்கி பதி ஹே” (ரேப் எதுவும் செய்யலை. அவன் இவ புருஷன்) என்று சொல்லிக் கொண்டே அடிக்கப் போனாள். “என்ன தப்பு? அவளுக்கு 15 வயசு ஆகிடுச்சு, ஜமீன்கிட்ட பேசிக்குங்க.”

“யாரு ஜமீனு? முதல்ல கல்யாணம் இல்லைன்னீங்க. ரேப்னு கேட்டதும் அவன் பதி ஆகிட்டானா. 15 வயசுன்னே வைச்சுக்கிட்டாலும் சர்க்கார் சட்டம் என்ன சொல்லுது தெரியும்லியா?”

“கொரோனா கொரோனான்னு வேலை இல்லை ஒரு வேளை சாப்பாடு கூட இல்ல. சர்க்காரும் சட்டமுமா வந்து சோறு போடுது? காப்பாத்துது?”

“உங்களுக்கு எத்தனை பிள்ளைங்க?”

“5 பொண்ணு.....கடைசி பையன்”

“சொஸ்தம்”

“க்யா?”

“இதுக்கும் கவர்ன்மெண்டும், சட்டமும்தான் காரணமா?”

“பக்வான்” என்று மேலே பார்த்துக் கை கூப்பினாள்.

சிரிப்பு வந்தாலும்....கழிவிரக்கமும் கூடவே வந்தது. “குழந்தை பெறவைத்த பகவான்......வறுமையில் கவர்மென்ட் காப்பாற்றவில்லை..சரி பக்வான்? இப்படி வறுமையில விக்கத்தான் உனக்கு பொண்ணுங்களைக் கொடுத்துருக்கேன் வித்து சாப்பிடுன்னு பகவான் கொடுத்துருக்காரா?”

குடும்பத்தைக் கெடுக்க வந்த ராட்சசி என்று ஏதேதோ திட்டினாள் அந்தப் பாட்டி. ஆண் குழந்தை கண்டிப்பாக வேண்டும் என்று அடுத்தடுத்து பெண் குழந்தைகள். வறுமை.

பணத்திற்காக அடிமைத்தனம். அப்புறம் ரேணுவைப் போன்று......ச்சே என்ன கொடுமை! எல்லோரையும் காப்பாற்றிட முடியாதா? மனம் தவித்தது.

நம் நாடு அந்நியரிடம் இருந்து விடுதலை பெற்று 73 வருடங்களாம்! என்ன விடுதலை? மூடநம்பிக்கை, அறியாமை, வறுமை, பாலியல், பலாத்காரம் என்று அடிமைகளாக்கும் ஒரு கூட்டம், அடிமைகளாகும் ஒரு கூட்டம். விடுதலையும் இல்லை. மக்கள் விடுவித்துக் கொள்வதும் இல்லை! இன்னும் எத்தனை வருடங்கள் இப்படியோ?

“பையன் பொறந்ததும் பெத்துக்கலையா? ஒரு பொண்ணைக் கூடப் படிக்க வைக்கலியா?” அவள் வயிறு லைட்டாக மேடிட்டுருப்பது தெரிய.......அடப் பாவி! திருத்த முடியாத கேஸ். அவனுடைய அதை........கோபம் தலைக்கேறியது!

“காலேஜ் போச்சு மூத்தது. மொத வருஷம். எவனோடயோ ஓடிருச்சு. யாரோ போலீஸ்கு தகவல் கொடுக்க.....அப்புறம் எதுக்கு மத்ததெல்லாம் படிக்க வைக்கணும்? ஓடுறதுக்கா?”

“நீங்க இப்படி வித்துருவீங்கன்னு பயந்து தப்பிக்கறதுக்கு ஓடிருக்கும். எப்ப போனா” பதிலில்லை. அதட்டிக் கேட்டதும், லாக்டவுன் ஆரம்பித்தவுடன் என்றாள்.
அதற்குள் அமைப்பிலிருந்து ஒரு பெண்ணின் ஃபோட்டோவும் பெற்றோர் விவரமும், முகவரியும் வாட்சப்பில் வந்தது. காட்டினேன். மாரில் அடித்துக் கொண்டு அழுதார்கள். ஓடிப் போன இவர்களின் பெண்.

“எதுக்கு? விக்க முடியலையேன்னா? சுப். உங்க பொண்ணு சந்தோஷமா பாதுகாப்பாருக்கா. பாருங்க. நீங்க விக்க நினைச்ச விவரம் தெரிஞ்சு அதான் ஓடி வந்துட்டேன்னு எல்லாம் சொல்லிருக்கா.” நானும் எல்லாவற்றையும் ஆடியோ, வீடியோ என்று ரேணுவின் வாக்கு மூலம் உட்பட எடுத்துக் கொண்டேன்.

கூப்பாடு போட்டு அழுதார்கள். ரேணுவின் அக்காக்கள் 3 பேர் பற்றியும் தகவல் திரட்டிக் கொண்டேன். அதை உடனேயே அமைப்பிற்கு அனுப்பிவிட்டு, ரேணுவையும் அழைத்துக் கொண்டு மருத்துவப் பெண்ணைப் பார்க்கச் சென்றேன்.

ரேணு எப்படி வெளியில் வந்தாள் என்று நான் வியந்ததற்கு, “அவளுக்குத் தாலி கட்டினவன் கொரோனால போயிட்டான். அப்புறம் அவன் அண்ணன் தம்பி எல்லாம் இவளை..........” அதற்கு மேல் அவளால் சொல்ல முடியவில்லை. இவளுக்குச் ஜுரம் வந்ததும் கொரோனா என்று பயந்து இங்கே அனுப்பிருக்கிறார்கள். அவர்களுக்கும் கொரோனாவாம். கொரோனாவிற்கு நன்றி.

“ஆனா, நல்ல காலம் இவளுக்குக் கொரோனா இல்ல. சாதாரண ஜுரம் தான். அதுக்குத்தான் மருந்து கொடுத்தேன். எங்கிட்ட அழுதா. இவளை வேறொரு ஆளுக்கு வித்துட்டாங்க. திரும்ப விக்கறதெல்லாம் இங்க சகஜம். அப்பத்தான் உங்க அமைப்புக்குத் தகவல் கொடுத்து இவகிட்டயும் சொல்லி வைச்சேன்.”

அவளைப் பாராட்டினேன். கிராமத்தில் நடந்த மற்ற திருமணங்கள் பற்றிக் கேட்டதும், “கொடுமைங்க. இது இங்க சமூக ரீதியா ஏத்துக்கறதா மாறிடுச்சு. ஆணாதிக்கம், தவறான சமூகம் எல்லாம்தான் இப்படியான கொடுமைகளுக்கு வேர்கள். இப்ப மக்கள் கொஞ்சம் தைரியமா முன்வந்து போலீஸ்ல சொல்லறாங்க. பக்கத்துக் கிராமத்துல 15

வயசு பொண்ணு அங்க நடந்தது பத்தி போலீஸுக்குத் தைரியமா சொல்லிடுச்சு. தனக்கு அடுத்த ஆபத்துன்னு” என்றாள்.

“இந்தப் பக்கம் எல்லாம், ஆண் குழந்தை பிறக்கற வரை பிறக்கற பெண் குழந்தைகளை இப்படி விக்கறதுனா, இன்னொரு பக்கம் கருவிலேயே பெண் குழந்தைன்னா எந்தச் சுவடும் இல்லாம அழிச்சுடுறாங்க. பெண்கள் தொகை குறைஞ்சுருச்சு, கிடைக்கறது கஷ்டமாகுதுன்னு ஆண்கள் இப்படிக் குழந்தைகளையும், மத்த மாநிலப் பெண்களையும் வாங்குறத பஞ்சாயத்தும், சமூகமும் இது சரின்னு ஏற்கறப்ப போலீஸுக்குத் தகவல் போகாதப்ப என்ன சொல்ல? மிருகத்தனமான வர்த்தகம். மீட்பு பெரிய சவால்.”

பேசிவிட்டு ரேணுவுடன் வீட்டுக்குச் சென்றேன். ரேணு தைரியமான பெண். ரேணுவைப் போல எல்லாக் குழந்தைகளும் தைரியமாகக் கிளம்பும் நாள் எந்த நாளோ? நேரடியாக நானே கோர்ட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற உந்துதலில் என் பெட்டியில் இருந்த அங்கியைப் பார்த்தேன். நான் ஆஜராக முடியுமா என்பதை சீனியரிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.

“ஆன்டி இது என்னது?”

“வக்கீல் ட்ரெஸ். நீ கேக்கற விடுதலைக்காக கோர்ட்ல பேசுறப்ப போட்டுப்பாங்க.”

“நான் “வக்கீல்” ஆகணும். ஆன்டி எனக்கு விடுதலை வாங்கித் தருவீங்களா?.”



Back to index ^


# பன்னீரும் பத்மப்ரியாவும்... துரை செல்வராஜூ

**ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே!...**

**அதெல்லாம் இருக்கட்டும்..**

**முதல்ல சமையல் குறிப்பைச் சொல்லுங்க... பசியெடுக்குற நேரத்தில நீங்க வேற!..**

**சரி.. சரி.. சொல்லிடறேன்... நல்ல பாசுமதி அரிசி ஒரு 250 கிராம்... பாலாடைக் கட்டி என்னும் பனீர் 400 கிராம், உங்க விருப்பத்துக்கு நெய், தயிர், கொஞ்சம் போல க்ரீம்...**






முகத்துல பூசிக்கிறாங்களே... அதுவா!..

அது எதுக்குங்க!.. இது சமையலுக்கானது!...

இந்த கேக் மேல எல்லாம் தடவி வருதே!.. அதுவா?...

அது வேற!... நான் சொல்றது Cooking Cream!..

அதைத் தெளிவா சொல்ல வேண்டியது தானே.. சுத்தி வளைச்சுக்கிட்டு!?.. சரி.. மேலே சொல்லுங்க!..

இது ஒரு பக்கம் இருக்கட்டும்.. நடுத்தரமா ரெண்டு உருளைக் கிழங்கு, ரெண்டு வெங்காயம், ஆறேழு பச்சை மிளகாய், சிவப்பு குடை மிளகாய் ஒன்னு, கட்டை விரல் கனத்துக்கு இஞ்சி, கறிவேப்பிலை, அஞ்சு பல்லு பூண்டு..

'அஞ்சு பல்லு பூண்டு'க்கு எங்கிட்டுப் போறது?..

இதானே குறும்பு!...



**சரி.. இதோட கையளவு முந்திரி, திராட்சை  கூடவே பட்டை, கிராம்பு, சோம்பு, ஏலக்காய் கொஞ்சம் கறிவேப்பிலை... கூடவே ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூள், ரெண்டு தேக்கரண்டி வெள்ளை மிளகுத் தூள் நான்கு தேக்கரண்டி கரம் மசாலாத் தூள், 100 கிராம் தேங்காய்ப் பால் மாவு  மறந்துடாம உப்பு.**





அவ்வளவு தான் சமையலை ஆரம்பிக்கலாம்..

பாசுமதி அரிசியை நல்லா கழுவிட்டு தண்ணியோட ஒரு பக்கம் வச்சுடுங்க... காய்களை நன்றாக கழுவி விட்டு உருளைக் கிழங்குகளைத் துண்டுகளாக்கி பாத்திரத்தில் இட்டு அவை மூழ்கும் மட்டத்துக்கு தண்ணீர் விட்டு வேக வைங்க...



பனீரையும் திராட்சையையும் தனித்தனியாக மிதமான சூட்டில் வதக்கிக் கொள்ளுங்க..





இஞ்சி, பூண்டு, முந்திரிப் பருப்பு எல்லாத்தையும் மிக்ஸியில் இட்டு அதிகம் தண்ணீர் விடாமல் தளதளப்பா அரைச்சிக்குங்க ..

இதுக்குள்ள உருளைக் கிழங்கு அரை வேக்காடு ஆகியிருக்கும்.. ரெண்டு வெங்காயங்களையும் தோல் உரித்து சன்னமாக நறுக்கி அதில் ஒன்றரைப் பங்கை கொதிப்பவற்றுடன் போட்டு விட்டு மீதியை ஒரு ஓரமாக மூடி வைங்க.. பச்சை மிளகாய்களை நெடுக்காக் கீறிப் போடுங்க.. தக்காளியத் துண்டுகளாக்கிப் போடுங்க.



இதெல்லாம் வெந்து வர்றப்போ அரைச்சு வைத்திருக்கும் இஞ்சி பூண்டு கலவையைச் சேர்த்து இரண்டு ஸ்பூன் நீரில் மிக்ஸியைக் கழுவி குழம்பில் ஊற்றி விடுங்க..



தேவையான உப்புடன் மஞ்சள் தூள், வெள்ளை மிளகுத் தூள், கரம் மசாலாத் தூள் , தேங்காய்ப் பால் மாவு இதெல்லாத்தையும் சேர்த்து குழம்பு கொதித்து வரும் போது வதக்கி வைத்திருக்கும் பனீர் துண்டுகளைப் போட்டு பாத்திரத்தை ஒரு நிமிடத்துக்கு மூடி வைத்து - பிறகு அதனுடன் இரண்டு ஸ்பூன் கெட்டித் தயிரைச் சேர்த்து மிதமாக கிளறி விட்டு அதில் கறிவேப்பிலை ஏலக்காய் பட்டை வகையறாக்களை நெய்யில் தாளித்துப் போடுங்க..



கொதிப்பு அடங்கியிருக்கும் குழம்பின் மீது குக்கிங் க்ரீமை கொஞ்சமாகப் பிழிந்து கோலம் இட்டு விட்டால் இந்த வேலை முடிந்தது...



அந்தப் பக்கம் சிவப்பு மிளகாயை நீள வாக்கில் நறுக்கி அவற்றை குறுக்காக முத்து முத்தாக நறுக்கிக்குங்க.



பாஸுமதி அரிசியோட ஒன்றுக்கு இரண்டே கால் (1 = 2.25) என்ற கணக்கில் தண்ணீர் சேர்த்து வேக வைங்க.




பத்து நிமிஷத்தில் தளதள என்று கொதிக்கும்... தேவையான அளவு உப்பு போட்டு பொரித்து வைத்துள்ள திராட்சையையும் சிவப்பு மிளகாய்த் துணுக்குகளையும் போட்டு தளர நெய் வார்த்து பாத்திரத்தை மூடிட்டு
அடுப்பின அனலைக் குறைச்சு வைங்க...



இருபதாவது நிமிஷத்தில் நெய்ச்சோறு கமகமக்கும்!...

ஓரமாக மூடி வைத்த வெங்காய நறுக்குகளுடன்  தயிரைச் சேர்த்து சிட்டிகையளவு உப்பைப் போட்டால் தயிர் வெங்காயம் தயார்.



பிறகென்ன.. இளஞ்சூட்டில் நெய்ச்சோற்றைப் பரிமாறி கிரீமுடன் இருக்கும் பனீர் குழம்பை கலக்கியடிக்காமல் மேலாக எடுத்து இட்டுக் கொண்டு அன்னபூரணி நமோஸ்துதே.. என்றபடிக்கு சாப்பிட வேண்டியது தான்.



இதில் இறுக்கமான தேங்காய்ப் பால் தான் (100 மிலி) பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.. ஆனால் அதற்கெல்லாம் சமையலறை வசதி குறைவு என்பதால் தேங்காய்ப் பால் மாவு பயன்படுத்தப் பட்டுள்ளது.




அதெல்லாம் சரி!... அந்தப் பன்னீருக்கும்
பத்மபிரியாவுக்கும் என்ன சம்பந்தம்!?...

பனீர் தான் பன்னீர்!...

ஓ!.. அந்த பத்மபிரியா?..

பாஸுமதிக்கு செல்லப் பெயர்!...

Back to index ^

# கோபு வெச்ச ஆப்பு! - சிறுகதை :: K G கௌதமன்

“ அப்பா - ஃபிரிஜ்லேருந்து பால் பாக்கெட் எடுத்தியே, அதை நன்றாக கழுவிதானே பிறகு பாக்கெட்டை கட் செய்தாய்? “

“ ஆமாம் “

“ ஃபிரிஜ் ஹாண்டிலை தொடுவதற்கு முன்பு கையை நல்லா வாஷ் செய்துகொண்டாயா ?”

“ உம் “

“ கையை சோப் வாஷ் செய்தாயா ?”

“ ஆமாம் “

“ எந்த சோப் யூஸ் செய்தாய்? “

“ நீ வாஷ் பேசின் அருகே வைத்திருக்கிறாயே அந்த சோப்தான் “

அவனுக்கு இன்னமும் ஏதோ சந்தேகம். சந்தேகப் பார்வை பார்த்தபடி சென்றான்.

எப்போதும் கேட்கிற கேள்விகள்தான். நானும் கேஷுவல் பதில்கள் எப்போதும் ரெடியாக வைத்திருப்பேன். இதெல்லாம் ஏதோ கரோனா காலத்து விசாரணைகள் என்று நினைக்காதீர்கள். அவன் எப்போதுமே அப்படித்தான்.

எந்த இடத்திலாவது நான் (எழுதப்படாத) சுத்த விதிகளைப் புறக்கணித்திருக்கிறேன் என்று அவனுக்கு தெரியவந்தால், ஒன்றும் செய்யமாட்டான். ஆனால், “நான் சொல்வது எல்லாம் உன்னுடைய நல்லதுக்குத்தானே சொல்றேன் அப்பா, நாளையிலிருந்து இப்படி செய்யாதே” என்று மட்டும் சொல்வான்.

ஆனால் அப்போது எனக்கு ஒரு பெரிய போரில் ஆயுதங்களை இழந்து நிற்கின்ற வீரன் போன்ற ஒரு வினோத உணர்வு தலைதூக்கும்.

எனக்கு வீட்டில் வேலை எதுவும் செய்யாமல் சும்மா இருப்பது அறவே பிடிக்காத விஷயம்.

யாரும் சொல்லாமலேயே சிறிய வேலைகளை எப்பொழுதும் செய்வேன். காலையில் பால் வாங்கி வருவது, பால் பாக்கெட்டுகளைக் கழுவி, ஃபிரிஜ்ல வைப்பது, முந்தைய மாலை வைக்கப்பட்ட பால் பாக்கெட்டுகளிலிருந்து பாலை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, காய்ச்சி எடுத்து வைப்பது. வாஷிங் மெஷின் ஓய்ந்ததும் அதிலிருந்து துணிகளை எடுத்து பக்கெட்டில் போட்டு எடுத்துக்கொண்டு மொட்டை மாடிக்கு சென்று துணிகளை

கொடியில் காயப்போடுவது, காய்கறி வாங்கி வருவது என்று மதியம் வரை ஏதேனும் வேலைகள் செய்வேன்.

*** *** ***

ஒருநாள் வாஷிங் மெஷினிலிருந்து வாஷ் ஆன துணிகளை எடுத்து பக்கெட்ல போடும்போது, ஒரு கைக்குட்டை பக்கெட்ல விழாம வெளியே தரையில விழுந்து விட்டது. அவசர அவசரமாக அதை எடுத்து, பக்கெட்ல போடப் போன என்னை மாடிப்படிகளில் இறங்கி வந்துகொண்டிருந்த மகனின் குரல் தடுத்து நிறுத்தியது. “ அப்பா - அதைத் திரும்ப வாஷிங் மெஷின் உள்ளே போடு. தரையில பல்லி, கரப்பான் என்று பல ஜந்துக்கள் ராத்திரில வாக்கிங் போயிருக்கும். அந்தத் தரையில விழுந்த துணியை மறுபடியும் வாஷ் செய்யவேண்டும். அடுத்த ஈடு துணிகளை வாஷ் செய்யும்போது அதையும் சேர்த்து வாஷ் செய்துகொள்ளலாம்.”

அவ்வளவுதான் அப்புறம் அப்பீல் கிடையாது.

துணிகளை பக்கெட்ல போட்டு எடுத்துக்கொண்டு, இரண்டு மாடிகள் ஏறி மொட்டை மாடி சென்று கொடியில் காயப்போடுவேன்.

அப்படி துணிகளைக் காயப் போடப் போகும்போது ஏதேனும் பாடலை உற்சாகமாக பாடியபடி, துணிகளைக் காயப் போடுவேன்.

நல்ல வெயில் இருந்தால், “நிலாக் காயுது, நேரம் நல்ல நேரம், துவச்சுப் போட்ட துணிய காய வைக்கலாமா?” என்று பாடியபடி காயப்போடுவேன்.

கொடியில் காயப்போடுவதற்கு முன்பு துணிகளை நன்றாக உதறி, பிறகு காயப்போடவேண்டும் என்பது மற்றொரு எழுதப்படாத சுத்த விதி.

உதறும்போது சில துணிகள் கையிலிருந்து நழுவி தரையில் விழுந்து வைக்கும். ஆனால் என்னுடைய நல்ல காலம், மொட்டை மாடியில் சூப்பர்வைசர் யாரும் கிடையாது. மேலும் மொட்டை மாடி வெயிலில் பல்லி, கரப்பான், போன்ற ஜந்துக்கள் சாதாரணமாக வாக்கிங் போவதில்லை.

ஆகவே விழுந்த துணியை அவசரமாக திரும்ப எடுத்து, நன்கு உதறி காயப் போட்டுவிட்டு, ஒரு வெற்றிப் புன்னகையை தவழவிடுவேன்.

வேறென்ன.. கைதவறி கீழே விழுந்த துணியை திரும்பவும் இரண்டு மாடிகள் இறங்கி வந்து, வாஷிங் மெஷின்ல போட்டு, மறுமுறை அடுத்த கும்பல் துணிகளுடன் அதை எடுத்துப் போய் - உதறும்போது திரும்பவும் அது விழுந்தால் எவ்வளவு முறை கீழே இறங்கி ஏறுவது!

இப்படி என் துணி காயப்போடும் வேலை ஒரு தொந்தரவும் இல்லாமல் ஜாலியாக நடந்துகொண்டிருந்தது.



*** ***

ஒரு சனிக்கிழமை. வீட்டில் எல்லோருக்குமே விடுமுறை.

குட்டிப் பேரனுடன் அரட்டை அடித்தவாறு, டி வி யில் டாம் அண்ட் ஜெர்ரி பார்த்து ரசித்து சிரித்தவாறு இருந்தேன். ஒரு கார்ட்டூன் முடிந்தவுடன் ஆதித்யா டி வி க்கு மாற்றினேன். சிரிக்க ஏதாவது ஒரு நகைச்சுவைப் பகுதி பார்க்கலாம் என்று.

வாசலில் யாரோ வந்து அழைப்பு மணியை ஒலித்தார்கள்.

கதவைத் திறந்து பார்த்தேன். என்னைவிட பத்துப் பதினைந்து வயது மூத்தவர் ஒருவர் புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தார்.

எங்கேயோ பார்த்த முகம் போல தோன்றியது. ஆனால், நினைவுக்கு வரவில்லை.

அதற்குள் அங்கே வந்த மருமகள், கன்னடத்தில் அவரிடம், ‘அவர் யார், என்ன விஷயம் ’ என்று விசாரிக்க - அவர் வீட்டிற்கு உள்ளே டி வி யில் தமிழ் சானல் ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்தவாறு, “ நான் சென்னைவாசிதான். இங்கே பக்கத்து அபார்ட்மெண்டுல மகள் வீட்டுக்கு லீவுக்கு வந்திருக்கேன். பேரப்பசங்களுக்கு ஸ்கூல் லீவு விடுகின்ற நாட்களில் இந்த ஊருக்கு வருவேன். இதோ இவரைப் பார்த்துப் பேசத்தான் வந்தேன் “ என்று சொல்லி, என்னைக் கை காட்டினார். உரிமையாக உள்ளே நுழைந்து வந்து, மூவர் அமரும் இருக்கையில் அமர்ந்தவாறு புன்னகைத்தார்.

எனக்கு இன்னமும் குழப்பமாகவே இருந்தது. ‘ யார் இவர்? வேறு யாரையாவது நினைத்து இங்கே வந்துவிட்டாரா ?’

“ என்ன சார்? உங்களுக்கு இன்னும் ஞாபகம் வரவில்லை போலிருக்கு. நான் உங்களை மாடி டெரேஸ்ல நீங்க உங்க பேரனுங்க கூட விளையாடும்போது, துணி காயப்போடும்போது எல்லாம் அடிக்கடிப் பார்த்திருக்கிறேன்”

“ ஓஹோ அப்படியா! ”

“ ஆமாம். நீங்க சென்னையில் வேலை பார்த்தவர் என்று என் மகள் சொன்னாள். அதான் இங்கே வந்து உங்களைப் பார்த்து கொஞ்சம் பேசிப் போகலாம் என்று வந்தேன். உங்க பேர் என்ன?”
சொன்னேன்.
“ சென்னையில உங்க வீடு எங்கே? “

“ குரோம்பேட்டை “

“ சொந்த வீடா ? “

‘ஆம்’ என்ற பாவனையில் தலையாட்டினேன்.

“ என் பெயர் கோபாலகிருஷ்ணன் - சுருக்கமா கோபு என்று நண்பர்கள் கூப்பிடுவார்கள். ஃபுட் கார்ப்பரேஷன்ல அக்கவுண்டன்ட் ஆக இருந்து ரிடயர் ஆனேன். மேற்கு மாம்பலம் - ராஜேந்திர பிரசாத் வீதியில சொந்த வீடு. அதை இப்போ விற்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். “

“ அப்படியா?”


பேச்சு அப்படி ஒன்றும் சுவாரஸ்யமாகப் போவதாக எனக்குத் தோன்றவில்லை. அவர் எப்படியாவது ஒரு பொதுவான, ஒத்துப்போகின்ற விஷயத்தை கண்டுபிடிக்க முயல்கிறார் என்று தெரிந்தது. என்னவோ இவருக்குப் பிடி கொடுக்கக்கூடாது என்று மனதில் ஒரு சிவப்பு விளக்கு மினுக் மினுக்கிக் கொண்டு இருந்தது.

மருமகள், வந்தவருக்கு, நுரை பொங்கும் கூர்க் ஃபில்டர் காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

“ ரொம்பத் தாங்க்ஸ்மா. நம்ம பக்கத்து காபி இந்த ஊரில் எந்த ஹோட்டலிலும் கிடைப்பதில்லை. ஃபில்டர் காபி வாசனையே அலாதிதான். சாருக்கு கொடுக்கவில்லையா? “

“ மாமா காபி சாப்பிடுவதை ரொம்ப வருஷமா நிறுத்திட்டார்.”

அப்பாடி - இன்னும் ஒரு ஒத்துப்போகும் பாயிண்ட் அவுட்.




" கௌதம் சார், நீங்க ரொம்பக் கொடுத்து வைத்தவர். நான் சென்னையில் என் பையன், மருமகள், பேத்திகளோடு இருந்துகிட்டு இருக்கேன். பையனும், மருமகளும் நான் செய்கின்ற எல்லா வேலைகளிலும் ஏதேனும் குறை கண்டுபிடிச்சு, என்னிடம் வாதாடிகிட்டே இருப்பாங்க. அவ்வளவு ஏன் - நீங்க துணி காயப்போடும்போது அதை உதறி, அது கீழே விழுந்துட்டா கூட எவ்வளவு சகஜமாக அதைத் திரும்ப எடுத்து, உதறி காயப் போடுறீங்க! நான் அந்த மாதிரி எல்லாம் செய்தால், என் பையனும் மருமகளும் என்னை சும்மா விட்டுடமாட்டாங்க .. .. .. .. "

ஆஹா - கோபு - வெச்சிட்டாரையா ஆப்பு.

= = = = = = = =

சுய குறிப்பு :
பெயர் : K G கௌதமன்
வலைப்பூ : https://engalblog.blogspot.com
email : kggouthaman@gmail.com

இதுவரை எழுதிய புத்தகங்கள் : (KINDLE books )

1 ) அனுபவ பாடங்கள் LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ

**US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ**

**UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ**

2 ) கதைத் தொகுப்பு

**LINK :**

**INDIA : https://www.amazon.in/dp/B08CXBPPYN**

**US : https://www.amazon.com/dp/B08CXBPPYN**

**UK :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN**

படம் : காமிரா கை வசம் இல்லை (நம்புங்க)

Back to index ^

# சூரியன் கோவில் :: பானுமதி வெங்கடேஸ்வரன்

ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆறு தெய்வ வழிபாட்டில் சூரியனை பிரதான தெய்வமாக வழிபடும் சௌரமும் ஒன்று. அதற்கு முன்பிருந்தே நம் நாட்டில் சூரியனை தெய்வமாக வழிபட்டிருக்கிறோம். நாம் தினசரி பார்க்க முடிகிற, பிரத்யக்ஷ தெய்வமான சூரியனுக்கென்று தனியாக கோவில் தேவையில்லை, ஆனாலும் சூரியனுக்கென்று சில கோவில்கள் இருக்கத்தான் செய்கின்றன.





அவற்றுள் கோனார்க்கில் இருக்கும் சூரியன் கோவிலிலும், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அருகே இருக்கும் சூரியனார் (LINK) கோவிலிலும் சூரியன் பிரதான தெய்வமாக வழிபாடு செய்யப்படுகிறது. மற்ற கோவில்களில் அங்கு உறையும் இறைவனே சூரியனின் அம்சமாக விளங்குவதாக ஐதீகம் . உதாரணமாக திருநெல்வேலிக்கு அருகில் இருக்கும் வைணவத் தலமான ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் கள்ளர்பிரானும், பாபநாசத்தில் உறையும் பாபநாசநாதரும் சூரியனின் அம்சம் பொருந்தியவர்களாக இருப்பதால் இங்கு வழிபடுவது சூரியன் ஏற்படுத்தும் பாதிப்பை குறைக்கும் என்பது நம்பிக்கை.

வேறு சில ஸ்தலங்களில் அங்கு எழுதருளியிருக்கும் மூல மூர்த்தியை சூரியன் வழிபட்டதால் அங்கு நாமும் சென்று வழிபடுவது சூரியனின் கருணையை பெற்றுத் தரும்.

இப்படி நவ கிரகங்களும் சிவ பெருமானையோ, மஹா விஷ்ணுவையோ வழிபட்ட தலங்களே தற்சமயம் நவகிரக தலங்கள் என்று கொண்டாடப் படுகின்றன. கும்பகோணத்திற்கு அருகில் சில நவக்கிரக கோவில்களும், திருநெல்வேலிக்கு அருகில் சில நவகிரக கோவில்களும் அமைந்திருப்பது போல சென்னையை சுற்றிலும் கூட சில நவகிரக கோவில்கள் அமைந்துள்ளன. அதில் போரூருக்கு அருகில் இருக்கும் கொளபாக்கத்தில் அமைந்திருக்கும் அகத்தீஸ்வரர் கோவில் சூரியனுக்கான கோவிலாக கருதப்படுகிறது.

அகத்திய முனிவர் பூஜித்த தலமாக கருதப்படுவதால் அகத்தீஸ்வரர் கோவில் என்று அழைக்கப்படுகிறது. அம்பாளின் திருநாமம் ஆனந்தவல்லி. ஸ்தல விருட்சம் அரச மரம். சிறிய கோவிலாக இருந்தாலும் நன்றாக பராமரிக்கப்படுகிறது. கிழக்கு நோக்கிய கருவறை. விநாயகர், வள்ளி,தேவசேனா உடனுறை முருகப்பெருமான், காசி விஸ்வநாதர், விசாலாக்ஷி அம்மன், ருணஹரேஸ்வரர், கால பைரவர் தவிர சூரியனுக்கு தனி சன்னிதிகள் அமைந்துள்ளன. சூரியன் சந்நிதி மேற்கு நோக்கி இருக்கிறது.

இங்கிருக்கும் காலபைரவருக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் ராகு காலத்தில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. ஆறு ஞாயிற்றுக் கிழமைகள் தொடர்ந்து இங்கிருக்கும் பைரவரை வணங்குவதால் கடன் பிரச்சனைகளும், தடைகளும் நீங்கும் என்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் நல்ல கும்பல் வருகிறது. பிரதோஷ வழிபாடும் சிறப்பாக நடக்கிறது. ஒரு முறை சென்று அகத்தீஸ்வரரையம்,கால பைரவரையும், சூரியனையும் வணங்கி விட்டு வாருங்களேன்.

சென்னையில் இருக்கும் நவகிரக ஸ்தலங்கள்:

**கொளப்பாக்கம் அகத்தீஸ்வரர் கோவில் - சூரியன்**

**சோமங்கலம் சோமநாதீஸ்வரர் கோவில் - சந்திரன்**

**பூனமல்லி வைத்தீஸ்வரர் கோவில் - செவ்வாய்**

**கோவூர் சௌந்தரேஸ்வரர் கோவில் - புதன்**

**போரூர் ராமநாதேஸ்வரர் கோவில் - குரு**

**மாங்காடு வெள்ளீஸ்வரர் கோவில் - சுக்கிரன்**

**பொழிச்சலூர் அகத்தீஸ்வரர் கோவில் - சனி**

**குன்றத்தூர் நாகேஸ்வரர் கோவில் - ராகு**

**கெருகம்பாக்கம் நீலகண்டேஸ்வரர் கோவில் - கேது**

Back to index ^

# பைரவியும் பைரவர்களும் :: ஆரண்யநிவாஸ் ஆர் ராமமூர்த்தி

நாய் என்றாலே annoyed ஆகும் மனிதர்கள் மத்தியில் நான் கொஞ்சம் வித்யாசமானவன்!

பாய் பிரெண்ட்னா கேர்ள்ஸுக்கு அப்பப்ப பீட்ஸா, கோக், ஐஸ்க்ரீம், மிஸ்ட் காலுக்கு மொபைல் டேட்டாவோட ஒரு மாச பேக்கேஜ்,, ஆசையா திட்டு வாங்க அப்பாவியா ஒரு முகம் - எல்லாம் கிடைக்கும்..

நம்மளைப் போல ஆளுங்களுக்கு பாய் பிரண்ட்னா ரம்ஜானுக்கு பிரியாணி மட்டும் தான் கிடைக்கும்! அதிலும் வெஜ்னா சுத்தம்!

ஆனா நாய் ப்ரெண்ட்னா எல்லாவற்றையுடம் விட மேல்! என்னிக்கோ ஒரு நாள் போட்ட நமுத்துப் போன ஓம பிஸ்கெட்டுக்காக வாழ்நாள் முழுவதும் வாலை ஆட்டிக் கொண்டிருக்கும் ஜீவனுடன் ஸ்நேகம் என்றால் சும்மாவா?



ஆனால் இதுக்கும் வேட்டு வைத்து விட்டான் ஆண்டவன்!கொஞ்ச நாள் கீழ வாளாடி அக்ரஹாரத்தில் இருந்தோம்,,

அது ஒரு நீளமான தெரு,, நிறைய நாய்கள் உல்லாசமாக உலவும் சொர்க்க புரி!

நான் ப்ளூட் கற்றுக் கொண்ட புதிது,, பைரவி ராக ஆலாபனை பண்ணினா நாய்களோட ஸ்னேகம் கிடைக்குமென்று நினைத்து ரோடில் நடக்கும் போது விஸ்தாரமா பைரவி ராகம் ஹம் பண்ணிக்கொண்டு கண்களை மூடிக் கொண்டு நடந்தேன்!

காச் மூச்சென்ற உறுமல்கள்,, 'எவன்டாவன் நான் பாட்டுக்கு போய்க் கொண்டிருக்கும் போது என் பாட்டுக்கு எசப்பாட்டு பாடறவன்?' என திரும்பினால் ஏழெட்டு நாய்கள் என்னை சுற்றி!



அப்படியே பைரவியை அம்போவென விட்டு விட்டு எடுத்தேன் ஓட்டம்!

அன்று நான் ஓடிய ஓட்டத்தை ஒரு மண்டலம் விடாமல் ப்ராக்டீஸ் பண்ணிக்கொண்டிருந்தால் ஒலிம்பிக்ஸில் ஒட்டியாணம் கூட வாங்கி இருக்கலாம்!

விளைவு? நாய்களைப் பற்றிய பொத்தம் பொதுவான அபிப்ராயம் உள்ள பொது ஜனங்களோடு நானும் சேர்ந்து கொண்டு விட்டேன்!

====

ஆரண்யநிவாஸ் ஆர் ராமமூர்த்தி :

ஊர் : திருச்சி திருவானைக்காவல்
வலைப்பூ : (தற்சமயம் தொடர்பு எல்லைக்கு அப்பால் உள்ளது)
Facebook : [Aaranyanivas R Ramamoorthy | Facebook]
YOUTUBE : [(1855) RAMAGUNDAM RAMAMOORTHY - YouTube]



Back to index ^

# பக்தியா? ஆன்மிகமா? இரண்டும் ஒன்றா? கீதா சாம்பசிவம்

ஸ்ரீராம் பெரியதொரு வேலையைக்கொடுத்துச் செய்யச் சொல்லி விட்டார். உண்மையில் எனக்கு இது பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அவரோ நான் அனைத்தும் அறிந்த அதிமேதாவி என்னும் நினைப்பில் எழுதச் சொல்லி வேண்டுகோள் விடுத்திருக்கார். புரிந்தவரை சொல்கிறேன்.
=====

அவர் கேட்டது பக்திக்கும்/ஆன்மிகத்துக்கும் உள்ள வேறுபாடு குறித்தே. பக்தி லௌகிகம் சார்ந்தது. வெளிப்படையானது. அனைவரும் அறிய நாம் பக்தி செலுத்துகிறோம். இறை நம்பிக்கையை வெளிக்காட்டிக் கொள்கிறோம். இறைவனிடம் வேண்டுகோள்கள் விடுக்கிறோம். கோரிக்கைகளைச் சொல்கிறோம். அவற்றிற்குப் பலன்களையும் எதிர்பார்க்கிறோம். இல்லை எனில் "என்ன இந்தக் கடவுள் இப்படி இருக்கார்! பாரபட்சமாகவே நடந்துக்கறாரே! ஒண்ணும் செய்யறதில்லையே! நல்லவர்களை எல்லாம் கஷ்டப்படுத்திக் கொண்டு பொல்லாதவர்களை எல்லாம் சுகமாக வாழ வைக்கிறாரோ என்றெல்லாம் நினைக்கிறோம்.

பக்தி கொஞ்சம் தடம் புரண்டும் போகும். பக்தி செலுத்துவதிலும் நம்பிக்கை கொண்டது/நம்பிக்கை இல்லாமல் அரைமனதுடன் செய்வது என்று உண்டே! அதற்கு ஓர் சிறுகதையைச் சொல்வார்கள்.

ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவரும் சக்கிலியத் தொழிலாளி ஒருத்தரும் மிகுந்த இறை பக்தி கொண்டவர்கள். செல்வந்தரின் பக்தி மிக்க ஆடம்பரத்துடன் விளங்கும். மணிக்கணக்காகப் பூஜைகள் செய்யும் அவருக்கு அதனால் மன நிம்மதி என்னமோ கிடைக்கவில்லை. ஆனால் சக்கிலியத் தொழிலாளியோ தான் செருப்புத் தைக்க ஆரம்பிக்கையிலேயே பக்கத்தில் பெருமாள் படம் ஒன்றை வைத்து வணங்கிக் கொள்வான். கடை மூடும்போது ஒரு முறை வணங்கிக் கொள்வான்.

இதைத் தினமும் பார்த்து வந்த நாரதருக்கோ செல்வந்தன் இத்தனை செய்தும் அவனுக்குக் கடவுள் அனுகிரஹம் இல்லையே என்று தோன்றியது. அவருக்கு உதவி செய்ய எண்ணிப் பெருமாளிடம் விண்ணப்பிக்க அவரும் நாரதரைச் செல்வந்தரை மட்டுமின்றி அந்தச் சக்கிலிய பக்தனையும் பார்த்து வருமாறு கூறி அனுப்பி வைத்தார். அப்போது செல்வந்தரிடம் கடவுள் ஊசிக் காது வழியாக யானையை நுழைப்பதாகச் சொல்லவும் சொன்னார். செல்வந்தரிடம் சென்ற நாரதர் தான் கடவுளிடமிருந்து வருவதாயும் அவர் இப்போது ஊசிக்காதில் யானையை நுழைக்க முயன்று கொண்டிருப்பதாகவும் சொல்ல,

" இது என்ன வேண்டாத வேலை! இதெல்லாம் நடக்கிற காரியமா?" என்றார் செல்வந்தர். அடுத்துச் சென்று செருப்புத் தைக்கும் தொழிலாளியிடமும் நாரதர் இதையே சொல்ல, அவரோ, "ஆஹா! இறைவனால் முடியாததும் ஒன்று உண்டா என்ன? சின்னஞ்சிறு ஆலம் விதையில் அவ்வளவு பெரிய மரத்தை உண்டாக்குகிறான். அதோடு அல்லாமல் தன் சின்னஞ்சிறு வாயில் பிரபஞ்சத்தையே அடக்கியவன்! அவனால் ஆகாததும் ஒன்று உண்டோ!" என்று பரவசம் அடைந்தான். இதைச் சுட்டிக்காட்டிய பெருமாள் பக்தியில்

உள்ள சரணாகதிக்கு, பூரண நம்பிக்கையுடன் இறைவன் பாதத்தைப் பற்றுவதற்கு இவனை விடச் சிறந்த உதாரணம் உண்டா? பக்தி எனில் இது தான் எனக் காட்டினார்.

அத்தகைய பக்தி கொண்டவர்கள் பெரும்பாலும் லௌகிக வாழ்க்கையில் இருந்தாலும் பக்தியில் மேம்பட்டுப் பற்றற்ற வாழ்க்கையில் மூழ்கி இருப்பார்கள்.

ஆனால் இங்கே ஸ்ரீராம் கேட்டிருப்பது ஆன்மிகம் பற்றியும். ஆன்மிகம் என்பது தனி. பக்திக்கும் அதற்கும் கொஞ்சமும் சம்பந்தம் இல்லை. வெறும் பக்தி மட்டுமே ஆன்மிகம் ஆகாது. மனதில் சுத்தமான எண்ணங்கள் இருந்தால் மட்டுமே ஆன்மிகமும் ஆகிவிடாது. ஆன்மிகம் என்பது தன்னை அறிதல். தன்னுள்ளே இருக்கும் ஈசனைக் கண்டறிதல். இதற்குப் பலரும் யோக வழியைப் பின்பற்றுவார்கள். அந்த யோகவழியிலும் மனதில் எவ்விதமான பந்த பாசமும் இல்லாமல் பந்த பாசங்களை வேரோடு அறுத்துவிட்டு உண்மையைக் கண்டறிவது ஒன்றே என்னும் லட்சியத்தோடு போராட வேண்டும்.

இதிலே மனசாட்சிக்குப் பயந்து வாழ்வதையும் ஆன்மிகம் என்று சொல்கின்றனர். நன்மை, தீமைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு அனைவரையும் சமமாக நடத்தி அனைவருக்கும் முடிந்தவரை நன்மையையே செய்து கடுஞ்சொற்களைப் பேசாமல், அநாவசிய ஆசை இல்லாமல் வாழ்வதையும் ஆன்மிகம் என்று சொல்லுகின்றனர். ஆனால் ஆன்மிகம் இதை எல்லாம் விட உயர்ந்தது. உள்ளத்தில் உள்ள இறை நம்பிக்கை, பக்தியை மட்டும் முன்னுக்கு வைக்காமல் அவனன்றி ஓரணுவும் இல்லை எனப் பரிபூரண சரணாகதியை அடைந்து வாழ்வதும் ஒரு வகை ஆன்மிகம் தான்.

உண்மையில் ஆன்மிகம் என்பது தன்னை அறிதல் ஆகும். திருமந்திரத்தில் திருமூலர்
தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.
என்னை யறிகிலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலும் கைவிடா(து)
என்னையிட் டென்னை உசாவுகின் றேனே." -திருமந்திரம்

"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்து பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே"

இதற்கு குருவின் அருள் வேண்டும். துணை வேண்டும். குருவின் அருளின்றி ஒருவனால் இதில் முன்னேற்றம் காண முடியாது. தன் உடலைப் பற்றி மட்டுமில்லாமல் அது தாங்கும் உயிரையும் குறித்து அறிவதே ஆன்மிகம். உயிர், உடல், ஆன்மா என மூன்றுக்கும் ஒவ்வொன்றிற்கும் உள்ள தொடர்பே அதை இணைப்பதே ஆன்மிகம் ஆகும். (பேத்தறேனோ?) இதில் ஒரேயடியாக ஒருவன் முன்னேற முடியாது. ஒவ்வொரு படியாகத் தான் முன்னேற வேண்டும். ராஜ யோகம் என்னும் உண்மையான யோகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதில் வெற்றியும் காண வேண்டும். சித்தி அடைய வேண்டும். சித்தி அடைந்தவனையே "சித்தர்கள்" என்பார்கள். இவர்களுக்குப் பல ஆற்றல்

இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள். அற்பமான காரணங்களுக்காக அதைப் பயன்படுத்தவும் மாட்டார்கள். உலக க்ஷேமம் ஒன்றுக்கே பயன்படுத்துவார்கள்.

உண்மையான ஆன்மிகப் பாதையில் செல்பவன் தன்னை விளம்பரப் படுத்திக் கொள்ள மாட்டான். ஒவ்வொரு நிலையிலும் உள்ள தடங்கல்களைக் கடந்து ஒவ்வொரு படியாக முன்னேறிக் கடைசி நிலையில் தன்னை உணர்ந்து கொண்டு பேரின்பப் பரமானந்தம் அடைவான்.

சிலர் இதற்காக உலக இயல்பிலிருந்து விலகி பிரமசரியம் ஏற்று வாழலாம். சிலர் உலகவாழ்க்கையை விடாமல் அதில் இருந்து கொண்டே பெறலாம். ஆனால் உண்மையான ஆன்மிகவாதிக்கு உடல் அது சார்ந்த இன்பங்கள் ஒரு பொருட்டல்ல. கடமைக்கு மட்டுமே அவன் உடலைச் சொன்னபடி கேட்க, நடக்கப் பழக்கி இருப்பான். உலகத்தில் வாழ்ந்தாலும் அதன் இயல்பில் நடந்தாலும் அவன் மனம் அதில் ஒட்டாது. நம் அனைவருக்கும் பிரியமான கண்ணன் அப்படி வாழ்ந்ததால் தான் அவனை “நித்திய பிரமசாரி” என்பார்கள். இதெல்லாம் மிக நுணுக்கமான ஒரு விஷயம். அனுபவத்தால் அன்றி அதுவும் ஆசான் அருளின்றிப் புரிந்து கொள்ளுதல் கடினமானது.

தன்னை அறிந்து கொண்டு தனக்குள்ளே இருக்கும் இறையை உணர்ந்து புரிந்து ஆனந்தம் அடைந்து அதே இறை தத்துவம் தான் இவ்வுலக மாந்தர் ஒவ்வொருவரிடமும் உள்ளது என்னும் உண்மையை அறிந்தவனே உண்மையான ஆன்மிகவாதி ஆவான். இறைவனிடம் பக்தி கொண்டவர்களோ, பரிபூரண சரணாகதி அடைந்தவர்களோ ஆன்மிகவாதிகள் ஆக மாட்டார்கள். ஆன்மிகம் என்பது சொல் கடந்த உடல் கடந்த உயிர் கடந்த ஓர் தத்துவம். ஆன்மாவின் இருப்பிடத்தைப் புரிய வைப்பது. ஆன்மாவின் தத்துவத்தைக் கண்டறிவது.

ஆனால் பக்தியோ ஆண்டவனிடம் செலுத்துவது! அவனே சரணம் என்று பாதாரவிந்தங்களில் வணங்கித் துதிப்பது. முன்னது ஆன்மிகம் எனில் பின்னது முழுக்க முழுக்க லௌகிகம். உலக வாழ்வில் இன்ப, துன்பங்களைத் துய்த்து உணர்ந்து கொண்டே ஏற்றுக் கொள்வது பக்தி. ஆன்மிகமோ உலக வாழ்வின் இன்ப, துன்பங்களைத் துச்சமாகக் கருதி அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் அதன் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் உலக க்ஷேமம் ஒன்றையே கருதி வாழ்வது ஆகும்.

ஆன்மிகத்தில் இருப்பவர்கள் பார்க்க நம்மைப் போல் தான் இருப்பார்கள். சொல்லப் போனால் இயல்பாகாவும், எளிமையாகவும், அணுகவும் எளிதாகவும் ஆர்ப்பரித்துத் தன்னை விளம்பரப் படுத்திக்கொள்ளாமலும் காணப்படுவார்கள். இவர்களை நாம் புரிந்து கொள்ளுதல் கடினமே. ஏனெனில் நமக்கும் அத்தகைய ஆன்மிகப் புரிதல் இருக்கணும். அணுகினால் அவர்களை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் நமக்கும் அந்த ஆன்மிகத் தேடல் இருக்க வேண்டும். ஆன்மிகத் தேடல் இருந்தால் குரு நம்மை நாடி வந்து ஸ்பரிச தீக்ஷை, நயன தீக்ஷை என ஏதேனும் ஒன்றின் மூலம் நம்மைப் புரிய வைப்பார்.

இந்த வகையில் ஆன்மிகத்தில் ஈடுபட்டுப் பின்னர் குருவின் ஆணைக்கிணங்க இல்லறத்தில் இருந்து கொண்டே ஆன்மிகப் பணி ஆற்றும் “திரு எம்” அவர்கள் இப்போது 75 வயதை நெருங்கி நம்மிடையே வாழ்ந்து வருகிறார். ஆந்திராவில் இருக்கும் இவரது ஆன்மிக அனுபவங்கள் மெய் சிலிர்க்க வைப்பவை.

பிரம்மத்தை அடைய இவர் பட்ட பாடுகள், பின்னர் பிரம்மத்தை இவர் அறிந்து கொண்டது. பிரம்மம் எனில் அது தன்னுள்ளே எல்லையில்லாமல் விரிவடைவது எனவும், அது நிகழவேண்டியது உள்ளே மட்டுமே எனவும் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் இவர். அதைப் புரிந்து கொள்ளாமல் வெளியே இதை நிகழ்த்தப் பார்த்தால் தோல்வியில் முடிவதோடு அல்லாமல் துன்பங்களே மிஞ்சும் என்றும் சொல்கிறார். அதோடு இதை அடையத் தகுதியும் இருக்க வேண்டும் என்கிறார் திரு "எம்" அவர்கள். தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த "க்ரியா யோகம்" கற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அதன் மூலமே அவர்களுடைய உள்ளுணர்வு அடைய வேண்டியதை அடைந்து பல பரிமாணங்களாகப் பெருகும் என்றும் சொல்கிறார். ஆக, ஆன்மிகம் என்பது உணர்ந்து அறிய வேண்டியது. தன்னுள்ளே தன்னைத் தேடிச் செல்ல வேண்டியது. பக்தி என்பதோ ஈசனிடத்தில் வைப்பது. எப்போது வேண்டுமானாலும் எந்த ஈசனிடமும் பக்தி வைக்கலாம். மனம் உருகலாம். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கலாம்.

இது ஆரம்பம் தான். இதை விட மேலே செல்வது தான் ஆன்மிகம். இந்த பக்தி என்னும் அடிப்படையை ஸ்திரமாக அமைக்காவிட்டால் ஆன்மிகக் கட்டிடம் எழும்பாது என்றும் சொல்லலாம். ஆனால் எதையும் புரிந்து கொள்ளும் உள்ளுணர்வு அமைய வேண்டும். அது தாகத்துடன் தனக்கு உரியதைத் தேடிப் பற்றிக் கொண்டு பின்னர் அமைதி அடையும்.

Back to index ^

# லேடிஸ் கிளப் பொங்கல் - சியாமளா வெங்கட்ராமன்

அம்மா போன்! என் பையன் கூற நான் சென்று போனை எடுத்தேன். ஹலோ !என்றதும் மறுபக்கத்தில் இருந்து சியாமளா எப்படி இருக்கே? நான்தான் வத்சலா பேசுறேன். நீ இப்போ எங்க இருக்க? லண்டன் லியா? சென்னையிலேயே? என்றாள்.

ஏன் நான் சென்னையில் தான்இருக்கேன்!

ஏண்டி நீ பொங்கலுக்கு பிள்ளையோட இல்லாம ஏன் அதுக்குள்ள சென்னைக்கு வந்தே? என்று வ்த்ஸலா கேட்டாள்.

நான் எப்படி அங்கு இருக்க முடியும்? இங்க என் லேடிஸ் கிளப் பொங்கல் இருக்கே! உனக்கு அதைப் பற்றி தெரியாதா?

லேடீஸ் கிளப்பொங்கலா?

10 வருடமா நாங்க எங்க லேடீஸ் கிளப்பில் பொங்கல் கொண்டாடுகிறோம்.

என்ன? பத்து வருடமாவா? என்று ஆச்சரியமாக கேட்க...
ஆமாம்.. அதைப்பற்றி போனில் சொன்னால் எனக்கு காசு கிழிஞ்சுடும்.. அதைப்பற்றி"மின்நிலா"என்ற பத்திரிக்கையில் எழுத போறேன் அதுல நீ படிச்சுக்கோ! என்று கூறி நான் போனை வைத்தேன்.

ராமாபுரத்தில் பொங்கல் விழா என்பதைப்பற்றி எழுத ஆரம்பித்தேன்.

ஸ்ரீ விக்னேஸ்வரா லேடிஸ் கிளப் பத்து வருடங்களாக ராமாபுரத்தில் அங்கத்தினர்கள்விருப்பப்படி பொங்கல் விழா வருடா வருடம் பொங்கலுக்கு நாட்களுக்கு முன்பாக கொண்டாடி வருகிறோம் இதில் என்ன விசேஷம் என்றால் சென்னையில் வசிப்பவர்கள் தங்கள் பாரம்பரிய முறைப்படி பொங்கல் கொண்டாட முடிவதில்லை ஏனென்றால் நிறையபேர் flatஇருப்பதுதான்! எனவே அனைவருடைய விருப்பப்படி பாரம்பரிய முறையில் இதை கொண்டாடுவது என்று முடிவு செய்தோம் எங்கள் வீட்டிற்கு அருகில் ஸ்ரீ லட்சுமி மகா மாரியம்மன் கோவில் உள்ளது அது ஒரு குடும்பத்தின் பரம்பரை பரம்பரையாக உள்ள கோவில்...அந்த கோவிலின் நிர்வாகி எங்க கிளப்உறுப்பினர். அவள் எங்கு பொங்கல் விழா நடத்தலாம் என்பதற்கு எங்கள் கோவிலிலே நடத்தலாம் என்று ஒப்புதல் சொன்னாள். அதைக்கட்டதும் எங்கள் உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்றார்கள் அன்றுமுதல் பத்து வருடமாக அந்த கோவில் வளாகத்தில் பொங்கல் விழா நடைபெறுகிறது.

இந்த விழாவை நடத்த உறுப்பினர்கள் சிறு சிறு குழுக்களாக பிரிந்து வேலைகளை பகிர்ந்து கொள்கிறார்கள், ஒரு குழு புது மண் பானை வாங்கி அதை சுத்தம் செய்து சுண்ணாம்பினால் கோலம் போட்டு மஞ்சள் குங்குமம் இட்டு மஞ்சள் இஞ்சி கொத்து கட்டி அலங்கரிப்பார்கள்.

ஒரு குழு மளிகை சாமான்கள் வாங்கி சேர்ப்பார்கள் மற்றொரு குழு கரும்பு மஞ்சள் கொத்து இஞ்சி கொத்து பழம் வெற்றிலை பூ ஆகியவைகளை வாங்குவார்கள்.

பொங்கல் விழா அன்று ஒரு குழு கோவிலையும் கோயில் வளாகத்தையும் சுத்தம் செய்து கோலம் போட்டு அலங்கரிப்பார்கள் மேலும் கரும்பு பந்தலிட்டு பூக்களால் தோரணம் அமைப்பார்கள்.

மாலையில்தான் பொங்கல் விழா நடைபெறும் அப்போது செங்கற்களால் அடுப்பு அமைத்து அதற்கு கோலம் போட்டு மஞ்சள் குங்குமம் இடுவோம்.விறகினால் அடுப்பு மூட்டி அதில் ”கௌரி கல்யாணம் "என்று பாடிக்கொண்டு பானையை ஏற்றுவோம்



பானையில் பாலை ஊற்றிய பின் அனைவரும் லலிதா சகஸ்ரநாமம் கூற ஆரம்பிப்போம். பால் நன்றாகக் கொதிக்கும்போது ஒவ்வொரு உறுப்பினரும் மூன்று கை அரிசி பருப்பு இரண்டையும் உலையில் இடுவார்கள். அப்போது அவரவர் குடும்பம் நன்றாக இருக்கவும் ஊர் நன்றாக இருக்கவும் உலகம் நன்றாக இருக்கவும் பிரார்த்திப்பார்கள்.



பால் பொங்கி வரும் பொழுது மங்கள வாத்தியம் முழங்க "பொங்கலோ பொங்கல்" என்று அனைவரும் உரக்கக் கூறி வெல்லத்தை சேர்ப்போம்.

பொங்கல் நன்றாக வெந்ததும் அதற்குரிய முந்திரி திராட்சை நெய்யில் பொரித்து அதில் போடுவோம் ஏலப்பொடியை சேர்த்து நன்றாக கிளறி பானையை இறக்கி வைப்போம் பிறகு பொங்கல் பானையை கோயிலின் மண்டபத்தில் கரும்பு பந்தலின் கீழ் கொண்டு வைத்து அம்மனுக்கு நெய்வேத்தியம் செய்வோம், அதன்பின் மங்கள வாத்தியம் முழங்க கற்பூர ஆரத்தி நடைபெறும்.

அதன்பின் பொங்கல் பானையை சுற்றி அனைவரும் நின்று கும்மியடித்து பாட்டு பாடி மகிழ்வோம்,



அப்போது அனைவருக்கும் ஏற்படும் ஆனந்தம் சொல்லிமாளாது. அப்பப்பா!!! அதை எழுத்தில் எழுதி வர்ணிக்க முடியாது. அனைவரும் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று பாரம்பரிய முறைப்படி செய்ய முடியாதது இங்கு செய்து சந்தோஷம் அடைகிறார்கள். பிறகு அனைவருக்கும் பொங்கல் பிரசாதம் வழங்கப்படும். பிறகு அனைவரும் தாம்பூலம் பெற்றுக் கொண்டு பரம சந்தோஷத்துடன் அவரவர்கள் வீட்டிற்குச் செல்வார்கள்.

இந்த பொங்கல் விழாவை பற்றி மின் நிலாவில் எழுதும்படி கூறிய அட்மின் அவர்களுக்கும் இந்தக் குழுவின் உறுப்பினர்களுக்கும் எங்கள் விக்னேஸ்வரா கிளப் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்
அனைவருக்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள் !
பொங்கலோ பொங்கல் !¡
பொங்கலோ பொங்கல் !!
பொங்கலோ பொங்கல்!!!

Back to index ^

## சிங்கை பயணத்தை எளிதாக்கும் ”சிங்கப்பூர் மெமரீஸ்” இரா. அரவிந்த்

தொழில்நுட்பம் எவ்வளவுதான் வளர்ந்தாலும், மனிதர்களின் வாழ்வில் சிக்கல்கள் பெருகுவதற்கான முக்கிய காரணம், வேலைக்கும் வாழ்க்கைக்கும் இடையே ஏற்படும் சமநிலைக் குலைவு எனலாம்.
நமக்கு எக்காலத்திலும் தோளோடு தோள் நிற்கும் நம் உடலையும், உறவுகளையும், நண்பர்களையும் வேலையை விட முக்கியமற்றவர்களாகக் கருதுவதன் விளைவே, நம் உடல் சார்ந்த மற்றும் மனம் சார்ந்த பிரச்சனைகளாக விஸ்வ ரூபம் எடுப்பதை உணரலாம்.
வேலையால் விளையும் பணத்தை வாழ்வின் மகிழ்ச்சியாக அறுவடை செய்ய செய்யவேண்டியவற்றுள் ஒன்று, குடும்பத்துடன் அவ்வப்போது செய்யும் ஒரு பய ணம்.
அதிலும் வெளிநாட்டுப் பயணம், அது சார்ந்த நினைவுகளால் நம் முழு குடும்பத்தையும் பல ஆண்டுகள் கூட மகிழ்ச்சியாக வைத்திருக்கவல்லது.
அப்படிப்பட்ட பயணத்தின் பெரும் சவால், அதை தெளிவாகத் திட்டமிட்டு வெற்றிகரமாக அனைவருக்கும் திருப்தியளிக்கும் வகையில் செய்து முடிப்பதே.
அதை சாத்தியமாக்க எளிதில் உதவுவதே, திரு திருப்பதி மஹேஷ் அவர்களால் எழுதப்ப ட்ட, 2017 ஆம் ஆண்டு அவர் மேற்கொண்ட சிங்கப்பூர் பயணத்தின் அனுபவ விவரணமான 'சிங்கப்பூர் மெமரீஸ்' மின் நூல்.
சென்னையைப் போன்ற ஒரு கடற்கரை நகரமாக ஆனால் அதே சமயம், சென்னையை விட சற்றே அதிகமாக எழுபது சதவிகிதம் மட்டுமே பரப்பளவும், சென்னையின் மக்கள் தொகையில் என்பது சதவிகிதமே கொண்ட ஒரு நாடாக, உலகின் வளர்ந்த நாடா கவும் திகழும் அதிசயத்தை நூலைப் படிக்கும் நாமும் ஆசிரியரோடு மானசீகமாக பயணி த்து உணர முடிவதே நூலின் சிறப்பு அம்சம்.
அப்படிப்பட்ட நாட்டிற்கு பயணம் செய்ய, முகவர்களை மட்டுமே நம்பியிராமல், சுயமாகவே சென்று வரும் தன்னம்பிக்கையை வாசகர்களுக்கு அளித்திருப்பது நூலின் மற்றொரு சிறப்பு.
சிங்கப்பூருக்குச் செல்ல சாத்தியமான விமாணங்கள், டிக்கெட் முன்பதிவு செய்கையில் க வனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள், தங்குவதற்காக ஹோட்டலையோ, விடுதியை யோ தேர்ந்தெடுப்பதில் உள்ள சாதக பாதகங்கள், பணத்தை டாலராக மாற்றும் எளிய வழிகள் என பயணத்திற்கான முன் தி ட்டமிடல்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.
இதற்கும் மேல், பயணிகள் தெரிந்துகொள்ளவேண்டிய சிங்கப்பூர் சாங்கி விமான நிலை யம், மெட்ரோ வழித்தடங்கள் மற்றும் சுற்றிப் பார்க்கவேண்டிய உலகப் புகழ் பெற்ற சிங்க ப்பூர் ஃப்லையர், கார்டன்ஸ் பை தி பே, மெரினா பே ஸாண்ட்ஸ், மெர்லயன் பார்க், முஸ்தஃபா ஶாப்பிங் மால், செண்டோசா தீவில் உள்ள யுனிவர்சல் ஸ்டுடியோ, சிங்கப்பூர் சூ உள்ளிட்ட அனைத்தையும் குறித்த எண்ணற்ற தகவல்கள் வாசிப்பின் சுவாரசியத்தைக் கூட்டுபவை.
பயணத்தை கார்களிலோ, முகவர் அழைத்துச் செல்லும் பேருந்திலோ மேற்கொள்ளாமல், மெட்ரோ ரயில்களிலும், உள்ளூர் பேருந்துகளிலும் மேற்கொண்டு, ஆங்காங்கே சுற்றிப்பார்க்க ஆகும் செலவுகள் குறித்தும், முன்பதிவு செய் யும் முறைகள் குறித்தும், உள்ளூர் உணவகங்கள்குறித்தும் அளித்துள்ள தகவல்கள்

மூலம், இந்நூல் சிங்கப்பூர் பயணிகளின் ஒரு அகராதியாக ஏற்கும் தகுதி பெற்றதாகவும் கருத இடமுண்டு.
இந்நூலை படித்த பின், முகவர்கள் மூலம் பயணம் மேற்கொள்பவர்களும், தங்களின் சிங்கப்பூர் குறித்த விழிப்புணர்வால், குறைந்த செலவில் நிறைய இடங்களுக்கு அழைத்துச் செல்லும் தரமான முகவர்களைத் தேர்ந்தெடுப்பது உறுதி.
நோய்த் தொற்று அபாயம் நீங்கியபின் செல்லலாம் என பயணத் திட்டங்களை ஒத்திப்போட்டிருக்கும் பலர், இந்நூலை வாசித்தபின் முழு நம்பிக்கையுடன் சிங்கப்பூருக்கே செல்ல திட்டமிடுவர் அதுவும் குடும்பத்தோடும் என்றும் சொல்லலாம்.
இங்கனம், சிங்கப்பூர் பயணிகளின் கையேடாகக் கருதும் தகுதி பெற்ற இந்நூலின் ஆசிரியருக்கு மேன்மேலும் பல நாடுகளுக்கும் செல்ல வாழ்த்துவதோடு, அவை அனைத்தையும் குறித்த புத்தகங்களை வரும் காலங்களில் நமக்கு விருந்தாக படைக்குமாறு கோரிக்கை வைக்கிறோம்.
நம்மையும், பரந்துபட்ட நம் உலக மக்களையும் புரிந்துகொண்டு, நம் சிந்தையை விரிவுபடுத்தும் பயணங்களை மேற்கொள்ள தூண்டுகோலாய் உள்ள இந்நூலை பின்வரும் சுட்டியில் வாங்கி வாசிக்கலாம்.
https://www.amazon.in/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%82%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%AE%E0%AF%86%E0%AE%AE%E0%AE%B0%E0%AF%80%E0%AE%B8%E0%AF%8D-Tamil-%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF-%E0%AE%AE%E0%AE%B9%E0%AF%87%E0%AE%B7%E0%AF%8D-ebook/dp/B08MCKZH8G

= = = = =

பெயர், அரவிந்த் ராஜேந்திரன்.
விழித்திறன் சவால் கொண்ட மாற்றுத்திறனாளி.
சென்னையில் வங்கியில் மேலாளராக பணியாற்றுகிறேன்.
தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்கும் ஒரு மாணவனாக கடைசிவரை திறந்த மனதுடன் இருப்பதே என் லட்சியம்.
Email id: aravind_069@yahoo.com



Back to index ^


# தை பிறந்தால் வழி பிறக்குமாமே?:) - அதிரா



புது வருடத்திலாவது ஏதாவது என் கை வண்ணத்தைக் காட்டலாமே என யோசித்து, ஒருமாதிரி செய்து முடித்து விட்டேன், இப்படி ஆரம்பித்துப் பல கைவண்ணங்கள் பாதியில் நிற்கின்றன.
சரி சரி ஓவரா அலட்டிக்கொண்டிருக்காமல் ஸ்ரெயிட்டா மற்றருக்கு வருகிறேன்:)..
ஓ சொல்ல மறந்திட்டேன்!!! அனைவருக்கும் இனிய பொங்கல்.. தைத்திருநாள் வாழ்த்துக்கள்.
இதுவரை எங்கள்புளொக் மின்னூல் க்கு, என் பங்களிப்பு எதுவுமே இருந்ததில்லை, நேரம் போதாமையால, கிடைக்கும் நேரத்தில் பேசாமல் ரெஸ்ட் எடுக்கவே மனம் விரும்புது. இது கிறிஸ்மஸ் ஹொலிடே என்பதால, சரி இம்முறை எதுவும் செய்யாது விட்டால் பின்பு நேரம் கிடைக்காது அதனால ஏதும் பண்ணலாமே என என் கை வண்ணத்தைக் காட்ட வெளிக்கிட்டு, அப்ப அப்ப துணிகள் வாங்கி சேர்த்து வைத்திருக்கிறேன், அதனுள் தேடி ஒரு துணி எடுத்து ஆரம்பித்தேன்..
இவை என்னிடம் இருக்கும் துணிக்கான பெயிண்ட் வகைகள்



நான் பிரிண்ட் பண்ணி எல்லாம் செய்வதில்லை, கூகிளில் ச்சும்மா இமேஜ் பார்த்து, பின்பு எனக்குப் பிடிச்சபடி கையால கீறி எடுத்து, பின்னர் அதனைப் பார்த்துப் பார்த்துக் கீறி, என் ஐடியாவிலேயே ஒரு பற்றன் கொண்டு வருவேன்... அப்படித்தான் இதுவும்..



பெயிண்ட் பண்ண ஆரம்பித்து விட்டேன்
EB = Engal Blog:))





பெயிண்ட் பண்ணிப்போட்டு தைத்து முடிக்காமல் எத்தனையோ இருக்கின்றன, அப்படி ஆகிடாமல் இம்முறை தைத்து முடிச்சிடோணும் என இரவிரவாக இருந்து தைத்துப் போட்டேன்ன்... எப்பூடி? மசமசவெனப் பார்த்துக் கொண்டிருக்காமல் கைதட்டி வாழ்த்துங்கோ அதிராவை கர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்:))





வானவில் பார்த்தால் லக் அடிக்குமாம்:)).. புது வருடத்தில் எல்லோருக்கும் எல்லாம் நல்லபடி அமையோணும் எனவும், மகிழ்ச்சியாகவும் நலமாகவும் எல்லோரும் இருக்கோணும் எனவும் வேண்டி, எங்கள் வீட்டு ஆற்றில் தோன்றிய.. அதுவும் “இரட்டை வானவில்” படம் இணைக்கிறேன் பார்த்து மகிழ்ந்திருங்கோ... வானவில்லை....



இது ஸ்கூலில் தோன்றியது, இங்கு எங்கள் ஏரியாவில் அடிக்கடி வானவில் பார்க்கலாம், ஆனால் எத்தனை தடவை பார்த்தாலும் அலுக்காது, மனம் குதூகலிக்கும், இங்கத்தைய வெள்ளைகளுக்கும் பழக்கிட்டேன் வானவில் பார்த்தால் நல்லது லக்:) என, அதனால ஹபியா ரசிச்சுப் பார்க்கப் பழகியிருக்கினம் என் நண்பர்களும்:)).. விடமாட்டனெல்லோ:))..



🙏🙏🙏🙏🙏🙏😻😻😻😻🙏🙏🙏🙏🙏🙏

**அதிகமாக வளைபவர்.. ஆபத்தானவர்:))..**
***********

**உங்களுக்கான மிகப்பெரிய வாய்ப்பானது, நீங்கள் இப்போ எங்கிருக்கிறீர்களோ அங்கேயே கூட இருக்கலாம்,**
**அதனால் முயற்சி செய்யுங்கள்..**
**இவ்வரிய தத்துவங்களை, உங்களுக்காகக் காவி எடுத்து வந்திருப்பவர், உங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய புலாலியூர்ப் பூஸானந்தா அவர்கள் நன்றி_()_.**

🐱🐱🐱🐱🐱🐱🐱🐱🐱🐱

**அதிரா - குறிப்புகள் :**
**ஓ இப்படியும் ஒன்று இருக்கோ ஸ்ரீராம் எனக்குத் தெரிந்திருக்கவில்லை, ஆனா நான் எதுவும் எழுத விரும்பவில்லை, அதிரா என்றால் தெரிஞ்சோருக்கு தெரியும் அது போதும்... இதுக்கு மேல பப்பிளிக்குட்டி வாணாம் ஹா ஹா ஹா**
**நன்றி.**

**வலைப்பூ & சுட்டி : என் பக்கம்** [http://gokisha.blogspot.com/](http://gokisha.blogspot.com/)
**email :** [athira@hotmail.co.uk](mailto:athira@hotmail.co.uk)

**Back to index ^**

# சோமாலியாவில் ஒரு இந்திய இரவு :: ஏகாந்தன்

ஆஃப்ரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் (Horn of Africa) எத்தியோப்பியா, ஜிபூட்டி (Djibouti) ஆகிய தேசங்களை எல்லைகளில் கொண்ட சிறு நாடு. அது அமைந்துவிட்ட பிரதேசத்தின் முக்கியத்துவத்தினால், அதனோடு காதலுறவு கொள்ளத் துடித்தன அந்தக்கால பனிப்போர் எதிரிகளான அமெரிக்காவும், சோவியத் யூனியனும். (அந்த உறவின்வழியே, அங்கே ராணுவதளங்களை அமைத்து, போர்ச்சூழல் ஏற்பட்டால் மத்திய தரைக்கடல் நாடுகளை ஒரு போடு போடலாம் என்பது ராஜீய, மூலோபாயக் கணக்கீடுகள்) ரஷ்யக் கம்யூனிசம் காணாமற்போவதற்கு முந்தைய காலகட்டம். ஜெனரல் முகமது சியாத் பர்ரே (Mohammed Siyad Barre) எனும் ராணுவ சர்வாதிகாரி ஜனாதிபதியாக, இரும்புக்கரத்துடன் அடக்கி ஆண்ட சோமாலியா. மத்திய அரசின் வெளியுறவுப் பணிக்காக நான் முதன்முதலாகப் போகப் பணிக்கப்பட்டது இந்த நாட்டுக்குத்தான். வீட்டுச்சாமான்கள்கூட சரிவரக் கிடைக்காத தலைநகர் அந்த நாட்டினுடையது. அதாவது அடுத்த மூன்று வருடகாலம் நான் வாழவேண்டிய ஊர்.

இளமை முறுக்கில், எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் ஒருநாள் மாலையில் நைரோபியிலிருந்து சோமாலி ஏர்லைன்ஸில் சோமாலித் தலைநகருக்குப் போய்ச்சேர்ந்தேன். முன்பு ஒரு காலத்தில் இத்தாலியின் ஆதிக்கத்தில் இருந்த சோமாலியாவின் வடபகுதியில் உள்ளது தலைநகர் மொகதிஷு(Mogadishu. Italian: Mogadiscio).



சோமாலி வீரனின் சிலை, மொகதிஷு

அதைப்பற்றித் தனியாகவேகூட எழுதலாம். மொகதிஷுவை நகரமெனச் சொல்வது ரொம்ப ஜாஸ்தியாயிடும். பின்னே? சிறுநகரம், பெருங்கிராமம் சேர்ந்த கலவைபோல ஒரு அதிசயம். இஸ்லாமிய நாடு என அரசு வட்டங்களில் அவ்வப்போது சொல்லப்பட்டாலும் அத்தகைய தோற்றம், நடப்புகள் அப்போது பெரிதாக ஏதுமில்லை.



மொகதிஷு வீதிக்காட்சி (1980s)

ஆனால் மசூதி ஒன்று இருந்தது ஊரில். அல் அரூபா என்ற பெயரில் தலைநகரின் ஒரே ஐந்து நட்சத்திர ஹோட்டல், பிரம்மாண்டமாக நடுவில் நின்றது. பார்லிமெண்ட் கட்டிடம், நேஷனல் தியேட்டர், ஒரு சோமாலி வீரனின் சிலை, அல் அரூபா ஹோட்டல், மொகதிஷு லைட் ஹவுஸ்.



சிதிலமடைந்த நிலையில்மொகதிஷு லைட் ஹவுஸ், பின்னணியில் இந்துமகா சமுத்திரம்.

லிடோ பீச், ஷபீலீ (Shabeelee) பஸ்ஸ்டாண்ட் - நகரின் அடையாளச் சின்னங்கள். குறுகுறு கண்களோடு ஒயிலாக, ஒடிசலாக, சுகந்தமாக நடந்துசெல்லும் சோமாலி யுவதிகள்.. தவிர்க்கவியலாக் கவர்ச்சிப் புள்ளிகள்..



சோமாலிய வனக்காட்சி

இப்போது இவையெல்லாம் என்னவாயின, எங்கே போயின போன்ற கஷ்டமான கேள்விகளைத் தவிருங்கள்..

நான் சென்றிருக்கையில், தன் தோள்மீது கைபோட்டிருந்த சோவியத் யூனியனை (இந்தக்கால ரஷ்யா-கிட்டத்தட்ட) 'போடா..' எனத் தட்டி விலக்கிவிட்டு, வல்லரசு அமெரிக்காவோடு கைகோர்த்திருந்தது சோமாலியா. அதனால் உலக வங்கி, அமெரிக்க உதவி நிறுவனங்கள் போன்ற சர்வதேச நிறுவனங்கள், தங்களின் சோமாலியா உதவித் திட்டங்களுக்காக சில அலுவலகங்களைத் தலைநகரில் திறந்து வைத்திருந்தன. ஒரு நித்ய சோம்பேறித்தனம் சூழ்ந்த நாட்டில் எதையாவது உருப்படியாக செய்துபார்க்க முயன்றன. அல்லது அப்படிக் காண்பித்துக்கொண்டு பொழுதைப்போக்கிக்கொண்டிருந்தன.

'மீ முஸ்லிம்..' என ஒரு சோமாலி எப்போவாவது சொல்வதைக் கேட்க நேர்ந்தாலும், சோமாலிகள் அடிப்படையில் ஆஃப்ரிக்க ஆதிவாசிகள். அவர்களின் நடை, உடை, பாவனைகள், கள்ளமற்றதனம் - இயற்கையாக அவர்களின் ஆதிமுன்னோர்களின் வாழ்வியலின் கூறுகளையே பிரதிபலித்தன. ஆண்களில் சிலர் அவ்வப்போது பாயை விரித்து மண்டிபோட்டுத் தொழுவதைக் கண்டிருக்கிறேன். மற்றபடி மதம் கிதமெல்லாம் மண்டையில் சீரியசாக ஏறாததால் அப்பாவியாக, சந்தோஷமாக இருப்பார்கள்.

சோமாலிப் பெண்கள், குறிப்பாக மத்திம, வயதான பெண்கள் புடவைத் தலைப்பைச் சுற்றித் தலைக்குமேலே இழுத்துவிட்டிருப்பார்கள்தான்.

இளம் நங்கைகள்? ஒடிசலான மாநிற தேகம், குறுகுறுக்கும் கண்கள், அலையலையான கருங்கூந்தல். (சுருண்டுசுருண்டு ப்ரஷ்போன்ற ஆஃப்ரிக்க மொசுமொசு கேசமல்ல என்பதைக் கவனிக்க). மேனியில் மெலிதாக, வண்ணமாக ஒரு துணி தோளிலிருந்து இப்படியும் அப்படியுமாக வளைந்து, முழங்காலையும் தாண்டிக் கீழே செல்லும்.



கலாச்சார உடையில் தற்கால சோமாலி நங்கைகள்

சாப்பிடுவதைவிட பர்ஃப்யூமின் சுகந்தத்தில், அலங்கார சாகசங்களில் கொள்ளை ஆசை. மேலும்.. வேண்டாம்! இங்கே சொல்லவந்ததே வேறே..

அங்கே, அந்நிய உதவித் திட்டங்களில், உலகவங்கியில், UN பதவிகளில் என இந்தியர்கள் கொஞ்சம்பேர் பணிபுரிந்தார்கள். அந்த சிறிய நாட்டுக்கு அதுவே அதிகம். தூதரகத்தில் நான் இருந்ததால், என்னோடு எளிதில் நட்பு ஏற்படுத்திக்கொண்டார்கள். ஊர் இன்னும் எனக்குப் பழகாத நிலையில் குறிப்பாக மாலைநேரத்தில் என் வீட்டிற்கு சிலர் வருவார்கள். அரட்டை அடிப்பார்கள். செல்வார்கள்.

வார இறுதியில் எவர் வீட்டிலாவது சந்திப்போம். தீராத அரட்டையில் லோக்கல் செய்திகள், சம்பவங்கள் பரிமாறப்படும். இந்தியப் படங்கள், இரவு உணவு அவர்கள் வீட்டிலேயே என (சில சமயங்களில் ஆளுக்கு ஒரு உணவுப்பண்டம் செய்துவந்திருப்போம்) பொழுதுபோக்கினோம். துபாயிலிருந்து வந்த அருமையான வி.ஹெச்.எஸ் வீடியோ ப்ரிண்ட்களில் அபூர்வமான தமிழ், ஆங்கிலப் படங்கள் பார்த்தோம். வேதாள உலகம், வேதம் புதிது போன்ற படங்களை அங்கேதான் நான் பார்த்தேன்! வீடியோ ஷாப்புகள் இரண்டு இருந்ததும் ஞாபத்தில் வருகிறது. கிளிமாஞ்சரோ வீடியோ, ஹாதிம் வீடியோ. இத்தாலிய, ஹிந்தி படங்கள் பெரும்பாலும் கிடைக்கும். நகரின் வானம் பார்த்த தியேட்டர்களில் இத்தாலிய திகில் படங்கள் ஜாலியாக ஓடும்.

உலகவங்கியில் பணிபுரிந்துகொண்டிருந்த கேசவன் என்றொரு தமிழ் நண்பர். அனைவரையும் அனுசரித்துப் போகும் இயல்பு. விழாக் காலங்களில் நண்பர் கூட்டத்தைக் கூட்டி, அமர்க்களமாக டின்னர் கொடுக்கும் பழக்கம் அவருக்கும் அவரது மனைவிக்கும்.

ஒரு தீபாவளி இரவை, ஒரு சிறு இந்திய இசை விழாவாக அவருடைய பங்களாத் தோட்ட வளாகத்தில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நான் வந்துசேர்ந்தபோது மாலை 6.30 மணி இருக்கும். பங்களாவின் முன்பான தோட்டம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே நாற்காலிகளில் 50-60 இந்திய நண்பர்கள்- அந்த சிறுநகருக்கு அது ஒரு பெரிய 'வெளிநாட்டவர்' கூட்டம் எனலாம். இப்படியெல்லாம் ஒரு இடத்தில் திட்டமிட்டு கூட, ஆட்டம் போட, சோமாலி அரசு/ அமைச்சகத்தின் முன் அனுமதி தேவை. இந்தியப் பெரிசுகள் சிலர் அவர்களின் உள்துறை அமைச்சகத்தோடு நேரடி தொடர்பில் இருந்ததால், வாங்கிவிட்டிருந்தார்கள்.

இந்தியக் கூட்டத்தில் சில பிஹாரிகள், வங்காளிகள், பஞ்சாபிகள், ஆந்திரர்கள். மொகதிஷுவில் தமிழர்கள் இவ்வளவுபேரா என ஆச்சரியம் எழ, அவர்களில் சிலர் குடும்பத்துடன் வந்திருந்தனர். பாடப்போகிறவர்கள் மேடையிலும், முன்வரிசையிலும். ஆளுக்கொரு நாற்காலியை இழுத்துப்போட்டுக்கொண்டு பரவலாக சிலர் உட்கார்ந்திருந்தோம், கையில் வண்ண, வண்ண திரவ கிளாஸ்களை வைத்துக்கொண்டு.

நகரின் கலாச்சாரத் தாக்கத்திற்கேற்ப, ஒருமூலையில் சின்ன உயர்ந்த டேபிள், சைட்-டேபிள்கள் என ஒரு தற்காலிக பார் உருவாக்கப்பட்டு, ஐஸ் பெட்டிகள், ஸ்காட்ச், ரம், ஜின், கார்ல்ஸ்பர்க் என கம்பீர வகைமை காட்ட, டேவிட் எனும் ஒரு தமிழ் நண்பர் 'பார்மேன்' பொறுப்பில்! மூலையில் உட்கார்ந்திருந்த சிலர் டன்ஹில், ரோத்மான்ஸ், களேர் (Galeyr - அந்த நாட்டு டாப் ப்ராண்ட்) என விதவிதமாகப் புகை எழுப்பிக்கொண்டிருந்தனர். நானும் அவ்வப்போது எழுந்து குட்டி நடை போட்டுக்கொண்டு, கையில் பென்சன்&ஹெட்ஜஸ் என ஸ்டைலாக உலவிக்கொண்டிருந்தேன். உடல்நலம்பற்றிய சிந்தனையில்லா, இளமை கோலோச்சிய காலகட்டம்! கூடவே பேசிக்கொண்டு, உம்மன் ஆப்ரஹாம் என ஒரு இனிய மலையாளி நண்பர், தொடர்புகை நாயகன்.

திடீரென மேடையில் இரண்டு சோமாலி இளைஞர்கள் வந்து உட்கார்ந்தார்கள். ஹேய்! இவன்க எங்கடா இங்க.. எனக் குழப்பமாக யோசிக்கையில், அவர்கள் முன் வைக்கப்பட்டன தபலாக்கள், ஆஃப்ரிக்கன் ட்ரம்ஸ்.. ஓ.. நம்ப ஆட்கள் பாடப்போற பாட்டுகளுக்கு பின்னணி வாத்தியமா? பலே! துவங்கட்டும்..

ஒரு இந்திய இரவு எனச் சொல்லப்பட்டதால், இந்தியாவின் வெவ்வேறு மாநிலத்தவரின் பங்களிப்பு, வெவ்வேறு மொழிகளில் வெளிவந்திருக்கும்தானே.. அப்படித்தான் சுவாரஸ்யம் காட்டியது அந்த இரவு. என்னோடு பணிபுரிந்த சீனியர் சௌமன் ரே ஒரு வங்காளி. மனைவி கேயா ரே. முறையாகக் கொஞ்சம் சாஸ்த்ரீய சங்கீதம் பயின்றவர் எனத் தெரிந்தது. ரே தபலா வாசிக்க கேயா, 'ரபீந்திர சங்கீத்'-ஐ (வங்கத்துக்காரர்கள் பெருமைப்பட்டுக்கொள்ளும் க்ளாசிகல் மியூஸிக்) வங்காள மொழியில் கீச்சுக்குரலில் பாடித் துவக்கினார் ஆட்டத்தை. அவர் நிறுத்துவதற்காகவே காத்திருந்ததுபோல் மேடையேறினார் ஒரு தமிழச்சி! ஐ.நா.வில் பணிபுரிந்த தமிழ் நண்பர் சிதம்பரத்தின், பார்ட்டிகளில் சிரித்துக் கலகலக்கும் மனைவி உஷா. தமிழ் சினிமா, பாடல் என்றெல்லாம் உயிர். பாடாமல் விடுவாரா! 'நினைக்கத் தெரிந்த மனமே.. உனக்கு மறக்கத் தெரியாதா..' என்று மெலிதாகக் குரல்கொடுத்து சோகம் வரவழைக்கப் பார்த்தார்! தோழிகள் சிலர் உற்சாகப்படுத்தினர்.

மகேந்திர கபூர் என்றொரு மத்திம வயது பஞ்சாபி நண்பர். ஆனால் பீஹாரில் வீடு, வாசம். அவரை ’பிஹாரி’ என்றே பார்ட்டிகளில் சீண்டுவோம்! பழுப்புநிறக் குர்த்தா, பைஜாமா, புன்னகை சகிதமாக மேடையேறி அமர்ந்தார். கனைத்துத் தொண்டையை சரிசெய்துகொண்டு, ‘சௌதவி கா சாந்த் ஹோ... யா அஃப்தாப் ஹோ..(Chaudhavi ka chaand ho.. yaa aftab ho..)” என்று குரு தத் (Guru Dutt), வஹிதா ரஹ்மானின் அழகில் சொக்கிப் பாடும் பாட்டொன்றை எடுத்து ஆஃப்ரிக்கக் காற்றினில் ரம்யமாக மிதக்கவிட்டார். சோமாலி இளைஞர்கள் ஆனந்தமாகத் தலையாட்டியவாறு தபலாவை சீராகத் தட்டி, கொஞ்சம் ஆஃப்ரிக்க ட்ரம்ஸிலும் ஒலி எழுப்பி இசைகூட்டினர். அந்தக் காம்பினேஷன் டாப்!

உலகவங்கி ப்ராஜெக்ட் ஒன்றில் மொகதிஷுவில் பணிபுரிந்த நண்பர் ஜெயராமனின் மனைவி லலிதா. உஷாவே பாடும்போது நான் பாடாமல் இருப்பேனா என நினைத்து மேடையேறிவிட்டாரோ? ’’வெள்ளிக்கிழமை விடியும் வேளை.. வாசலில் கோலமிட்டேன்..’’ என ரீங்கரிக்கப்பார்த்து, முடித்து இறங்கினார். கைதட்டல். சின்ன சின்ன கோஷ்டிகளிலிருந்து அவ்வப்போது புறப்படும் இது.

கண்ணன் என்றொரு நண்பர். அரட்டைகளைத் தாண்டி, பாடவும் செய்வார் எனத் தெரியாது. ‘பாட்டுப்பாடவா..பார்த்துப் பேசவா.. பாடம் சொல்லவா.. பறந்து செல்லவா?” என்று சிறகடித்துவிட்டு சிரித்துக்கொண்டே இறங்கி, கொடுக்கப்பட்ட ஜூஸ் கிளாஸை வாங்கிக்கொண்டார். வேறு ஏதாவது தேவைப்பட்டதோ, பாடிய களைப்பைப் போக்க. டேவிட்டிடம் போனால் கிடைத்திருக்குமே..

சோமாலியா வாசத்தின்போது, எனது நெருங்கிய நண்பர்களில் ஒருவர் கோவிந்த் குமார். தமிழர். பாம்பேயில் வசிப்பவர். மொகதிஷுவில் ஒரு சிறு கம்பெனியில் அக்கவுண்ட்ஸ் மேனேஜராக வேலைபார்த்துக்கொண்டிருந்தார். மிதமாக அருந்துவார். இதமாகப் பாடுவார். பெரும்பாலும் ஹிந்திப்பாடல்கள்தான். அவரை மேடைக்கு அழைக்க, போய் உட்கார்ந்தார். கூடவே முதலில் தமிழில் பாடிய லலிதாவும் மேடையில். ஓ.. டூயட்டா! சோமாலிகளின் விரல்களில் தபலா தடதடக்க, ஆரம்பித்தார் கோவிந்த்: ‘’ஏ ராத் பீகி.. பீகி.. ஏ மஸ்த் ஃபிஸாயே(ன்) (Yeh raath bheegi.. bheegi.. yeh mast fizaaye(n)” என, மன்னா டே (Manna Dey)-க்காக குரல் கொடுக்க, லலிதா இணைந்துகொண்டு.. ‘க்யூ(ன்) ஆக் ஸி லகா கே.. கும்சும் ஹை சாந்தினி..(Kyoon aag si lagaa ke.. gumsum hai(n) chaandini..)’ என லதா மங்கேஷ்கரின் பகுதியைப் பாடினார். மனோகரமாக இருந்தது டூயட் கேட்பதற்கு.

அயல்நாட்டுச் சூழலில், அதுவும் ஆஃபிரிக்கா போன்ற ஓர் இருண்ட கண்டத்தின் இரவொன்றில்.. மன்னா டே, லதா மங்கேஷ்கர், பி.சுசீலா, ஏ.எம்.ராஜா என்றெல்லாம் நினைவுபடுத்தும் பாடல்களில் ஆழ்ந்து கிடப்பதென்பது, எங்கோ தொலைவிலிருக்கும் இந்திய வாழ்வை மீண்டும் ஒருமுறைத் தொட்டுப்பார்ப்பதுபோன்ற ஒரு அபூர்வ அனுபவம்.

விழாவின் இறுதியில், ஒரு ஹிந்திப் பாடல் அறிவிக்கப்பட்டது. பாடுவதற்கு மேடையில் யாரும் ஏறவில்லை. என்னடா இது.. பாடகர் எங்காவது டேபிளுக்கடியில் ‘மயங்கி’க் கிடக்கிறாரா! தபலா தட்டிக்கொண்டிருந்த இரு சோமாலி இளைஞர்களில் ஒருவன் - முகமது அப்திரஹ்மான் - ஆரம்பித்தான்: ’’சுஹானா ஸஃபர் ஏ மௌஸம் ஹஸீ(ன்)..!’’ ஹிந்திப் பாடகர் முகமது ரஃபி அங்கிருந்திருந்தால் கண்கலங்கி உருகியிருப்பார். என்னால் நம்பமுடியவில்லை. இந்தப்பாடலின் சில வார்த்தைகள் நம் வாய்க்குள்ளேயே

நுழையக் கஷ்டப்படும். இந்த சோமாலி என்னடான்னா.. இந்தப்போடு போடுகிறானே.. ஏதோ பாஷையை அனுபவித்து அறிந்தவன்போல. அவன் குரலிலும் நம்பமுடியாத ஒரு இனிமை, ஒரு குழைவு. அந்த இசை இரவின் முத்தாய்ப்பு அப்தி-ரஹ்மான் பாடிய முகமது ரஃபியின் அந்தப் பாடல்தான். மறக்கமுடியாத சோமாலிய அனுபவமாக அந்தப்பொழுதை என்னுள் உடனே மாற்றிப் பதியவைத்தது.

கொஞ்ச நேரத்தில் டின்னர் ஆரம்பித்தது. விதவிதமான உணவு வகைகள். தட்டுகளில் வாங்கிக்கொண்டு, அங்குமிங்கும் நடந்துகொண்டும் பேசிக்கொண்டும் சாப்பிட ஆரம்பித்தோம். சோமாலி இளைஞர் இருவரும் உணவுத்தட்டை வாங்கிக்கொண்டு எங்களோடு சேர்ந்து உண்டனர். கொஞ்சம் தடுமாறி, ஹிந்தி பேசினர்! ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியவில்லை. சோமாலிகள் பலர் அரபு மொழியைப் புரிந்துகொள்வார்கள். முறையான படிப்பு, வேலை வசதிக்கான ஏற்பாடுகள் ஏதும் கிடைக்காத அந்த நாட்டின் இளைய தலைமுறை..

சில வாரங்கள் கழிந்தபின் ஒரு வெள்ளிக்கிழமை மதியத்தில் நண்பர் ஒருவர் வீட்டில் எங்களின் 'லஞ்ச்' சந்திப்பு நிகழ்ந்தது. நம்மவர்கள் அந்த தீபாவளி நிகழ்ச்சியில், அவரவர்கள் பாடிய பாட்டு, அதற்கான தேர்வு, பயிற்சிபற்றி பேசி மகிழ்ந்தார்கள். அதுக்குப் பதிலாக இதைப் பாடியிருக்கலாமோ, டூயட் போட்டிருக்கலாமோ.. என்றெல்லாம்வேறு அலசினார்கள். நான் சிந்தனை வயப்பட்டு பொதுஅரட்டையிலிருந்து ஒதுங்கி, வெளித் தோட்டத்தில் நடைபழகிக்கொண்டிருந்தேன். சோமாலியா போன்ற ஒரு தூரதேசத்தில் பிறந்து, வாய்ப்பேதுமில்லாமல் வளர்ந்த, இந்தியா எனும் நாட்டைப்பற்றிக் கேட்டிருந்தும் கண்டிராத, ஆனால் அதன் இனிய சங்கீதத்தில் மனம் லயித்திருந்த அந்த இளைஞன் அப்தி-ரஹ்மானின் இரவுக்குரல், அடிநாதமாய் மனதில் பரவி ரீங்கரித்துக்கொண்டிருந்தது.

**

Back to index ^

# மாலை மயங்குகின்ற நேரம் :: ரஞ்சனி நாராயணன்.

நமது வாட்ஸப் குழுவில் சில நாட்களுக்கு முன் மேற்கண்ட பாட்டைப் பற்றிய ஓர் கலந்துரையாடல் நடந்தது.

இந்தப் பாட்டைக் கேட்டவுடன் எனக்கு என் அக்காவின் நினைவு தான் வந்தது. அவளது சங்கீத ஞானம் இதைப் போன்ற பாடல்களை கேட்கும்போது அதிகம் தெரியவரும். அக்கா நன்றாகப் பாடுவாள். குரல் மெலிதாக இருக்கும். ரொம்பவும் ரசித்துப் பாடுவாள் - அது ஆனந்தப் பாட்டாக இருந்தாலும், சோகப் பாட்டாக இருந்தாலும். சோகப் பாட்டுகளைப் பாடும்போது, அந்தப் பாடல்களை பாடும் பாடகர்களை மட்டுமல்லாமல் அந்தக் காட்சிகளில் நடித்திருக்கும் நடிக நடிகளையும் நினைவு கூர்வாள். அதுதான் அவளது சிறப்பு. கூடவே அந்த திரைப்படங்களின் கதைகளையும் சொல்லுவாள். ஆனந்தப் பாடல்களை விட சோகப்பாடல்களைத் தான் அவள் அதிகம் விரும்பினாள் என்பது நிஜம். அவற்றைத்தான் பாடவும் செய்தாள்.

பாலும் பழமும் படத்தில் 'நான் பேச நினைப்பதெல்லாம்' என்ற பாடலை விட 'என்னை யாரென்று எண்ணி எண்ணி' பாடல் அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும். 'என்ன கஷ்டம் பாரு! தனது கணவன் எதிரிலேயே அவளுக்கு நடிக்க வேண்டியிருக்கிறது! பெண்டாட்டி எங்கே போனாள் என்று தெரியாமல் அவனும் அவளை நினைத்து உருகி உருகி பாடுகிறான்!' என்று கண்கள் கசியச் சொல்லுவாள். நான் சிரிப்பேன். 'சே! என்னடி, இதெல்லாம் சினிமா. அதைப்போய் நிஜம் என்று நினைத்துப் பேசுகிறாய்' என்றால் ரொம்பவும் கோபித்துக் கொள்வாள். 'நிஜ வாழ்க்கையிலும் இப்படியெல்லாம் நடக்கும், தெரியுமா?' என்று என்னுடன் சண்டைக்கு வருவாள். நிறைய சினிமா பார்த்துப் பார்த்து இப்படி ஆகிவிட்டாள் என்று கூட சிலசமயம் எனக்குத் தோன்றும்.

கர்நாடக சங்கீதத்தைத் தழுவி இசையமைக்கப்படும் பாடல்களும் அவளது விருப்பத்திற்குரியவை. கேட்ட உடனே இன்ன ராகம் என்று சொல்லுவாள். கொஞ்சம் சந்தேகம் இருந்தால் அடுத்தவாரம் இலங்கை வானொலியில் மயில்வாகனன் சொல்வார், கேட்க வேண்டும் என்பாள். மறக்காமல் கேட்பாள். 'பாரு, நான் சொன்ன ராகம் சரி' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வாள். பேத்தியை மடியில் போட்டுக் கொண்டு 'நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே' என்று ஆரம்பிப்பாள். 'என்ன பாட்டு பாடுகிறாய் குழந்தைக்கு? வேறே பாடேன்' என்றால் 'எத்தனை நல்ல பாட்டு தெரியுமா? சிம்மேந்திர மத்யமத்தை ஜி. ராமநாதன் பிழிந்து கொடுத்திருக்கிறார்' என்பாள்.

அடுத்தபடி 'பொன்னான வாழ்வு மண்ணாகிப் போச்சே!' என்று ஆரம்பிப்பாள். நான் ஆயாசத்துடன் எழுந்து போய்விடுவேன். இல்லை ஏதாவது புத்தகத்தைப் பார்க்க ஆரம்பித்துவிடுவேன். அவள் பாடிய சந்தோஷமான பாட்டு என்றால் 'சின்னச்சின்ன கண்ணனுக்கு என்னதான் புன்னகையோ' பாடல் மட்டுமே. அதிலும் இரண்டாவது சரணம் வரும்போது நான் சொல்லுவேன் 'குழந்தைக்கு இதைப் பாடாதே' என்று. அவள் விடாமல் 'பூப்போன்ற நெஞ்சினிலும் முள்ளிருக்கும் பூமியடா.....! பொல்லாத கண்களடா புன்னகையும் வேஷமடா நன்றி கேட்ட மாந்தரடா, நானறிந்த பாடமடா...' என்று முகமெல்லாம் சோகம் இழையோடப் பாடுவாள். மடியில் படுத்திருக்கும் குழந்தை ஒன்றும் புரியாமல் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும்.

அக்காவின் நினைவு வருவதற்கு மாலை மயங்குகின்ற நேரம் பாடல் மட்டுமல்ல காரணம். ஆர். சூடாமணி எழுதிய 'அந்நியர்கள்' என்ற கதையைப் படித்ததிலிருந்து அவள் நினைவுதான். அதுவும் அவளும் நானும் எத்தனை எதிரெதிர் துருவங்களாக இருந்தோம் என்பதைப் பற்றிய மலரும் நினைவுகள். அவளுடைய அந்திமக் காலத்தில் அவளுடன் மருத்துவமனையில் நான் தங்கியிருந்த போது நிறைய பேசினாள். அப்போது கேட்டேன்: 'உன் கஷ்டங்களைப் பற்றியே பேசுகிறாயே? நீ சந்தோஷமாக இருந்ததேயில்லையா? எத்தனை திவ்ய தேசங்களை சேவித்திருக்கிறாய்? எத்தனை முறை அமெரிக்கா போய் வந்திருக்கிறாய்? ஏன் அதைப்பற்றியெல்லாம் பேசமாட்டேன்னென்கிறாய்?' நீண்ட நேரம் மௌனமாகவே இருந்தாள். இரண்டு நாட்கள் கழித்து சொன்னாள்: 'எனக்கு உன்ன மாதிரி இருக்கத் தெரியலை. கொஞ்சம் மாற்றிக் கொள்ளப் பார்க்கிறேன். எனக்கு உடம்பு சரியானவுடன் உன்னுடன் பெங்களூருக்கு வருகிறேன். உன்னுடன் நிறைய பேச வேண்டும் போலிருக்கு' என்றாள்.

அவள் பரமபதித்த போது என் உறவினர் ஒருவர் சொன்னார்: "அக்கா நன்றாக வாழ்ந்துவிட்டுத்தான் போயிருக்கிறாள். என்ன ஒண்ணு உங்க அம்மா இருக்கிறாள் அது தான் வருத்தமான விஷயம்". நிஜம் தான். ஆனால் தன் வாழ்க்கை கஷ்டங்கள் நிரம்பியது என்று மனதில் அந்தக் கஷ்டங்களையே நினைத்து வருந்தியவளுக்கு உடலாலும் பலவித கஷ்டங்களைக் கொடுத்த கடவுள் அவளுக்குத் தன்னை மாற்றிக் கொள்ள கொஞ்சம் அவகாசம் கொடுத்திருக்கலாம் என்று தோன்றுகிறது.




= = = =

**என்னைப் பற்றி…….**

**பெயர் : ரஞ்சனி நாராயணன்**

**ஊர் : பெங்களூரு**

**பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்த வருடம் 2000**

**வலைப்பதிவு செய்ய ஆரம்பித்தது 2011**

**மூன்று புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. 1. விவேகானந்தர் 2. மலாலா 3. ஜோன் ஆஃப் ஆர்க்.**
**மின் புத்தகங்கள் : சாதாம்மிணியின் அலப்பறைகள், அரியலூர் அடுக்குதோசை செல்வ களஞ்சியமே (2 பகுதிகள்)**

**எழுதுவதைக் குறைத்துக் கொண்டுவிட்ட என்னை அவ்வப்போது உற்சாகமூட்டி எழுத வைக்கும் எங்கள் ப்ளாக் திரு ஸ்ரீராம் மற்றும் திரு கௌதம் அவர்களுக்கு எனது நன்றி. நகைச்சுவையாக எழுத மிகவும் பிடிக்கும். கொஞ்சம் அடக்கி வாசி என்று தற்சமயம் இறைவன் பல சோதனைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அதனால் நகைச்சுவை குறைந்து விட்டது எழுத்தில். ஆன்மீகத்தில் இறங்கி விட்டதாலும் இப்படி ஆகியிருக்கலாம். எனது எழுத்துக்களைப் படித்து ரசிக்கும் எல்லோருக்கும் எனது அன்பான நன்றி.**

**email: ranjanidoraiswamy@gmail.com**
**வலைத்தளம்: ranjaninarayanan.wordpress.com**



Back to index ^

## வந்து விட்டார் வ.வ.ஸ்ரீ ! புதிய கட்சி 'மூ.பொ.போ.மு.க.' உதயம்! - நெடுங்கதை :: VAI. GOPALAKRISHNAN

*ஸ்ரீனிவாசன் என்ற ஒரே பெயரிலேயே நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பணிபுரியும் அந்த மிகப்பெரிய நிறுவனத்தில் 'வழுவட்டை ஸ்ரீனிவாசன்' என்று சொன்னால் தெரியாதவர்களே கிடையாது. அவர் தலை வழுக்கையாக இருப்பதால் அப்படி ஒரு பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று நினைத்த என் கணிப்பு முற்றிலும் தவறாகிப்போய்விட்டது.*

*புதிதாக அந்த நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த நான் அவரிடம் போய் "சார், கேண்டீன் எங்கே இருக்கிறது, எப்படிப்போக வேண்டும்?" என்று கேட்டேன்.*

*"இதுகூடத் தெரியாமல் சுத்த வழுவட்டையாக இருக்கிறாயே!, எழுச்சியாக என்னுடன் புறப்பட்டு வா, நான் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றார்.*

*என் அப்பா வயதில் அவர் இருந்ததாலும், நான் வேலைக்குச்சேர்ந்த முதல் நாள் என்பதாலும், அவர் மீது கோபப்படாமல் அமைதி காக்கும்படி ஆகி விட்டது, என் அன்றைய நிலை.*

*கேண்டீனில் பலரிடம் அவர் பேசும்போதும் இந்த 'வழுவட்டை' என்ற சொல்லை, அவர் மறக்காமல் அடிக்கடி பயன்படுத்தி வந்ததை நானும் கவனிக்கத் தவறவில்லை.*

*"காண்டீன் சாப்பாடு வரவர வழுவட்டையாக உள்ளது. வீட்டுச் சாப்பாடுபோல எழுச்சியாக இல்லை. புது மேனேஜர் எழுச்சியாக இருப்பார் என்று நினைத்தேன், ஆனால் அவரும் வழுவட்டையாகவே உள்ளார்" என்று ஏதேதோ பேசிக்கொண்டே இருந்தார்.*

*மொத்தத்தில் அவருடன் பழகியதில், ஒருவித எழுச்சியில்லாத அனைத்தும் வழுவட்டையே எனப்புரிந்து கொண்டேன். அவருடைய அகராதிப்படி எழுச்சிக்கு எதிர்பதம் வழுவட்டை என்ற சொல் என்பது எழுச்சியுடன் எனக்குப்புரிய வந்தது.*

*வ.வ.ஸ்ரீ, க்கு அருகிலேயே சற்று எதிர்புறமாக என்னுடைய அலுவலக இருக்கையும் அமைந்திருந்ததால் அவருடைய அன்றாடப்பணிகளைப் பார்க்கும் பாக்கியம் எனக்கு வாய்த்திருந்தது. எல்லோரிடமும் மிகவும் கலகலப்பாகப் பழகிவந்த அவரைச்சுற்றி எப்போதும் யாராவது வந்துபோய்க்கொண்டே இருப்பார்கள்.*

*அவர் மேஜைமீது எப்போதும் பளபளப்புடன் கூடிய எவர்சில்வர் மூக்குப்பொடி டப்பா ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அவரை நாடி வருவோரைவிட அந்தப் பொடிடப்பாவை நாடி வருவோர்களே அதிகம்.*



*பார்ப்பவர்களுக்கு அது ஒரு அல்பப்பொடி தர்மமாகத் தெரிந்தாலும், பொடி உபயோகிப்பாளர்களுக்கு அது ஒரு மிகப்பெரிய, அன்னதானத்திற்கும் மேலான ஒரு தர்மம் போலும்.*

*வ.வ.ஸ்ரீ. தன்னிடம் வருபவர்களையெல்லாம் “வாங்க, வாங்க! இந்தாங்க, எழுச்சியோடு பொடிபோட்டுட்டுப்போங்க” என்று சொல்லிப் பொடி டின்னை திறந்து நீட்டும்போதெல்லாம், குங்குமச்சிமிழுடன் கொலுவுக்கு அழைப்பது போல எனக்குத் தோன்றும். நாளடைவில் வ.வ.ஸ்ரீ. அவர்களுடனும், அவருடைய பொடிபோடும் நண்பர்களுடனும் எனக்கு நல்ல பரிச்சயம் ஆகிவிட்டது.*

*ஒரு நாள் வ.வ.ஸ்ரீ. ஆபீஸுக்கு திடீரென லீவு போட்டு விட்டார். அவருடைய பொடி நண்பர்கள் பலரும் வந்து ஏமாந்து போனார்கள். ஒருசிலர் வ.வ.ஸ்ரீ. லீவு போடட்டும், பொடி டின்னுடன் லீவு போடலாமா? என்று மிகவும் சலித்துக்கொண்டனர். மாற்று ஏற்பாடு செய்யாததில் அவர்களுக்கு, அவர்களின் பொடி ஏறாத மூக்குக்குமேல் கோபம் கொப்பளித்து வந்ததைப் பார்த்தேன்.*

*இதைப்பார்த்த நான் சும்மா இல்லாமல், அதில் ஒருவரிடம், “ஏன் சார், நீங்களே தனியாக பொடி வாங்கி வைத்துக்கொள்ளலாமே” என்று தெரியாத்தனமாகக் கேட்டு விட்டேன்.*

*என்னை ஒரு முறை முறைத்துப்பார்த்த அவர், “தம்பி, நீ ஒரு பொடிப்பையன். பொடியைப்பற்றி உனக்குத்தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஓஸியிலே பொடி வாங்கி நாசியிலே போட்டால் கிடைக்கும் இன்பமே இன்பம்; அதெல்லாம் அனுபவிச்சவனுக்குத்தான் தெரியும்” என்றார்.*

*தொடரும்*

***[ 2 ]***

*மறுநாள் காலை கேண்டீனில் டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்த என் அருகில் சூடான கா஼பியை ஆற்றியபடியே, பேரெழுச்சியுடன் வந்தமர்ந்த வ.வ.ஸ்ரீ. யை, வணக்கம் சொல்லி வரவேற்றேன்.*

*“என்ன சார், நேற்று உங்களை பார்க்க முடியவில்லை. திடீரென்று லீவு போட்டுட்டீங்களே!” என்றேன்.*

*”இந்த தமிழ்நாடு எலெக்‌ஷன் முடியற வரைக்கும் எனக்கு ரெஸ்டே கிடையாது தம்பி. அடிக்கடி லீவு போடுவேன். 234 தொகுதிகளுக்கும் போய்ப் பலபேரை சந்திக்கணும். ஆற்றவேண்டிய கட்சிப்பணிகள் நிறையவே இருக்குப்பா” என்றார்.*

*”நீங்க அப்போ எந்தக்கட்சி சார்” என்றேன் அப்பாவித்தனமாக.*

*இடது கை விரல் நுனியில் பொடிடப்பாவை வைத்துக்கொண்டு, வலதுகை ஆள்காட்டி விரலால் அதன் தலையில், மிருதங்க வித்வான் போல தட்டியவாறே, என்னை ஒரு விஷமப்பார்வை பார்த்து மீண்டும் பேசலானார்.*

*”ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று எல்லாப்பயல்களும் நான் எங்கே போறேன், யாரை சந்திக்கிறேன், அடுத்து என்ன செய்யப்போறேன்னு, ஒற்றர்படையை நியமித்து, என்னையே தொடர்ந்து நோட்டம் விடுகிறார்களப்பா. இந்தப்பத்திரிக்கைக்காரர்கள் தொல்லையும் தாங்கவே முடியாமல் இருக்குப்பா” என்றார்.*

*“நீங்களோ ஆளுங்கட்சியும் இல்லை, எதிர் கட்சியும் இல்லை என்று தெரிகிறது. பிறகு எதற்கு சார் உங்களை அவர்கள் ஃபாலோ பண்ணனும்” என்றேன்.*

*“நான் யார், என் பவர் என்ன என்பது எதுவும் தெரியாமல், வழுவட்டைத்தனமாக இப்போது என்னிடம் எதுவும் கேட்காதே, போகப்போக உனக்கே எல்லாம் தெரியவரும். அது சரி, நேற்று ஆபீஸில் ஏதும் விசேஷமுண்டா” என்று கேட்டு பேச்சை மாற்றினார் வ.வ.ஸ்ரீ.*

*”பொடி டின்னுக்காக பலபேர் உங்களைத்தேடி வந்தாங்க சார்; மேனேஜர் சார் உங்கள் சீட்டுப்பக்கம் இரண்டு முறை வந்து, ஏதோ ஃபைல்கள் பேப்பர்களைத் தேடிட்டுப்போனார், சார்; வேறு எதுவும் விசேஷமில்லை சார்” என்றேன்.*

*”இந்தப்புதிய மேனேஜர் பயலிடம் நான் ஸ்ட்ரிக்ட்டாவே சொல்லிப்புட்டேன். இந்த எலெக்‌ஷன் முடியற வரைக்கும் என்னைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று. அப்படியும் அவன் என் சீட்டுக்கு வந்து ஏதோ நோண்டிவிட்டுப்போனானா? ஏற்கனவே இங்கிருந்து டிரான்ஸ்பரில் போன மேனேஜர்பயல் V V என்றால் புதிதாக வந்துள்ள இவன் S V V யாக இருப்பான் போலிருக்கு” என்றார், வ.வ.ஸ்ரீ.*

*(V.V= வழுவட்டை; S.V.V = சூப்பர் வழுவட்டை)*

*”சார், என்ன இருந்தாலும் அவர் நம் மேனேஜர் இல்லையா, மேனேஜர் பயல்ன்னு மரியாதை குறைவா சொல்லுறீங்களே” என்றேன் நான்.*

*(அவர் வாயைக்கிளறி அவரை ஏதாவது பேச வைத்து, அந்தப்பேச்சில் அப்படியே சொக்கிப்போய் மயங்குவதில் தான் எனக்கு ஒரு தனி இன்பம் ஆயிற்றே!)*

*“புதிதாக டிரான்ஸ்ஃபர் ஆகி வந்துள்ள இந்த மேனேஜர்பயல் என் சின்னப்பையனை விட வயதில் ரொம்பவும் சின்னவன் தெரியுமோ; அவன் வயசைப்போல ஒண்ணரை மடங்கு*

*இந்த நிறுவனத்தில் நான் சர்வீஸே போட்டாச்சு தெரியுமோ; இந்த ஆபீஸில் சீனியர் ஆபீஸ் சூப்பிரண்டெண்டான நான், என் 41 வருஷ சர்வீஸில் இவனைப்போல எவ்வளவு மேனேஜர்பயலுகளைப் பார்த்திருப்பேன் தெரியுமோ?" என்றார் வ.வ.ஸ்ரீ.*

*"சரி சார், நாழியாச்சு, நாம கேண்டீனிலிருந்து புறப்பட்டு நம் சீட்டுக்குப் போவோமா" என்று கேட்டபடியே எழுந்து கொண்டேன். அவரும் பொடியை ஒரு சிட்டிகை இழுத்து விட்டு, ஒருவழியாக என்னுடன் எழுச்சியுடன் கிளம்பினார்.*

*அவரை அப்படியே பேசவிட்டால் சாயங்காலம் ஆபீஸ் முடியும் வரை கேண்டீனிலேயே என்னுடன் பேசிக்கொண்டே இருந்திருப்பார் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.*

*இந்த மூக்குப்பொடி போடும் ஆசாமிகள் சற்று தள்ளி நின்று பொடி போட்டாலே நமக்குத்தும்மல் வந்துவிடும் போது, அவர்களால் எப்படிப் பொடியை கணிசமான அளவில் விரல்களால் எடுத்துக்கொண்டு, **வேட்டுக்குழாயில் கந்தகம் அடைப்பது போல**, மூக்கினுள் அடைத்து, சர்ரென்று ஒரே இழுப்பாக இழுத்து, தும்மாமல் இருக்க முடிகிறது என்று எனக்கு அடிக்கடி ஒரு சந்தேகம் வருவதுண்டு. ஒரு நாள் நம் வ.வ.ஸ்ரீ. அவர்களிடமே துணிந்து இது பற்றிக் கேட்டு விட்டேன்.*

*அதற்கு அவர் என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா?*

*"பொடி போட்டு வாழ்வாரே வாழ்வார்*

*மற்றவரெல்லாம் சளி பிடித்தே சாவார்"*

*என்று நீ கேள்விப்பட்டதில்லையா என்றார்.*

*(திருக்குறள் ஒப்பித்தல் போட்டிகளில் பள்ளியில் பலமுறை பரிசுகள் வென்ற எனக்கு, இந்தக்குறள் மட்டும் ஏனோ மறந்து விட்டது போலிருக்கு)*

*இந்த விசித்திரக் குறளைக்கேட்டு அவரை ஆச்சர்யத்துடன் நான் நோக்குகையில் அவரே தொடர்ந்து பேசலானார்.*

*"தம்பி, பொடி டின் நிறைய பொடியை அடைத்தாலும் அந்தப்பொடி டின் தும்மல் போட்டுப் பார்த்திருக்கிறாயா நீ..." என்றார்.*

*"இல்லையே சார், அது எப்படித் தும்மல் போடும்" என்றேன் நான்.*

*"அது போலத்தான், பொடி போடும் எங்களுக்கும் பொடி போடும் போது தும்மல் வராது. ஆனால் நாங்கள் தும்மலை தேவைப்படும்போது சுலபமாக வரவழைத்துக்கொள்ள முடியும்" என்று சொன்னவர், சொன்னபடி செய்தும் காட்டிவிட்டார்.*

*"மூக்குப்பொடி போடும் இந்த மூளையுள்ள ஆண்களுக்கு முக்கியமாத் தேவை இந்தக்கைக்குட்டை" என்று ஜவுளி வியாபாரியாக வேஷமிட்டு சிவாஜி கணேசன் 'தூக்குத்தூக்கி' என்ற படத்தில் ஒரு பாட்டுப் பாடுவார்.*

*அது போல கைவசம் எப்போதும் வைத்திருக்கும் பல கைக்குட்டைகளில் (கர்சீ:ப்) ஒன்றைக் கையில் எடுத்தார் வ.வ.ஸ்ரீ. அதன் ஒரு நுனியை விளக்குத்திரி போடுவது போலத் திரித்தார். அதை அப்படியே தன் மூக்குத் துவாரத்தில் நுழைத்தார்.*

*முகத்தை அஷ்ட கோணலாக்கிக்கொண்டு அடுத்தடுத்து தொடர்ச்சியாக பதினைந்து தும்மல்கள் தும்மினார். அவரின் நெற்றி நரம்புகள் புடைத்துக்கொண்டன. அவரைச்சுற்றி மழைச்சாரல்போல சளித்தூறல்கள். கைகுட்டை முழுவதும் பஞ்சாமிர்தம்போல ஏதேதோ ஒழுகியவண்ணம். அவர் முதல் தும்மல் போட்டதுமே, ஓடி விட்டேன் நான் என் சீட்டை நோக்கி.*

*இடி, மின்னல், மழை போன்ற அவரின் தும்மல்கள் ஒருவழியாக முடிந்து, புயல் கரையைக்கடக்க ஒரு கால் மணி நேரம் ஆனது.*

*தன் பெண்ணின் நிச்சயதார்த்தம் பற்றி தன் வருங்கால சம்பந்தியிடம் டெலிபோனில் பேச முயற்சித்துக் கொண்டிருந்த பக்கத்து சீட்டு பரந்தாமனுக்கு, இவரின் தொடர் தும்மலால் மிகுந்த எரிச்சல் ஏற்பட்டது. சனியன், சகுனத்தடை என்று அவரைத் திட்டிக்கொண்டிருந்தது, எனக்கு மட்டுமே கேட்டது.*

*பாத் ரூம் சென்று மூக்குத் துவாரங்களைக் கழுவிக்கொண்டு, கைக்குட்டையையும் சோப்புப்போட்டு அலசிப் பிழிந்தவாறு தன் இருக்கையில் ஒருவாறு வந்தமர்ந்தார் வ.வ.ஸ்ரீ. மீண்டும் அவரைப் பேட்டி காணப்போனேன், நான்.*

*தொடரும்*

*[ 3 ]*

*பாத் ரூமிலிருந்து எழுச்சியுடன் வந்து தன் சீட்டில் அமர்ந்த வ.வ.ஸ்ரீ, நான் வந்து அவர் அருகே அமர்ந்திருப்பது கூடத் தெரியாமல், ஒரு பெரிய டர்க்கி டவலால், தனது பளபளக்கும் தலை முதல், முகம், கழுத்து, முழங்கை, கை விரல்கள் வரை சுத்தமாகத் துடைத்துக் கொண்டுவிட்டு, ஒரு சிட்டிகைப் பொடியை கை விரல்களால் எடுத்துக்கொண்டு, தரையில் ஒரு உதறு உதறிவிட்டு, பொடி டின்னையும் கையோடு மூடிவிட்டு, என்னை எழுச்சியுடன் ஒரு பார்வை பார்த்தார், என் அடுத்தடுத்தத் தொடர்த்தும்மல்கள் எப்படி இருந்தன? என்று கேட்பது போல!.*

*இங்கேயே உட்கார், எழுந்து போய் விடாதே, என்பது போல கைஜாடை காட்டி என்னை அமர வைத்தார்.*

*சற்றே கீழே குனிந்தவர், தன் கைவிரல்களில் இடுக்கியிருந்த பொடியை சர்ரென்று ஒரே இழுப்பாக மூக்கினுள் இழுத்து விட்டு, கையைக் கர்சீப்பால் துடைத்துக்கொண்டு, பிறகு அந்தக் கர்சீப்பையே, ஹோட்டல்களில் தோசையைச் சுருட்டி பார்சலாகத்தருவார்களே, அதே போலச் சுருட்டி மூக்குத் துவாரங்களுக்கு அருகில், அதாவது மீசை இருக்க வேண்டிய இடத்தில் நீளவாக்கில் தன் இரு கைகளாலும் வயலின் அல்லது :பிடில்*

*வாசிப்பது போலப் பிடித்தவாறே, தன் தலையையும் மூக்கையும் ஒரே ஆட்டாக ஆட்டினார்.*

*அதாவது இவர் தன் மூளையை நோக்கிச் செலுத்திய அந்த ஒரு சிட்டிகைப்பொடியில், சில துகள்கள் மட்டும், நாம் இவர் மூளைக்குள் போய்ப் பார்ப்பதற்குப் பெரிதாக என்ன இருக்ககூடும் என்ற எண்ணத்தில், தங்கள் பயணத்தை ஒரு வித எழுச்சியுடன் தொடராமல், இடையே, மூக்கினுள் உள்ள முடிகளில் படிந்து விட்டிருக்கும் போல. அந்த வழுவட்டையானத் துகள்களைத்தான் இப்போது ஒட்டடை அடிப்பது போல ஏதோ செய்து வெளியேற்றி வருகிறார், என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.*

*ஸ்டெடியாக நிமிர்ந்து உடகார்ந்து என்னை நோக்கிய அவரிடம், ”ஒரு நாளைக்குப் பொடிக்கு மட்டும் எவ்வளவு சார், செலவு செய்கிறீர்கள்?” என்று மெதுவாக என் பேட்டியை ஆரம்பித்தேன்.*

*“ஐந்து பைசா மட்டையில் ஆரம்பித்தேன் 1966 இல். இப்போ தினமும் நாலு ரூபாய் செலவாகிறது. அதில் எனக்கு மட்டும் மூன்று ரூபாய், நண்பர்களுக்காக ஒரே ஒரு ரூபாய் மட்டுமே. அவனவன் சத்திரம் கட்டுகிறான், சாவடி கட்டுகிறான், ஆஃப்டர் ஆல் நம்மால் முடிந்தது இந்த சிறிய பொடி தர்மமாவது தினமும் செய்யலாமே என்று தான்” என்றார்.*

*”தினமும் நாலு ரூபாய்க்கு மூக்குப்பொடியா, என்ன சார் இப்படி, ரொம்பவும் அநியாயமாக உள்ளதே!” என்றேன்.*

*”விலைவாசியெல்லாமே ஏறிப்போயிடுத்துப்பா; உனக்கு ஒரு விஷயம் தெரியுமோ! ஒரு கிலோ ப்யூர் காஃபிப்பொடியை விட, ஒரு கிலோ மூக்குப்பொடி விலை அதிகம்” என்றார் வ.வ.ஸ்ரீ.*

*”தொடர்ந்து பொடி போடுவதனால் உடம்புக்குக் கெடுதல் இல்லையா, சார்” என்றேன்.*

*“இது எங்கப்பரம்பரை வழக்கமப்பா, நான் என்ன செய்வது?; எங்க தாத்தா (அப்பாவோட அப்பா) தவறிப்போகும் போது அவருக்கு வயது 108. அவர் தன் 12 ஆவது வயதிலிருந்து பொடிபோடப் பழகியவர்ன்னு கேள்வி.*

*என் அப்பாவும் பொடி போடுவார். அவர் என் தாத்தாபோல செஞ்சுரி போடாவிட்டாலும் பொடி போட்டே 99 வயதுக்கு மேல் ஒரு மூணு மாதமும் வாழ்ந்தவர். சொல்லப்போனால் அவரின் அந்த இறுதி மூச்சு நின்ற நாள் காலையிலிருந்தே அவர் பொடி போடவில்லை.*

*சுற்றி நின்ற எங்களுக்கெல்லாம் அது தான் மிகப்பெரிய கவலையாக இருந்தது. எது சாப்பிட்டாலும் நன்றாக முடிந்தவரை வயிறு முட்ட சாப்பிடுபவர். விரத நாட்களில் பட்டினி இருந்தாலும் சுத்தமாக இரண்டு நாட்கள் வரை எதுவுமே சாப்பிடாமல் முழுப்பட்டினி இருந்து விடுபவர். ஆனால் பொடி மட்டும் 5 நிமிடத்திற்கு ஒருமுறை வீதம் மூக்கில் இழுத்துக்கொண்டே இருக்கனும் அவருக்கு.*

*அந்த அவரின் கடைசி நாள் அன்று, பொழுது விடிந்தது முதல் அந்தப்பொடியைத் திரும்பியே பார்க்கவில்லை என்றதுமே, எங்களுக்கு விசாரம் அதிகமாகி, ஓடிப்போய்*

நாட்டுவைத்தியரை கூட்டிவந்து காட்டி, அவரும் நாங்களுமாக வாக்கரிசி போடுவதுபோல ஆளுக்கு ஒரு சிட்டிகை அவர் மூக்கில் பொடியைப்போட்டும், மனுஷன் வைராக்கியமாக அதை மூக்கில் இழுத்துக்கொள்ளாமல், இறுதி மூச்சையே விட்டுவிட்டார்" எனச் சொல்லி கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டார், வ.வ.ஸ்ரீ.

99 வயது வரை வாழ்ந்து முடிந்து, அதன்பிறகு, அதுவும் என்றைக்கோ இறந்துபோன, தன் தந்தையை நினைத்து இன்றைக்குப்போய் இவர் கண்ணீர் விட, நான் காரணமாகி விட்டேனே என எனக்கே சற்று சங்கடமாக இருந்தது.

அன்றைய அலுவலக நேரம் இத்துடன் முடிந்து விட்டதால், நாங்கள் ஆற்ற வேண்டிய அரும் பணியை இவ்விதமாகப் பேசிப்பேசியே (Group Discussions) கழித்து விட்ட நாங்களும் வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானோம்.

தொடரும்

[ 4 ]

மறு நாள் காலையில் நான் என் சீட்டுக்கு வந்து அலுவலக வேலைகளில் மூழ்கலானேன். வ.வ.ஸ்ரீ. அவர்கள் இன்னும் சீட்டுக்கே வரவில்லை. வரும் வழியில் யார் யாரிடம் எழுச்சியாக என்னென்ன பேசிக்கொண்டு இருக்கிறாரோ? என்ற கவலை எனக்கு. அவரிடம் மேற்கொண்டு என்னென்ன கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று, ஒரு பேப்பரில் குறித்து ஞாபகமாக என் சட்டைப் பையில் வைத்துக்கொண்டேன்.

என் மேஜை மீதிருந்த தொலைபேசி சிணுங்கியது. எடுத்தேன். வ.வ.ஸ்ரீ.யே தான் பேசினார். அப்போது தான் கவனித்தேன் அவர் தன் சீட்டுக்கு வந்துவிட்டார் என்பதை.

"குட் மார்னிங் சார், என்ன சார், கொஞ்சம் லேட்டா?" என்றேன்.

"நான் அப்போதே வந்து விட்டேன், நீ தான் கவனிக்கவில்லை. ஏதோ குனிந்து எழுதிக்கொண்டிருந்தாய். If you are free, please come to my seat. Let us continue our discussions" என்றார்.

ஆஹா, இன்றைக்கும் நம் ஆபீஸ் வேலை அம்போ தான் என்று நினைத்தேனே தவிர, அவருடைய நகைச்சுவையான பேச்சுக்கள் என்னை வசீகரித்ததால், உடனே அவர் சீட்டுக்கு அருகில் இருந்த மற்றொரு காலி நாற்காலியில் போய் அமர்ந்து விட்டேன்.

"சொல்லுப்பா, நாம நேத்திக்கு எங்கே விட்டோம்" என்றார் முகத்தில் ஒரு வித பேரெழுச்சியுடன்.

*"தங்களின் 99 வயது தந்தைக்கு நீங்கள் எல்லோரும் வாக்கரிசி .... இல்லை இல்லை .... மூக்கரிசி .... அதுவும் இல்லை .... மூக்குப்பொடி போட்டும், அவர் வைராக்கியத்துடன், அதை ஏற்றுக்கொள்ளாமல் தன் இறுதி மூச்சை விட்டதில், விட்டோம், சார்" என்றேன்.*

*சிரித்துக்கொண்டவர், “நான் சொல்வதையெல்லாம் அப்படியே கிரஹித்துக் கொண்டு, கரெக்ட்டாகச் சொல்லுகிறாய் நீ, அது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு” என்றார்.*

*“நீங்கள் எப்படி சார், இந்தப்பொடிப்பழக்கத்திற்கு அடிமை ஆனீங்க?” என்றேன் ஒரு வித ஆச்சர்யமான முகபாவனையுடன்.*

*“பொடி போடும் என் அப்பாவுக்கு நான் தான் அந்தக்காலத்தில் பொடி வாங்கி வருவேன். அவருக்கு திருச்சி மலைவாசலில் தேரடி பஜாரில் மேற்குப்பார்த்த முதல் கடையில் தான் ’டி.ஏ.எஸ். ரத்தினம் பட்டணம் பொடி’ வாங்கி வரணும். அங்கு எப்போதும் கமகமவென்று ஒரே பொடிமணமாக இருக்கும்.*

*சோம்பலில், வேறு கடைகளில் நான் பொடி வாங்கி வந்தால், அதன் காரசார மணம் குணம் முதலியவற்றை ஆராய்ச்சி செய்து விட்டு, என் மூஞ்சியிலேயே தூவி விடுவார். அவ்வளவு கோபம் வந்துவிடும் அவருக்கு.*

*அந்த மலைவாசல் கடையில், பருமனான ஒருவர் முரட்டு மீசையுடன் பனியன் மட்டும் போட்டுக்கொண்டு கம்பீரமாக அமர்ந்திருப்பார். ஒரு பெரிய பத்துபடி டின்னிலிருந்து புதுப்பொடியாக ஒரு பெரிய கரண்டியில் எடுத்து, அங்குள்ள ஜாடிகளில் (ஊறுகாய் ஜாடி போல பீங்கானில் இருக்கும்) போட்டு வைத்துக்கொள்வார்.*

*அதன் பிறகு அந்த ஜாடிகளிலிருந்து கரண்டியால் எடுத்து தராசில் தங்கம் போல நிறுத்து, பதம் செய்யப்பட்டு, கத்தரியால் வெட்டப்பட்ட, வாழைப்பட்டைகளில், பேரெழுச்சியுடன் பேக் செய்து, வெள்ளை நூலினால் ஸ்பீடாகக் கட்டிக்கட்டிப் போட்டுக்கொண்டே இருப்பார், 10 கிராம், 50 கிராம், 100 கிராம் என்று பல எடைகளில்.*

*அவர் கட்டிப்போடப்போட, அவர் எதிரில் வெள்ளைவெளேரென்ற கதர் சட்டையுடன், கோல்ட் ஃப்ரேம் கண்ணாடி, தங்க மோதிரங்கள், தங்கத்தில் புலி நகம் கட்டிய மைனர் செயின் முதலியன அணிந்த, மிகவும் குண்டான முதலாளி ஒருவர் அவற்றை உடனுக்குடன் விற்று, கைமேல் காசு வாங்கிப் போட்டுக்கொண்டே இருப்பார். கடை வாசலில் எப்போதுமே, (தற்கால ரேஷன் கடைகள் போல), கும்பலான கும்பல் இருந்து வரும். மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் என பொடி வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்து வந்தனர் அவர்கள்.*

*அதை விட வேடிக்கை என்னவென்றால், பொடிப்பயல்கள் முதல் பெரியவர்கள் வரை, நடுநடுவே ஓஸிப்பொட்டிக்கு கைவிரலை நீட்டுபவர்களுக்கெல்லாம், இலவசப்பொடி வழங்கப்பட்டு வந்ததே அந்தக்கடையின் தனிச்சிறப்பு.*

*ஒரு அடி நீளத்திற்கு மேல் நீண்ட ஒரு மெல்லிய இரும்புக்குச்சிபோல ஒரு கரண்டி வைத்திருப்பார்கள். அதன் கொண்டைப்பகுதியில் ஒரு 10 சிட்டிகை மட்டும் பொடி பிடிக்கும் அளவு குழிவான பகுதி இருக்கும். பொடி ஜாடிக்குள் அதை நுழைத்து, அடிக்கடி 5 நிமிடங்களுக்கு ஒரு முறை வீதம், வெளிப்பக்கம் நிற்கும் வாடிக்கையாளர்களை நோக்கி அந்த இரும்புக்குச்சி போன்ற கரண்டியை நீட்டுவார்கள்.*

*அதே நேரம் கோவிலில் சுண்டலுக்கு பாய்வது போல அங்கு நிற்கும் அனைவரும், தங்கள் விரலை ஒரு வித நேச பாசத்துடன், அந்த மிகச்சிறிய கரண்டிக்குள் விட்டு, பொடியை எடுத்துக்கொண்டு நுகர்ந்து மகிழ்வார்கள். இழுக்க இழுக்க இன்பம் அடைவார்கள். அந்தக் காலத்தில் அதுபோல இலவசப்பொடியை நுகர ஆரம்பித்த நுகர்வோர்களில் 12 வயதே ஆன நானும் ஒருவன்.*

*தினமும் எதற்காக இப்படி என்னைப்போன்ற நூற்றுக்கணக்காண பொடியன்களுக்கு இலவசப்பொடி தர்மம் செய்கிறார்கள் என்று அந்த நாளில் வழுவட்டைத்தனமாக நானே ஆரம்பத்தில் ஆச்சர்யப்பட்டதுண்டு.*

*பிறகு நாளாக நாளாகத்தான் அது அவர்களின் வியாபார யுக்தி; அனைவரும் எழுச்சியுடன் பொடி போட வேண்டும்; அடுத்த தலைமுறை இளைஞர்கள் எல்லோருமே ஒரு வித எழுச்சியுடன் விளங்க வேண்டும் என்ற தொலை நோக்குத் திட்டமும், வியாபாரத் தந்திரமும் என்பதைப் புரிந்து கொண்டேன்.*

*இன்றைய இலவச இணைப்புகள், ஆடித்தள்ளுபடி, அதிரடித்தள்ளுபடி என்பதெல்லாம் இந்த இலவசப் பொடியிலிலிருந்து தான் பிறந்திருக்க வேண்டும்" என்ற சரித்திர உண்மைகளைச் சரமாரியாக எடுத்து விட்டார், நம் வ.வ.ஸ்ரீ.*

*தொடரும்*

*[ 5 ]*

*மதியம் கேண்டீனுக்குப்போய் லஞ்ச் முடித்து விட்டு, ஆபீஸ் வேலைகளைக் கொஞ்சம் பார்க்கலாம் என்று தான், நான் நினைத்தேன். ஏதோ கண்ணைச்சொக்குவது போல இருந்தது.*

*வ.வ.ஸ்ரீ. சாப்பிட வீட்டுக்குப்போனவர் போனவர் தான். ஆளையே சீட்டில் காணும். எப்போதுமே சீட்டில் இருப்பவர் போல ஏதோ ஒரு ஃபைலை மேஜை மீது விரித்து வைத்து, அதன் மேல் ஒரு பேப்பர் வெயிட்டையும், மூக்குக்கண்ணாடியையும், மூக்குப்பொடி டப்பாவையும் வைத்து விட்டுச் சென்று விடுவார். பார்ப்பவர்களுக்கு அவர் இங்கு எங்கோ தான் பாத் ரூம் போய் இருப்பார் என்று நினைத்துக்கொள்ள, அது அவர் கையாளும் ஒரு டெக்னிக் என்பது, நான் மட்டுமே நாளடைவில் தெரிந்து கொண்டது.*

*தன் கைவசம், அவர் எங்கு சென்றாலும், எப்போதும் வேறு ஒரு மூக்குக்கண்ணாடியும், வேறு ஒரு மூக்குப்பொடி டப்பாவும் உஷாராக கைவசம் வைத்துக்கொண்டு தான் செல்வார்.*

*தூக்கக்கலக்கம் போக, அவர் டேபிளின் மேல் இருந்த மூக்குப்பொடி டப்பாவில் முதன் முதலாகக் கைவைத்து, அதைத் திறந்து, லேசாக ஆள்காட்டி விரலை மட்டும் அதற்குள்*

*பதித்து, மூக்கருகில் கொண்டு செல்ல எத்தனிக்கும் போது, வ.வ.ஸ்ரீ. அவர்களே வந்து விட்டார்.*

*"என்னப்பா, இப்போதே Further ஆக நம்ம Discussions Continue பண்ணலாமா", என்று சொல்லி ஒரு சிட்டிகை பொடியை வேகவேகமாக எடுத்து உறிஞ்சினார். கையில் உள்ள பொடியை அவர் உதற லேசாக என் கண்ணில் பட்டு, சற்றே எரிச்சல் ஏற்படுத்தியது என்றாலும், என் தூக்கம் சுத்தமாகக் கலைந்து போய் விட்டது.*

*மேனேஜர் எங்கள் இருவரையும் ஒரு மாதிரியாகப் பார்த்தவாறே, தன் ரூமுக்குள் நுழைந்ததை நான் மட்டுமே கவனித்து விட்டு, வ.வ.ஸ்ரீ. யிடம் மெதுவாகச் சொன்னேன்.*

*"அவன் கிடக்கிறான், நீ எதற்குமே கவலையே படாதே; அவனால் உனக்கு ஏதாவது பிரச்சனையென்றால் என்னிடம் வந்து சொல்லு. RETIRE ஆக இன்னும் மூணு மாதங்களே உள்ளன எனக்கு. அதற்குள், I will teach him a Lesson" [நான் அவனுக்கொரு பாடம் கற்பிக்கிறேன்] என்றார். அவர் கொடுத்த தைர்யத்தில் என் பேட்டியைத் தொடர ஆரம்பித்தேன்.*

*"இந்தப்பொடிப் பழக்கத்தால் உங்கள் தாம்பத்ய வாழ்க்கையில் எதுவும் பாதிப்பு உண்டா, சார்" என்றேன்.*

*"நல்லதொரு கேள்வி தானப்பா" என்று உற்சாகத்துடன் சொல்ல ஆரம்பித்தார்.*

*"எனக்குக் கல்யாணம் ஆன புதிதில், இந்தப்பொடி போடும் பழக்கமே எனக்கு அதிகமாகக் கிடையாது. எப்போதாவது யாராவது போடும்போது லேசாக வாங்கி மோந்து (முகர்ந்து) பார்ப்பதோடு சரி. அதுவும் என்னவளை நெருங்கும்போது பொடி நெடி ஏதும் இல்லாமல் சுத்தமாக மூக்கைக் கழுவிக்கொண்டு, பாதுகாப்பாகத்தான் இருந்து வந்தேன்.*

*அடுத்தடுத்து ஐந்தாறு பிள்ளைகுட்டிகள் பிறந்து, குடும்பத்தில் எவ்வளவோ பிரச்சனைகள், மனக்கசப்புக்கள், மனைவியின் விதண்டாவாதப்பேச்சுக்கள் முதலியன ஏற்பட்டதில் எல்லாவற்றிலுமே ஒரு வெறுப்பு ஏற்பட்டது எனக்கு;*

*புதுப்பொண்டாட்டியாக இருந்தபோது அவளிடம் இருந்த பூ வாசனை, செண்ட் வாசனையெல்லாம் நாளடைவில் மறைந்து, ஏதோவொரு சாம்பார்பொடி வாடையோ, பூண்டு வாடையோ எனத்தெரியாததொரு காரல் வாடை மாறிமாறி அடிக்க ஆரம்பித்ததும் தான், எனக்கு இந்தப் பொடியின் மீது, ஒருவித புதுக்காதல் மலர ஆரம்பித்தது. அதுவே இன்றுவரை அதனுடன் ஒரு தீராத காதலாகவும், மோகமாகவும் மாறிவிட்டது;*

*பொண்டாட்டி இல்லாமல் இருக்கவே முடியாது என்றிருந்த என்னை 'பொண்டாட்டி' யின் சுருக்கமான 'பொ.............டி' இல்லாமல் இருக்கவே முடியாது என்று ஆக்கிவிட்டது.*

*அவள் எனக்குக்கோபம் ஏற்படுத்தும் போதெல்லாம், எனக்கு என் பொண்டாட்டியை இரண்டு இழுப்பு இழுத்து விடணும் போல ஒரு வேகம் வருவதுண்டு. அந்த*

*நேரங்களிலெல்லாம் பொடியை இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு, அவளையே ஓங்கி இழுத்துவிட்டது போல ஒரு வித இன்பம் அடைவதுண்டு" என்றார், வ.வ.ஸ்ரீ.*

*கூடிய சீக்கரம் ரிடயர்ட் ஆகும் நிலையில் இருந்த அவரின் இந்த சோகமான சுய சரிதையைப் பொடிப்பொடியாகக் கேட்ட எனக்கு, அவர் மேல் ஒரு பச்சாதாபமே ஏற்பட்டது.*

*சற்றும் ஒரு சங்கோஜமோ, சங்கடமோ, லட்ஜையோ இல்லாமல் தன் இல்வாழ்க்கையின் இரகசியங்களை அவர் எடுத்துரைத்த விதம் எனக்கு அவர் மேல் ஒரு உயர்ந்த அபிப்ராயத்தை ஏற்படுத்தி விட்டது.*

*அவர் காதருகில் போய் மெதுவாக, "மனைவி என்பவள் எவ்வளவு நாள் ஆனாலும், கண்டு களிக்கும் விதமாக, ஆரம்பத்தில் இருக்கும் அதே அழகுடனும், சுண்டியிழுக்கும் கவர்ச்சியுடனும், சுவைத்திட நல்லதொரு கட்டிக்கரும்பாகவும், கடைசிவரை இருக்கவே முடியாதா, சார்" என்றேன், நான்.*

*"புதுசா கல்யாணம் ஆகப்போகும் நீ, இதை ஏன் இவ்வளவு ஒரு பரமரகசியமாக, அதுவும் பயந்து கொண்டே கேட்கிறாய்? என்னிடம் பேச நீ இவ்வாறெல்லாம் கூச்சப்படலாமா? ஒரு சில உதாரணங்களுடன் விளக்கினால் தான் உனக்கு எல்லா விஷயங்களுமே நல்லாப்புரிபடும்" என்று சொல்லி, எழுச்சியுடன் மேலும் ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து உறிஞ்சி உதறலானார். நான் என் கண்களை முன் ஜாக்கிரதையாக மூடிக்கொண்டு, காதுகளை மட்டும் நன்றாகத் தீட்டித் திறந்து கொண்டேன்.*

*"முதன் முதலாக பால்சொம்புடன் படுக்க வரும்போது, அவள் யாராயிருந்தாலும் அழகிய பால்குடம் போல பளபளப்பாத்தான், முன்னப்பின்ன அனுபவமில்லாத, உன் கண்களுக்குத் தெரியும்.*

*நாளாக நாளாக அதே பளபளப்பான பால்குடம், பழையசோத்துப்பானையா மாறிடுமப்பா, அதே உன் கண்களுக்கு!" என்றார் வ.வ.ஸ்ரீ. அவர்கள் .*

*"அச்சச்சோ, அது தான் ஏன் சார்ன்னு உங்களிடம் கேட்கிறேன். காரணம் என்னன்னு சொல்லாமல், பால்குடம் பழைய சோத்துப் பானையா ஆகிடும்னு மட்டும் சொன்னா எப்படி சார்?" என்றேன் நானும் விடாமல்.*

*அவருக்கு மேலும் ஒருவித எழுச்சியை ஏற்படுத்தி முக்கியமானத் தகவலை பெற்றுவிட வேண்டும் என்பதே என் குறிக்கோள்.*

*"அவ்வளவு ஏனப்பா, இந்தப்பிள்ளையார் சதுர்த்தி அன்னிக்கு கொழுக்கட்டை சாப்பிட்டிருக்கிறாயா நீ ?" என்றார் வ.வ.ஸ்ரீ.*



*"எனக்கு அது ரொம்ப பிடிச்ச ஐட்டம், சார்; நிறைய சாப்பிட்டிருக்கிறேன்" என்றேன்.*

*"முற்றலான தேங்காய்த் துருவல், ஏலக்காய், வெல்லம் எல்லாம் போட்டு, **கம்பர்கட்** போல பதமாக பாகுகாய்ச்சி, அரிசி மாவை தனியே வேக வைத்து, மெல்லிசா அழகாக துணி மாதிரி அதை உள்ளங்கையில் கொஞ்சமாகப் பரப்பி, பிறகு அதை சொப்பு போலச்செய்து, அதில் இந்த தேங்காய், வெல்லம், ஏலம் கலந்த பூர்ணத்தை கொஞ்சமாக உருட்டி வைத்து, பிறகு அதை அப்படியே மூடி, சின்னதா ஒரு மூக்கு வைத்து முடித்துக்கொண்டு, பிறகு மீண்டும் இட்லி சுடுவது போல வேக வைத்து சூடாகத் தருவார்களே, அதைத் தின்னும் போது எவ்வளவு ருசியாகவும் சுவையாகவும் இருக்கும்? என்று சொல்லி நிறுத்தினார், வ.வ.ஸ்ரீ.*

*"ஆஹாஹா, சார்! நீங்க இப்படியொரு அருமையான கொழுக்கட்டை செய்முறைப் பக்குவம் சொல்லும்போதே, கொழக்கட்டைகள் என் கண்முன் இருப்பது போல, நாக்கிலே ஜலம் ஊறுகிறது, சார்" என்றேன்.*

*"இந்த சுடச்சுட சாப்பிடும் பிள்ளையார் கொழுக்கட்டை போலத்தானப்பா, புதுப்பொண்டாட்டியும். அதே கொழுக்கட்டையை அப்படியே மூடி வைத்து ஒரு நாலு நாள் கழித்து சாப்பிட முடியுமா உன்னால்?" என்றார், வ.வ.ஸ்ரீ.*

*"அது எப்படி சார், சாப்பிட முடியும், ஊசிப்போய் நல்லாவே இருக்காது, ஒரே நாத்தம் அடிக்கும் சார்" என்றேன் நான்.*

*"முதல் நாள் சூடாக சுவையாக சாப்பிட ருசியாக இருக்கும் புதுக்கொழுக்கட்டை போன்ற, இந்தப் புதுப்பொண்டாட்டி, நாளடைவில் இந்த 'ஊசிப்போன கொழுக்கட்டை' போல ருசி ஏதும் இல்லாமல் ஆகிவிடுகிறாள் என்பதை உனக்கு உணர்த்தவே நான் இவ்வளவு கஷ்டப்பட்டு உதாரணம் சொல்லிப் புரிய வைக்க வேண்டியுள்ளது" என்றார், வ.வ.ஸ்ரீ.*

*பிறகு அவரே, "நீ மட்டும் என்னப்பா, என்றும் மார்க்கண்டேயனாக 16 வயது இளமையோடும், மன்மதன் போல அழகோடும் எழுச்சியோடும் கடைசிவரை இருந்து விடப்போகிறாயா என்ன!*

*இந்த எழுச்சி, புரட்சி, மகிழ்ச்சி, விரைப்பு, முறைப்பு, ஆர்வம், அட்டகாசம், அதிகாரம், ஆணவம், ஆட்டம், பாட்டம் எல்லாமே எல்லோருக்குமே ஆரம்பத்தில் கொஞ்ச நாட்களுக்குத் தானப்பா; பிறகு போகப்போக கடைசியில் ஒரு நாள் எல்லோருமே*

*எழுச்சிகுன்றி, வழுவட்டையாகத்தான் போயாக வேண்டும், என்பது தான் இந்த உலக நியதியப்பா;*

*பெண்களுக்கு இயற்கையாகவே ஏற்படும் மாதாந்தர சுழற்சிகளாலும், அடுத்தடுத்து பிள்ளைப்பேறுகளால் ஏற்படும் ஒருசில பிரத்யேகத் தொல்லைகளாலும், குழந்தைகள், குடும்பம், சமையல் அறை வேலைகள் என்ற கூடுதல் பொறுப்புகளை அவர்கள் முன்வந்து ஏற்பதாலும், பழையபடி சீவிமுடிச்சு சிங்காரிக்கவும், பவுடர், ஸ்னோ, செண்ட் என அப்பிக்கொண்டு கவர்ச்சியாக நிற்கவும் முடியாமல் போய்விடுகிறதப்பா;*

*பாவம் அவர்கள், நடுவில் இந்த டி.வி. சீரியல்களைப்பார்த்து அதில் வரும் பல சோகங்களுக்காக, கண்ணீர் வடிக்க வேண்டியதாகவும் உள்ளது. அதனால் கொஞ்சம் நம்மை விட சீக்கிரமாகவே தளர்ந்து போய் விடுகிறார்களப்பா" என்று விளக்கினார், வ.வ.ஸ்ரீ.*

*பிறகு அவரே, " ஆணோ பெண்ணோ, உடம்பில் தெம்பு குறைந்தாலும், உயிர் உள்ளவரை, உள்ளத்தில் எப்போதும் எழுச்சியும், உற்சாகமும், இளமையும் ஊஞ்சலாட வேண்டுமப்பா, என்னைப்போல", என்றார் வ.வ.ஸ்ரீ.*

*இவர் இப்படியெல்லாம் ஒவ்வொன்றையும் புட்டுப்புட்டு விலாவரியாக எடுத்துச் சொல்வதைக் கேட்டதும், நான் கல்யாணம் செய்து கொள்வதா வேண்டாமா, என்று ஒரேயடியாகக் குழம்பிப்போக வைத்தது என்னை.*

*"எது எப்படியிருந்தாலும், இந்த வ.வ.ஸ்ரீ. உன்னை என்னதான் குழப்பினாலும், சுடச்சுட, நீ கொழுக்கட்டை சாப்பிட்டே ஆகணும்" என்றது என் உள் மனது.*

*எனக்கும் சுடச்சுட ருசியான ஒரு கொழுக்கட்டை விரைவிலேயே கிடைக்க வேண்டும் என்று நானும் மனமுருக வேண்டிக்கொண்டேன்.*

*இவரின் இந்தக்கொச்சையான பேச்சை வேறு பக்கம் திருப்பிவிட வேண்டும் என்று நினைத்த நான் "பொடி எதிலிருந்து எப்படி சார் தயாரிக்கிறார்கள்" என்று என் அடுத்த கேள்விக்குத் தாவிச்சென்றேன்.*

*அன்றைய ஆபீஸ் நேரம் அதற்குள் முடிந்து விட்டதால், நாளைக்குப் பேசுவோம் என்ற படி இருவரும் பிரியா விடை பெற்றுச்செல்ல வேண்டியதாகிப் போனது.*

*தொடரும்*

*ஒரு சிறு விளக்கம்:*

*[ ** கம்பர்கட் ** அல்லது கமர்கட் என்பது அந்தக்காலத்தில் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் ஒரு தின்பண்டம். கடலைமிட்டாய், தேங்காய் பர்பி, ஆரஞ்ச் மிட்டாய் என்பதுபோல பல சாதாரண பெட்டிக்கடைகளிலும், பள்ளிக்கூட வாசல்களிலும் சுலபமாக கிடைக்கக் கூடியது.*

*தேங்காய் + வெல்லம் + ஏலம் கலந்த ஒரு கலவை தான், கையில் ஒட்டாதபடியும், ஆனால் அமுக்கினால் அமுங்கக்கூடியதாகவும் ஒரு வித ஜவ்வுமிட்டாய் போல*

*பாகுபதத்தில் உருண்டையாக கோலிக்குண்டுபோல செய்யப்பட்டிருக்கும். மிகவும் சுவையானதாக இருக்கும்.*

*இப்போதெல்லாம் கடைகளில் கிடைக்குமோ கிடைக்காதோ தெரியவில்லை. ]*

*[ 6 ]*

*மறுநாள் காலை நான் என் சீட்டுக்கு வந்து அமரும் போதே, வ.வ.ஸ்ரீ. அவர்கள், மேனேஜர் ரூமுக்குள் அவசரமாக நுழைந்து கொண்டிருந்தார். அவர் இவரிடம் மாட்டினாரோ அல்லது இவர் அவரிடம் மாட்டினாரோ தெரியவில்லை, சுமார் ஒரு மணி நேரம் ஏதோ காரசார விவாதம் நடைபெற்று வருவதாகவும் என் பெயரும் அதில் அடிபடுவதாகவும், மேனேஜருக்குத் தண்ணி காட்டிவிட்டு# [#குடிக்க குளிர்ந்த ஜில் வாட்டர் கொடுத்துவிட்டு] வெளியே வந்த அட்டெண்டர் ஆறுமுகம், தன் வெற்றிலைபாக்குப் பன்னீர்ப்புகையிலை போட்ட வாயைக் குதப்பிக்கொண்டே, ஏதேதோ சொல்லிப்போனதில், என் விசாரம் அதிகமாகி விட்டது.*

*இனி இந்த வ.வ.ஸ்ரீ. அவர்களுடன் அனாவஸ்யமாக ஆபீஸ் நேரத்தில் அரட்டைப்பேச்சுகள் எதுவும் பேசக்கூடாது என்று மனதில் நினைக்கும் போதே, வ.வ.ஸ்ரீ. பேரெழுச்சியுடன் மேனேஜர் ரூமை விட்டு வெளியே, பிரஸ்ஸன்னமானதுடன், என்னைப்பார்த்து அவர் சீட்டுக்கு உடனே வருமாறு கைஜாடை காட்டினார்.*

*என்னை அவர் சீட் அருகே அமரச்செய்து விட்டு, ஒரு சிட்டிகைப்பொடியுடன் பாத் ரூம் சென்று விட்டு உடனடியாக வருவதாகச் சொல்லிப்போனார். என்னவோ ஏதோ என்ற சஸ்பென்ஸில் என் தலையே வெடித்து விடும் போல இருந்தது.*

*சொன்னபடியே 2 நிமிடத்தில் தன் இருக்கையில் அமர்ந்த அவர் என் கையைப்பிடித்து குலுக்கினார். "CONGRATULATIONS" என்றார்.*

*"என்னாச்சு, எதற்கு சார்?" என்றேன் நான் மிகவும் பதட்டத்தில்.*

*"நான் ரிடயர்ட் ஆன பிறகு நீ தான் என் சீட் வேலைகளையும் சேர்த்து செய்யணும், இன்னிக்கு மத்யானமே ஆர்டர் வந்துடும். நான் தான் உன் பெயரை ரெகமெண்ட் செய்தேன், இதனால் உனக்கு சீக்கரமே அடுத்த பிரமோஷன் வர மிகவும் ப்ளஸ் பாயிண்ட் ஆக, அது அமையும்" என்றார்.*

*"சார், இது குருவி தலையிலே பனங்காயை வைத்தாற்போல எனக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்குமே, சார்," என்றேன்.*

*"அதெல்லாம் ஒன்னும் கஷ்டமில்லேப்பா, நான் அந்தக்காலத்தில் பார்க்காத வேலையா? In fact இப்போ என் சீட்டில் என்ன பெரிய வேலை நான் பார்த்து வருவதாக நீ பயப்படுகிறாய். சும்மா வருகிறவன் போகிறவனுடன் அரட்டை அடித்து வருகிறேன். இந்த கம்ப்யூட்டர் வந்த பிறகு எல்லா வேலைகளையும் உன்னைப்போல இளைஞர்கள் தானே பார்க்கிறீர்கள்! நான் தான் இந்தக் கம்ப்யூட்டர்*

*கன்றாவியெல்லாம் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்று ஒதிங்கி ஒரு எட்டு வருஷத்துக்கு மேல் இருக்குமே" என்றார்.*

*சார், உங்கள் டேபிள், சைடு ராக், ஃபைலிங் கேபினெட், கப்போர்டு எல்லாம் ஏகப்பட்ட ஃபைல்ஸ், பேப்பர்ஸ், ரிஜிஸ்டர்ஸ் என்று ஏராளமாக பழைய பஞ்சாங்கங்களாக வைச்சுருக்கீங்களே சார், அது தான் எனக்கு ஒரே பயமா இருக்கு சார்" என்றேன்.*

*அதெல்லாம் ஒரு மாமாங்கமா என்னிடம் தான் இருக்குதப்பா; அதெல்லாம் இந்தக் கம்ப்யூட்டரைஸ் பண்ணுவதற்கு முன்பு நான் கையால் எழுதிவைத்த ஓல்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட் ரிகார்ட்ஸ்.*

*எவனாவது ஏதாவது கேட்டுக்கிட்டு எப்போதாவது சிலசமயம் வருவான். பார்த்துத் தேடித்தருவதாகவோ அல்லது நீயே தேடிக்கொள் என்று சொன்னால் போதும், அதில் ஆங்காங்கே தூவப்பட்டிருக்கும் என் பொடி நெடி தாங்காமல், அவனவன் ஓட்டம் பிடித்து விடுவான்.*

*இதெல்லாம் நானும் இந்த ஆபீஸில் ஏதோ வேலை செய்கிறேன் என்று ஒரு பாவ்லா காட்ட மட்டும் தான் வைத்திருக்கிறேன்" என்று உள்ளதை உள்ளபடிச் சொல்லி, எனக்கு ஒரு உற்சாகம் அளித்தார்.*

*"பொடி எதிலிருந்து எப்படி சார் தயாரிக்கிறார்கள்" என்ற என் நேற்றைய கேள்வியை ஞாபகமாகத் தொடர்ந்தேன்.*

*"ரிஷி மூலம், நதி மூலம் கேட்கக்கூடாதப்பா, இருந்தாலும் உனக்குச் சொல்கிறேன். நல்ல ஒஸ்தியான புகையிலையைப் பதமாக வறுத்து, பக்குவமாக அரைத்து, சுண்ணாம்பு (கால்ஷியம் சத்து), மற்றும் ஒருசில கெமிக்கல்ஸ் சேர்த்து, காரம், மணம், குணம் நிறைந்ததாக அவ்வப்போது உள்நாட்டு, வெளிநாட்டுத் தேவைகளுக்குத் தகுந்தாற்போல, உற்பத்தி செய்து, உடனுக்குடன் வினியோகிக்கிறார்கள்.*

*இதில் வாசனைப்பொடி என்று ஒரு வகையறா உண்டு. காரசாரமே இல்லாமல் சுத்த வழுவட்டையாக இருக்கும். மூக்கினுள் செண்ட் அடித்தால் போல கமகமன்னு ஒரு வாசனை இருக்கும். போடுபவர்களுக்கு ஒருவித எழுச்சியை ஏற்படுத்தாது.*

*முத்தம் கொடுக்கும்போது ஒருவேளைப் பயன்படுமோ என்று நினைத்து, அந்தநாளில், நான் ஒரு நாள் அதைப் பயன்படுத்தப்போக என் மூக்கையே கெடுத்து விட்டது அது. என் மனைவி வேறு "இதென்ன கண்ட்றாவியா ஒரு பொண நாத்தம் அடிக்குது உங்கள் மூக்குப்பக்கம், ஏதாவது குடிச்சுட்டு வந்தீங்களா" என்று சண்டைக்கே வந்து விட்டாள். பழையபடி மூக்கை எழுச்சியாக்கிக் கொண்டுவர மூன்று நாட்கள் ஆனது, எனக்கு.*

*நாசிகாச்சூர்ணம் என்று ஒரு ஆயுர்வேதிக் மூலிகைப்பொடி உள்ளது. வெந்தயத்தை லேசாக வறுத்து அரைத்தாற்போல ஒரு வித மஞ்சள் நிறத்தில் இருக்கும். அது எல்லாவற்றையும் விட பேரெழுச்சி கொடுக்கக்கூடியது. லேசா ஒரு சிட்டிகை எடுத்து இழுத்தால் போதும். மண்டையில் உள்ள எல்லா நரம்புகளும் கட் ஆகிப் போவது போல, ஒரு அரைமணி நேரத்திற்குக் குறையாமல் தொடர்ச்சியான தும்மலையும், நம்மைச்சுற்றியுள்ள பகுதிகளில் தூரலையும் வரவழைத்து விடும். மண்டையில்*

தேங்கியுள்ள நீர் முழுக்க மளமளவென்று, குற்றால அருவி போல கொட்டிவிடும். தலை பாரமெல்லாம் குறைந்தது போல இருக்கும்.

ஒரே இடத்தில் உள்ள ஒரு பத்து பேர்களுக்கு, இந்த நாசிகாசூர்ணத்தை ஒரே நேரத்தில் போடச்சொல்லிக் கொடுத்து அவர்களும் போட்டு விடுவார்களேயானால், தீபாவளிப் பட்டாஸ் பத்தாயிரம் வாலாவைக் கொளுத்தி விட்டு அவைகள் தொடர்ந்து வெடிப்பது போல, இவர்கள் தொடர்ந்து மாற்றி மாற்றி தும்மிக்கொண்டே இருப்பார்கள். பார்க்கவும், கேட்கவும் மிகவும் தமாஷாக ஒரு மிருதங்கக் கச்சேரி போலவே இருக்கும்.

முன்பெல்லாம் காய்ந்த வாழைப்பட்டையில் மடித்து பொடி வியாபாரம் செய்தனர். அதில் கொஞ்சம் சுகாதாரக்குறைவு உண்டு. பொடியுடன் கூடவே, அந்த வாழைப்பட்டையின் தூள்களும், நார்களும் மூக்கினுள் போய்விடக்கூடிய பேராபத்து இருந்து வந்தது. இப்போது அழகிய வழவழப்பான ஒட்டவே ஒட்டாத ப்ளாஸ்டிக் பெளச்சுகள் வந்து விட்டன. பேக்கிங் ஹைஜீனிக்காக இருப்பதால், நீ கூட தைர்யமாக பொடி போடலாம்” என்றார்.

“அதெல்லாம் இப்போது வேண்டாம், சார். என் இல்வாழ்க்கை முதலில் நல் வாழ்க்கையாய் ஆரம்பிக்கட்டும். ஏதும் பிரச்சனைகள் ஏற்படும்போது கட்டாயம் உங்களிடம் வந்து, ’பொண்டாட்டி’யின் சுருக்கமான ’பொ.........டி’யை, தீட்க்ஷையாகப் பெற்றுக்கொள்கிறேன். ஆமாம், சார், ஏதோ மத்யானம் ஆபீஸ் ஆர்டர் வரப்போகுதுன்னு சொன்னீங்களே, ஆபீஸே முடியும் நேரமாகப்போவுது, இன்னும் வரக்காணோமே” என்றேன்.

“அந்த மேனேஜர்பயல் தான் சொன்னான். நீ ஒன்னும் கவலையே படாதே. நாளையிலிருந்து உன் சீட்டுக்கே போகாதே. நேராக இங்கு வந்து உட்கார்ந்து கொள். I will get you the Office Order, Tomorrow morning” என்று சொல்லி விடைபெற்றார் வ.வ.ஸ்ரீ.

தொடரும்

[ 7 ]

மறுநாள் காலையில், நேற்று வ.வ.ஸ்ரீ. அவர்கள் சொன்னது போலவே, நான் அவர் சீட் வேலைகளையும் சேர்த்துப்பார்க்க வேண்டும் என்றும், அவர் பணி ஓய்வு பெறுவதற்கு மூன்றே மூன்று மாதங்கள் மட்டும் இருப்பதால் இப்போதே அதற்கான Responsibilities Handing over - Taking over முதலியன மேற்கொள்ள வேண்டும் என்று ஆபீஸ் ஆர்டர் கொடுக்கப்பட்டு விட்டதால், வ.வ.ஸ்ரீ. அவர்களுடைய சீட் அருகிலேயே அமர்ந்து தொடர்ந்து அரட்டை அடிப்பதற்கு [Official Discussions என்ற பெயரில்] அனுமதி வழங்கப்பட்டு விட்டது, என்று இருவருமே நினைத்து எங்களுக்குள் மகிழ்ந்து கொண்டோம்.

“பல வருஷங்களாக பொடி போட்டுவரும் தங்களுக்கு இதுவரை எந்தப்பிரச்சனையும் வந்தது இல்லையா, சார்” என்று நைஸாக என் இன்றையப் பேட்டியைத் தொடங்கலாலேன்.

*“ஒரு தடவை மூக்கினுள் ஏதோ ஒரு சிறிய கொப்பளம் போல் ஏற்பட்டு, பொடி போடும் போதெல்லாம் வலியும் எரிச்சலுமாக இருந்ததப்பா. மூக்கு இரண்டையும் சுத்தமாகக் கழுவிவிட்டு “காது மூக்கு தொண்டை” [E.N.T] டாக்டரிடம் போனேன். எனக்கு டாக்டரைப்பார்க்க அபாய்ண்ட்மெண்ட் கிடைக்க அரை மணி ஆனதில், பொடிபோடாத என் மூக்கு, நொணநொணக்கவும், முணுமுணுக்கவும், தொணதொணக்கவும் ஆரம்பித்து விட்டது. என்னிடம் கெஞ்சோகெஞ்சென்று கெஞ்சியது என் மூக்கு.*

*மிகவும் பொறுத்துப்பொறுத்துப்பார்த்த நான், கடைசியில் சகிக்க முடியாததால், அங்கிருந்த வெண்புறா போன்ற நர்ஸ்ஸிடம் என் பிரத்யேகப் பிரச்சனையை எடுத்துரைத்து, அவள் என்மீது காட்டிய கடைக்கண் பார்வையால், முன்னுரிமை அடிப்படையில், உள்ளே அந்த டாக்டரிடம் சென்று விட்டேன்.*

*என் சிறிய மூக்குத்துவாரங்களுக்குள் ஏதோவொரு தொலைநோக்குக் கருவியை பொருத்தி, வெளிச்சம் அடித்துப் பார்த்த அவர், நான் பல்லாண்டு காலமாக பொடி போடும் ரகசியத்தை எப்படியோ கண்டுபிடித்து வன்மையாகக் கண்டித்து விட்டார்.*

*காஃபி பில்டரில் தங்கியுள்ள சக்கைபோல தேங்கி, என் மூச்சுக்குழல் முழுவதும் ஒரே இருட்டாக ஒன்றுமே தெரியாமல் வழுவட்டையாக இருப்பதாகக்கூறி, இது மிகவும் ஆபத்து என பயமுறுத்தி, இனி பொடிப்பக்கமே தலை வைத்துப்படுக்கக்கூடாது, கண்ணாலும் பார்க்கக்கூடாது என்று இறுதி எச்சரிக்கையும் கொடுத்து விட்டார்.*

*டாக்டர் சொன்ன எச்சரிக்கையை என்னுடனேயே அருகில் இருந்து கேட்ட என் மனைவி என்னை, அப்போது ஒரு விதக் கொலைவெறியுடன் பார்த்தாள். வெளியே வந்த நான், அன்று இறுதியாக ஒரே ஒரு முறை மட்டும் பொடியை இழுத்துவிட்டு, ஒரு பேரெழுச்சியுடன் ஞாபகமாக அந்த வெண்புறாவுக்கும் நன்றி சொல்லிவிட்டு, என் மனைவியை நேருக்கு நேர் பார்க்க விரும்பாதவனாக, அவளுடனேயே ஆட்டோவில் ஏறி என் வீட்டை அடைந்தேன்.*

*பொடி டின்னை என் வீட்டுப்பரணையில் என் மனைவி பார்க்கும் போதே விட்டெறிந்து விட்டேன். இனிமேல் பொடியே போடப்போவதில்லை என்று [ப்ரஸவ வைராக்கியம் என்பார்களே, அது போல] சபதம் மேற்கொண்டேன்.*

*ஒரு அரை மணியோ ஒரு மணியோ, ஒரு மாதிரி தாக்குப்பிடித்து விட்டேன். அதன் பிறகு எனக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. நடுவில் என் மனைவி சாப்பிடக்கூப்பிட்டு இருக்கிறாள் என்று நினைக்கிறேன்.*

*ஆனால் யார் பேசுவதும் என் காதிலேயே விழவில்லை. உடல் பூராவும் ஒரு மாதிரி சோர்ந்துபோய், கண்கள் சொருக, சுத்த வழுவட்டையாகி விட்டேன். அப்படியே விட்டால், எனக்கு மூச்சே நின்றுவிடும் போல ஆனதை, என்னால் மட்டுமே உணர முடிந்தது.*

*நான் இப்படித் தவியாய்த் தவிப்பதைப் பார்த்த என் மனைவி, தன் திருமாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒத்திக்கொண்டு, வந்தது வரட்டும் என்று தானே மரஸ்டூல் ஒன்றைப்போட்டு, கோவை சரளா போல தன் புடவைத்தலைப்பை இழுத்துச்சொருகிக்கொண்டு, பரணை மீது ஏறி, பொடி டின்னைத் தேடி எடுத்து, தன் புடவைத்தலைப்பால் புழுதிகளைத் துடைத்து, மூடியைத்திறந்து என்னிடம் நீட்டிய*

*பிறகு தான், எனக்குப்போன உயிர் திரும்பி வந்தது என்றால் பார்த்துக்கோயேன்” என்றார்.*

*இவ்வாறு பொடியுடன் ஒன்றிப்போய்விட்ட அவரின் வாழ்க்கையை எண்ணி, ஆச்சர்யப்பட்டுப்போன நான் ”சமீபத்தில் நீங்கள் துபாய்க்குப்போய் வந்ததாகக் கேள்விப்பட்டேனே, சார்; அங்கு நம்மூர் போல பொடிக்கடைகள் உண்டா? அந்த அனுபவத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்கோ சார்”, என்றேன்.*

*“அது ஒரு மிகப்பெரிய கதையப்பா, லஞ்ச்டயம் ஆவதற்குள் சுருக்கமாகச் சொல்கிறேன். துபாயிலிருக்கும் என் பெரிய பையன், ரொம்ப நாட்களாகவே என்னை அங்கு வரும்படி கூப்பிட்டும், இந்தப்பொடி விஷயமாகத்தான், அந்தப்பயணத்தையே ஒத்திப்போட்டு வந்தேன். பிறகு அவன் பிடிவாதம் தாங்கமுடியாமல், அவனது அழைப்பை ஏற்று, நான் புறப்பட்டுச்செல்லும்படி ஆனது.*

*விமானம் ஏறும் முன்பு என்னைப் பரிசோதித்த அதிகாரிகள், என் சட்டைப்பையிலிருந்த பொடி டின்னைத் திறக்கச்சொல்லி, அதில் நான் புதுசாக வாங்கி அடைந்திருந்த மூன்று ரூபாய்ப்பொடியையும் ஒரு ஓரமாக தரையில் என்னை விட்டே கொட்டிவிடச்சொல்லிவிட்டனர்.*

*காலிட்டின்னை மட்டும் எடுத்துச்செல்ல அனுமதியளித்தனர். எனக்கு அழுகையே வந்து விட்டது. கைவசம் பொடி இல்லாத இந்த வெளிநாட்டுப்பயணம் தேவை தானா என்று ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்று விட்டேன்.*

*செக்-இன் முடிந்த என்னையும், மற்ற பயணிகளையும் வெளியே வரமுடியாதபடி (ஆடுமாடுகளைப் பட்டியில் அடைப்பது போல) ஓரிடத்தில் அடைத்து விட்டனர். நாம் செல்ல வேண்டிய விமானம் வந்து விட்டது என்று அனைவரும் மகிழ்ச்சியுடன் க்யூவில் நிற்க, நானும் வேறு வழியில்லாததால் அவர்களுடன் சேர்ந்து நிற்கும்படி ஆகி விட்டது.*



*முதன் முதலாக விமானத்தில் ஏறும் நான், அந்த ஐந்து மணி நேர விமானப்பயணத்தில் நொந்து நூலாகிப்போனேன். எழுச்சியுடன் பொடிபோட்டுக்கொண்டு ஜாலியாகப் பயணிக்க வேண்டிய நான், வழுவட்டையாக காலியான பொடி டின்னை மோப்பம் பிடித்தவாறே பறந்து கொண்டிருந்தேன்.*




*அழகழகான இளம்வயது குட்டிகளான விமானப் பணிப்பெண்கள் அவ்வப்போது என்னருகே வருகிறார்கள், பயணம் இனிமையாகட்டும் என்று சொல்லி வாழ்த்துகிறார்கள்.*




*எனக்குத் தின்ன, சுவைக்க, குடிக்க, சாப்பிட, படிக்க என்று ஏதேதோ தந்துதான் அந்தப்பெண்கள் என்னை அவ்வப்போது கவனித்துக்கொள்கிறார்கள்.*

*ஆனால் அவர்களில் ஒருத்தியாவது என் அவசர மற்றும் அவசியத் தேவையாகிய பொடியை மட்டும் தராதது, எனக்கு என் பொடிபோடாத மூக்குக்குமேல் கோபத்தை வரவழைத்து, அந்த அழகிய பெண்கள் மேல் ஒரு வித, எரிச்சலையே ஏற்படுத்தியது.*

*நல்லவேளையாக 50 கிராமில் இரண்டு பாக்கெட்களும், 10 கிராமில் 50 பாக்கெட்டுகளும், என்னுடைய வெவ்வேறு லக்கேஜ்களுடன் துணிமணிகளில் சுற்றியவாறு கடத்திச்சென்றதை, பறிமுதல் செய்யாமல் விட்டுவிட்டனர்.*

*அந்தப்பொடியின் காரம், மணம், குணம் குறையும் வரை மட்டும், ஒரு 40 நாட்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இல் தங்கி ஷார்ஜா, துபாய், அபுதாபி என எழுச்சியுடன் அனைத்து இடங்களையும் என் மகனுடன் தினமும் காரில் சுற்றிப்பார்த்தேன்.*

*நம்மூர், திருச்சி வெங்காய மண்டியில் சின்ன வெங்காயத்தை, நடு ரோட்டில் மலைபோல குவித்து வைத்திருப்பார்களே, அதே போல அங்குள்ள "இண்டர் நேஷனல் கோல்டு பஜார்" என்ற இடத்தில், ஒரு பெரிய தங்கநகைக் கடையில் ஜொலிக்கும்*

*புத்தம்புதிய தங்க மோதிரங்களைக் குவித்து வைத்திருப்பதைப்பார்த்து நான் அசந்து போனேன்.*

*அதுபோல ’சிட்டிசென்டர்’ என்று ஒரு இடத்திற்கு என் மகன் காரில் கூட்டிச் சென்றான். அங்கு ”என்ன விசேஷம்” என்று போகும் போது அவனிடம் நான் கேட்டேன்.*

*“நீ அங்கு வந்து பாருப்பா; அங்கு கிடைக்காத ஒரு சாமான் இந்த உலகிலேயே எதுவும் இருக்க முடியாது. அவ்வளவு ஒரு மிகப்பெரிய ப்ரும்மாண்டமான ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் அது” என்றான்.*

*“அப்படியா! என்று கேட்டு ஆச்சர்யப்பட்டுப்போனேன். அப்படியானால் எப்படியும் இந்த மூக்குப்பொடி கிடைக்காமல் போகாது என்ற எண்ணத்தில்.*

*”அங்கு பொருட்கள் வாங்க வருபவர்கள் தங்கள் காரைப்பார்க் செய்யவே பலமாடிகள் கொண்ட மிகப்பிரும்மாண்டமான கட்டடம், கட்டியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் 5000 கார்கள் வரை பார்க் செய்ய முடியும். எந்த மாடியில் எந்த ஸ்லாட்டில் நம் காரை பார்க் செய்திருக்கிறோம் என்பதை மட்டும் நாம் ஞாபகமாக குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நம் காரை நாம் கண்டுபிடிக்கவே ஒரு வாரம் ஆகிவிடும்.*

*நாம் கார் நிறுத்தும் எந்தத்தளத்திலிருந்தும் அப்படியே நேராக அந்த மிகப்பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்க்குள் நுழைந்து விடவும், அங்கிருந்து நாம் விரும்பும் தளத்திற்கு லிஃப்ட்டில் சுலபமாகச் செல்ல வசதிகளும், நகரும் படிக்கட்டுகளுமான அனைத்து வசதிகளும் செய்து கொடுத்திருகிறார்கள்” என்றான்.*

*அங்கு போய்ப்பார்த்தபின்புதான் அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் முழுவதுமாக பொறுமையாக ஒவ்வொரு பிரிவாக சுற்றி வரவே, சுத்தமாக ஒருமாதம் ஆனாலும் ஆகலாம் என்பது எனக்குத் தெரிய வந்தது.*

*உலகப்பிரசித்தி பெற்ற எல்லா நிறுவனங்களும் அங்கே ஏராளமான ஸ்டால்கள் அமைத்து, அனைத்துப்பொருட்களும் அங்கு கிடைத்தும், அதனால் எனக்கு என்ன பயன் என்று தான் எனக்கு நினைக்கத் தோன்றியது.*

*எனக்கு முக்கியமாகத் தேவைப்படும் மூக்குப்பொடி அங்கு கிடைக்குமா என்பது எனது சந்தேகம். அதுபற்றிய விபரம் எனக்குத் தெரியவில்லை. நான் பொடிபோடுவதே என் மகனுக்குப்பிடிக்காது. அதனால் அவன் கண்ணெதிரில் நேருக்குநேர் நான் பொடி போடுவதும் கிடையாது. இது இவ்வாறு இருக்க, என் மகனிடம் போய், இந்த உலகச்சந்தையில் மூக்குப்பொடி கிடைக்குமா என்று நான் கேட்டால், என் ரசனை இவ்வளவு கேவலமானதா என்பது போல, அவன் ஒருவேளை, என்மேல் கோபப்பட்டாலும் படுவான். அதனால் அவனிடம் இதுபற்றி ஏதும் கேட்காமல் வாயையும், முக்கியமாக மூக்கையும் பொத்திக்கொண்டு சுற்றி வரலானேன்.*

*அங்குள்ள வேறு யாரிடமாவது கேட்டால் அவர்களால் நான் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம். அல்லது லாகிரி வஸ்துவொன்றை உபயோகிக்கத்துடிப்பதாக, ஏதாவது தவறாக நினைத்து என்னைக் கைது செய்யவும் முயற்சிக்கலாம்.*

*இதுபோல ஏதும் ரிஸ்க் எடுக்க விரும்பாதவனாக, உலகச்சந்தையை உற்று நோக்குவது போல, ஒரு மணி நேரம் ஏதோ ஒருசில கடைகளை மட்டும் பார்த்துவிட்டு, சூடான கார்ன் (நம்மூர் சோளக்கருதை, நல்லா வேகவைத்து, உப்பு, எலுமிச்சை, மிளகுத்தூள் முதலியன தூவியது) ஒரு பேப்பர் டம்ளர் நிறைய வாங்கி சாப்பிட்டுவிட்டு அங்குள்ள பெஞ்ச் ஒன்றில் அமர்ந்து கொண்டேன்.*

*அதற்குள் என் மகனும், மருமகளும் ஏகப்பட்ட மளிகை சாமான்கள், காய்கறிகள், எண்ணெய் டின்கள், பால், தயிர், ஜூஸ் வகைகள், தீனி வகையறாக்கள் என்று வீட்டுக்குத்தேவையான அனைத்துப் பொருட்களையும் அள்ளி அள்ளி ஆங்காங்கே தயாராக இருக்கும் தள்ளுவண்டி ஒன்றை தரதரவென்று இழுத்து, பொருட்களை அந்த வண்டி நிறைய ரொப்பி, பில் போடும் இடத்திற்கு வண்டியை இழுத்து வந்து, கிரெடிட் கார்டை நீட்டினர்.*

*ஐந்தே நிமிடங்களில் ஒவ்வொரு சாமான்களையும், அப்படி அப்படியே ஒரு மிஷினில் தீபாராதனை போலக் காட்டியவுடன், அது கடகடவென்று பில் போட்டுக்கக்கி விட்டது. பிறகு கிரெடிட் கார்டைப் பெற்றுகொண்டு, தள்ளுவண்டியுடன் லிஃப்டில் ஏறி, எங்கள் கார் நிறுத்தப்பட்டிருந்த நாலாவது தளத்திற்கு சமமான பகுதியில், லிஃப்டிலிருந்து வெளியே வந்து, எங்கள் கார் வரை அந்த தள்ளு வண்டியைத்தள்ளிக்கொண்டு, பிறகு தள்ளுவண்டியிலிருந்த அத்தனைப்பொருட்களையும், கார் டிக்கியில் அடைத்துக்கொண்டு, தள்ளுவண்டியை அங்கேயே ஓரம்கட்டி விட்டு, எங்கள் வீடு நோக்கித் திரும்பலானோம்.*

*“எப்படிப்பா இருந்தது இந்த சிட்டி சென்டர் ஷாப்பிங் ஏரியா?” என்றான் என் மகன்.*

*“துபாய்னா, துபாய்தான்; இதுபோல என் வாழ்நாளில் எங்கேயுமே பார்த்தது கிடையாது” என்றேன் நான். ’பொடிகூட விற்கப்படாத பொடலங்காய் ஷாப்பிங் ஏரியா’ என்று என் மனதுக்குள் முணுமுணுத்தவாறே.*

*என் கைவசம் வைத்திருந்த நம் நாட்டுப்பொடியின் காரம், மணம், குணம் குறையும் வரை ஒரு 40 நாட்கள் மட்டும் துபாயில் எழுச்சியுடன் தங்கிவிட்டு, இதுபோல தினமும், ஊரைச்சுற்றிப் பார்த்துவிட்டு ஒருவழியாக ஊருக்கு வந்து சேர்ந்தேன்.*

*வரும் போது ஞாபகமாக ஒரு பெளச் பொடியை மட்டும், அண்டர்வேர் பையில் அடக்கமாக வைத்துக்கொண்டு, கைப்பைக்குள் (Hand Luggage) தனியே கொஞ்சமாக ஒரு விபூதி குங்குமப்பிரஸாதம் போல மடித்துப் போட்டுக்கொண்டு விமானம் ஏறிவிட்டேன். ஊருக்கு வந்ததும் முதல் வேலையாக ஓடினேன் நேராக நம்மூர் பொடிக்கடைக்கு - புதுப்பொடி வாங்க” என்று தன் பயணக்கட்டுரையை புட்டுப்புட்டு புரியும் படியாக எடுத்துரைத்து அசத்தி விட்டார், வ.வ.ஸ்ரீ. அவர்கள்.*

*லஞ்ச் முடிந்ததும் தனக்கு ஏதோ முக்கியமான கட்சிப்பணிகள் இருப்பதாகவும், அதனால் மத்யானம் என்னைத் தேடாதே என்றும் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார்.*

*இனியும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரே ஒரு முக்கியமான விஷயம், இந்தக் கட்சிப்பணிகள் என்று அடிக்கடி இவர் எஸ்கேப் ஆவது பற்றி மட்டுமே*

*என்பதால், அதைப்பற்றிய என் பேட்டியை நாளைக்கே அவர் நம்மிடம் சிக்கும்போது ஞாபகமாகக் கேட்டுவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.*
*தொடரும்*

*[ 8 ]*

*அடுத்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து வ.வ.ஸ்ரீ. அவர்கள் ஆபீஸுக்கே வரவில்லை. எனக்கும் எந்த வேலைகளுமே ஓடவில்லை. ஒரு வயதான மனிதருடன் மிகக் குறைந்த காலமே ஒரு அலுவலகத்தில் பழகியும், எனக்கு அவர் மீது இப்படி ஒரு அன்பும், ஆர்வமும் பிறந்துள்ளது எனக்கே மிகவும் ஆச்சர்யமாகப்போய் விட்டது.*

*ஏதோ அவர் மீது ஒரு தனி பாசம். தனி பிரியம் எனக்கு. வயதானவர் மற்றும் மிகவும் அனுபவஸ்தர் என்பதாலோ, மிகவும் சுவாரஸ்யமாகப் பேசுபவர் என்பதாலோ, நகைச்சுவையாகப் பேசி மகிழ்விப்பவர் என்பதாலோ என்று சரியாகப் புரியாவிட்டாலும், ஏதோ ஒரு ஈடுபாடு அவருடன் போன ஜன்மத்திலிருந்தே ஏற்பட்டு இப்போது தொடர்கிறதோ என்னவோ.*
*இன்று சாயங்காலமாக ஆபீஸ் விட்டதும் அவரை அவர் வீட்டில் போய் சந்தித்து வரலாமா என்று நினைத்தேன். என் கை என்னையறியாமல் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசச்செய்தது. மாலை ஆறு மணிக்கு காந்தி பார்க் என்ற இடத்திற்கு வரச்சொல்லி சொல்லிவிட்டார்.*

*நான் அவர் சொன்ன பூங்காவிற்கு 5.55 க்கே ஆஜர் ஆகிவிட்டேன். மிகுந்த பதட்டத்துடன் சற்று நேரத்திற்கெல்லாம் வ.வ.ஸ்ரீ. அவர்களும் வந்து சேர்ந்து விட்டார்.*

*“என்ன சார், ஆபீஸ் பக்கமே காணோம் ?” என்றேன்.*

*”நான் இந்தத்தமிழ்நாட்டிலுள்ள பெரிய பெரிய கட்சிகளுக்காக எவ்வளவு பாடுபட்டு உழைத்திருக்கிறேன் தெரியுமா? நம் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட யூனியன்களில் எவ்வளவு முறை நான் தலைவராக இருந்து கட்சிக்காக எவ்வளவு ஆதரவு திரட்டிக்கொடுத்திருக்கிறேன் தெரியுமா? அந்த நன்றி விஸ்வாசத்தை மறந்துட்டாங்களே எல்லாப் பயல்களும்?*

*இந்த எலெக்ஷனுக்கு முன்னாலேயே ஆபீஸிலிருந்து பணிஓய்வு பெறுவதும் நல்லது தான், இந்த தடவை வரும் எலெக்ஷனிலேயாவது நமக்கு எவனாவது ஒருத்தன் எம்.எல்.ஏ. சீட்டுக்கு டிக்கெட் தந்துடுவான்னு நினைச்சேன்; ஆனாக்க எல்லாப்பயல்களும் என்னிடமே பேரம் பேசறானுங்களே! நான் கத்துக்கொடுத்த பாடத்தை என்னிடமே திருப்பறாங்களே! ” என்று ஏதேதோ காரசாரமாக ஆரம்பித்தார், வ.வ.ஸ்ரீ.*

*“அடடா இது தான் நீங்கள் 3 நாளா ஆபீஸுக்கு வராததற்கு காரணமா! விட்டுத்தள்ளுங்க, சார். இந்தப் பாழாய்ப்போன பாலிடிக்ஸே உங்களுக்கு வேண்டாமே சார்” என்று உசிப்பி விட்டேன் நான்.*

*“விடுவேனா இத்துடன் இந்தப்பயல்களை! தமிழ்நாடு முழுக்க 234 தொகுதிக்ளிலும் நமக்கு ஆளுங்க இருக்கு. தனிக்கட்சி ஆரம்பித்து கூட்டணிக்காவது கூப்பிடுறாங்களான்னு பார்ப்பேன். அதிலும் ஓரங்கட்டப்பட்டால், எல்லா இடங்களிலும் 234 தொகுதிகளிலும் தனித்தே என் கட்சி போட்டியிடும். அப்போது தான் என் கட்சியின் தனித்தன்மையையும், பலத்தையும் நிரூபித்து, அடுத்த எலெக்‌ஷனிலாவது என்னால் ஆட்சியைப்பிடிக்க முடியும்.*

*இன்று நள்ளிரவு பத்திரிக்கையாளர்களுக்கு இது சம்பந்தமாக சிறப்புப் பேட்டி கொடுக்க இருப்பதாகச் சொல்லி, அழைப்புகள் அனுப்பியுள்ளேன். நாளை வரும் செய்திகளைப் பார், நான் யார் என்று உனக்கும் தெரியும்” என்று கர்ஜித்தார் வ.வ.ஸ்ரீ.*

*”இந்த முற்போக்குக்கூட்டணி, பிற்போக்குக்கூட்டணி என்கிறார்களே, சார், அப்படின்னா என்ன சார், கொஞ்சம் எனக்குப்புரியும் படியா சொல்லுங்களேன்” என்றேன்.*

*“முற்போக்காவது, பிற்போக்காவது எல்லாமே ஒரே கொள்ளைக்கூட்டம் தானப்பா. முற்போக்குன்னா: ’ வாந்தி’, பிற்போக்குன்னா: ’பேதி’ன்னு நினைச்சுக்கோ. வாந்தியோ பேதியோ எல்லாமே இன்றைய மண்ணாங்கட்டி அரசியலில், சாக்கடைக்கு அனுப்ப வேண்டியவை தான்” என்றார், வ.வ.ஸ்ரீ., மிகுந்த ஆத்திரத்துடன்.*

*”நீங்கள் ஆரம்பிக்கப் போகும் புதுக்கட்சியின் பெயர் என்ன சார்?” என்றேன், நான்.*

*“மூ.பொ.போ.மு.க”*

*அதாவது,*

*“மூக்குப் பொடி போடுவோர்*

*முன்னேற்றக் கழகம்”*

*என்றார்.*

*”தமிழ்நாட்டில் பெரிசா எவ்வளவு பேர்கள் மூக்குப்பொடி போடப்போகிறார்கள்! அவர்களுக்கு என்ன சார் இப்படி தனியே ஒரு முன்னேற்றக் கழகம்?” என்றேன்.*

*“இங்கு தான் நீ, நம் தமிழ்நாட்டு அரசியலை வழுவட்டைத்தனமாகப் புரிந்து கொள்கிறாய். சென்னை மாகாணமாக இருந்தது யாரால் எப்போது ’தமிழ்நாடு’ என்று மாற்றப்பட்டது என்ற சரித்திரம் உனக்குத் தெரியுமா?” என்றார் ஆத்திரத்துடன் வ.வ.ஸ்ரீ.*

*“சுதந்திரத்திற்குப் பின் பல்லாண்டு ஆட்சி செய்த காங்கிரஸ் போய் கழக ஆட்சியைக் கொண்டு வந்தாரே, நம் பேரறிஞர் அண்ணா! அவர்களால் கொண்டுவரப்பட்டது தான் இந்தத் ’தமிழ்நாடு’ என்ற புதுப்பெயர், அப்படின்னு கேள்விப்பட்டிருக்கிறேன், சார்” என்றேன்.*

*“கரெக்ட்டா சொன்ன தம்பி. இப்போது உள்ளவர்கள் யாருமே அறிஞர் அண்ணாவின் உண்மையான வாரிசு என்று சொல்லிக்கொள்ள முடியாது. அறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சியுடன் மூக்குப்பொடி போடுவார்.*

*நானும் அதே அண்ணன் உபயோகித்த அதே பொடியைப் போடுகிறேன். எனவே அண்ணா அன்று ஆரம்பித்த முன்னேற்றக் கழகத்தின் அசல் வாரிசு, நான் ஒருவன் மட்டுமே. இது ஒரு பாயிண்ட் போதும் எனக்கு, ஆட்சியைப்பிடிக்க" என்று மிகவும் ஆவேசமானார், வ.வ.ஸ்ரீ. அவர்கள்.*

*"தங்கள் கட்சிக்கு தாய்க்குலத்தில் ஆதரவு இருக்காதே, சார்?" என்றேன்.*

*"ஏன் இருக்காது? மது அருந்தும் பெண்கள், புகைபிடிக்கும் பெண்கள், சுருட்டு பிடிக்கும் பெண்கள், வெற்றிலைபாக்குப் புகையிலை போடும் பெண்கள் போலவே பொடி போடும் பெண்கள் நிறைய பேர்கள் உண்டப்பா.*

*ஆனால் அவர்களுக்கே இருக்க வேண்டிய அச்சம், நாணம், மடம், பெயர்ப்பு என்று அந்தக்காலத்தில் சொல்லுவார்களே, அந்த ஒரு வெட்கத்தினால், இந்தப்பொடி போடும் பெண்கள் பற்றி வெளியுலகுக்குத் தெரிய நியாயம் இல்லை. ஆனால் தலைவராகிய எனக்குத் தெரிந்தால் போதாதா! அவர்களின் ஆதரவை அள்ளிப்பெற்றிட முடியுமே, என்னால்!" என்றார்.*

*"இருந்தாலும் சார்......." என்று சற்றே நான் இழுத்தேன்.*

*"பெண்களே! தாய்க்குலமே! உங்கள் ஜாக்கெட்டில் ஒரு பாக்கெட் வையுங்கள். அந்தப் பாக்கெட்டில் பொடியை வையுங்கள். ஈவ் டீஸிங்கா, கடத்தலா, கற்பழிப்பா கவலையே படாதீர்கள். ஜாக்கெட்டில் உள்ள பாக்கெட்டை அவிழ்த்து தூவுங்கள் பொடியை அந்த வில்லன்களில் கண்களை நோக்கி" என்று கூறி மகளிர் அணியை வலுப்படுத்துவோம். மகளிருக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை ஊட்டுவோம்" என்று வீர வசனங்கள் பேச ஆரம்பித்து விட்டார், வ.வ.ஸ்ரீ.*

*"தங்கள் கட்சியின் கொள்கை என்ன? பிரச்சார யுக்திகள் என்ன? விளக்குங்களேன் " என்றேன்.*

*"அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் உபயோகித்த அதே மூக்குப்பொடியை நாங்களும் உபயோகிக்கிறோம்.*

*எனவே நாங்கள் தான் அண்ணா அவர்களின் உண்மைத்தம்பிகள்.*

*எங்கள் "மூ.பொ.போ.மு.க." வே ஒரிஜினல் தாய்க்கழகம் ஆகும் என்று மக்கள் மன்றத்தில் வாதாடுவோம்.*

*தாலிக்குத் தங்கம் வேண்டாம் !*

*தாளிக்க வெங்காயமும் வேண்டாம் !!*

*மூக்குக்குப் பொடி வேண்டும் !*

*முன்னேற வழி வேண்டும் !!*

*என்று முழங்கிடுவோம்.*



*எங்கள் கட்சியின் சின்னமே "பொடி டின்" தான்.*

*தற்சமயம் சத்துணவு என்ற பெயரில் ஏதேதோ உணவுகளும், முட்டைகளும் மட்டும் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை கொஞ்சம் பசியாற்றி அவர்களைத் தூங்கச்செய்யுமே தவிர, பாடங்கள் மனதில் பதியவோ, மூளை வளர்ச்சியடையவோ எந்தவிதத்திலும் பயன் படாது.*

*எனவே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மூளைக்கு எழுச்சி கொடுக்கவும், குழந்தைகளின் ஞாபகசக்தியை அதிகரிக்கவும், ஆளுக்கு 5 கிராம் வீதம் தினமும் பொடி தந்து அதை எப்படிப்போடணும் என்று பயிற்சியும் தருவோம். பிறகு அதை படிப்படியாக தினமும் 10 கிராம் வீதம் தருவதற்கும் பாடுபடுவோம்.*

*குழந்தைகளே வருங்கால இந்தியா என்பதால் அவர்களுக்கு ஆரம்பப்பள்ளிப் பருவத்திலேயே எழுச்சி ஏற்படுத்த வேண்டும் என்பதே எங்கள் 'மூ.பொ.போ.மு.க' கட்சியின் அடிப்படைக்கொள்கைகளில் மிக முக்கியமானதொன்று.*

*கொள்கை பரப்புச் செயலாளராக நியமிக்க ஒரு புகழ்பெற்ற சூப்பர் சினிமா நடிகையை தேடி வருகிறேன். படுகுஜாலாக ஒருத்தி மட்டும் கிடைத்து விட்டால் போதும், மற்ற எல்லா பிரச்சனைகளும் ஓவர்.*

*சூரியன் மறைந்தாலும், சுட்டெரிக்கும் அந்த*

*சூரியனை "கை" யே காக்க முயன்றாலும்,*

*இலைகள் உதிர்ந்தாலும், பம்பரமே படுத்தாலும்,*

*கொட்டும் முரசில் கொப்பளமே ஏற்பட்டாலும்,*

*மாம்பழமே புளித்தாலும், எழுச்சியுடன் நின்று,*

*அனைத்து இடங்களிலும் வெற்றி பெறப்போவது*

*எங்கள் அறிஞர் அண்ணா அவர்களின்*

*உண்மையான அரசியல் வாரிசாகிய*

*எங்களின் "பொடி டின்" சின்னமே என*

*எடுத்துரைப்போம்"*

என்றார் பேரெழுச்சியுடன் வ.வ.ஸ்ரீ. அவர்கள்.

இருட்டி விட்டதாலும், வ.வ.ஸ்ரீ. அவர்கள் தன்னை மறந்து இவ்வாறு உரக்க வீராவேச உரை நிகழ்த்துவதாலும், பயந்து போன மக்கள், அந்தப் பூங்காவை விட்டு அவசர அவசரமாக வெளியேற, எனக்கும் அவருடன் அங்கு தனியே இருப்பது நல்லதாகப் படாமல், ஒரு வித அச்சத்தை ஏற்படுத்தியது.

“சார், நீங்கள் எதற்கும் கவலைப்படாதீர்கள். நீங்கள் கொதித்துப்போய் இவ்வாறு உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதைக்கேட்கும் எனக்கு, நீங்களே அடுத்த முதலமைச்சர் என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிந்து விட்டது. மீதி விஷயங்கள் நாளை ஆபீஸில் பேசிக்கொள்ளலாம்” என்றேன்.

இதைக்கேட்ட அவர் என்னைக் கட்டித்தழுவிக் கொண்டு, கை குலுக்கினார். அப்போது, அவர் முகத்தில், இதுவரை நான் என்றுமே பார்க்காத ஓர் பேரெழுச்சியுடன் கூடிய குதூகலத்தை, என்னால் காண முடிந்தது.

மீண்டும் ஒருமுறை என்னைக்கட்டி அணைத்துத் தழுவிக்கொண்டு விட்டு, ”இந்த நான் ஆரம்பிக்க இருக்கும் புதிய கட்சிக்கு நீயும் ஆதரவாக இருந்து எனக்கு பல உதவிகள் செய்யும்படியாக இருக்குமப்பா, நான் அதைப்பற்றி உனக்கு பிறகு விபரமாகச் சொல்கிறேன்”, என்று சொல்லி ஒருவழியாகப் புறப்பட்டு சென்று விட்டார்.

நல்லவேளையாக இவர் என்னைக் கட்டிப்பிடித்ததை யாரும் அங்கே பார்த்ததாகத் தெரியவில்லை. நானும் நடுங்கியவாறே வீடு போய்ச் சேர்ந்தேன்.

நான் வீடு போய்ச்சேர்ந்தும், வ.வ.ஸ்ரீ. அவர்கள் நல்லபடியாக வீடு போய்ச்சேர்ந்தாரா என்று எனக்கு ஏற்பட்ட விசாரத்தில், அவருக்கு மீண்டும் போன் செய்தேன்.

நெடு நேரமாக ரிங் போயும், போன் எடுக்கப்படவில்லை. பிறகு மீண்டும் போன் செய்தபோது ஒரு பெண் குரல் கேட்டது எனக்கு.

ஆஹா! ’கொள்கை பரப்புச் செயலாளர்’ ஆக பதவி ஏற்க அதற்குள் ’குஜாலான’எந்த நடிகை மாட்டினாள் என்று நான் ஆச்சர்யப்பட்டேன்.

பிறகு தான் தெரிந்தது அது அவரின் மனைவியின் குரல் என்று. நான் என்னை அறிமுகம் செய்துகொண்டுவிட்டு, ”மிஸ்டர் ஸ்ரீனிவாசன் சாருடன் பேச வேண்டும்” என்றேன்.

வ.வ.ஸ்ரீ. அவர்களை ஏதோவொரு மனநோய் மருத்துவமனையில் அட்மிட் செய்திருப்பதாகச் சொன்னார்கள், அவரின் மனைவி.

நான் பதறிப்போனேன். ”ஏன் என்னாச்சுங்க மேடம்? 2 மணி நேரங்கள் முன்புகூட என்னிடம் நல்லாத்தானே பேசிக்கொண்டிருந்தார்!” என்றேன்.

பிறகு வ.வ.ஸ்ரீ யின் மனைவியே எனக்கு ஆறுதல் சொன்னார்கள். பயப்பட வேண்டாம் என்றும் மனதை தைர்யப்படுத்திக்கவும் சொன்னார்கள்.

அதாவது இந்த இடைத்தேர்தல், பொதுத்தேர்தல் பற்றிய ஏதாவது செய்திகள் வந்தாலே வ.வ.ஸ்ரீ அவர்களுக்கு இதுபோல ஒரு அட்டாக் வருவதுண்டாம். இதுவரை பலமுறை வந்துள்ளதாம். பயப்பட ஒன்றும் இல்லையாம். முற்றிய நிலையில் ஒரு நாலு நாள் டிரீட்மெண்ட் கொடுத்து படுக்க வைத்தால் போதுமாம். பிறகு பழையபடி, அடுத்த எலெக்‌ஷன் வரை கவலைப்பட வேண்டியதில்லையாம்.

இன்று தான் அந்த முற்றிய நிலையை அந்த அம்மாவால் கண்டு பிடிக்க முடிந்ததாம். இன்னும் நாலு நாட்களில் வழக்கம் போல ஆபீஸுக்கு வந்து விடுவாராம். தயவுசெய்து யாரும் அரசியல் பற்றி மட்டும் அவரிடம் பேசாமல் பார்த்துக்கொள்ளுங்கள், என்றாள் அந்த அம்மா, எந்தவித ஒரு டென்ஷனுமே இல்லாமல்.

இத்தகைய ஒரு அட்டாக் வந்துள்ள ஆசாமியுடன், தனியாக அந்தப் பார்க்கில், இருட்டும் வரை இருந்துள்ளோமே என்பதை நினைத்துப்பார்த்த எனக்குத் தான் இப்போது டென்ஷனாகிப்போனது.

"இந்தப்பாழாய்ப்போன அரசியல் தேர்தல்கள் அடிக்கடி வந்து தொலைப்பதனால், இதுபோல எவ்வளவு பேர்கள் பாதிப்புக்கு ஆளாகின்றனரோ?; எவ்வளவு பேர்களுக்கு மூளை குழம்புகிறதோ?; எவ்வளவு மக்களுக்கு மூளைச்சலவை செய்யப்படுகின்றதோ?" என நினைத்து, நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

பாவம் அந்த நல்ல மனிதர், வ.வ.ஸ்ரீ., அவர்கள் சீக்கரமாக குணமாகி நல்லபடியாகத் திரும்ப வரவேண்டும்; நல்லபல செய்திகள் அவர் வாயால் தொடர்ந்து நான் கேட்க வேண்டும், என கடவுளிடம் நான் மனப்பூர்வமாக வேண்டிக்கொண்டேன்.

தொடரும்

[9]

நான் செய்த அந்தப்பிரார்த்தனை வீண் போகவில்லை. அடுத்த ஒரு வாரத்தில் வ.வ.ஸ்ரீ. அவர்கள், வழக்கம்போல எழுச்சியுடன் ஆபீஸுக்கு வந்து விட்டார்.

அவரிடம் இந்த எலெக்‌ஷன் பற்றிய செய்தியினால் சமீபத்தில் அவருக்கு ஏற்பட்டதாக அவர் மனைவி சொன்ன அட்டாக்கின் அறிகுறிகள் எதுவும் தென்படவே இல்லை.

அந்தளவுக்கு நல்லதொரு ஷாக் ட்ரீட்மெண்ட், கொடுத்திருப்பார்கள் போலிருக்கு!.

அந்த நல்லதொரு நகைச்சுவையாளரை காப்பாற்றிய, அந்த மனநோய் மருத்துவருக்கும், கடவுளுக்கும் நன்றி கூறினேன், நான்.

*நாங்கள் எங்கள் அலுவலகத்தில் ஆவலுடன் எதிர்பார்த்த வ.வ.ஸ்ரீ. அவர்களின் பணிஓய்வு பெறும் நாளும் வந்து விட்டது. இன்று தான் அவர் பணிஓய்வு பெறப்போகிறார்.*

*அந்தக் காலைப்பொழுதில் வ.வ.ஸ்ரீ. யின் டேபிளின் மேல், இரண்டு டஜன் எவர்சில்வர் பொடி டப்பாக்கள், புத்தம் புதியதாக பளபளவென்று, அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் ஒண்ணரை அங்குல உயரமும், முக்கால் அங்குல விட்டமும் கொண்டதாக, திருகு மூடி போட்டதாக இருந்தன. ஒவ்வொன்றிலும் ரூ.48.50 என்று விலை போடப்பட்டிருந்தன.*

*அன்று பணிஓய்வு பெறும் அவரை சந்திக்க நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பல்வேறு துறைகளிலிருந்தும்,தொழிற்சங்கங்களிலிருந்தும் வந்து அவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிழிகள், நினைவுப்பொருட்கள் என்று கொடுத்தபடி இருந்தனர். மாலைகள் மலை போலக்குவியத் தொடங்கின.*

*பொடி போடும் பழக்கமுள்ள தன் நெருங்கிய நண்பர்கள் அனைவருக்கும் ஒரு புதுப் பொடி டின் வீதம், தன் நினைவுப்பரிசாக அளித்து வந்தார் வ.வ.ஸ்ரீ. அந்த டின்கள் உள்ளே முழுவதுமாக மூக்குப்பொடி அடைக்கப்பட்டிருந்தது கண்டு அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டு, ஆனந்தக்கண்ணீருடன் வ.வ.ஸ்ரீ. யுடன் கைகுலுக்கி, கட்டிப்பிடித்து போட்டோ எடுத்துக்கொண்டு மகிழ்ந்தனர்.*

*ஆபீஸ் விட்டதும் அவரை வீடு வரை கொண்டு சேர்க்க நண்பர்கள் பலரும் பல கார்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.ஒரு 25 கார்களுக்கு மேல் வரிசையாக பவனி வந்து ஒன்றன்பின் ஒன்றாக நின்றன.*



*இவற்றையெல்லாம் வாழ்க்கையில் முதன் முதலாகப்பார்த்த எனக்கும் உற்சாகம் ஏற்பட்டது. அவர் பயணம் செய்யப்போகும் விசேஷமான காரில் அவருடைய மாலைகள், பரிசுப் பொருட்கள் முதலியவற்றுடன் நானும் தொத்திக்கொண்டேன்.*

*எங்களின் மிகப்பெரிய நிறுவனத்தின் ஷிப்ட் முடிந்ததற்கான சங்கு அப்போது ஒலிக்க ஆரம்பித்தது. கழுத்தில் ஆளுயர மாலையுடன் வ.வ.ஸ்ரீ. அவர்கள் காரில் ஏறி அமர்ந்து விட்டார். கார் கதவு மட்டும் இன்னும் மூடப்படவில்லை. பத்தாயிரம் வாலா பட்டாஸுச்சரம் ஒன்று கொளுத்தப்பட்டது. வெடிகள் வெடித்து ஒருவழியாக ஓய்ந்தன. வ.வ.ஸ்ரீ அமர்ந்திருந்த காரைச்சுற்றி ஒரே கூட்டம். பிரியாவிடை கொடுக்க அலுவலகத் தோழர்களும், தோழிகளுமாக கூடியிருந்தனர்.*

வ.வ.ஸ்ரீ. தன் பொடி டின்னை எடுத்து இடதுகை விரல்நுனியில் வைத்து, வலது கை ஆட்காட்டிவிரலால் இரண்டு தட்டுதட்டிவிட்டு, பிறகு மெதுவாக அதைத் திறந்து, காரின் ஒரு ஓர இருக்கையில் அமர்ந்தவாறே வெளிப்பக்கமாக நீட்டினார்.

பொடி போட்டுப்பழக்கம் உள்ளவர்கள், பழக்கம் இல்லாதவர்கள், ஆண்கள், பெண்கள் என்ற பாகுபாடு ஏதுமின்றி அனைவரும் அதில் தங்கள் விரல்களை இட்டு, ஆளுக்கு ஒரு சிட்டிகை வீதம் பொடியை எடுத்தனர்.

இதுவரை நமக்கு நம் அலுவலக வாழ்க்கையில் அலுப்புத்தட்டாமல் ஒருவித கலகலப்பை ஏற்படுத்தி வந்த வ.வ.ஸ்ரீ. என்ற பெரியவர் கொடுத்த பிரஸாதமாகவே அதை நினைத்து தங்கள் மூக்கினில் வைத்து, சர்ரென்ற ஒலியுடன், ஒரே நேரத்தில், ஒற்றுமையாகவும் ஒரே இழுப்பாகவும் இழுத்தனர்.

அவர்களின் ஒட்டுமொத்த தும்மல் சப்தம் விண்ணை முட்ட, அதுவே நல்ல சகுனம் என்று நினைத்த வ.வ.ஸ்ரீ. கார் கதவையும், தன் கையிலிருந்த பொடி டின்னையும் மூடியவாறு எழுச்சியுடன் புறப்படச் சொன்னார்.
25 கார்களும் வ.வ.ஸ்ரீ. யின் வீடு நோக்கி, மெதுவாக பயணிக்க ஆரம்பித்தன. அந்தக் காட்சியைக் காண மிகவும் அருமையாகவே இருந்தது, எனக்கு.

வ.வ.ஸ்ரீ. அவர்கள், அவர் அருகிலேயே அமர்ந்திருந்த என்னை அன்புடன் ஒரு பார்வை பார்த்து புன்னகை புரிந்து விட்டு, ஏதோ ஒரு அன்புப்பரவசத்தால் என்னை அப்படியே கட்டிப்பிடித்துக் கொண்டார்.

எனக்கு உடனே அந்தப் பூங்கா ஞாபகம் வந்து விட்டது.



"வெற்றி, வெற்றி, வெற்றி ........ நானே

முதலமைச்சர், நீயே நிதியமைச்சர்.

கோட்டையை நோக்கி நாம் ஆட்சியமைக்கச்

சென்று கொண்டிருக்கிறோம்" என்று

மூ.பொ.போ.மு.க, தலைவர் வ.வ.ஸ்ரீ. அவர்கள்

*என்னிடம் சொல்லுவது போன்ற பிரமை*

*ஏற்பட்டது எனக்குள்.*



*oooooOoooooo*

வை கோபாலகிருஷ்ணன் :

**(Retired A.O/CASH BHEL)**

**2-A SIVASHAKTHI TOWERS**

**5, NORTH ANDAR STREET**

**TIRUCHI 620 002**

**94437 08138 with WA**

**94433 92439**


**0431-2708138 LL**

**வை. கோபாலகிருஷ்ணன் / V. Gopalakrishnan /கோபு / GOPU**

வலைப்பூ : **https://gopu1949.blogspot.com**

**e-mail : valambal@gmail.com**

**Mobile with WA 9443708138**



Back to index ^

# மன்னிப்பு (சிறப்புச் சிறுகதை) :: ரிஷபன்

கை தவறி கிளை மீது பட்டு முறிந்து விட்டது. தொங்கியதைப் பார்க்கச் சகிக்கவில்லை. பழைய நிலைமைக்குக் கொண்டு வைத்தாலும் ஒட்டவில்லை.

அம்மாவிடம் ஓடி வந்து அழுத சின்ன வயசு ஞாபகம்..

நீ வேணும்னுட்டு பண்ணலில்ல' அம்மா நிதானமாய் கேட்டார்.

இல்லம்மா..

'சரி.. போ.. பேசு.. மன்னிச்சுக்க சொல்லு' பட்டென்று தீர்வு சொல்லி விட்டார்.

அந்த நிமிடம் எனக்கு அது வேடிக்கையாய் இருந்தது. செடியிடமா, பேசுவதா. ஆனால் அம்மா மீதான நம்பிக்கை என்னைப் பேச வைத்தது. கொஞ்ச நாட்களில் ஒடிந்த இடத்தில் துளிர்த்திருந்தது. அதையும் அம்மாவிடம் ஓடி வந்து சொன்னேன்.

'மறந்துராதே. எப்பவும் ஞாபகம் வச்சுக்கோ. செடிக்கு மட்டும் இல்ல. மனுசங்களுக்கும் தான்'

இந்த நிமிஷம் லதாவைப் பார்க்கும்போது.. அவள் பின்னல் காற்றில் ஆடியது.. ஒடிந்த மரக் கிளை.. என் பால்யம்..மன்னிப்பு .. எல்லாவற்றையும் ஞாபகப்படுத்தியது.

கல்யாணமாகி..ஆறேழு மாசத்தில் இப்படி ஒரு சண்டையா.. இத்தனைக்கும் ஒரே ஒரு வார்த்தை. 'அறிவில்லியா' ஒரே அம்பு. யுத்தம் முடிந்து விட்டது. இரு தரப்புக்கும் தோல்வி.

லதா எதுவும் பதில் பேசாமல் போய் விட்டாள். பின்னாலேயே போவதா அல்லது கெத்தாய் நிற்பதா, யோசனையில் நின்றது கூடுதல் தப்பாகி விட்டது.

காபி ப்ளாஸ்க்கில் இருந்தது. பக்கத்திலேயே கப். இரவு உணவு மேஜையில் இருந்தது. லதா சாப்பிட்டு முடித்திருந்தாள். இன்னொரு அறையில் விளக்கு அணைத்து படுக்கை போட்டுக் கொண்டு விட்டாள்.

சீண்டிக் கொண்டே சாப்பிட்டு பழக்கம் இத்தனை நாட்களாய்.

'பொரியல்ல உப்பு போடலியா.. டேஸ்ட்டாவே இல்ல'

அவள் தட்டிலிருந்து எடுத்து சாப்பிட்டு, 'இல்லியே. சரியா இருக்கே' என்று அழகாய் விழிப்பாள்.

'அப்படியா. எங்கே கொடு'

அப்போது தான் என் டிரிக் அவளுக்குப் புரியும். இடது கையால் செல்லமாய் தட்டுவாள்.

சாலையில் நடக்கும்போது அவள் ஓரமாய் வருவது போல் பார்த்துக் கொள்வேன். ஃப்ரீயா நடக்க விடாமல் என்ன வம்பு என்பாள். எப்படி வண்டி ஓட்டிகிட்டு போறாங்க பார்த்தியா.. இடிச்சுட்டா இது என் கேள்வி.

'ஏன் வச்சு சோறு போட மாட்டிங்களா'

' சாம்பார், ரசம் எல்லாமே போடுவேன். ஊட்டியே விடுவேன். அதுக்காவ அடி பட்டுக்கணுமா என்ன.. '

எவ்வளவு நேரம் கழித்து வந்தாலும் இரவு உணவுக்குப் பின் காலார நடந்து போய் விட்டு வருவது எங்கள் பழக்கம். க்வார்ட்டர்ஸில் குடி இருப்பதால் எங்கள் தொழிற்சாலை ஊழியர்கள் மட்டுமே அவ்வப்போது போவோம். பொதுவாய் அவ்வளவு ட்ராபிக் இருக்காது.




இரு புறமும் மரங்கள் அடர்ந்த சாலை. ஒளிரும் மின் விளக்குகள். தற்செயலாய் கண்ணில் படும் தெரிந்தவர்களின் புன்சிரிப்பு. ஒரு தேவதை கூட வரும் மிதப்பில் என் நடையிலும் ஒரு துள்ளல்.

அதை லதா கவனித்திருக்க மாட்டாள் என்றே நினைத்திருந்தேன்.

இன்னொரு நண்பன் தன் மனைவியுடன் வீட்டுக்கு வந்தபோது சொல்லியே விட்டான்.

'உங்க பெருமை தான் அவனுக்கு. புகழ்ந்து கிட்டே இருப்பான்'

அவன் மனைவியும் கிண்டல் செய்தாள்.

'அப்படியாச்சும் கத்துக்குங்க'

அவர்கள் போனதும் சொன்னேன்.

'பார்த்தியா. உன் மேல் எவ்ளோ பிரியம்னு'

'அதான் தெரியுமே'

' வாக்கிங் போகும்போதே துள்ளிகிட்டு நடப்பீங்களே'

தங்கள் ப்ரியமானவனைக் கவனத்திலேயே வைத்திருப்பதில் வாழ்க்கையில் பெண்கள் கொஞ்சம் கூடுதல் மார்க் வாங்கி விடுகிறார்கள்.

அவள் இருந்த அறையின் கதவைக் கொஞ்சமாகத் திற்ந்து பார்த்தேன்.
ஒருக்களித்துப் படுத்திருந்தாள். உறங்கிவிட்டாளா என்ன?

அதெப்படி இப்படி சண்டை போட்டபின் தூக்கம் வரும்?
நான் கதவு திறப்பதைக் கண்டுபிடித்துவிட்டாள் போல. என் அசைவுகள் அத்தனையும் அத்துப்படி அவளுக்கு. தூங்குவதுபோலப் பாசாங்கு செய்கிறாள்.

வழக்கமாகத் தூங்கும்போது அவளைப் பார்ப்பது எனக்குப் பிடிக்கும். விழிகள் மூடியிருந்தாலும் முகம் மலர்ந்திருக்கும்.

இப்போது வார்த்தைகளால் அடிபட்டு வாடியிருந்தது.

இரவு விளக்கில் ஒளிரும் முகத்தில் அமைதிக்கு நடுவில் லேசான கோபமும் கொஞ்சம் வருத்தமும்.

அதிகாலை ஐந்துமணிக்கே எழுந்துவிடுவது என் பழக்கம்.

அம்மா உறங்கவிடமாட்டாள். விடிகாலம்பற தூங்கறவனுக்கு ஒரு நாளும் விடியாது என்று சொல்லி எழுப்பிவிட்டுவிடுவாள்.

லதா ஆறு மணிவாக்கில்தான் எழுந்திருப்பாள். குட் மார்னிங் கண் விழிக்கும்போதே நெற்றியில் பதிக்கும் முதல் முத்தத்தில் முகம் சிவக்கும்.

காலைலயே ஆரம்பிக்காதீங்க. இவ்ளோ சீக்ரம் எழுந்து என்ன பண்றீங்க..

உன்னைப் பாத்துட்டிருந்தேன்.

ம்ம்க்கும்.. தூங்கறதை என்ன பார்வை வேண்டிருக்கு..

தேவதைகளுக்கெல்லாம் பூமில நிக்க முடியாதாம். எல்லாம் நீ தூங்கும்போது வந்து உன் முகத்தில் உக்காந்துக்கறது. அதைத்தான் பாக்கறேன்.

உங்களுக்கு இதே வேலை.. திமிறிக்கொண்டு வெட்கத்தில் சிரித்துக்கொண்டே எழுந்துபோவாள்.

ஒரு டிகாஷன் போட்டு வெச்சிருந்தா இந்நேரம் காஃபி சட்னு ஆகியிருக்கும்ல.
ஒரு நாள் சொன்னாள்.

அதுக்கென்ன போட்டாப் போச்சு..

மறுநாள் டிகாஷன் போடுகிறேன் பேர்வழி என்று எடுக்கையில் கிடுக்கி வழுக்கி மேடையில் வெந்நீர் கொட்டிவிட்டது.

சத்தம் கேட்டு எழுந்து வந்தவள் நான் சும்மா சொன்னேன். நீங்க ஒன்னும் பண்ணவேண்டாம். நானே டிகாஷன் போட்டுக்கறேன். என்று கையைப் பிடித்துக்கொண்டாள்.

வெந்நீர் கையில் படவில்லை என்றாலும் சற்று நேரம் அவளது கைச்சூட்டில் மனம் லயிக்க, முகத்தைப் பார்த்துவிட்டு,

அட.. சும்மா போங்க. வேலையிருக்கு. கையை உதறிவிட்டுச் சிரித்தாள்.

ஆறேழு மாதங்களாக சேர்ந்தே சாப்பிட்டுப் பழகிவிட்டது. தனியாக எடுத்துப் போட்டு சாப்பிட என்னவோபோல் இருந்தது.

ஹாட்பேக்கைத் திறந்து பார்த்தேன். கமகமவென்று நெய் மணக்க புலவ்.

எனக்குப் பிடிக்கும் என்று பார்த்து பார்த்துச் செய்திருக்கிறாள்.
ஆசையாகச் சேர்ந்து சாப்பிடக் கொடுத்துவைக்கவில்லை.

தினமும் இரவு சேர்ந்து சாப்பிட உட்காருவோமே தவிர, அவள் தட்டில் பேருக்கு கொஞ்சம் போட்டுக்கொண்டு கொறித்துக்கொண்டிருப்பாள்.

சாப்பிடுபவள் போல் பாவலா பண்ணிக்கொண்டு நான் சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டிருப்பாள்.

நான்தான் டெஸ்டிங் எலியா.. இன்னிக்கு நீ சாப்டப்றம்தான் சாப்பிடப்போறேன். ஒரு நாள் வம்பு செய்தேன்.

அதெல்லாம் இல்ல. நாம சமைச்சதை மத்தவங்க ரசிச்சு சாப்ட்டா அது ஒரு சந்தோஷம். அதைப் பாக்கறேன். அவ்ளோதான்.

ஒரு கரண்டி எடுத்து தட்டில் போட்டுக்கொண்டு விட்டேன்.
புலவ்வில் நெய்யைவிட லதாவின் மணம் அதிகமாக வீசிற்று.

ம்ஹூம்.. மனசில்லை.
தொண்டை அறுத்தது. உள்ளே இறங்கவில்லை.
இரண்டாவது வாய்க்கு நன்றாகப் புரையேறிவிட்டது.

தண்ணீர் வைத்துக்கொள்ளவில்லை.

காரம் மூக்கில் ஏறி கண்களில் கண்ணீர் வர தண்ணீரைத் தேடி கையை நீட்ட குருமா கிண்ணத்தின் மேல் வைத்திருந்த கரண்டி கீழே விழுந்தது.

தலைமீது மெதுவாகத் தட்டிக்கொண்டே எதிரே நீட்டப்பட்ட தண்ணீர் டம்ளரைப் பார்த்ததும் உள்ளே உடைந்துபோயிற்று.

நீரைக் குடிக்கும்போது, 'நியாபகம் வெச்சுக்கோ. மன்னிப்பு செடிகளுக்கு மட்டும் இல்லை. மனுஷங்களுக்கும் தான்' அம்மா குரல் காதில் ஒலித்தது.

திரும்பிப் போக எத்தனித்தவளைச் சட்டென்று பாய்ந்து பிடித்தேன்.

மன்னிச்சுக்கோ கண்ணம்மா.. வார்த்தை வரவில்லை.

கள்ளிக்கு என் முகம் புரியுமே.

வழக்கமாகத் திமிறிக்கொண்டு விடுங்க என்று வரும் குரல் இப்போது அவளிடமிருந்து வரவில்லை.
= = = = =

இயற்பெயர் ஆர். ஸ்ரீநிவாசன்
புனைபெயர் ரிஷபன்
**Blog.** rishaban57.blogspot.com
**Mail** rsrinivasanrishaban@gmail.com



Back to index ^

# காதலும் காமமும் - சிறுகதை :: ரேவதி நரசிம்ஹன்

"எங்கள் ப்ளாக்" வியாழன் பதிவில் காதலும் காமமும் பற்றிய அரட்டை சுவாரஸ்யம். எப்பொழுதுமே முடிவு பெறாத பொருள்.

என்றோ கேட்ட கதை. உண்மையில் நடந்த சம்பவம். ஏதோ ஜெயகாந்தன் கதை போல் மனதில் நினைவு வந்தது.
கதைக்குள் போகலாம்.

***

திருமணமாகி மூன்று வருடங்களில் இரண்டு குழந்தைகள் பெற்ற அலுப்பில் கமலா.
எப்பொழுதும் துறு துறுவென்றிருக்கும் அவள் கணவன் ஸ்ரீனிவாசன். வாழ்க்கையில் அலுப்பே சொல்லாத உற்சாகத்துடன் வளைய வருபவன்.

பெற்றோர் பார்த்து முடித்த திருமணம்.
கமலாவை அவளது பதினைந்து வயதிலேயே பார்த்து மனதில் முடிபோட்டுக் கொண்ட போது ஸ்ரீனிவாசனுக்கு வயது 20.

இருவர் வீட்டுக்கும் இடையில் மரியாதை சமம் என்றாலும் அந்தஸ்தில் நிறைய வேறுபாடு. ஆசாரத்திலும் தான். எப்படியோ சம்மதிக்க வைத்து திருமணம் செய்து கொண்டு விட்டான் ஸ்ரீனிவாசன்.

பெரிய குடும்பத்திலிருந்து பிரிந்து இருவரும் பெங்களூருவில் தனிக்குடித்தனம் ஆரம்பித்தனர்.

கமலாவுக்கு ஐம்பது வயது ஆகும் போது பெண்கள், மகன் எல்லோரும் திருமணம் முடித்து வீட்டை விட்டுக் கிளம்பியதும், ஸ்ரீனிவாசனுக்குப்
பால்யம் திரும்பியது போலப் புத்துணர்ச்சியுடன் தன்னுடன் இழைவதைப் பார்த்து கமலாவுக்கு சந்தோஷம் சலிப்பு இரண்டும் இருந்தன,

விட்டுக் கொடுக்க முடியாமல் ஈடு கொடுத்தாள். அவளுக்கும் 50 வயது அதற்கு உண்டான ஹார்மோன் மாற்றங்களில் சங்கடங்களைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது,.

இது போல ஒரு இரவில் மிக உற்சாகமான மன நிலையில் ,மனைவி மேல் இருந்த ஆழ் நம்பிக்கையில் தன் இளவயதில் நடந்ததாக ஒரு நிகழ்ச்சியை விவரிக்க ஆரம்பித்தான்.

கணவனின் சொல்வளத்தில் கமலாவுக்கு அபரிமிதமான காதல். ஆனால் அவன் சொன்ன செய்தி ரசிக்கும்படியாக இல்லை அவளுக்கு.

"உனக்கு நம் பண்ணையில் வேலை பார்த்த செங்கமலம் நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஆமாம் ,இப்பவும் கூட அங்கே இருக்கிறாளே"

“ என்ன அழகா இருப்பா இல்ல? " கணவனை ஆழப் பார்த்தாள் கமலா. அவளது பார்வையைக் கண்டதும் ஸ்ரீனிவாசனுக்கு மனதில் உற்சாகம்.

இவளை எப்படியாவது பொறாமை கொள்ள வைக்க வேண்டும் என்று கதை சொல்வது போல, நீ முதல் பையன் பிறக்க பிறந்தகம் போன போது அவள் எனக்கு நல்ல விளையாட்டு பொம்மையாகக் கிடைத்தாள்" என்றபடி அவளை ஏறிட்டான்.

அவன் எதிர்பார்த்தபடி அங்கே அருவருப்பும்,அசூயையும் ஒன்று சேரக் கிளம்பின.

அவன் நினைத்துப் பார்க்காத வெறுப்பும் அங்கே வந்தது. "இது நிஜமா?"

அவன் வெறிப்பதைப் பார்த்துத் தனக்குள் முடிவு செய்த கமலா, "போதும்" என்று நினைக்கிறேன் என்றபடி அடுத்த அறைக்குச் சென்று விட்டாள்.

சட்டென்று சுதாகரித்துக் கொண்ட ஸ்ரீனிவாசன் விரைந்து அடுத்த அறைக் கதவைத் தட்ட, "காலையில் பார்க்கலாம்" என்ற ஒரே பதில்.

கலவரம் சூழ்ந்தது கணவனிடம். ';என் நாக்கில் இன்று சனி புகுந்ததோ! வேறு ஏதாவது சொல்லி நல்ல பொழுதாகக் கழித்திருக்கலாமே" என்று விடிவதற்காகக் காத்திருந்தான்.

அடுத்த நாள் ஃப்ளாஸ்கில் காபி இருந்தது.
"கோவிலுக்குப் போகிறேன்" என்று எழுதிய காகிதம் மேஜை மேல்.
இடையில் மகள், மகன் தொலைபேசி விசாரிப்புகள்.
"அம்மா குரல் சரியில்லையே"
“உடம்பு நேராகத்தானே இருக்கிறாள்?”
தன் அந்தரங்கத்தை எங்கேயுமே சொல்ல முடியாமல் புழுங்கத்தான் முடிந்தது அவனால்.

கமலாவிடம் தான் சொன்னது கற்பனை என்று விவரிக்க முயற்சித்தும் முடியவில்லை. அவள் விலகியது விலகியதுதான்.

அந்த வீட்டின் கலகலப்பு பேரன் பேத்திகள் வரும்போது மட்டும்.
வெளிப்பார்வைக்கு, சமூகத்தில் நடுவயது கம்பீர தம்பதிகள் போன்ற தோற்றத்தைக் கொடுக்க முடிந்தாலும் மனதில் கொண்ட நோய் கமலாவை உருக்க அவளைக் கண்டு ஸ்ரீனிவாசன் நொந்தார்.

90 களில் எங்கள் வீட்டுக்கு வந்த போது எடுத்த படத்தில் இருவரும் அருமையாக சேர்ந்து உட்கார்ந்திருந்தது இப்போது கனவாகத் தோன்றுகிறது.

சிங்கம் மறைந்த போது இருவரும் தனித் தனியே தொலைபேசினார்கள்.
அவனைவிட நான் பெரியவன் என்று ஸ்ரீனிவாசன் கலங்கினார்.

கமலா "அவரை மாதிரி நேர்மையான கணவனைப் பார்க்க முடியாது" என்று அழுதபடி சொன்னாள்.

மூன்று வருடங்களுக்கு முன் நானும் மகனும் பெங்களூரு சென்ற போது நடமாடும் பொம்மைகளாக இருவரும் இருந்தனர்.

வருடங்கள் தாண்டிய ஒரு மிதமான காதல் மட்டுமே அங்கு காண முடிந்தது. வயது முதிர்ந்ததால் மனமும் கனிந்திருக்கலாம்.

**சிங்கம் சொல்லி இருக்காவிட்டால் எனக்கும் தெரிந்திருக்காது.**
**வீண் பேச்சு வாழ்க்கையைக் கெடுத்தது.**



[Back to index ^]

# வீரம்மை ஆச்சி - சிறுகதை :: கீதா ரெங்கன்

"நல்லார்க்கணும், நல்லாருப்பே..."

குரல் மெதுவாக வருகிறது. கைகள் தூக்கி வாழ்த்துகின்றன. தலை மெதுவாக அசைகிறது....இடுங்கிய கண்கள். பார்வையில் வெறுமை. கருத்த மழை வானின் கார்மேகப் பொதியாய் உருவம். நகர்ந்து கலைகிறது

கிராமத்துச் சத்தங்கள் எதுவும் இல்லை. சட்டென்று விழித்தேன். வியர்த்தது. மூளையில் சேமித்திருப்பதை தாறுமாறாய் ஓட்டி விளையாடுவதே வேலையாகிவிட்டது இந்த மனதிற்கு. அந்தக் குரல் மனதைப் பிராண்டியது. ஆச்சி?

தூக்கம் சரியாகக் கலையவில்லை. கனவினால் ஏதேதோ எண்ணங்கள். அப்பாவின் பெற்றோரை கடைசியாக ஒன்றரை வருடங்களுக்கு முன் அவர்கள் கிராமத்தில் பார்த்தது. அவர்கள் இப்போது வானில் எங்கேனும் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள்.

அம்மாவின் பெற்றோர் கூடவே இருந்தாலும் ஏனோ அப்பாவின் பெற்றோர்கள் அளவிற்கு இவர்களோடு நெருக்கம் இல்லை. கனவில் வந்தது அந்தக் கிராமத்து வீரம்மை ஆச்சியேதான்.

"வீரு" என்று அழைக்கும் சத்தம் மெலிதாகக் கேட்டது. பதில் சொல்வதாக நினைத்து வாயசைத்தாலும் குரல் வரவில்லை.

அம்மாவுக்கும் அவள் பெற்றோருக்கும் ஏனோ வீரு-வீரலக்ஷ்மி என்ற இப்பெயர் பிடிக்கவில்லை. அவர்களுக்கு நான் ஸோனு. அப்பாவின் கிராமத்து இயல்பு வெளிப்படும் போதெல்லாம் வீட்டில் சலசலப்பு ஏற்படுவதுண்டு. அம்மா அப்பாவிற்கு உறவு என்பதால் நடந்த திருமணம். அம்மாவிற்குக் கிராமமே பிடிப்பதில்லை. ஏனோ? அப்பா பிடிவாதமாய் வைத்த பெயர். ஏன் இப்பெயர் என்று அப்பாவிடம் கேட்டும் கையை விரித்து தோள் குலுக்கலைத் தவிர வேறு எதுவும் வந்ததில்லை.

சில கனவுகள் மனதைக் குழப்பும். விடியற்காலை கனவுகள் பலிக்குமாமே. ஓ நோ! நினைத்துப் பார்க்கத் திராணி இல்லை. இக்கனவு பலிக்கக் கூடாது. தலையைச் சிலுப்பிக் கொண்டேன்.

யாரோ ஃபோனில் பேசும் குரல் மெலிதாகக் கேட்டது. பெருநகரத்தில் அடைத்த ஜன்னல் அறைக்குள் விடியற்காலை எழுப்பும் குரல்களுக்குச் சாத்தியமில்லைதான். அந்தக்கிராமத்திலிருந்து வந்த இந்த ஒரு வார காலத்தில் மனதில் ஏதோ ஒன்றை இழப்பதைப் போன்ற உணர்வு. கனவினால் வந்த எண்ணங்களிலிருந்து விடுபட்டு என் காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு ஹாலுக்கு வந்தேன்.

"குட்மார்னிங்க் வீரு! கங்கிராட்ஸ்! உன் ப்ராஜெக்ட் "ஒன் ஆஃப் த சோல்ஸ் ஆஃப் இண்டியா–வில்லேஜ்" செலக்டட். நீ எடுக்கலைனதும் என்னைக் கூப்பிட்டுப் பேசினார் என் ஃப்ரெண்ட் உங்க ப்ரின்சி. உனக்கு நல்ல எதிர்காலமாம்"

ஹியுமானிட்டிஸ்-கிராமப்புற ஆய்வுகளும் மேம்பாடும். மேல்படிப்பு ப்ராஜெக்ட். அக்கிராமத்திற்கு நல்லது நடக்கும் என்ற மகிழ்ச்சி. வாழ்வின் மற்றொரு பக்கத்தையும், நான் அடுத்து எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அறிய உதவிய அனுபவங்கள் தந்த கிராமம்.

அக்கனவிற்கும் இச்செய்திக்கும் தொடர்பிருக்குமோ? சிக்மண்ட் என்ன சொல்கிறார்? பார்க்க வேண்டும். மனதில் ஆழப் பதிந்து போன அந்த முகம். எத்தனை விஷய ஞானம்! வாசிப்பும், கனவுகளும், செயல்களும்!

"என்ன வீரு என்னவோ உனக்குள்ளேயே பேசிட்டிருக்க." அப்பா உற்று நோக்கினார். என் கண்ணில் எதையோ எதிர்பார்த்துத் தேடுவது தெரிந்தது.

“ஓ! பப்பா. உனக்குத்தான் க்ரெடிட்ஸ் ஃபுல்லும்” அப்பாதான், இந்த ப்ராஜெக்ட்டுக்கு இந்தக் கிராமம் பக்காவா பொருந்தும். போய்ப் பாரேன் என்று கை காட்டியவர். ஏன் அந்தக் கிராமம் என்று நான் கேட்கவில்லை. அனுபவம் கற்றுத் தர்ரதை விடச் சிறந்தது வேறு எதுவும் கிடையாது என்பதாகத்தான் இருக்கும் அவர் பதில். அப்பாவின் நண்பர் என் ஃபேவரிட் பிரகாஷ் அங்கிளும், சுதா ஆன்டியும் அங்குதான் சமீபத்தில் செட்டில் ஆகி இருக்கிறார்கள்.

கிராமத்தைப் பற்றி கிடைத்தவரை தேடித் தெரிந்து கொண்டு சென்றேன். மழையில் நனைந்திருந்த பூமியில் சில் காற்றுடன், கரை புரண்டு ஓடும் வாய்க்கால், வயல்கள் இடையிடையே வீடுகள்.



கடந்து ஊருக்குள் நுழைந்த போது வலது பக்கம் உள்ள விவசாயப்பண்ணை மதில் பிளவுகளில் வேப்பமரமும், அரசமரமும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. பெரும்பான்மை வீடுகளில் டிஷ் ஆன்டெனா! கிராமம் வளர்கிறது!

வலதுபக்கம் திரும்பியதும் ஊரின் புராதானப் புகழ்வாய்ந்த கோயில் எதிரில் பெரிய தெப்பக்குளம். எனது ஸ்விம்மிங்க் பூல் நீச்சலை பரீட்சித்துப் பார்க்க தீர்மானித்துக் கொண்டேன். ஊரே அழகாக இருந்தது. நகரத்திற்கும் இந்தச் சிறிய கிராமத்திற்கும்தான் எத்தனை வித்தியாசங்கள்!

“ஹலோ! வீரு! வெல்கம் வெல்கம்! ஏம்மா! உன் ட்ராவல் ப்ளான் சொல்லிருந்தா நான் வந்து கூட்டி வந்திருப்பன்ல. மழை டைம் வேற” கோயிலில் இருந்து வெளி வந்த பிரகாஷ் அங்கிளின் அன்பான சண்டை.

“குட் மார்னிங்க் அங்கிள். நடந்து வந்தாதான் நிறைய பார்க்க, தெரிஞ்சுக்க முடியும். ஐ எஞ்சாய் வாக்கிங்க்.” பரஸ்பர நலம் விசாரிப்புகள்.

“மாமா மாமின்னே கூப்பிடேன். ஆண்டி அங்கிள் வேண்டாம். ஆண்டி.... தமிழ்ல வேற அர்த்தம். அப்புறம் சொல்றேன்”

வீட்டு வாசலில் சுதா மாமி கீரை வாங்கிக் கொண்டிருந்தார். மறக்காமல் மாமி என்றேன். “வாவ் அழகான ரங்கோலி.” என்று வடக்கத்தி வழக்கப்படி மாமியைக் கட்டிக் கொண்டேன்.

“மும்பைப் பெண்ணே! இது தமிழ்நாடு. ரங்கோலி இல்ல. கோலம்.” என்று கேலி செய்து கொண்டே வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். பக்கத்துத் திண்ணைகளிலிருந்து சில தலைகள் எட்டிப் பார்த்தன. நான் ஹாய் என்று முறுவலித்ததும் எல்லா தலைகளும் உள்ளே இழுத்துக் கொண்டன.

“உங்க மகளாம்மா? சாயல் அப்படியே உங்களைப் போலயே” சுதாமாமி சிரித்துவிட்டார். அப்பெண்மணி விழித்தார்.

“மகள்தான் ஜி!.... ஆனாலும் அவங்களைப் போலவே இருக்கேன்னு கதை எல்லாம் விடக் கூடாது”

“யென் மனசுக்குப் பட்டதைச் சொல்லுதேன். அது என்ன ஜி”

“ஜி? மரியாதைக்காக. உங்க பேர் என்ன?”

“குமரி. ஆத்தா ஆத்தான்னு கூப்ட்டு குமரி ஆத்தான்னு ஆயிருச்சு.” என்றார் சுதா மாமி. லவ்லி நேம் என்றேன்.

“எனக்கு வயசு 54 ஆவுது” என்றார் அந்தக் குமரி! நான் குமரி மாமி என்றேன். என்னை ஆச்சரியமாகப் பார்த்தார். குமரியைப் பற்றி புகழ்ச்சான்று வாசித்த மாமி, “வீரு ரி ஃப்ரெஷ் செய்துக்க. கொல்லைப்பக்கம் போய் பாரு. உனக்கு ரொம்பப் பிடிக்கும்” என்றார்.

ஓ மை காட்! இது கிணறா பெரிய தொட்டியா? பக்கத்து வீட்டிற்கும் இந்த வீட்டிற்கும் பொதுவாக சுவற்றின் இடையில் இருந்த கிணற்றில் குவளையால் எடுக்கும் அளவிற்கு நீர் தளும்பிக் கொண்டிருந்தது.

இரு வீட்டிற்கும் பொதுவாகக் கொல்லைப்புறம். அழகான தோட்டம் வியந்து பார்த்தேன். மாமரத்தில் கூடு இருக்க அதிலிருந்து இரு குஞ்சுகளின் கழுத்தும் சிவந்த அலகுகளும் தெரிந்தது.

வீட்டிற்குள் ஓடிச் சென்று கேமராவை எடுத்துக் கொண்டு வந்து புகைப்படம் எடுக்கக் கோணம் பார்த்த பொது தோளில் யாரோ கை வைத்தது போல்.... துணுக்குற்றுத் திரும்பினேன்.

கருத்த தேகத்தில் உச்சியில் வெள்ளை முடிக் கொண்டை. வெள்ளைச் சேலை. வெள்ளை ரவிக்கை. நெற்றி விபூதிப் பட்டை எல்லாம் கலந்து அதீதமாகவே வெள்ளையாகத் தெரிந்தது போல் இருந்தது. புன்முறுவல்....கண்களின் தீர்க்கமான பார்வையில் மனமும் வெள்ளையாக.. கம்பீரத் தோற்றம்.....குஞ்சுகளைப் படம் பிடிக்கக் கூடாது என்று சைகை செய்தார். ஏன் என்று நானும் சைகையிலேயே கேட்டுக் கொண்டிருந்த போது...

“அட! ஆச்சி! நெல்லு புழுக்கற வேலை முடிஞ்சுச்சா? ஆச்சி இது வீரு. எங்க ஃப்ரென்ட் மக. மும்பையிலிருந்து வந்திருக்கா. ப்ராஜெக்ட் விஷயமா. ஆச்சி, குமரி இங்கியே சாப்பிட்டுக்கும். உங்களுக்கும் புட்டும் கடலைக்கறியும் கொடுத்துவிடுறேன். அல்லது இப்படியே எடுத்துட்டுப் போறீங்களா?” கேட்டுக் கொண்டே சுதா மாமி வந்தாள். ஆச்சி புன்சிரிப்பொன்றை உதிர்த்துக் கொண்டே ‘கொடுத்துவிடு’ என்ற சைகையுடன் தலையை ஆட்டிக் கொண்டே சென்றார்.

“வீரம்மை ஆச்சி. கம்மியாத்தான் பேசுவாங்க. காலைல பேச மாட்டாங்க. இப்படிக் குஞ்சு, நாய்க்குட்டி, குழந்தைகளை ஃபோட்டோ எடுத்தா ஆயுசு கம்மியாகிடும்னு எடுக்க விடமாட்டாங்க....”

“ஸ்ட்ரேஞ்ச் லேடி!” என்று தோன்றினாலும் மரியாதை எழுந்தது. பின்னர் ஆச்சியிடம் கேட்டுக் கோள்ளலாம்.

“அருவியா, குளமா, ஆறா, வாய்க்காலா, கிணறா, பாத்ரூமா? எங்க குளிக்கிற?”

“ஊங்கூர்ல தண்ணி நிறைய இருக்குன்னு ரொம்பத்தான் பெருமை!” சிரித்தேன். பக்கத்துல அருவி இருக்குன்னு கூகுள் சொல்லிச்சு. இன்னிக்கு பாத்ரூம்ல, நாளைலருந்து ஒவ்வொண்ணா.”

பெரும்பாலும் வட இந்திய உணவுகளே சாப்பிட்ட எனக்கு புட்டு, கடலைக்கறி சுவையாக இருந்தது. அப்பாவின் கிராமத்திற்குப் போன போதெல்லாம் பாட்டி இப்படித்தான் வித விதமாக ருசியாகச் செய்து தருவார்.

ஆச்சியைப் பற்றிக் கேட்டேன். "பாவம் ஆச்சி. அந்தக் காலத்து எஸ் எஸ் எல் சி. யாக்கும். நிறைய வாசிப்பாங்க. வீட்டுக்குப் போய் பாரு. உனக்கு நிறைய ஆச்சரியம் இருக்கும்."

"சரி அவங்களும் குமரி மாமியும் மட்டும்தானா?"

"நாங்க தெரிஞ்சுக்கிட்டது இதுதான் எஸ் எஸ் எல் சி....கல்யாணம். பொறந்த ஒவ்வொண்ணும் 4, 5 நாள் ல போய்டுச்சு இல்லேனா இறந்து பிறந்துச்சு. 7 வதா உண்டானப்ப ஹஸ்பன்ட் போய்ட்டார். பொறக்கப் போற குழந்தைய கண்ணால கூடப் பார்க்க மாட்டேன். ராசியில்லை. அதுவாச்சும் உயிரோடு இருக்கணும்னு குழந்தை இல்லாத தன் அக்காவை கொண்டு போகச் சொல்லி பிரசவத்துக்கு முன்னமே சொல்லிக் குழந்தை என்ன குழந்தைன்றதக் கூடப் பாக்காம, தொட்டுக் கூடப் பார்க்காமக் கொண்டு போகச் சொல்லிட்டாங்களாம். அக்காவை குழந்தையோட வரக்கூடாதுன்னும், தகவலும் வேண்டாம்ன்னும் வேண்டிக்கிட்டாங்களாம். அந்த அளவுக்கு விரக்தி. குழந்தை மேல அன்பு.

இத்தனைக்கும் ஆச்சி அவங்க இருந்த ஊர்ல பலருக்கும் பிரசவம் பார்த்தவங்களாம். அப்படித்தான் இவங்களைப் போல ஒரு பொண்ணு, ஹஸ்பண்ட் இல்லை. பிரசவம் பார்த்தப்ப குழந்தை பிறந்ததும் அந்தப் பொண்ணு போய்டுச்சு. பாவம் குழந்தைன்னு அதை எடுத்துட்டு இந்த ஊர்ல அவங்க ஹஸ்பண்டுக்கான நிலமும், தோட்டத்தோடு இந்தச் சின்ன வீடும் இருக்க அப்படி இங்க வந்து செட்டில் ஆகி இதோ 80 வயசு கடந்தும் சுறு சுறுப்பா உழைச்சிட்டுருக்காங்க. அந்தக் குழந்தைதான் குமரி. படிக்க வைச்சாங்க. அதுக்குப் படிப்புல ஆர்வமும் இல்லை. கல்யாணம் பண்ணிக்க மாட்டேன் அம்மைய விட்டுப் போகமாட்டேன்னு இருக்குது. ஆச்சிய பத்தி மீதி நீ உன் ப்ராஜெக்ட் விஷயமா போறப்ப தெரிஞ்சுக்குவ." என்று சுதாமாமி சொல்லி முடிக்க எனக்குப் பிரமிப்பாக இருந்தது.

"ஸ்ட்ரேஞ்ச் லேடி என்ன விதமான செண்டிமென்ட்ஸ்? அப்ப அவங்க பெத்த குழந்தை என்னாச்சுன்னு யார் மூலம் கூட தெரியாமப் போச்சா?"

"அப்படித்தான் கேள்விப்பட்டது. இவங்கதான் இங்க வந்துட்டாங்கல்ல. சில மன உணர்வுகள் வெளி உலகுக்கு ஸ்டுப்பிட்டாதான் தெரியும் வீரு. எனக்கும் அப்படித்தானே பிறந்து பிறந்து போச்சு அப்புறம் போதும்னு.....அவங்களை என்னால நல்லாவே புரிஞ்சுக்க முடியுது" மாமியின் கண்ணில் கண்ணீரோ?

"ஓ மாமி வெரி வெரி ஸாரி..ப்ளீஸ். இங்க பாருங்க நான் உங்க பொண்ணுதானே அப்புறம் என்ன? ப்ளீஸ்" என்று மாமியின் கைகளைப் பிடித்துக் கொண்டேன்.

"இட்ஸ் ஓகே வீரு. நீ இந்தத் தலைமுறை. உனக்கு இதெல்லாம் ஸ்டுப்பிட் னு தோணும்தான். தயவுசெய்து அவங்ககிட்ட குழந்தை விஷயம், பழைய விஷயம் பத்தி பேசிடாத. ஓகேவா?"

"கண்டிப்பா மாட்டேன் மாமி". மாமியை அணைத்துக் கொன்டேன். பாவம்.

ப்ராஜெக்ட் வேலையைத் தொடங்கிய போது ஆச்சியைப் பற்றி பல வியப்பான விஷயங்கள் தெரிந்தது. கிராமத்துத் தேவைகளுக்காக அரசுக்குக் கடிதங்கள் பறக்குமாம். ஊரில் நிதி திரட்டி, இளைஞர்களை உழைக்க வைத்துத் தன் நிதியிலும் கிராமத்தின் சில தேவைகளைப் பூர்த்தி செய்வது, குழந்தைகளின் படிப்புக்கு உதவுவது என்று பல.

"வீரு இதுல முக்கால்வாசி புக்ஸ் ஆச்சி கொடுத்தது. அதே போல கவர்ன்மென்ட் ஸ்கூல் லைப்ரரிலயும்." என்று பிரகாஷ் மாமா, பள்ளியையும், கிராமத்துப் பொது நூலகத்தையும் காட்டினார். நூலகத்தில் புத்தகங்களின் நடுவில் சத்தமில்லாமல் ஒரு

காதல் அரங்கேறிக் கொண்டிருந்தது. மாமா என்னைப் பார்த்துச் சிரித்திட நானும் பார்த்தேன் என்ற அர்த்தத்தில் புன்னகையால் பதிலளித்தேன்.

“ஆச்சிக்குத் தெரியுமா இதெல்லாம்?”

“ஆச்சி பொதுவா யார் விஷயத்துலயும் தலையிட மாட்டாங்க. வம்பை நெருங்கவே விடமாட்டாங்க. அவங்களுக்கு மேட்டர் நேரே வந்தா மட்டும்தான் ஹேண்டில் பண்ணுவாங்க. அப்பவும் பேச்சு ரேஷனையும் விடக் குறைவு.”

கிராமத்து வீடு என்ற பொது வீட்டில் பெண்கள் குழு குழுவாக அப்பளம், வற்றல் சில உணவு வகைகள் என்று செய்து கொண்டிருந்தனர். பொடிகள் இடிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. கூடவே ஊர்க்கதைகளும் இடிக்கப்பட்டன.

“ஆச்சியைக் கண்டா எல்லாம் கப்சிப் ஆகிவிடும். கிராமம் கொஞ்சம் உருப்படியா இருக்குனா ஆச்சிதான் காரணம்” என்று மாமா சொன்னார்.

மாமா அவர்களிடம் என்னைப் பற்றி சொல்லி அறிமுகப்படுத்தினார்.

“எங்களுக்கெல்லாம் படிப்பில்லை. விவசாயம் சின்ன துண்டு நிலத்துல. பிள்ளைங்க படிக்க கொள்ள, இப்படி செஞ்சு வித்து வருமானத்துக்காக ஆச்சிதான் ஏற்பாடு செஞ்சு தந்தாங்க. நாங்க தயாரிக்கறது பல கடைகளுக்கும் போகுது. ஓரளவு வருமானமும் பாக்க முடியுது”

“அப்புறம் நம்மூர்லயும், வெளிநாட்டுல விக்கறதுக்கும் அது என்னவோ கம்ப்யூட்டர் வழியா விக்கலாமாமே அதுக்கும் ஏற்பாடு நடக்குது...”

“அட பரவாயில்லையே” என்றதும்

“முன்ன எல்லாம் ஆச்சிக்கு பயங்கர கோபம் வந்துரும் நாங்க கடன் வாங்கறத பார்த்து. அப்புறம் நாங்க என்ன செய்யணும்னு சொல்லி, எங்க வருமானத்துல கொஞ்சத்த சேமிப்பு செய்யணும்னு கண்டிப்பு. ஆச்சி அதுக்கும் வழி செஞ்சுருக்கு.“

“எங்க பொடி, ஊறுகாய் எல்லாம் நல்லாருக்கும். நீ ஊருக்குப் போறப்ப கட்டித் தாரோம். எடுத்துட்டுப் போ உங்க வீட்டுக்கு.”

“கண்டிப்பா. இங்கருந்தே வாங்கிட்டுப் போறேன்....”

கோயிலில் விழா என்றால் ஆண்கள் சுத்தம் செய்ய, பெண்கள், பெண் குழந்தைகள் எல்லோரும் கோலம் போட்டு, கோயில் வேலைகள் செய்வார்களாம். ஊர் கூடித் தேர் இழுப்பது போன்று! என்னை மிகவும் வியப்புக்குள்ளாக்கியது. ஆச்சி பிரமிக்க வைத்தார். மனதில் உயர்ந்தார்.

அரசுப் பள்ளி இருந்தது ஆனால் குழந்தைகள் டவுன் பள்ளிகளில். ஆயுர்வேத வைத்தியசாலை, அரசு பள்ளிக்கூடம், பொது நூலகம், போக்குவரத்து இன்னும் மேம்பட வேண்டும். குறித்துக் கொண்டேன். ஆச்சி அதற்கும் முயற்சி எடுப்பதாகத் தெரிந்தது.

“என்ன லஞ்ச் மெனு” என்றபடியே நானும் மாமாவும் வீட்டிற்குள் சென்ற போது சுதா மாமி எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

“இன்னிக்கு எனக்குச் சமையல் வேலை இல்லை. இங்க ஒரு பிள்ளைக்குச் சடங்கு. சாப்பாடு வீட்டுக்கு வந்துருச்சு”

என் விஷயமெல்லாம் வீட்டில் யாருக்குமே தெரியாதே. அப்புறம் மெதுவாக ஒரு நாள் அம்மா அப்பாவிடம் சொன்னதும், அப்பா தன் அம்மாவிடம் சொல்ல, பாட்டி என்னிடம் “இப்படியா பிள்ளை செய்வ? சடங்கு வைச்சிருக்கலாம்” எனவும் நான் பாட்டியுடன் சண்டை போட்டது நினைவுக்கு வந்தது. முதன் முதலில் சடங்கு பற்றி அப்போதுதான். தெரிந்தது.

“எங்க ஊரு எப்படி இருக்கு?”

“ஐ ஆம் சர்ப்ரைஸ்ட்! ஆனா இன்னும் கொஞ்சம் டெவலப் ஆனா மாடெல் கிராமம் ஆகிடலாம். இன்னும் நிறைய ஆராயணும், கல்ச்சர், ஹிஸ்டரி, ஆர்ட், எக்கானமி னு.....மாமி சாப்பாடு சூப்பரா இருக்குல்ல?”
“இந்த ஊர்ச் சாப்பாடு கொஞ்சம் கேரளத்து ஸ்டைல்ல நல்லாருக்கும். சடங்கு கொண்டாடறது எல்லாம் ஆச்சிக்குப் பிடிக்காது. வெளியே தெரியும்படியான விழா, செலவு அவசியமில்லாதது அதவிட அந்தப் பிள்ளைய நல்லா படிக்க வைச்சு உழைக்கக் கத்துக் கொடுத்தா நல்லாருக்கும்”ன்னுதான் சொல்லுவாங்க.
ஆச்சியின் மீதான என் மரியாதைக்கு ப்ளஸ் 1 போட்டேன்.
“இந்தா கூட்டான் கொஞ்சம் வைச்சுக்க......ஹான்...ஆச்சியும் உனக்கு உதவுவாங்க. அவங்களைப் போய் பாரு”
இந்த வீட்டிலிருந்து கால் மாற்றி வைத்தால் ஆச்சியின் வீடு! திண்ணையில் தூண்கள், நடையில் தடுப்பு எல்லாம் கலைநயம் மிக்க மர வேலைப்பாடுகள். வீடு மிகவும் சாதாரணமாக இருந்தது. நடையில் நின்று பார்த்தால் வீடு முழுவதும் புத்தகங்கள். பார்த்ததும் பிரமித்து நின்றேன். என் சப்ஜெக்ட். நான் நிற்பதைப் பார்த்து ஆச்சி வந்தார்.
“ஆச்சி சாப்டீங்களா? ரெஸ்ட் எடுக்கற டைமோ? அப்புறம் வரட்டா?”
“வா பிள்ளை. சாப்டாச்சு. நீ சடங்கு சாப்பாடு சாப்டியா. அம்மை மதியத்துல கிடக்காது. பொஸ்தகம் படிக்கும்” என்றார் குமரி மாமி. பாய் விரித்து உட்காரச் சொன்னார். ஆச்சி, குமரி மாமியையும் அருகில் அமரச் செய்து உழைப்பாளி என்று பாராட்டினார். ஆச்சி அந்த வயதிலும் சம்மணம் போட்டு பாயில் அமர்ந்தார். மாமி பாட்டியின் மடியில் படுத்தார்!
“என்ன ப்ராஜெக்ட்?” ஆச்சியின் முதல் வார்த்தைகள். எனது ஃபைல் நோட்ஸ் எல்லாம் வாங்கிப் பார்த்தார். ஆச்சரியப்பட்டார். “வாட் எ கோயின்சிடென்ஸ்”! ஆச்சி வாசிப்பதற்குக் கண்ணாடி போடவில்லை!
புத்தக அலமாரியைப் பார்த்து புத்தகங்களைக் காட்டிக் கொண்டே, கென்யாவைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற வாங்கரி மாத்தாயின் ரெப்ளெனிஷிங்க் நேச்சர், அவர் தொடங்கிய மாற்றத்திற்கான பெண்கள் எனும் அமைப்பு முதல் வந்தனா ஷிவாவின் விமன் இன் நேச்சர் வரை சிலாகித்தார். எக்கலாஜிக்கல் ஜெர்னி, மாதவ் காட்கில், கிராம முன்னேற்றம், காந்தி கிராமம் என்று பல பேசினார். நான் பேச்சிழந்து அப்படியே ஆச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.
ஆச்சியிடம் பொது விஷயங்கள், சப்ஜெக்ட், ஊரைப் பற்றிய விஷயங்கள், அவர் எண்ணங்கள், கனவுகள் என்று கொட்டிக் கிடந்தன. நேரம் போனதே தெரியவில்லை. மாலையானது.
“வாசல் பெருக்கணுமா ஆச்சி?”
“தூத்துக்க. ஆனா அந்த மூலைல இருக்கற எறும்பு புத்தைக் கலைச்சுராத.” டக்கென்று ஃபோட்டோ நிகழ்வு நினைவுக்கு வந்தது. வாளி, துடைப்பம் எடுத்த போது மரத்தடுப்பில் தமிழில் கவிதை ஒன்று ஒட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். தமிழ், அப்பா சொல்லிக் கொடுத்திருக்கிறார் என்றாலும், வாசித்துப் பழக்கமில்லை என்பதால் மெதுவாக வாசித்தேன்.
“மரத்தின் மரணமும் குருவியின் ஓலமும்”
இரைதேடித் திரும்பிய குருவி ஒன்று
தான்
நேற்றுக் குடியிருந்த
ஒற்றை மரத்தைத் தேடி

சுற்றி வருகிறது பரிதாபமாய்
அரசியல் காரணங்களுக்காக
வெட்டுப்பட்ட மரம்
வேரோடு வீழ்ந்து கிடக்கிறது மண்ணில்..
உற்றுக் கேட்டால்
கூடு நொறுங்கி
குஞ்சுகள் இழந்த
குருவியின் அழுகையோடு
மரத்தின் மரண வாக்கு மூலமும்
கேட்கலாம்..
(---எங்கள் ப்ளாக் ஸ்ரீராம்)



ஆச்சியின் உணர்வுகள் நன்றாகப் புரிந்தது. அப்பாவின் ரூமிலும் இந்தக் கட்டிங்க் பார்த்திருக்கிறேனே! இதே கவிஞர் எழுதிய வேறொரு கவிதையும்! ஏதோ பொறி தட்டியது.

சுதா மாமி வந்தார். ஆச்சி என்னை ஆரத் தழுவி உச்சி முகர்ந்து, “என் வாழ்நாள்ல இத்தன வருஷம் இருந்த என் விருப்பங்களை, என் வழியை ஃபாலோ பண்ண வீரு வந்துட்டா” என்றார்.

ஆச்சியின் கைகளைப் பிடித்துக் கொண்டேன். ஒளிர்ந்த அவர் கண்களைப் பார்த்தேன். “ஆச்சி, உங்க கனவும் எண்ணங்களும் இந்தக் கிராமத்தோட நிக்கப் போறதில்லை. பல கிராமங்களுக்கும் கொண்டு போவேன். தீர்மானிச்சுட்டேன்.”

சுதா மாமி பிரகாஷ் மாமாவிடம் சொல்லி சொல்லி மாய்ந்து போனார். வீரம்மை ஆச்சியின் மாற்றத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்.

மூன்று மாதங்கள் ஆச்சியிடம் பேசியதிலிருந்தும் தன்னை அறியாமலேயே இடையிடையே சொன்ன சில விஷயங்களிலிருந்தும் சில பல கோணங்களில் அவர் முகம், சில மேனரிஸம்ஸ், பல செய்கைகள் எனக்குச் சில சந்தேகங்களை எழுப்பி விஷயங்களைப் புரியவைத்தது. என்றாலும் சுதா மாமியின் வார்னிங்க் நினைவுக்கு வந்ததால் ஆச்சியிடம் நான் எதையும் கேட்கவில்லை. ஊரே சொல்லியது ஆச்சி மாறியிருக்கிறார். மகிழ்வாக இருக்கிறார் என்று...

ஆறு, குளம், அருவி, கிணறு, வாய்க்கால் குளியல், தோட்டம், என் ப்ராஜெக்ட் ஆய்வு என்று மூன்று மாதங்கள் ஓடியதே தெரியாமல் நான் புறப்படும் நாள் வந்தது. விடை கொடுக்க ஆச்சிக்கு மனமில்லை. தெருவில் இறங்கியதும் “நல்லாருக்கணும்

நல்லாருப்பே" என்று சொல்லியபடியே கைகளைத் தூக்கி வாழ்த்திய அந்தக் குரல். கண்ணில் நீர். அதுதான் கனவில் வந்ததோ?
"உனக்கு விண்ணின் மேகப் பொதிக்குள் போக இன்னும் கால அவகாசம் நிறைய இருக்கு மை டியர்! வாங்கரி மாத்தாய், வந்தனா ஷிவா, இயற்கையுடன் பெண்கள் பற்றி இன்னும் பேச வேண்டும். இன்னும் பல கிராமங்களுக்கு உன் கனவுகளை எடுத்துச் செல்லணும். நீ எனக்கு வேணும். வருகிறேன். வெயிட் கீஜியே." என் மன ஓட்டம் தடையானது. மொபைல் ரிங்க். பிரகாஷ் மாமா.
"வீரு, வாழ்த்துகள்! உன் மெசேஜ் பார்த்தோம். நீ போனப்புறம் ஆச்சி பழையபடி ஆகிட்டாங்க. ஊரே சொல்லுது. முடிஞ்சா அப்பப்ப வந்து போமா"
முந்தைய இரவுதான் அப்பா டூரிலிருந்து வந்திருந்ததால் பேச முடியவில்லை. அப்பாவிடம் பேச வேண்டும்.
"பப்பா ஒரு சாய் குடிக்கலாமா?" சாய் போட்டு அப்பாவின் ரூமில் அமர்ந்தோம்.
"உன் ட்ரிப் எப்படி இருந்துச்சு வீரு? ரொம்ப பவர்ஃபுல் போல!"
"கண்டிப்பா. வெரி க்ரேட் வுமன் ஐ மெட்! நீ எனக்கு ஏன் வீரலக்ஷ்மின்னு பேர் வைச்ச, ஏன் என்னை அந்தக் கிராமத்துக்கு அனுப்பினன்ற எல்லாம் புரிஞ்சுச்சு. ஆம் ஐ ரைட்?"
அப்பா டக்கென்று நேருக்கு நேர் பார்த்தார். மனம் எதையோ சொல்லத் துடித்தது அவர் கண்ணில் தெரிந்தது. அப்பாவிடம் அவர் "பின்" செய்து வைத்திருந்த கவிதையைக் காட்டி, இது உன் மனசுன்னு இப்ப புரியுது!
எப்படி
என்பது எளிதான கேள்வி.
ஏன்
என்பதற்குதான் பதில் தெரிவதில்லை.
தெரிந்தாலும்
சொல்ல முடிவதில்லை.
விதிப்படி நடக்கும்
விதித்தவன் கடவுளா?
விதியே கடவுளா?
-(-----எங்கள் ப்ளாக் ஸ்ரீராம்)
"ஏம்பா இப்பவும் மனசுக்குள்ள வைச்சுப் புழுங்குற? பி ஓப்பன் டு மி. உனக்கு உண்மை தெரிஞ்ச நாள்லருந்து இத்தனை வருஷமா உன் மனசை வாட்டிட்டுருந்த விஷயம், பார்க்கத் துடிச்சும் பார்க்க முடியாம.... 55 வருஷமா முகமே பார்க்காத உன் அம்மாவை ஐ மீன் உன்னைப் பெத்த அம்மாவை, என் ஆதர்சமாகிப் போன க்ரேட் பாட்டியைப் பார்க்க...." பேச முடியாமல் என் தொண்டை அடைத்தது. ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.
"எங்கூட நீயும் வரே. அவங்க பக்கத்துலதான் இருப்போம் மனசால க்ளோஸ்...ஆனா அந்நியமா இருக்காப்ல....ஆனா காலம் கனியும்பா."
அப்பா என் கைகளைப் பிடித்துக் கொண்டார். அவர் சொல்ல வருவது புரிந்தது.
"கவலைப்படாதப்பா. நான் என் அப்பான்னுதான் அறிமுகப்படுத்துவேன். உங்க பிள்ளைன்னு சொல்லமாட்டேன் "
Back to index ^

# கண்ணாரப் பூப்பூத்து... - கவிதை :: துரை செல்வராஜூ


கண்ணாரப் பூப் பூத்து
காணாமக் காய்த் திருக்கும்
கடலைக் காட்டுக் குள்ளே
கருங் குயில் பாட்டு அந்தப்
பாட்டு சத்தம் கேட்டதுமே
மயங்குது மனசு..

மயங்குற மனசுக்குள்ளே
சிமிழப் போல நெனைப்பு அந்த
சிமிழுக்குள்ள செந்தூரமா
சேர்ந்திருக்கணும் பொழப்பு..
பொழப்பு பொன்னளக்கும் ஐயன்
கையில் இருக்கு அந்தப் பொறுப்பு..

மரக்காலைத் தலைக்கு வச்சி
மண்ண ளக்கும் சாமி உறங்க
திருமுகம் முழிக்கச் சொல்லி
வைக்க வேணும் பூசை அந்தப்
பூசை யில புது மஞ்சத்
தாலி கேக்க ஆசை...

மனசுக்குள் மனசு வைச்சி
மதி மயங்கி தவிக்க வைச்சான்..
வச்ச கதை அறியாம
வாடி நிக்குது மனசு - மனசு
படும் பாட்டை தெரிஞ்சு கிட்டு
ஒடுங்கிக் கிடக்கு கொலுசு..

வானம்பாடிக் கூட்டுக்குள்ளே
வட்டமிடும் காத்து போல
வார்த்தைக்குள்ளே மனசு தான்
வரப்பு நெடுக உசிரு தான்..
வந்து நின்னு சேதி சொன்னா
சிலுசிலுக்கும் கொலுசு தான்




கொலுசுக்குள் மணியப் போல
குறுகுறுக்கும் சுரும்பு போல
காவேரி நதியப் போல
சல சலக்குது பேச்சு அதை
காதாரக் கேட்டுக் கேட்டு
கல  கலக்குது மூச்சு..



மண்ணுக்குள்ள கடலை வச்சான்
மனசுக்குள்ளே கடலை வச்சான்
கடலுல துரும்பாகக் கண்ணு
ரெண்டும் கலங்க வச்சான்
வச்சவனும் மனசுக் குள்ளே மாமன்
பேரை எழுதி வச்சான்..

எழுதி வைச்ச எழுத்த எண்ணி
ஏத்தி வச்ச விளக்கு  நல்லா
விடிய வேணும் கிழக்கு
ஏத்தி வச்ச விளக்கு அது
நெஞ்சுக்குள்ள வீசும்
உம் பேரை மட்டும் பேசும்..



கோலத்துல பூவை வச்சி
கொடி விளக்கை ஏத்தி வச்சி
கும்பிட்டு நிக்கிறப்போ
சாமி வரும் சாமி - அது
கூறையோட மாலை தரும்
கூட ஒரு சேதி தரும்..

தை மாசம் பந்தலிட்டு தலை
வாழை இலையும் இட்டு
புத்துருக்கு நெய் வாசம்
புது விருந்து ஊர் பேசும்..
ஊர் முழுக்க உறங்குனதும்
உசிரு மட்டும் கதை பேசும்..

அடமழைத் தா(ழ்)வாரமா
சிலு சிலுக்குது மனசு - மனசு
சின்னச் சின்ன சந்தத்தோட
படிச்சிருக்கும் பாட்டு அந்த
சந்தோச பாட்டு கேட்டு
சிரிச்சிருக்கும் கொலுசு...

Back to index ^

# நீர்க் கோலங்கள் - கவிதை - - ராமலக்ஷ்மி

கவிதைகளிலும் உண்டு
சாமர்த்தியசாலிகள்.
புருவங்களை உயர்த்த வைக்கும்
உருவகங்களோடு
நுணுக்கமான விவரங்களோடு
நளினமான வார்த்தைகளோடு
சுவாரஸ்யமான வரிகளில்
அங்கும் இங்கும் வழுக்கியபடி
எதையுமே சொல்லாமல்
ஆனால் சொன்னதையே
மீண்டும் மீண்டும் சொல்லியபடி.
தொடக்கத்திற்கும்
முடிவிற்கும் நடுவே
நதிவெள்ளத்தின் வேகத்தோடு



பெருக்கெடுத்துப் பயணித்து
வெற்றிக் களிப்பில்
இறக்கை விரிக்கும்
சாமர்த்தியசாலிக் கவிதைகள்
ஆன்மாவைத் தொடத் தவறி
வீழ்கின்றன அதே விரைவில்
வெற்று ஜாலங்களைச் சூழும்
வெறுமையின் பாரத்தால்.
உணர்வதில்லை ஒருபோதும்
அவை தம் தோல்விகளை.
நீர்க்கோலங்களேயானாலும்
கைவிடுவதில்லை
மொழியன்னை
எப்போதும்
எக்கவிதைகளையும்.

ராமலக்ஷ்மி :

எழுத்தாளர், கவிஞர், ஒளிப்படக் கலைஞர். பெங்களூரில் வசிக்கிறார். ஆங்கில இலக்கியத்தில் முதுகலை மற்றும் ஆய்வு நிறைஞர் பட்டங்கள் பெற்றவர். சொந்த ஊர் நெல்லை. 90_களில் எழுதத் தொடங்கி 2008_லிருந்து தனது வலைப்பூ மற்றும் இணைய இதழ்கள், சிற்றிதழ்கள், பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு, கட்டுரை, நூல் விமர்சனம், ஒளிப்படம் போன்ற பல தளங்களில் இயங்கி வருகிறார். 2014_ஆம் ஆண்டு வெளியான இவரது ‘இலைகள் பழுக்காத உலகம்’ கவிதைத் தொகுப்பு, ‘மு.ஜீவானந்தம்’ இலக்கியப் பரிசையும், ‘தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்-நியூ செஞ்சரி புத்தக நிலைய' விருதையும் பெற்றுள்ளது. ‘அடை மழை’ சிறுகதைத் தொகுப்பு ‘திருப்பூர் அரிமா சக்தி’ விருதைப் பெற்றுள்ளது. இவர் எடுக்கிற ஒளிப்படங்களும் பத்திரிகைகளில் வெளியாகி வருகின்றன. அட்டை முகப்புகளையும் அலங்கரித்திருக்கின்றன.

வலைப்பூ: ‘முத்துச்சரம்’ https://tamilamudam.blogspot.com/
ஒளிப்படப் பக்கம்: http://www.flickr.com/photos/ramalakshmi_rajan/
மின்னஞ்சல் முகவரி: ramalakshmi_rajan@yahoo.co.in



Back to index ^

## "என் இதயப் பெண்ணே" A J SURYAPRAKASH

*******

பெண்ணே,

உன்னை நிலவென்றுரைத்தால்
எட்டா உயரத்திற்கு சென்று விடுவாயோ - என்றொரு தயக்கம்

உன்னை மலரென்றுரைத்தால், சில நாட்களில்
வாடி உதிர்ந்து விடுவாயோ என்று பயம்!

உன்னை என் இதயமாக நினைத்து மகிழ்ந்திருப்பேன்!

ஏனெனில்,

எந்நிலையிலும், விழித்திருப்பினும், உறங்கிடினும், என்னை தளராமல்
இயக்கிக் கொண்டிருப்பவள் நீயே என்பதால்.

*****




Back to index ^

# ஊர்மிளையின் உறக்கம் - சிறுகதை :: ஐயப்பன் கிருஷ்ணன்

நன்றி : ராமலக்ஷ்மி ராஜன்

[முன் குறிப்பு :

இந்தக் கதை ஊர்மிளையின் உறக்கம் ( ஊர்மிளா நித்ரா) என்னும் தெலுங்கு நாட்டுப்புற பாடலைத் தழுவி எழுதப் பட்டது. ஊர்மிளையின் தூக்கத்தால் உண்டாகும் தடுமாற்றம் ஆங்காங்கே தெரியும். முன்னுக்குப் பின் முரணாக பேசுதல், இராமனை புகழ்தல் பின்பு அந்த இராமனையே யாரென்று கேட்பது என. இராமனைக் குறித்து வழங்கப்படும் பல நாட்டுப்புற பாடல்கள், கதைகளில் இதுவும் ஒன்று. ஆனால் விலக்கித் தள்ளிவிட முடியாத ஒன்று. பெரும்பாலும் இராமாயணம் தெலுங்கு நாட்டுப்புறப் பாடல்களில் பெண்களுக்கே முன்னுரிமை தரப்பட்டிருக்கும். பெண்களின் கண்ணீர், துயரம், ஏக்கம் என சொல்லப்பட்டிருக்கும். அவை பெரும்பாலானவை பெண்களால் வாய்மொழியாக உண்டாக்கிப் பாடப்பட்டு வருவதால் இருக்கக்கூடும். ]



உலகம் முழுதையும் ஆளும் இராமனின் சபை. வெண் கொற்றக் குடையின் கீழ் இராமன் அமர்ந்திருக்கிறான். இராமனின் பட்டாபிஷேகம் முடிந்து அமர்ந்த இராமனின் பக்கத்தில் தம்பியர் மூவரும் இட்டபணி முடிக்க காத்திருக்கிறார்கள். தும்புரு நாரத கானங்கள் முழங்க, வானோர் பூ மாரிப் பொழிய அரம்பையின் நடனம் நடக்க.. எதையும் செவிக்கொடாமல் இராம் இராம் என்று இராமனின் பாதத்தை தொட்டு வணங்கிக் கொண்டிருப்பது சாட்சாத் அனுமனன்றி வேறு யார் ?

மகிழ்வுடன் இருந்த மக்கள் கூட்டத்தை சீதை நோக்கினாள். பின் இராம

இலக்குவர்களை நோக்கினாள். இராமனின் முகம் வழமைப் போலவே அன்றலர்ந்த தாமரையாகவே இருந்தது. இராமனின் பக்கத்தில் அமர்ந்திருந்த சீதை இராமனிடம் இருந்து தன் கையை விடுவித்துக் கொண்டு மெல்ல எழுந்தாள். அவள் கண்களில் சற்றே நீர் கோர்த்திருந்தது.

" என் நாயக, உங்களிடம் எனக்கொரு கோரிக்கை உண்டு. ஐயனே "

இராமன் மனம் துணுக்குற்றது. சீதையின் கண்கள் எப்போது வேண்டுமானாலும் தாரைத் தாரையாக கொட்டக் கூடும் என்பதே இராமனுக்கு மிகுந்த துயரம் கொடுத்தது.

" இதென்ன கேள்வி சீதை. தைரியமாகச் சொல் என்ன வேண்டும். இந்த முடிசூட்டு விழாவில் ஏதும் குறையா ? என் அன்பினிற்குரிய ஜனக மாமன்னருக்கு ஏதும் மரியாதைக் குறைவேற்பட்டுவிட்டதா. எல்லாம் நானே முன்னின்று பார்த்து பார்த்து செய்தேனே.. சொல் சீதை. நீ அழுதக் கண்ணீர் அசோக வனத்தை நிரப்பியது போதும். இதற்கு மேலும் நீ அழுதால் இந்த பூமி தாங்குமா சொல் "

" ஐயனே, அதிலேது குறை. ஆயின் "

" சொல் சீதை.. எதுவெனிலும் சொல் "

" இங்கே யாரெல்லாம் இருக்கிறார்கள் "

" என் உயிருக்கும் மேலான தம்பியர் நால்வர், இதோ உன் தந்தையார், குரு வசிட்டர், உன் தங்கையர் மாண்டவி, ஸ்ருதிகீர்த்தி... ஊர்மிளை.. ஆமாம்.. ஊர்மிளையைக் காணவில்லையே.. எங்கே ஊர்மிளை "

" என் கண்ணீரின் காரணம் அதுவே ஐயனே. நாம் கானகம் செல்லும் போது என்னைப்போலவே ஊர்மிளையும் இளையவருடன் வர எத்தனித்தாள். ஆனால் இளையவரின் ஆணையினால் அவள் இங்கேயே தங்கினாள். அவள் என்னைப் போல் தன் கணவனிடம் வாதிடவில்லை. ஒரே ஒரு வரம் மட்டும் கேட்டுப் பெற்றாள் "

" இது என்ன ? இது நாள் வரை நீயோ இலக்குவனோ என்னிடம் கூறவில்லையே.. அது என்ன வரம் "

" ஐயனே, சற்று முன்பு இளையவர் தங்களின் வெண்கொற்றக் குடையை பிடித்திருக்கும் போது சற்றே சாய்ந்தது அல்லவா "

" ஆமாம் "

" அப்போது அவர் சிரித்தார் அல்லவா "

" ஆமாம்.. ஆனால் அது மகிழ்ச்சியினால் வந்ததல்லவா ? எத்தனை இடர் தாண்டி மீண்டிருக்கிறோம் இல்லையா அதற்கும் ஊர்மிளை கேட்ட வரத்திற்கும் என்ன சம்பந்தம்."

" சிரிப்பு அதனால் வரவில்லை ஐயனே. அவர் உங்களுடன் வர முற்பட்ட உடன், ஊர்மிளை கேட்ட வரத்தை அவர் தந்தார். ஊர்மிளை தன் நாயகன் திரும்ப வரும் வரைக்கும் அவரின் தூக்கத்தை இரவு பகலென்று இல்லாமல் மொத்தமாய் தனக்கு அளித்து விட்டு செல்லும்படி வரம் கேட்டார்.. இளையவரும் தந்துவிட்டார் "

இராமனின் கருணை மிகு கண்கள் இளையபெருமாளை நோக்கியது. வழமை போல் இளைய பெருமாள் அண்ணன் அண்ணியரின் திருவடியை நோக்கியவாரே நின்றார். இராமனின் கண்களில் வாத்சல்யம் ததும்பி நின்றது.

" ம்ம். மேலும் சொல் சீதை "

" இளையவர் நித்திரை தேவியிடம் வேண்டுகோள் வைத்தார். தான் திரும்ப அயோத்தி வந்து தங்களுக்கு மணிமுடி சூட்டும் வரைக்கும் அவள் ஊர்மிளையை ஆட்கொள்ள வேண்டும் என்றும் பிறகு எப்போது வேண்டுமானாலும் தன்னை ஆட்கொள்ளலாம் என்றும் "

" ம்ம்ம்.. " இராமனின் குரல் இளகியது.

" வெண் கொற்றக் கொடியை பிடித்திருந்த போது நித்திரா தேவி இளையவரை பீடிக்க வந்தாள். அந்த தடுமாற்றத்தால் சற்றே சாயப் போன இளையவர் வெண் கொற்றக் கொடியை பிடிப்பதில் தடுமாறினார். தன் வைராக்கியத்தால் உறக்கத்தினின்று விடுபட்டார். அதை நினைத்தே சிரித்தார் ஐயனே "

" மன்னிக்க வேண்டுகிறேன் அண்ணா.அண்ணியார் சொன்னது அத்தனையும் உண்மையே. நிலை தடுமாற்றம் ஏற்பட்டிருக்கக் கூடாது.. "

மகிழ்வோடிருந்த மக்கள் கூட்டத்தில் இது வரை கேட்ட இராம நாமம் மெலிந்து இலக்குவன் வாழ்க என குரல் உயர்ந்தது.

இராமன் இலக்குவனை நோக்கிச் சென்றான். அவன் கையினின்று வெண்கொற்றக் கொடியை வாங்கி பக்கத்தில் இருந்த பரதனிடம் கொடுத்தான். தன் தம்பியை ஆரத் தழுவினான்.

" எத்தனை கோடித் தவம் இது தம்பி.. உன்னை , இந்த பரதனை சத்ருக்கனை

தம்பியாய் பெற்றதில் எனக்குத்தான் எத்தனை பேறு.  இன்று இங்கு நடந்த முடிசூட்டு விழா நீயன்றி சாத்தியமாகியிருக்குமா ? என் உயிரல்லவா இலக்குவா நீ.. என் எந்தையடா நீ... என் தாயுமானவனடா நீ "

இராமன் உணர்ச்சியால் உடல் தளர்ந்து இலக்குவனை இறுக அணைத்துக் கொண்டான். இலக்குவனின் கண்களின் நீர் இராமனின் கால்களைத் தொட்டது.

" ஐயனே இளையவர் செய்தது மாபெரும் தியாகம், யாரும் செய்தற்கரிய பணியை செய்திருக்கிறார். அதில் ஐயமேதும் இல்லை. ஆனால் இவருக்காகவே காத்திருக்கும் அந்த அபலை, என் தங்கை ஊர்மிளையை சற்றே நினைத்துப் பாருங்கள். இத்தனை வருடங்கள் தன் நாயகன் வருவான் என்று தூக்கத்திலும் பிதற்றிக் கொண்டிருப்பவள் அவள். அவளுக்கு தயைக் காட்டுங்கள் ஐயனே "

" சீதை விளங்கும் படி சொல் "

" ஐயனே, இளையவர் இங்கிருந்தாலும் அவர் மனம் ஊர்மிளையை தேடி ஓடிக்கொண்டே இருக்கிறது. அவர் கண்ணின் நீர் சொல்லும் கதைகளை இன்னும் ஏன் அறிய மறுக்கிறீர்கள். அவர் தங்களை விட்டு தங்கள் அனுமதியின்றி ஊர்மிளையைக் காண போக மாட்டார். அதை வாய்விட்டு தங்களிடம் கேட்க மாட்டார்"

" ஆம் சீதை .. இவை அனைத்தும் .. "

" எனக்கெப்படித் தெரியும் ? இளையவர் மகனொத்தவர் இல்லையா ? தாய்க்குத் தெரியாதா தன் மகனின் நிலை ? என் மகனை இப்படி தவிக்க விடுவது தான் முறையா ? சொல்லுங்கள் ஐயனே. மேலும் தன்னைக் காண வருவார் என்று இளையவருக்காக காத்திருக்கும் என் தங்கை ஊர்மிளை மீது கருணை வைத்து இளையவரை அனுப்பி வையுங்கள் "

இராமன் மௌனமானான். பெண்களின் நுண்ணறிவு தான் எத்தனை உயர்ந்தது என்பதை இராமன் மனத்தினுள் வியந்தான்.

" இலக்குவா, உடனே நீ கிளம்பு. ஊர்மிளை இருக்குமிடத்திற்கு. நீ உடனடியாக கிளம்ப வேண்டும். அவளிடம் மகிழ்வான வார்த்தைகளால் குளிர்வி. அவள் கண்ணீரைத் துடை. அவள் இனி மகிழ்ச்சியை மட்டுமே காண வேண்டும். உன் மனைவியை இப்படி தனியாக தவிக்கவிடுவது முறையா ?"

இராமன் அந்த கேள்வியின் அபத்தத்தை உணர்ந்து கொண்டான். இதில் யார் தவறு ? இலக்குவன் மீதா , ஊர்மிளை மீதா , சீதையின் மீதா அல்லது தன் மீதா. இலக்குவன் ஊர்மிளையை பிரிவதற்கு விதியல்லவா காரணம் என்று சமாதானமானான்.

இலக்குவன் இருவரையும்   இரு கைகள் கூப்பித் தொழுதான்.   சட்டென்று தன் அண்ணியின் காலில்  நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான்.  சீதையின் கண்ணீர் அவனை ஆசிர்வதித்தது. பின்  ஏதும் பேசாமல் ஊர்மிளையின் அந்தப் புரம்  நோக்கி விரைந்தான்.

----

பகலிலும் அதிக வெளிச்சம் ஊடுருவாத வகையில் திரைச்சீலைகளால் மூடப்பட்ட அறை அது. ஊர்மிளை தன்  படுக்கை அறையில் படுத்திருக்கிறாள்.  மிகவும் மெலிந்திருக்கிறாள்.  இலக்குவன்  நினைவொன்றே அவளை உயிரூட்டி வைத்திருக்கிறது.   நித்திரை தேவி அவளை விட்டு விலகியிருக்க நினைத்தாலும் இன்னும்  தூக்கத்தினின்று முழுமையாக விடுபடாமல் இருக்கிறாள்.

ஆயினும்  அந்த மெல்லிய வெளிச்சத்திலும் அவள் முகம் பொலிவுடன் இருக்கிறது. தூசி படிந்த ஓவியம் போல ஊர்மிளை இருக்கிறாள்.  கதவு மெல்லத் திறக்கப் படும் ஓசை கேட்கிறது. ஊர்மிளையின் காது மடல்கள் உயர்கின்றன.  உள்ளே வரும் காலடி ஓசை சர்வ  நிச்சயமாக பணிப்பெண்களுடையதோ அல்லது தன் தாயொத்த கோசலையின் காலடி ஓசையோ அல்ல என்பதை  அவள் மனம் எச்சரிக்கிறது.

இது ஒரு ஆணின் காலடி ஓசை. அதிர்வு தரும் இந்தக் காலடி ஓசை கண்டிப்பாக பெண்ணுடையதல்ல.  உள்ளே நுழைந்த ஆடவன்  தன்னை  நோக்கி குனிகிறான், தன் கலைந்த ஆடையை சரி செய்கிறான்.

" பெண்ணே "

இது யாருடைய குரல், யாரிந்த புது ஆடவன், இவனை எப்படி பணிப்பெண்கள் உள்ளே விட்டார்கள். ஒருவேளை அவர்களுக்கு ஏதும் இடர்  நேர்ந்திருக்குமோ ? ஏன் என் பக்கத்தில் வந்து அமர்கிறான்? என்னிடம் ஏன் பேசுகிறான் ?

" ஊர்மிளை, எழுந்திரு. நிலவினொளி ஒத்த உன் முகத்திற்கு யார் தான் ஈடாக முடியும்?   தளிரொத்த  உன் இதழ்களுக்கு பூவையோ எதுவுமே மாற்றாக கூற முடியாது.   உன் பேச்சு தேனினும் இனியது.  எழுந்திரு.. பேசு. இத்தனை  நாளாய் உன்  நினைவுத் தீ வாட்டி வாட்டி காய்ந்து கிடக்கும் என் மனதிற்கு இதமாகட்டும் உன் வார்த்தைகள். எழுந்திரு.. இந்த தங்க ஆபரணங்களை அணிந்து அவற்றிக்கு அழகூட்டு. கண்ணெ எழுந்திடு "

ஊர்மிளையின் உடல்  நடுங்கியது. அவளின் தூக்கம் முழுதும் விட்டப்பாடில்லை. ஆயினும் அந்நிய ஆடவன் தன் அறைக்குள் இருக்கிறான் என்ற உணர்வு அவளை தாக்குகிறது.

" யார் நீ ?  எதற்காக இங்கே வந்தாய் ?  உனக்குத்தான் எத்தனைத் துடுக்குத்தனம் ?

எந்த தைரியத்தில் இந்த தவறை இழைக்க முற்பட்டாய் ? "

" தனியாக இருக்கும் பெண்ணை கவர்ந்து செல்லலாம் என்று முடிவு கட்டினாயோ ? என் தந்தை ஜனகன் இதை அறிந்தால் என்னாகும் தெரியுமா ? இந்நாட்டரசன் இராமன் மட்டும் இதை அறிந்தால் உனக்கு மிகப்பெரிய ஆபத்து நேரிடும் என்பதை உணர்ந்துக் கொள். என் சகோதரி சீதையின் மைத்துனர், மிகவும் கோபக்காரர். அவர் நீ உள்ளே வந்ததை அறிந்தாலே உன் உயிர் பறிபோகும் என்பதை உணரவில்லை நீ. "

" என்னுடைய பெரும்புகழ் கொண்ட குடும்பத்தின் புகழ் என்னால் களங்க்கமடந்ததோ ? என்ன செய்வேன் நான். உதவிக்கு யாரும் கூட இல்லையே "

" உனக்குத் தெரியுமா, மாற்றான் மனைவியின் பின் சென்றதால் இந்திரன் அசிங்கமான உடலைப் பெற்றான் என்பது ? அல்லது இராவணன் கொல்லப்பட்டதன் காரணமாவது தெரியுமா ? அதுவும் மாற்றான் மனைவியை இராவணன் தொட ஆசைப்பட்டதால் தான் "

"உனக்கு இந்தக் கதைகள் தெரியாமல் இருந்திருக்க வாய்ப்பே இல்லை. ஆயினும் என்னை அபகரிக்க முயல்கிறாயே. உனக்கு என்னைப்போல பெண் தங்க்கையாக இல்லையா ? உன்னைப் பெற்றவளும் பெண்ணல்லவா "

ஊர்மிளையின் கண்கள் கண்ணீரைக் கடலென சிந்துகிறது உறக்கத்தினின்று விழிக்காத அவள் முகத்தில் அச்சம் குடிபுகுந்ததால் முகம் கருத்துக் கிடக்கிறது.

" பெண்ணே, நான் இராமனின் தம்பி "

" இராமனா.. அந்தப் பெயரை நான் கேள்விப்பட்டதே இலை "

" ஜனகனின் மருமகன் நான் "

" யார் அந்த ஜனகன் ? என்னிடம் ஏன் அவர்களைப் பற்றி சொல்கிறாய். அய்யகோ என் பிறந்த குலத்தின் பெருமையும் புகுந்த வீட்டின் பெருமையும் என்னால் நாசமாகும் போல இருக்கிறதே. உதவிக்கு யாருமே இல்லையா "

" பெண்ணே, நீ திருமகளைப் போன்றவள். என்னை ஆளப் பிறந்தவள் அல்லவா. நான் சீதையின் மைந்தனொத்த மைத்துனன். "

" என்ன பிதற்றுகிறாய்.. யாரது சீதா ? "

இலக்குவன் முகம் சோகத்தின் உச்சிக்கு சென்றது. இவள் என்னை பழி

வாங்குகிறாளோ ? இப்படி பேசக் காரணம் என்ன ? ஓயாத தூக்கம் இவளை பித்தாக்கி வைத்திருக்கிறதோ ?

" நான் சீதையின் மைத்துனன் இல்லையா ? நீ ஊர்மிளை இல்லையா ? என்னிடம் பொய்யுரைக்காதே ஊர்மிளா.. சோதித்தது போதும் எழுந்திரு. உனக்கு சொல்கிறேன் கேள். நாங்கள் வனவாசத்தில் இருந்த போது சீதையை தூக்கிச் சென்று விட்டார்கள். நாங்கள் போராடி அன்னையை மீட்டு வந்திருக்கிறோம். இராவணனை கொன்று திரும்பி இருக்கிறோம்.

நீ என்னை ஏற்காவிடில் இந்த ஊர் உலகம் என்னைத் தூற்றும். அது எப்போதும் அப்படித்தான் தெரியுமா.. யாரையும் நம்பாது.. தூற்ற ஏதோ காரணம் அதற்கு தேவை . அதனால் நான் அதற்குக் கவலைப் படவில்லை. ஆனால் உன்னைப் பிரிந்த நாள் முதல் இன்று வரை நான் ஊணுறக்கம் தவிர்த்து உன் நினைவாகவே இருக்கிறேன். இப்போது நீ உறக்கத்தினின்று எழுந்து என்னை ஏற்காமல் போனால் நான் இருந்தென்ன பயன் "

இலக்குவன் தன் வாளை உருவினான். தன்னை மாய்த்துக் கொள்ள தயாரானான்.

வாளின் ஒலி அவளை உலுக்கியது. ஊர்மிளை அதிர்ச்சியடைந்தாள் தன் தூக்கத்தினின்று விடுபட்டாள். பயத்துடனே இலக்குவனைப் பார்த்தாள். யாரென்று இலக்குவனைக் கண்டதும் அவள் பயம் விலகியது. இலக்குவனின் காலைப் பணிந்தாள்.

இலக்குவன் மகிழ்வோடு கண்களில் நீர் தாரைத்தாரையாய் வழிய ஊர்மிளையை மலர்மாலையை எடுப்பது போல் எடுத்து அணைத்தான். அந்த அணைப்பு பதினான்கு வருட பிரிவின் ஏக்கத்தை ஊர்மிளைக்கு உணர்த்தியது.

இலக்குவன் ஊர்மிளையின் கண்ணீரைத் துடைத்தான்.

"என் தந்தை ஏமாந்துவிட்டார். அவருக்கு உண்மை புரிந்திருக்கவில்லை. தங்களை உயர்ந்த நிலையில் வைத்துப் பார்த்துவிட்டார். ஆனால் உண்மையில் உங்கள் மனைவியை நீங்கள் பொருட்டாகவே கருதவில்லையே. உங்கள் அண்ணனும் அண்ணியுமல்லவா உங்களுக்கு முக்கியம்"

இலக்குவன் ஊர்மிளையின் இயலாமையால் வந்தக் கோபத்தைக் கண்டு உள்ளம் குமுறினான். அவள் கூறிய உண்மை வார்த்தைகள் அவனைச் சுட்டன

" இந்த பதினான்கு வருடத்தில் நான் உண்ணவில்லை உறங்கவில்லை. உனக்காக உயிர் தாங்கிக் கிடந்தேன் இதை எப்படி உன்னிடம் நான் நிரூபிக்க ? எதன் மீது ஆணையிட்டு உன்னை நம்பச்செய்வேன் ?. போன பிறவியில் நாம் யாரோ நல்ல

இணையை பிரித்திருக்க வேண்டும். அந்தத் தீவினையே நம்மை இப்போது பாடாய் படுத்துகிறது. இப்போது வருந்தி என்ன முன்பிறவிப் பயன் அனுபவித்தே ஆகவேண்டும் " தாளாத் துயரத்தில் விசும்பினான் இலக்குவன்.

அதற்குள் பணிப்பெண்கள் மூலம் கோசலைக்கு விபரம் தெரிந்து அவள் உடனடியாக அந்தப்புரம் வந்து சேர்ந்தாள். தாயைக் கண்டதும் இருவரும் எழுந்து நின்றனர். பின் தாயின் காலில் விழுந்து வணங்கினர்.

கோசலை ஊர்மிளையை இறுகத் தழுவினாள். உச்சி மோந்து முத்தமிட்டாள். இருவரையும் குளிக்கப் பணித்தாள். இருவருக்கும் அழகான உடைகளையும் ஆபரணங்களையும் அளித்தாள். அதற்குள் இராம இலக்குவர்களின் தங்கையான சாந்தாவும் அங்கு வந்து சேர்ந்தாள்.

" பதினான்கு வருடம் உண்ணாமல் உறங்க்காமல் இருந்தாய் இல்லையா இப்போதாவது மனைவியோடு நன்றாக உணவருந்து அண்ணா " என்றாள் சாந்தா. தயரதனின் புதல்வி.

இருவரும் சாப்பிட்டு முடித்து தாம்பூலம் தரிக்கையில் சாந்தா ஊர்மிளையை கேலி செய்தாள்.

" யாரோ பதினாலு வருஷம் தூங்கிக் கொண்டே இருந்தார்கள். பாருங்களேன் அண்ணி "

சீதாவை சாந்தா அழைத்தாள்.

" இந்த பொன்னிற சிரிப்பையும் முக வடிவையும் இவள் இத்தனை நாளாய் எங்கே தான் ஒளித்து வைத்திருந்தாளோ. கண்ணேறு அதிகமம், அம்மம்மா கடவுளுக்கு நாம் பூஜை செய்ய வேண்டும் அண்ணி "

சீதை குறும்பு நகையுடன் சாந்தாவுடன் சேர்ந்து கேலி செய்ய ஆரம்பித்தாள்

" ஆமம்மா ஆம். ஆனால் கண்ணேறு கழிக்க வேண்டியது உன் அழகு அண்ணனுக்கு நமக்கல்ல "

" ஆஹாஹா.. நீங்கள் அக்கா தங்கையர் நால்வரும் அல்லவா அழகால் வலை வீசி என் சகோதரர்களை வளைத்துவிட்டீர்கள். ஆகவே உங்கள் கண்களில் இருந்து தான் திருஷ்டி பட்டிருக்கும். "

" இருக்கும் இருக்கும் .. ஒண்ணும் தெரியாத சாந்தா என்னும் பெண் தான் என் சகோதரன் ரிஷ்ய சிருங்கனைத் தன் அழகால் கட்டிப் போட்டாளாக்கும். அவர் பாவம்

காட்டில் சிவனே என்று தவம் செய்து கொண்டிருந்தார். அவரைப் போய்.. "

" அம்மா தாயே.. நீ செல்வத்தின் திருமகள் அல்லவா.. அங்கே மேல் உலகத்தில் இருக்கப் பிடிக்காமல் இங்கே எங்களுடன் இருப்பது எங்கள் பாக்கியம் "

கண்கள் பணிக்க சீதையின் கையைப் பற்றினால் சாந்தா.

" அசடே.. நீ எங்களுடன் இருப்பது தான் எங்களின் பாக்கியம் " சீதை சாந்தாவை அணைத்து முத்தமிட்டாள்.

சுமத்திரை மென் பூக்களாலும், நறுமணங்களை நிரப்பியும் படுக்கை அறையை தயார் செய்து விட்டு இருவரையும் அறைக்குள் தள்ளி கதவை சாத்தினார்கள்.

ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தனர். அழுதனர், சிரித்தனர். ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். பின்பு சேர்ந்து காரணமே இல்லாமல் அமைதியாயினர். கண்கள் மட்டுமே பேச வாய் மௌனித்தது. இவர்களின் தனிமைக்கு குறுக்கே நான் யார் என்று நிலவொளி மங்க, அறை ஒளியும் மங்க.. நித்திரை தேவி யாரை பீடிப்பது என்று தெரியாமல் அவர்களை தொந்தரவு செய்யாமல் அவர்களின் உறக்கம் சற்றே தள்ளிப் போகட்டும் என்று மிக மகிழ்வாக அறையின் வெளியே காத்துக் கொண்டிருக்கிறாள்.

***


**ஐயப்பன் கிருஷ்ணன்:**

**எழுத்தாளர், ஒளிப்படக் கலைஞர். பணி நிமித்தமாக 25 ஆண்டுகளாக பெங்களூரில் வசிக்கிறார். வேலூரைச் சேர்ந்தவர். ஜீவ்ஸ் என்ற பெயரில் நண்பர்களுடன் இணைந்து தொடங்கிய 'தமிழில் புகைப்படக்கலை' தளத்தின் மூலமாகப் பலருக்கும் ஒளிப்படக் கலையில் ஆர்வத்தை ஏற்படுத்தியவர். பல இணைய இதழ்களிலும், பத்திரிகைகளிலும் இவர் எழுதிய கதை, கவிதை, கட்டுரைகள் வெளியாகியுள்ளன. நகைச்சுவை எழுத்திலும் வல்லவர். 2014-ல் வெளியான இவரது முதல் சிறுகதைத் தொகுப்பான 'சக்கர வியூகம்' இருபெரும் இதிகாசங்களில் இவர் வியந்த மதித்தக் கதாபத்திரங்களைச் சுற்றிப் புனையப்பட்டவை என்பது குறிப்பிடத் தக்கது.**

**வலைப்பூ: எண்ணங்கள் இனியவை** [http://kaladi.blogspot.com/](http://kaladi.blogspot.com/)

**மின்னஞ்சல் முகவரி:** [iyappankrishnan75@gmail.com](mailto:iyappankrishnan75@gmail.com)

**ஒளிப்படப் பக்கம்:** [https://www.flickr.com/photos/iyappan](https://www.flickr.com/photos/iyappan)/



[Back to index ^](#)

## வாழ்க்கை உன் கையில்:: A J SURYAPRAKASH

***

வாழப் பழகிக் கொண்டால் வாழ்க்கை இனிதாகிவிடும்.
வாழ்வதற்கு வயதும் வசதியும் ஒரு பொருட்டல்ல.

இருக்கும் நிலையில் இருப்பதைக் கொண்டு வாழ்ந்து இனிமை காணலாம்.
மனம் இருந்தால் மார்க்கம் (வழி) உண்டு என்பது பழமொழி.
மனம் தெளிந்தால் மயக்கம் இல்லை என்பது என் மொழி.

மல்லாந்து படுத்திருந்தோம் குழந்தையாய்,
வசதியையே நம்பியிருந்தால் படுத்தே இருந்திருப்போம் இன்று வரை.

நம் கை கால்களைக் கொண்டு உதைத்து, உந்தி, புரண்டு, தவழ்ந்து,
அமர்ந்து, நின்று, நடந்து, ஓடி மகிந்தோம் தன் முயற்சியை துணை கொண்டு.
அன்று தொடங்கிய ஓட்டம் தொடருகிறது இன்று வரை தன் முயற்சியால்.
ஓடினோம், தேடினோம், தேவையை பெருக்கினோம்.

ஓயப் போகும் வேளையில் தேடிச் சேர்த்தது எல்லாம் தேய்ந்து மறையலாம்.
எனினும் கவலையில்லை, தொடரட்டும் துணிவும் முயற்சியும்.
தன் கை கால்களை நம்பிக் கெட்டவர் யாருமில்லை.

நலமுடன் பேணிக் காப்போம் உடல் நலத்தை.
இருப்பதைக் கொண்டு செயலாற்றி இனிமையை காண்போம் இவ்வாழ்வில்.
வாழ்க்கை என்ற வார்த்தையே, வாழ்வு உன் கையில் என்பதின் சேர்க்கையே.
வாழப் பழகிக் கொண்டால் வானம் வசப் பட்டுவிடும் உன் கைகளில்.

Back to index ^

# நாற்காலி - சிறுகதை :: சுபஸ்ரீ ஸ்ரீராம்

"அம்மா நீ இன்னும் எத்தனை நாளைக்குத் தான் பழைய சாமான்களை பரண்ல போட்டு வெச்சுருப்ப?"

"உனக்கென்ன போகுது. நீ பேசாம உன் வேலையைப் பாரு மணிமொழி"

"டேய் முத்தரசா, பொங்கல் வருது. வீடெல்லாம் வெள்ளை அடிக்கணும். நாளைக்கு பரண்ல எல்லாத்தையும் நீ தான் இறக்கித் தரணும். மணிமொழி மேல ஏறி சுத்தம் பண்ணுவா. நானு எல்லாப் பாத்திரத்தையும் கழுவித்தர்றேன்" என்று சரோஜாம்மா சொன்னாள்.

"அம்மா வருசா வருசம் இதே தான் நடக்குது. அதுக்குப் பிறகு அந்தப் பாத்திரம், பண்டம் எல்லாம் தூங்குது" என்று முத்தரசன் சொன்னான்.

"அம்மா உனக்குத் தான், விற்க மனசே வரமாட்டேங்குது. அட்லீஸ்ட் தேவையானவங்களுக்கு ஃப்ரீயா கொடுக்கலாம்ல?"

"டேய் அதெல்லாம் பரம்பரைச் சொத்து. இப்பெல்லாம் அந்தப் பாத்திரத்தை பாஃரின்ல இருக்கிறவங்க வாங்கிட்டுப் போறாங்கடா. அவங்களுக்கு அதோட மதிப்புத் தெரியுது. ம் நம்ப ஊர்ல கண்டுக்கவே மாட்டேங்கறாங்க. சரி சரி தூங்கப் போங்க. நாளைக்குப் பேசலாம்"

காலை எழுந்தவுடனே அரசனும், மணிமொழியும் பரணில் உள்ளப் பாத்திரத்தை எடுத்துவைத்துக் கொண்டு இருந்தார்கள்.

கடைசியில் நாற்காலியை, இறக்க முடியாமல் இறக்கி வைத்தான் முத்தரசன். நாற்காலியின் ஒரு கால் லொடலொட என்று ஆடி, தனியே கழன்று விழத் தயாராக இருந்தது.

அதை திரும்பவும் மேலே ஏற்ற இன்னும் கஷ்டமாக இருக்கும் என்று நினைத்த அவன் உடனே தன் மொபைல் மூலமாக OLX ல ஒரு விளம்பரம் அனுப்பினான். இந்த பழைய குப்பைகளுக்கு நல்ல விலை கிடைத்தால், அம்மாவை சம்மதிக்க வைத்துவிடலாம் என்று அவனுக்குள் ஒரு நம்பிக்கை.

"அம்மா"

"என்னடா?"

" நீ பாத்திரமெல்லாம் யாருக்கும் கொடுக்க வேண்டாம். பேசாம இந்த நாற்காலியை மட்டும் தூக்கிப் போடு"

"டேய் என்ன சொன்ன?. இதோட அருமைத் தெரியுமா?. எங்க அப்பாவோட தாத்தா அந்த நாள்ல ஆங்கிலத் துரை கிட்ட வேலைப் பார்த்தாராம். அவரு இவரோட உழைப்பை மெச்சி இந்த நாற்காலியை கிஃப்டா கொடுத்தாராம். அத்தனையும் தேக்கு மரம்

டா. எனக்கு இது மேல ஒரு கண்ணு. என் கல்யாணத்தப்ப இதைக் கேட்டதால, எங்கப்பா சீதனமாகக் கொடுத்துட்டார்"

"ஏம்மா ஏற்கனவே ஒரு சைடு ஆடுது. பேசாம வித்துடு. "

"ம்க்கும். இப்படிச் சொன்னாலே அம்மா நம்மளை வீட்டை விட்டே விரட்டிடுவாங்க" என்று மணிமொழி சொன்னாள்.

"அம்மா நெஜமாலுமே பரண்ல இருந்து இறக்க முடியலைம்மா. பேசாம தூக்கிப் போடு"

அன்று மாலை, வாசலில் காலிங்க் பெல் அடிக்கும் சத்தம் கேட்டது. முத்தரசன் வேகமாய் போய், கதவைத் திறந்தான்.

நான்கு பேர் நின்றுக்கொண்டு இருந்தார்கள்.

" வணக்கம் தம்பி. உங்க வீட்டுல பழைய பொருள் நிறைய இருக்குன்னு கேள்விப்பட்டோம். அதுல நாற்காலியும் இருக்காமே. என்ன விலைக்குத் தர்றீங்க தம்பி?"

உடனே வேகமாக வந்த சரோஜா, " அதெல்லாம் தேக்குல செஞ்ச நாற்காலி. விற்க முடியாது" என்றாள்.

" மேடம் நாங்க அதுக்கு 2 லட்சம் தர்றோம். தயவு செய்து தாங்க" என்றார்கள்.

"சிறிது நேரம் கழித்து யோசிச்சு சொல்றோம்" என்றாள் சரோஜா.

அதற்குள் முத்தரசன் உடைந்த நாற்காலியை ஓரளவு சரி செய்து வைத்திருந்தான். இருந்தாலும் லேசாக ஆடியது.

மறுநாள் மீண்டும் வந்தார்கள்.

மணிமொழி, அவள் அம்மாவிடம் "அவங்க தான் லட்சக் கணக்கிலத் தர்றாங்க. பேசாம வித்துடலாம்மா" என்றாள். ஒருவழியாக வழிக்கு வந்தாள் சரோஜா.

அந்த நாற்காலி உடைந்தது தெரியாமல் நாசூக்காக முத்தரசன் எடுத்துக்கொண்டு வந்தான். அவர்கள் இவனிடம் ஒரு லட்சம் கூடவேக் கொடுத்தார்கள். கையில் மூன்று லட்சத்தைக் காட்டிலும், 'நாற்காலி உடைந்திருப்பதைக் கண்டு பிடித்து விடுவார்களோ' என்ற பயம் தான் இருந்தது. ஒருவழியாகக் கிளம்பிவிட்டார்கள்.

முத்தரசனுக்கு இப்பத் தான் நிம்மதி வந்தது.

நாற்காலிப் பார்ட்டிகள் தங்கள் தலைவரை அவமானப் படுத்துவதற்காக, கனமான நாற்காலி ஒன்றை தேடிக்கொண்டிருந்தார்கள். தேர்தலில் நிற்க தனக்கு கட்சி அனுமதி தரவில்லை என்ற கோபத்தில் இருக்கும் உள்ளூர் பிரமுகர் செய்த ஏற்பாடு அது. நாற்காலியின் ஒரு காலை ஒடித்து அது தெரியாத வண்ணம் அதை அலங்காரம் செய்து, மேடையில் கட்சித் தலைவர் அமர்வதற்காக வைத்துவிடுவது என்றும் - நாற்காலியில் அமர்கின்ற தலைவர் கீழே விழுந்து கூட்டத்தின் முன் அவமானப்பட

**வேண்டும் என்றும் அந்த பிரமுகரின் திட்டம். அவருடைய ஆதரவாளர்கள், நாற்காலியின் ஒரு காலை உடைக்க கோடாலியை எடுத்த போது, அது தானாகவே ஆட்டம் கண்டது. இவர்களுக்கோ ஒரே குஷி.**

**ஆக ஒருத்தருக்கு வேண்டாம் என்று ஒதுக்கிய பொருள், இன்னொருத்தருக்குத் தேவையாக இருக்கின்றது.**

**மொத்தத்தில் நல்ல விலைக்குப் போனது நாற்காலி தான்.**



**Back to index ^**

## சென்னை - திருப்பதி பாதயாத்திரை - தில்லைநாயகம் அவர்களுடன் பேட்டி

பல பாதயாத்திரைகள் செய்த சாதனையாளர், மோ தில்லைநாயகம் அவர்களுடன் ஒரு ஆன் லைன் பேட்டி.

> நீங்கள் முதல் திருப்பதி பாத யாத்திரை நீங்க மேற்கொண்டது எந்த ஆண்டு, எந்த வயதில்?

**1991 செப்டம்பர் 40 வயதில்.**

**Participating 3 to 5 times per year**

**1 August மாதத்தில் அம்பத்தூரிலிருந்து.**

**2 September மாதத்தில் எண்ணூர் அசோக் லேலண்ட் நுழை வாயிலிலிருந்து**

**3 October மாதம் - என் வீட்டிலிருந்து (சைதாபேட்டை)**

**4. November மாதம் காரனோடையிலிருந்து**

**5. December மாதம் மீண்டும் எண்ணூர் அசோக் லேலண்ட் நுழை வாயிலிலிருந்து (பனிக்கால பாதயாத்திரை )**

> எப்படி பாத யாத்திரை செல்வதில் முதலில் ஈர்ப்பு வந்தது?

**1991 எனது 6 வயது மகள் 4 மணிநேரம் தேடி கிடைக்காததால் எனக்கு தகவல் கொடுத்தார்கள், நான் லேலண்டில் புறப்பட்டு வீடு வரும் வழியில், திருமலை பெருமாளிடம், என் மகள் சீக்கிரம் கிடைத்தால், இந்த ஆண்டு வீட்டிலிருந்து நடந்து வந்து நன்றி கூறுகிறேனென்று பிரார்த்தித்தேன்.**

**நான் வீட்டை அடையும் முன் மகளை பாதுகாப்புடன் வீட்டிற்கு ஒரு மயிலை அலுவலக காவலாளி அழைத்து வந்து விட்டார். (அவளுடைய கால் வெள்ளி கொலுசு மட்டும் கழட்டிக்கொண்டு திருடன் ஓடிவிட்டார்)**

**பிரார்த்தனையை நிறைவேற்ற அந்த ஆண்டு பாதயாத்திரை தொடங்கினேன்.**

> எந்த ஊர்களின் வழியாக நடந்து செல்வீர்கள்?

**சைதாப்பேட்டை - புழல் செங்குன்றம் - காரனோடை - ஊத்துக்கோட்டை - சுருட்டப்பள்ளி - நாகலாபுரம் - கோனே பால்ஸ் - நாராயணவனம் - புத்தூர் பூடி - திருச்சானுர் - திருப்பதி திருமலை**

> மொத்தம் எவ்வளவு கிலோ மீட்டர் நடை பயணம்?

**சைதாப்பேட்டை - திருமலை. Total km 164**

**Average 4 km/hour**

Walking 41 hrs 55%

Rest + 33 hrs 45%

Total = 74 hrs

**> பயணம் மேற்கொள்பவர்கள் என்னென்ன பொருட்கள் எடுத்துச் செல்வது வழக்கம்?**

சென்னை - திருப்பதி பாதயாத்திரைக்கு தேவையானவைகள்:

ஆதார்கார்டு/வாக்காளர் அட்டை,

அணிந்து வர வேஷ்டி டவல் சட்டை,

பற்பொடி /பற்பசை பிரஷ் சோப்பு, சீப்பு,

தலைக்கு எண்ணெய்

தண்ணீர் பாட்டில்,

துணிப்பை,

கொடுக்கப்பட்ட கூப்பன்,

செலவுக்கு தேவையான பணம்.

படுக்க பிளாஷ்டிக் பாய்,

விசிறி,

கூடுதலாக வேஷ்டி டவல் சட்டை

தினம் உபயோகிக்கும் மருந்து மாத்திரைகள் தேவைப்பட்டால் தைலம்/வலி நீக்கும் எண்ணெய்.

தினம் உபயோகிக்கும் மூக்குக்கண்ணாடி கைப்பேசி & சார்ஜர்,

பிளாஸ்டிக் பைகள் தலைக்குகுல்லா,டார்ச்லைட்,

அதிக நாட்கள் உபயோகித்த பாதஅணி தேவை (புத்தம் புதிய பாதணி உபயோகிக்கக்கூடாது - " புதுச் செருப்பு கடிக்கும்!)

ஆன் லைனில் தரிசன டிக்கெட் இருந்தால் அனைவரும் தனியாக செல்லக்கூடாது துணையுடன் செல்ல வேண்டும்.

**> வழிச் செலவுகளுக்காக எவ்வளவு பணம் தேவைப்படும்?**

Rs 600/= to be given to the organiser.

Up to Thirupathi tea/coffe Breakfast lunch dinner, all organiser responsibility.

(NO Expentiture up to Adivaaram)

Free Food at Thirumala

Dharshan Ticket rs 50 (2 Laddus free)

Padayathra Ticket Rs 50 (2 + 1 Laddus Free)

Sr. Citizen Dharshan (above 65 years) Ticket rs 50. (2 Laddus free)

Rs 50+50+50 = Rs 150

Return Thirumala to Thirupathi Rs 60

Thirupathi to Chennai Saidapet Rs 60

{(Rs 150 + 60 + 60 = Rs 270) + Reserve rs 230}

> மொத்தமாக குறைந்தது நான்கு நாட்கள் விடுமுறை தேவைப்படும் என்றால், அலுவலக வேலை நாட்களில், அதை எப்படி / எந்த நாட்களில் திட்டமிடுவீர்கள்?

Leaving Friday 13.00 hrs from my house. Half a day leave. Or

Friday : 4.00pm from our AL. E. Gate

Saturday & Sunday Leave Applied

Monday weekly Holiday ( Ashok Leyland - Ennore)

Total leave taken 2 days only.

(Some time festival holiday falls on Saturday or Sunday)

> திருவண்ணாமலை கிரிவலம் அனுபவம் உண்டா?

YES. Participating 3 to 5 times every year.

Reaching 8.00 pm & Girivalam

Dharshan 6.00 am

Return 7.00 am

Every year 2 days program by Tourist bus Tour program. Abishegam in all Lingams from 8.00am to 8.00 pm.

Next day morning Annaamalaiyaar Dharshan & 2.00 pm return to Chennai.

> நீங்கள் மேற்கொள்ளும் பாதயாத்திரைகள் பற்றி கூறுங்கள் ?

February or March Saidapet to Vallakkottai : 25 times

September or October Saidapet to Thirupporur: 25 times

April to July Thiruvannaamalai Girivalam

Aug to December Chennai to Thirumala.

December end Pambaa to Sabarimalai

> திருப்பதி பாதயாத்திரை - உங்கள் குழுவில் எவ்வளவு பேர் செல்வீர்கள்?

August. 30 members

September 500 to 700

November 30 members

December 30 members

> நடை பயிற்சியால் விளையும் நன்மைகள் என்னென்ன?

தினமும் நடைபயிற்சி செய்வதின் மூலம், இதய நோய்கள் மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயம் குறையும் என்று ஆய்வுகள் கூறுகின்றன..

நடைப்பயிற்சி இரத்த அழுத்தத்தைத் குறைப்பதோடு, இரத்த சர்க்கரை அளவில் உள்ள ஏற்றத்தாழ்வை சரிசெய்யும். ஆஸ்துமா மற்றும் சில புற்றுநோய்களின் வளர்ச்சியையும் தடுக்கும்.

ஒருவர் தினமும் 30 நிமிடங்கள் நடப்பதன் மூலம் நல்ல மனநிலையை உணர வைக்கும் எண்டோபின்களின் வெளியீடு அதிகரித்து, மன அழுத்தம் மற்றும் பதற்றம் ஏற்படுவது குறையும்.

தொடர்ச்சியான நடைபயிற்சி, எலும்புகளையும், தசைகளையும் வலிமையாக்கும். இதனால் எலும்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளால் அடிக்கடி அவஸ்தைப்படுவதில் இருந்து விடுபடலாம்.

உடல் எடையை மிகவும் எளிதில் குறைக்க உதவும் வழிகளுள் ஒன்று நடைப்பயிற்சி. ஒரு நாளில் ஒருவர் 30 நிமிடங்கள் வேகமான நடைபயிற்சியை மேற்கொண்டால், 150 கலோரிகள் எரிக்கப்பட்டு உடல் எடையில் மாற்றம் தெரியும்.

தினமும் நடைப்பயிற்சி மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகள்

நடைபயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள்

நரம்பு மண்டலம் சுறுசுறுப்படையும்.

நாளமில்லாச் சுரப்பிகள் புத்துணர்ச்சி பெறும்.

அதிகப்படியான கலோரிகளை எரிக்க உதவுகிறது.

முதுகு நரம்புகளை உறுதியாக்குகிறது.

அடிவயிற்றுத் தொப்பையைக் குறைக்கிறது.

மூட்டுகளை இலகுவாக்குகிறது.

எலும்புகளுக்கு உறுதியளிக்கிறது.

கால்களையும், உடலையும் உறுதியான அமைப்பில் வைக்கிறது.

‘கொலஸ்ட்ரால்’ அளவைக் குறைக்கிறது.

மாரடைப்பு, சர்க்கரை நோய் அபாயத்தைக் குறைக்கிறது.

உடல், மனச்சோர்வைக் குறைக்கிறது.

நல்ல தூக்கம் வர உதவுகிறது.

கண் பார்வையை கூர்மைப்படுத்துகிறது.

உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கவும்

ரத்தக்குழாய்களில் தேங்கியிருக்கும் கொழுப்புத் திட்டுகளை நீக்கப் பயன்படும்.

சர்க்கரை நோயாளிகள் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க, தினமும் தவறாமல் நடைப்பயிற்சி செய்யவேண்டியது அவசியம்.

நன்றி - தில்லைநாயகம் அவர்களே. நீங்கள் கொடுத்துள்ள விவரங்கள், நிச்சயம் பலருக்கும் உபயோகமாக இருக்கும்.

**(தில்லைநாயகம் அவர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் Lock down - restrictions காரணமாக நடைபயணம் செல்ல இயலவில்லையே என்ற ஏக்கம் உள்ளது. இந்த 2021 ஆம் ஆண்டு முதல் அவரது ஏக்கம் தீரவேண்டும் என்று பிரார்த்தனை செய்வோம்.)**

பேட்டி கண்டவர் : K G கௌதமன்.




[Back to index ^]

# வாசகர்கள் அனுப்பிய படங்கள்


# அடுத்த பக்கங்களில் ---

# திருமதி ரேவதி நரசிம்ஹன் அனுப்பிய படங்கள் :




















[Back to index ^]

**இது பத்மா சேஷாத்திரியில் இரண்டாம் வகுப்பு படிக்கும் அர்ஜீன் என்னும் என் அக்கா பேரன் வரைந்தது. :: (பானுமதி வெங்கடேஸ்வரன்)**

# அர்ஜூன் வரைந்தது




[Back to index ^](#)

**இந்த இரண்டு படங்களும் என் அக்காவின் பேத்தி அனுப்பியது.**
**குழந்தையின் பெயர் ரோஷிணி**
**வயது 7 கோபாலபுரம் NPSல் ஒன்றாம் வகுப்பு படிக்கிறாள்.**

**பானுமதி வெங்கடேஸ்வரன்.**

# ரோஷினி வரைந்தவை




Roshini

Back to index ^

# நந்தீஸ்வரர் தரிசனம் :: ராமலக்ஷ்மி ராஜன்

விவரங்களும், படங்களும் :

1, 2, 3: நந்தி தீர்த்த க்ஷேத்திரம், மல்லேஸ்வரம், பெங்களூரு



**1**




2




**3**

4,5 : காடு மல்லேஸ்வரர் ஆலயம், பெங்களூரு.




**4**




**5**

6,7 : பசவனங்குடி பெரிய நந்தி, பெங்களூரு



6



**7**

**8,9: லெபக்ஷி நந்தி, ஆந்திரா**



8





9

10. பெங்களூரு



**10**

11. மைசூர் சாமூண்டீஸ்வரி கோயில் குன்று




**11**

12. பேலூர், கர்நாடகா




**12**

**13,14,15 : மாக்காளை, நெல்லையப்பர் கோயில்**



**13**



**14**



**15**

## பூமித்தாய்க்கு வணக்கம். A J SURYAPRAKASH

காற்று நம்மைத் தழுவிச் செல்லும்,
மழைநீர் நம்மீது பட்டுச் செல்லும்,
வானமோ நம்மை பார்த்துச் செல்லும்,
நெருப்பு நம்மை சுட்டு உணர்த்தும்,
நிலம் நம்மை எப்பொழுதும் தாங்கி வாழ வைக்கும்.
தன்னுள் விதையை உட்கொண்டு,
வான், காற்று, நீரை துணை கொண்டு,
பயிராக்கி, செடி, கொடி, மரமாக்கி,
காய், கனி, தானியங்கள் கொடுத்து நம்மை வாழ வைக்கும்.
நாம் தரும் வேதனைகளையும் சோதனைகளையும்
தன்னுள் கொண்டு, நம்மைப் பொறுத்து, காத்து
நம்மை வாழ வைக்கும்
பூமித்தாய்க்கு முதல் வணக்கம்.
நீரில்லா வாழ்க்கை நிலையற்றது என்பதால்
வான் மழை நீரை தான் வாங்கி
ஆறு, குளம், ஏரிகளாக மறு உருக்கொண்டு
நாம் வாழ வழி செய்யும்
பூமித்தாய்க்கு மறு வணக்கம்.

Back to index ^

## ஊர் பெயர்கள் - புதிருக்கான விடைகள் :

1. **திருநெல்வேலி**
2. **பாபநாசம்**
3. **கும்பகோணம்**
4. **திருவெண்பரிசாரம்**
5. **ஸ்ரீவாஞ்சியம்**

= = = = = =

## பொங்கல் மலர் வாசகர் விமரிசனப் போட்டி

இந்த மலர் பற்றி வாசகர் விமரிசனங்கள் வரவேற்கப்படுகின்றன

இந்த மலரைப் படித்து முடித்த நீங்கள், இந்த **மலரின் நிறை / குறைகள் பற்றி 500 வார்த்தைகள் அளவில்** ( சற்று கூட / குறைந்து இருந்தாலும் சரி) **விமரிசனம்** எழுதி engalblog@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். விமரிசனம் அனுப்பவேண்டிய இறுதிநாள் : **ஞாயிறு பிப்ரவரி 28, 2021.**

கவனிக்கவும் : **நிறை & குறை இரண்டுமே குறிப்பிடப்படவேண்டும்**. ஒன்றை மட்டும் குறிப்பிட்டு எழுதாதீர்கள்.

**நல்ல அலசல் விமரிசனம் எழுதி அனுப்பிய பத்து வாசகர்களுக்கு பரிசு உண்டு.**

**மலரைப் படிங்க , விமரிசனம் அனுப்புங்க, பரிசை வெல்லுங்க !**


@arunjawar


@arunjawar
நவம்பர்
1ம்
முதல்
ஸ்டார்
தேவர்
விவசாயி
செந்தில் மூவீஸ் ரிலீஸ்